# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆனி 11 ஞாயிற்றுக்கிழமை (26.06.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 212



09 அவலை நினைத்து உரலை இடித்த அஸ்வர் எம்.பி.



13 நல்லோரே தீயோரை நாடாதீர்



23 தலை தூக்கும் தலையீடுகள்; தவிர்க்கப்படும் எப்போது?



27 வரும்... ஆனா வராது

## ம.எண்ணெய் தட்டுப்பாடு: நாளை சீராகிவிடும்

யாழ்ப்பாணம், ஜூன் 26

குடாநாட்டில் மண்எண்ணெய்க்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு நாளை அல்லது நாளை மறுதினம் சீராகிவிடும் என்று பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

நாடுமுழுவதும் நிலவிய தட்டுப்பாடே இங்கும் நிலவியதாகக் குறிப்பிட்ட அந்த வட்டாரங்கள் பெரும்பாலும் நாளை சீராகிவிடும் என்றும் தகவல் வெளியிட்டன.

இதேவேளை பெற்றோலுக்கு நிலவிய தட்டுப்பாடு நேற்று மாலையுடன் வழமைக்குத் திரும்பிவிட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-ஐ)

# வடக்கில் 50 வீதமானோர் வறுமையில் வாடுகின்றனர்

## ஐ.நா. அறிக்கையில் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 26

வடக்கிலுள்ள தமிழ் மக்களில் அரைவாசிக்கும் அதிகமானோர் வறுமைக்கோட்டுக்குக் கீழேயே வாழ்கிறார்கள் என்று ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மே மாதம் 31 ஆம் திகதி வரை கிடைத்த தகவல்களின் அடிப்படையில், யாழ்ப்பாணம் மற்றும் வன்னியில் மீளக்குடியமர்ந்த மக்களில் 50 சத வீதத்தினர் வறுமைக்கோட்டுக்குக் கீழேயே வாழ்கிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விரைவான மீட்சியுடன் இணைந்த மனிதாபிமான அறிக்கையிலேயே ஐ.நா. இதனைத் தெரிவித்துள்ளது. இன்னும் மீளக் குடியமர்த்தப்படாது இருக்கும் மக்களில் 46 வீதமானோரும் வறுமைக்கோட்டுக்குக் கீழேயே உள்ளதாக அறிக்கை கூறுகின்றது.

(31ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சு மூலம் தீர்வை எட்டும் நம்பிக்கை அரசுக்கு இல்லை

## மாற்றாக மாகாண சபை தேர்தல் நடத்த முடிவு

கொழும்பு, ஜூன் 26

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் தாம் நடத்திவரும் பேச்சுக்களின் மூலம், தமிழர் பிரச்சினைக்கு ஒரு தீர்வு எட்டப்படும் என்ற நம்பிக்கை இல்லை என்று அரச தரப்பு தெரிவித்துள்ளது. எனவே விரைவில் வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்தி முடிப்பதற்கும் அரசு தீர்மானித்துள்ளது.

''அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் நடத்தப்பட்ட 7 சுற்றுப் பேச்சுக்களின் பின்னரும் அதிகாரப் பகிர்வு குறித்து இணக்கம் இதுவரை எட்டப்படவில்லை. எதிர்காலத்திலும் எட்டப்படும் என்ற நம்பிக்கையும் மிகக் குறைவாகவே இருக்கிறது'' என்று அரச உயர் மட்டத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.

''எனவே மாற்றீடாக மாகாண சபைத் தேர்தலை நடத்தித் தமிழ் மக்களிடம் ஆட்சி அதிகாரத்தை வழங்குவது என்று அரசு ஆலோசித்து வருகின்றது'' எனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு முன்பாக 5 விடயங்களை விரைந்து நடைமுறைப்படுத்துவதற்கும் அரசு தீர்மானித்துள்ளது.

* இடம்பெயர்ந்த மக்களை முழு அளவில் மீளக் குடியமர்த்தல்.
* பொது மன்னிப்பு வழங்கி, புலிகள் இயக்க முன்னாள் போராளிகள் அனைவரையும் விடுதலை செய்தல்.
* கண்ணிவெடி அகற்றும் பணிகளைத் துரிதப்படுத்தல்.
* மீளக்குடியமர்த்த முடியாத நிலையில் தொடர்ந்தும் நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்களை மகிழ்ச்சிப்படுத்தும் வகையில் கேளிக்கை நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்.
* 2010ஆம் ஆண்டுக்கான தேர்தல் பட்டியலை நடைமுறைக்குக் கொண்டுவருதல்.

ஆகிய விடயங்களையே (31ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைக் கூட்டமைப்பு இன்று முதல் கலைப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 26

தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு இன்று முதல் கலைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைக் கூட்டமைப்பில் அங்கம் வகித்த ரெலோவில் இருந்து பிரிந்து சென்றவர்கள் மீண்டும் தமது தாய்க் கட்சியில் இணைந்து கொள்கிறார்கள் என்று சட்டத்தரணி ஸ்ரீகாந்தா நேற்றுத் தெரிவித்தார்.

இதன் மூலம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் ஸ்ரீகாந்தா ஆகியோர் மீண்டும் தமிழர் விடுதலை இயக்கத்தில் (ரெலோ) இணைந்து கொண்டுள்ளனர்.

தனது அலுவலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த ஸ்ரீகாந்தா, கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற விடுதலைக் கூட்டமைப்பின் பொதுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

''நாம் மீண்டும் தாய்க் கட்சியில் இணைந்து கொள்கிறோம். நாளை (இன்று) வவுனியாவில் நடைபெறுகின்ற தமிழர் விடுதலை இயக்கத்தின் (ரெலோ) மாநாட்டில் நாமும் முழுமை

(31ஆம் பக்கம் பார்க்க)

# நாடாளுமன்ற தெரிவுக்குழு மூலமே இனப்பிரச்சினைக்கு இறுதித் தீர்வு

## அடித்துக் கூறுகிறார் ஜனாதிபதி மஹிந்த



கொழும்பு, ஜூன்26

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு நாடாளுமன்றத் தெரிவுக் குழு அமைப்பது தான் சிறப்பானது. அதுவே எனது இறுதி முடிவும். இவ்வாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கலந்துகொண்ட நிகழ்வில் ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார்.

அந்த நிகழ்வில் கலந்துகொண்ட எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் கலந்துரையாடிய ஜனாதிபதி, இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணுமாறு எவரும் எனக்கு நெருக்குதல் தரமுடியாது. சகல மக்களும் ஏற்கக்கூடிய தீர்வைத்தான் காண வேண்டும். அந்தத் தீர்வு, அறிவிக்கப்போகும் நாடாளுமன்றத் தெரிவுக் குழு மூலம் மட்டுமே காணமுடியும் - என் றார் ஜனாதிபதி.

இதேவேளை அரசுடன் பேச்சு நடத்தி வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்தத் தெரிவுக் குழுவை நிராகரிக்கப் போவதாக அறிவித்துள்ளது தெரிந்ததே. (ஒ-ஐ)

# தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தினர் நாளை நாடு முழுவதும் பகிஷ்கரிப்பு

## யாழ்ப்பாணம் உட்பட வடக்கு கிழக்கிலும் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ்ப்பாணம் உட்பட நாடுமுழுவதும் நாளை திங்கட்கிழமை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் பணிப்பகிஷ்கரிப்பில் குதிக்கின்றது.

அரசு அறிவித்துள்ள 7.6 வீதக் கட்டண அதிகரிப்பை ஏற்கமறுத்து தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளது.

15 சதவீத கட்டண அதிகரிப்பு கோரியே இந்தப் போராட்டம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் குறிப்பாக வழமையைப் போலன்றி வடக்கு, கிழக்கிலும் கூட பணிப்பகிஷ்கரிப்பு இடம் பெறும் என்று இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

ஆரம்பக்கட்டணம் 6 ரூபாவில் இருந்து 8 ரூபாவாக அதிகரிக்க வேண்டும் என்றும் சங்கம் தெரிவித்துள்ளது.

அதேவேளை அகில இலங்கை ரீதியாக இடம்பெறும் போராட்டத்தில் தாமும் இணைந்து கொள்வதாக யாழ். பிராந்திய கூட்டிணைக்கப்பெற்ற பஸ் கம்பனிகளின் இணையம் அறிவித்துள்ளது.

தூரசேவை, உட்பட சகல சேவைகளும் நாளை இடம் பெறமாட்டா என அந்த இணையம் அறிவித்துள்ளது. (ஒ-ஐ)



சவுதி அரேபியா விமான நிலையத்தில் Ground Services உடனடி தொழில் வாய்ப்பு

☛ 350 பேர் தேவை ☛ சம்பளம்: 690 றியாழ் ☛ 2 வருட ஒப்பந்த காலம்

- தங்குமிடம், மருத்துவ வசதி,போக்குவரத்து, விமான பயண டிக்கட் இலவசம்.
- நாளொன்றுக்கு 8 மணித்தியால வேலையுடன், வாரத்தில் 1 நாள் விடுமுறை.
- ஏனையவை சவுதி அரேபியாவின் தொழிலாளர் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்டணம் ரூபா : 68,652.00 மட்டுமே அறவிடப்படும்



AL1316/Advt:/04/11

பாஸ்போட்டுடன் உடன் நேரே வாருங்கள் • இம்மாதம் 29ம் திகதி வரை மட்டுமே இணைத்துக்கொள்ளப்படுவர் | உடன் தொடர்புகளுக்கு: 0777 607 603

QP Employment (pvt) Ltd, இல: 06, கெம்பல் டெரஸ், கொழும்பு - 10. (பாஸ்போட் காரியாலயம் அருகில்)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




தெளிவான வானிலை அனைத்து மாவட்டங்களிலும் நிலவுவதற்கான சாத்தியம் . அநேக மாவட்டங்களில் வெப்பமான கால நிலை நாள் முழுவதும் நிலவும்.

# வெளிநாடுகளில் பணிப்பெண்களின் வேலைவாய்ப்பு; கட்டுப்படுத்துவதற்குப் புதிய சட்டம் விரைவில் வருகிறது

கொழும்பு, ஜூன் 26

பணிப்பெண்கள் போன்ற திறமையற்ற வேலையாள்கள் வெளிநாடு செல்வதற்கு அடுத்த வருடம் முதல் கட்டுப்பாடு விதிக்கப்படவிருக்கிறது.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் டிலான் பெரேரா இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பணிப்பெண்கள் வெளிநாடு செல்வதால் அங்கு இடம்பெறும் துஷ்பிரயோகங்களில் அவர்கள் சிக்கிவருவதால் நாட்டுக்குப் பெரும் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இதன் காரணமாகப் பணிப்பெண்கள் செல்வதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் பணிப்பெண்களாகச் செல்வோரின் வயதெல்லை 30 ஆக உயர்த்தப்படவிருக்கின்றது.

அதேசமயம் திறமையற்ற வேலைகளுக்கு ஆள்கள் செல்வதைத் தடைசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திறமையான, மத்திய திறமையானவர்களை மட்டுமே வெளிநாடு செல்ல அனுமதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக விரைவில் சட்டம் கொண்டுவரப்படும் - என்றார் அவர். (ஒ-ஐ)

## பாவனைக்குதவாத பழ வகைகள் அழிப்பு

கொடிகாமம் சந்தைப் பகுதியில் சுகாதாரப் பகுதியினர் திடீர் பரிசோதனை நடத்திய போது பாவனைக்குதவாத பழவகைகள், காய்கறி வகைகளை கைப்பற்றி அழித்தனர்.

கொடிகாமம் பிரிவு பொது சுகாதார பரிசோதகர் தலைமையில் சென்ற சுகாதாரப் பகுதியினர் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த ஒரு பகுதி அழுகிய நிலையில் மற்றும் பூஞ்சனம் பிடித்த பலாப்பழங்கள், பப்பாப் பழங்கள், பூசணிக்காய், உருளைக்கிழங்கு போன்றவற்றை கைப்பற்றி சந்தைப்பகுதியில் வைத்து அழித்தனர். (த-207)

# யாழ்.நகரில் புதிய கலாசார மண்டபம் கட்டடக் கலைஞர்களுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 26

திராவிட கட்டடக் கலை மரபில் யாழ்.நகரில் மண்டபத்தை அமைக்கும் நோக்குடன் கட்டட கலைஞர்களை தெரிவு செய்வதற்கான அறிவுறுத்தல் கூட்டம் ஒன்று யாழ். நூலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்திய அரசின் நிதியுதவியுடன் சகல வசதிகளும் கொண்டதாக கலாசார மண்டம் யாழ்.நகரில் பழைய திறந்தவெளி அரங்கில் அமைக்கப்படவுள்ளது.

அந்தக் கலாசார மண்டபத்தை அமைப்பதற்கான கட்டடக் கலைஞர்களைத் தெரிவு செய்வதற்காக இந்தக் கூட்டம் இடம் பெற்றது.

யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத்தூதரக அதிகாரி வெ.மகாலிங்கம் தலைமையில் இந்த கூட்டம் இடம்பெற்றது. இதன்போது நாட்டில் உள்ள கட்டடக் கலைஞர்கள் கலந்து கொண்டனர். அதன்போது கலாசார மண்டபம் எவ்வாறு அமைக்கப் பட வேண்டும் என்பது குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

அத்துடன் கலாசார மண்டப அமைப்புத் தொடர்பான வரைபடம் மற்றும் திட்டத்தை உரிய முறையில் அமைத்து வழங்கும் கட்டடக் கலைஞர்களுக்கே கட்டட ஒப்பந்தம் வழங்குவது எனவும் அறிவிக்கப்பட்டது.

அதற்கெனப் போட்டி ஒன்று நடத்தவும் முடிவாகியது.

இந்தக் கூட்டத்தின்போது இலங்கை கட்டடக் கலை நிறுவனப் பொறியியலாளர்களும் யாழ்.மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ, முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் ஜூலை 28 ஆம் திகதிக்கு முன்னர் கட்டடக் கலைஞர்கள் தமது வரைபடம் மற்றும் திட்டத்தைச் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அங்கு தீர்மானிக்கப்பட்டது. (ஒ-14)

**புதிதாக அமையவுள்ள மாநகர சபைக் கட்டடம்**

# யாழ்.வந்த பொறியியலாளர் குழு நேற்று நேரில் சென்று ஆராய்வு

யாழ்ப்பாணம், ஜூன் 26

யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் செய்த தென்னிலங்கையைச் சேர்ந்த பொறியியலாளர் குழு, நகரில் புதிதாக அமைக்கப்படவுள்ள யாழ்.மாநகர சபைக்கான கட்டடத் தொகுதி தொடர்பாக ஆராய்ந்துள்ளது.

கொழும்பில் உள்ள சென்றல் இன்ஜினியரிங் கொன்ஸ்ரக்ஷன் மற்றும் இலங்கை கட்டடக் கலை நிறுவனத்தின் பொறியியலாளர் குழுவே மாநகர சபைக்கான புதிய கட்டடம் அமைப்பது தொடர்பாக நேற்று ஆராய்ந்துள்ளது.

யாழ்.நகரில் சுப்பிரமணியம் பூங்காவுக்கு முன்பாகவுள்ள யுத்தத்தினால் அழிந்த மாநகர சபையின் கட்டடம் அமைந்திருந்த இடத்திலேயே புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது. அதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கியுள்ளது.

இந்தப் புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ள இடத்துக்கும் இந்தக்குழு நேரில் சென்று ஆராய்ந்துள்ளது. புதிய கட்டடத்துக்கான வரைபடம், அதன் அமைப்பு வடிவம் குறித்து இதன் போது விரிவாக ஆராயப்பட்டது.

பொறியியலாளர்களான றோகண மித்திர, சந்தன எதிரிசூரிய உள்ளிட்ட நான்குபேர் இந்தக் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

இந்தக்குழுவினர் உள்ளூராட்சி ஆணையாளர் ஜோன்சன், வடமாகாண நகர அபிவிருத்தி சபைப் பணிப்பாளர் எஸ்.இராஜநாயகம், யாழ்.மாநகர சபை ஆணையாளர் மு.செ. சரவணபவ, முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, மாநகர சபையின் ஆளும்கட்சி உறுப்பினர்கள், உயர் அதிகாரிகள் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்கள். (ஒ-14)

## மருந்தகங்களின் உரிமையாளருக்கான கலந்துரையாடல்

யாழ் மாவட்டத்தில் இயங்கும் சகல மருந்தகங்களினதும் உரிமையாளர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 28 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் சகல மருந்தகங்களினதும் உரிமையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (த-313)

# மத்திய கிழக்கில் 3 வருடங்களில் 345 இலங்கைப் பெண்கள் பலி!

கொழும்பு, ஜூன் 26

வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்புப் பெற்றுச் சென்ற பெண்களில் கடந்த மூன்று வருடங்களில் 345 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் அவர்களுள் 07 பேர் கொலை செய்யப்பட்டதோடு 26 பேர் தற்கொலை செய்துகொண்டனர் என்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் அமைச்சர் டிலான் பெரேரா நேற்று முன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

வாய்மூல விடைக்கான வேளையின்போது அரச தரப்பு நாடளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே இவ்வாறு கூறினார். அவர் இது தொடர்பாக மேலும் கூறியதாவது:

2008 முதல் 2010 வரையிலான மூன்று வருடங்களில் வெளிநாடுகளுக்குத் தொழில் வாய்ப்புப் பெற்றுச்சென்ற பெண்களில் 345 பேர் உயிரிழந்துள்ளனர்.

அதன்படி 2008 ஆம் ஆண்டு 111 பெண்களும், 2009 ஆம் ஆண்டு 125 பெண்களும், 2010 ஆம் ஆண்டு 109 பெண்களும் உயிரிழந்துள்ளனர்.

இவர்களில் 2008 ஆம் ஆண்டு உயிரிழந்த 111 பெண்களுள் 11 பேர் தற்கொலை செய்துகொண்டனர். மூவர் கொலை செய்யப்பட்டனர். வீதி விபத்துகளில் 13 பேரும் ஏனைய விபத்துகளில் 9 பேரும் உயிரிழந்தனர். 2009ஆம் ஆண்டு உயிரிழந்த பெண்களுள் 7பேர் தற்கொலை செய்து கொண்டனர். 4 பேர் கொல்லப்பட்டனர். வீதி விபத்துகளில் 10 பேரும் ஏனைய விபத்துகளில் 6 பேரும் உயிரிழந்தனர்.

2010 ஆம் ஆண்டு உயிரிழந்த பெண்களுள் 8 பேர் தற்கொலை செய்து கொண்டனர். 13 பேர் வீதி விபத்துக்களிலும் 18 பேர் ஏனைய விபத்துக்களிலும் உயிரிழந்தனர் - என்றார். (ஒ-சி)

# அதிபர் இன்றி இயங்கிவரும் காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி

**நடவடிக்கை எடுக்குமாறு பெற்றோர் கோரிக்கை**

காரைநகர், ஜூன் 26

காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரிக்கு அதிபர் ஒருவரை நியமிக்குமாறு பெற்றோர் தீவக வலயக் கல்விப் பணிப்பாளரிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

இந்தப் பாடசாலைக்கு அதிபர் ஒருவர் நியமிக்கப்படாமையினால் பாடசாலையின் கல்விச் செயற்பாடுகளைச் சிறந்த முறையில் முன்னெடுக்க முடியாதிருப்பதுடன் கல்விப் பெறுபேறுகளிலும் பின்னடைவு ஏற்பட்டு வருவதாகவும் பெற்றோரால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளதுடன் புதிய அதிபர் ஒருவரை உடன் நியமிக்குமாறும் தீவக வலயக் கல்விப் பணிப்பாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போது பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியை ஒருவரே பதில் அதிபராகக் கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (த-250)

# கடல்சார் வளத்தைப் பாதுகாத்தல்; யாழ்.நகரில் நாளை கருத்தமர்வு

வங்காள விரிகுடா கடல்சார் வளத்தைப் பாதுகாத்தல் தொடர்பான கருத்தமர்வு ஒன்று நாளை திங்கட்கிழமை காலை 8.15 மணிக்கு யாழ்.நகர் மானிப்பாய் வீதியில் உள்ள பிள்ளையார் இன் ஹோட்டலில் இடம்பெறவுள்ளது.

கடற்றொழில் நீரியல் வள ஆய்வுக்கும் அபிவிருத்திக்குமான நிறுவனத்தின் ஏற்பாட்டில் இந்தக் கருத்தமர்வு இடம்பெறவுள்ளது. இதன்போது வடபகுதியைச் சேர்ந்த துறைசார்ந்த பிரதிநிதிகள் சுமார் 50 பேர் கலந்து கொள்ளவுள்ளனர். இதில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் அரச அதிபர்கள், பிரதேச செயலர்கள், உதவி அரச அதிபர்கள், யாழ்.பல்கலைக்கழக துறை சார்ந்த விரிவுரையாளர்கள், மாகாண சபையின் துறை சார்ந்த அதிகாரிகள், கடற்றொழில் திணைக்களங்களின் உதவிப் பணிப்பாளர்கள், பிரதேச சபைகளின் செயலாளர்கள், கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் மாவட்டப் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ஒ-14)

# படகின் இயந்திரத்தில் சிக்கி கல்முனை மீனவர் படுகாயம்

படகின் வெளியிணைப்பு இயந்திரக் காற்றாடி தாக்கியதில் காயமடைந்த மீனவர் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். தாளையடி கடலில் கடல் அட்டை பிடிப்பதில் ஈடுபட்டிருந்த கல்முனையைச் சேர்ந்த ஜமால்தீன் நிஷாந்தின் (வயது- 35) என்ற மீனவரே இவ்வாறு காயமடைந்தார்.

படகின் அணியத்தின் மீது அமர்ந்திருந்து தொழில் செய்து கொண்டிருந்தபோது திடீரென அவர் கடலில் தவறி வீழ்ந்துள்ளார். அப்போது அந்தப் படகின் வெளியிணைப்பு இயந்திரத்தின் காற்றாடி மீது மீனவர் மோதுண்டுள்ளார். இதனால் அவரது நெஞ்சுப் பகுதியில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

உடனடியாக மீனவர் மருதங்கேணி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு நேற்றுமுன்தினம் மாற்றப்பட்டார். (த-14-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை - இங்கிலாந்து அணி கிரிக்கெட் போட்டியை புறக்கணித்து போராட்டம்

## நுழைவாயிலில் இளையோர் ஆர்ப்பாட்டம்



லண்டன், ஜூன் 26

பிரிட்டனில் பிறிஸ்ரல் நகரில் இலங்கை கிரிக்கெட் வீரர்கள் பங்கேற்ற போட்டியைப் புறக்கணித்து பிரிட்டன் இளையோர் அமைப்பு போராட்டம் நடத்தியது.

நேற்றுக் காலை இங்கிலாந்து மற்றும் இலங்கை அணிகளுக்கிடையிலான இருபது - 20 கிரிக்கெட் ஆட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னர் அதை பார்வையிடச்சென்ற மக்களுக்கு ஐக்கிய இராச்சிய இளையோரால் துண்டுபிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

அங்கு வந்த மக்களில் அநேகர் எமக்கு ஆதரவாகவும் ஆறுதலாகவும் எம்முடன் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். அதே சமயம் போட்டி தொடங்கிய பின்னர் விளையாட்டினைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த மக்களின் காதுகளுக்கு எட்டுமளவில் போராட்டத்தில் பங்கு பற்றியவர்கள் கோஷம் எழுப்பி தமது உயிரிலும் மேலான எம் தேசத்துக்கு இழைக் கப்பட்ட கொடுமைகளை மைதானம் தாண்டியும் கேட்கும்வகையில் குரல் எழுப்பினர்.

(ஒ-ஐ)

## கோல்பேஸ் கடல் 500 ஏக்கர் நிலமாக்கப்பட்டு

# கொழும்புத் துறைமுகம் விஸ்தரிப்பு; சீனாவுடன் ஒப்பந்தம் கைச்சாத்து

கொழும்பு, ஜூன் 26

கொழும்புத் துறைமுகத்தை விஸ்தரிப்பதற்காக கோல்பேஸ் கடலில் 500 ஏக்கர் நிலத்தை நிரப்புவதற்கான ஒப்பந்தம் ஒன்றை இலங்கையும் சீனாவும் செய்துள்ளன.

கொழும்புத்துறைமுகத்தை விஸ்தரித்து கூடுதலான கப்பல்கள் வந்து செல்ல வசதியாக கடலை நிரப்பி துறைமுகத்தை விஸ்தரிக்க அரசு முடிவு செய்துள்ளது.

கடலில் 500 ஏக்கர் கொண்ட பிரதேசம் ஒதுக்கப்பட்டு, அந்தப் பகுதி நிரப்பப்பட்டு நிலப்பரப்பாக மாற்றப்படும். இந்தத் திட்டத்துக்கு பெரும் தொகை நிதி செலவிடப்படும்.

இந்தத் திட்டத்தை உடனடியாக ஆரம்பிப்பதற்காக நேற்று சீனாவும் இலங்கை அரசும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன.

(ஒ-ஐ)


# கலேவெலபகுதி கிராமத்தில் திடீரென புதிய பூச்சி இனம்

கொழும்பு, ஜூன் 26

கலேவெல பகுதியில் பன்கொல ஜொல்ல என்ற கிராமத்தில் அடையாள தெரியாத புதிய பூச்சி இனம் ஒன்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

கிராமத்தின் தோட்டம் ஒன்றில் வெள்ளை நிறம் கொண்ட இந்தப் பூச்சிகள் காணப்படுகின்றன. இந்தப் பூச்சியின் உடல் முக்கால் அங்குல நீளம் கொண்டதாகவும் அதில் காணப்படும் நகங்கள் பெரியளவில் இருப்பதாகவும் கிராமவாசிகள் கூறுகின்றனர்.

சுமார் ஓர் அடி தூரம் வரையில் இந்தப் பூச்சிகள் பாய்வதும் அவதானிக்கப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் குறைந்த எண்ணிக்கையான பூச்சிகளே காணப்பட்டன என்றும் அவை விரைவாக பல மடங்கு அதிகரித்து விட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது.



தங்களின் பகுதியில் இந்த மாதிரியான பூச்சிகளை முன்னர் ஒருபோதும் பார்த்தது இல்லை என்று கிராமவாசிகள் ஆச்சரியத்துடன் தெரிவிக்கின்றனர்.

(ஒ)

# 23 இந்திய மீனவர்களும் நேற்று அ'புரம் சிறைச்சாலைக்கு மாற்றம்

கொழும்பு, ஜூன் 26

கச்சத்தீவுக்கு அருகே வைத்துக் கைது செய்யப்பட்ட 23 இந்திய மீனவர்களும் நேற்று அநுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டனர்.

மன்னார் நீதிமன்ற உத்தரவின் பேரில் வவுனியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இந்திய மீனவர்கள் நேற்று அநுராதபுரம் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக இந்திய அரசு நெகிழ்வுப் போக்கை கடைப்பிடிக்குமானால், பிரஸ்தாப மீனவர்கள் விடுதலை செய்யப்படுவர். இல்லையேல் சட்டப்படி அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க[illegible] மற்றும் நீரிய[illegible] சேனாரத்ன தெரிவித்தார்.

(ஒ-ஐ)



## சந்தியடிச் சோமு

# காலம் கலிகாலம் ஆகிப் போச்சடா...!

சா .மின்மினிக்கு கண்ணிலொரு மின்னல் வந்தது மாதிரி வந்து போகுது உந்த மின்சாரம். வந்த கோவத்துக்கு உந்த ரெலிபோன எடுத்து கேட்டா சொல்லுறாங்கள் ஒரு மணித்தியாலத்தில வருமென்று எப்ப கேட்டாலும் இதுதான் பதில் பாருங்கோ.உது சரி வராதென்று உரிய ஆபீசில போய் கேட்பமென்று வெளிக்கிட்டு போய் அங்க இருந்த வாங்கில இருந்தன். அடிக்கடி ரெலிபோன் வர வரவேற்புக்கு இருந்தது ஒரு மணித்தியாலத்தில வருமென்று சொல்லி களைச்சுப்போய் என்னப்பார்த்து கேட்டிச்சு பார்த்திங்களே கரண்டில்லாமல் சீவிச்சவைக்கு ஒரு கொஞ்ச நேரம் கரண்ட் இல்லாமல இருக்கேலாது. பாருங்கோ ஒரு கொஞ்ச நேரத்துக்க எத்தின கோல் வந்திட்டுது என்று கறுவினான். இதுக்கு மேல நான் என்னத்தக் கேட்கிறதென்று போட்டு பறையாமல் எழும்பி வந்திட்டன். அன்றைக்கிரவு ஒரு பதினைஞ்சு தரம் இரவு கரண்டை நிப்பாட்டினாங்கள்.; இப்ப உந்த விசிறிய நம்பின சீவியமா வந்தாப்பிறகு கரண்ட நிப்பாட்ட நித்திரைய தொலைக்க வேண்டியதாக் கிடக்கு. வடக்கால வெளுக்குமென்று என்னத்தையோ பார்த்த கதையாத்தான் கிடக்கு. ஒவ்வொருக்காவும் கரண்ட் நிக்க வேர்த்து விறுவிறுத்து உடம்பெல்லாம் பிசு பிசுக்குது பாருங்கோ, அதுக்குப் பிறகு எப்படி நிம்மதியா நித்திரை கொள்ளிறது.

இதை நான் சந்தியில சொல்ல கணேசண்ணை சொன்னார், குப்பி விளக்க அடிக்கடி ஞாபகப்படுத்திறாங்கள். ஒரு சொட்டு மண்ணெண்ணையில பஞ்ச திரிச்சு மணித்தியாலக் கணக்கா எரியவிட்டதயெல்லாம் நினைவு படுத்தி அதுக்கும் தயாரா இருங்கோ என்று சிக்னல் தாராங்கள் போல என்றார். இந்தக் கதைக்க விறுக்கென்று வந்த கதிரண்ணை கொஞ்சம் கடுப்பா சைக்கிளால இறங்கினவர், அங்க வந்த கம்பஸ் வாத்தியப் பார்த்து கேட்டார் உந்தக் கல்விப் புலத்தில என்ன நடக்குதென்று நீங்கள் ஒருத்தரும் பார்க்கிறதில்லையே என்றார்.

உடன கம்பஸ் வாத்தி கேட்டிச்சு ஏன் அண்ணை என்ன விசயம். நாங்கள் நூறு வீத சம்பள உயர்வு கேட்கிறது உனக்கு பிடிக்கேல்லையே என்றார். சம்பளங்கள வாங்கிப்போட்டு மனச்சாட்சிப்படி வேலை செய்தா சரிதானே. நான் அதைச் சொல்லேல்லை.போன கிழமை நான் உரும்பிராய்க்கு சொந்த மொன்றிட்ட போனனான் அங்க ஆறாம் வகுப்பு படிக்கிற பேத்தி முறையான ஒருத்தி ஒரு பேப்பர ஒரு சங்கடமும் இல்லாம வைச்சு பார்த்துக் கொண்டிருந்தாள். முன் பக்கத்திலயே அரசியலும் காமமும் என்று தலையங்கம். பின் பக்கம் நடுப்பக்கத்தில கன்றாவி சினிமாக்கரங்களிண்ட அரைகுறை படங்களோட அந்தப் பேப்பர் இருந்திச்சு. பிள்ளை வலு சுவாரசியமா வைச்சு வாசிக்குது. நான் கேட்டன் யார் பிள்ளை உந்தப் பேப்பர உனக்கு வாங்கித்தந்தது. உடன அவள் சொன்னாள் எங்கட அதிபர் தான் எல்லாரையும் வாங்கச் சொல்லி சொன்னவ என்றாள். எனக்கு தூக்கி வாரிப்போட்ட மாதிரி இருந்திச்சுது. அதிபர் ஏதும் பேப்பர் கொம்பனியோட ஏஜன்சியா பதிஞ்சிட்டாரோ என்ற சந்தேகத்தில, நான் பதிலுக்கு கேட்டன் ஏன் உந்த இழவ உங்கள வாங்கச் சொன்னவ. அது எங்கட பள்ளிக்கூடத்தைப் பற்றி வந்திருக்கு அது தான் வாங்கச் சொன்னவ என்றாள். இங்க ஒருக்கா தா பார்ப்பமென்று வாங்கிப் பார்த்தால், அது மிகவும் அருவருப்பாய் மோசமா இருந்திச்சு. அந்தளவுக்கு படு மோசமான கேள்வி பதில்கள் கொட்டன் எழுத்துக்களில கிடந்திச்சு. எனக்கு பிறகொரு சந்தேகம் வந்திது. அதிபர் பள்ளிக்கூட வரலாற்றை படிக்கிறதுக்காக சொன்னாவோ பிள்ளைகளுக்கு மலிவான செக்ஸ் எடிக்கேசனுக்காக கொடுத்தாவோ என்று. இந்த யோசினையில நான் இருக்க,பேத்தி வானத்தைக்காட்டி தாத்தா அங்க பாருங்கோ என்ன வடிவான வானவில்; என்றாள். நானும் வானவில் வடிவு தான் என்று போட்டு எழும்பி வந்திட்டன்.

இதைக்கேட்ட கந்தையர் சொன்னார் அதிபர் தான் சொன்னாரெண்டால் அங்க படிப்பிக்கிற வாத்தியொன்றுக்கும் விளக்கமில்லையே. என்ன குடுக்கிறம் ஏது குடுக்கிறமென்று அறிஞ்சு தெரிஞ்சு கொடுக்கக் கூடாதே. பதிலுக்கு ஓம் ;.. ஓம் என்று தொடங்கின நடேசண்ணை பெற்றோர்மார் ஒருத்தரும் பிள்ளையள் என்னத்தை கொண்டு வருகுதுகள் என்று பார்த்து, பள்ளிக்கூடங்களுக்கு இடிச்சு சொல்ல திராணியில்லாமல் தானே இருக்குதுகள் என்றார்.

காலம் கலிகாலமானா இப்படி எல்லாம் நடக்கும் பாருங்கோ என்றார் கம்பஸ்வாத்தி. இப்படிச் சொல்லி எல்லாரும் தட்டிக்கழிச்சா எல்லாம் குட்டிச் சுவராக வேண்டியது தான் என்று மறுத்தான் போட்டார் கதிரண்ணை.

பள்ளிக் கூடங்களில நடக்கிற விழாக்களுக்கு இப்ப அரசியல் வாதிகளைக் கூப்பிட்டு அவை செய்தது செய்யாததுகள் எல்லாத்தையும் சொல்லி ஐஸ் வைச்சு குளிர்விக்கிறாங்கள் பாவிகள் தாங்கேலாமல் கிடக்குது. அரசியல் வாதிகளை புளுகிப்பிழைக்கிறதுக்கென்று கல்விப்புலத்தில கொஞ்ச கொக்கரிப்பாண்கள் திரியுதுகள் என்று பீடிகை போட்டார் நடேசண்ணை. என்னண்ணை என்ன விசயமென்று எல்லாருமா கேட்ட அந்தாள் சொல்லிச்சு சின்னப்பள்ளிக் கூடமொன்றுக்கு முதல்வரை பிரதம விருந்தினரா கூப்பிட்டவை சிறப்பிக்கிறதுக்கு கோட்டமொன்றின்ற மாணிக்கத்தையும் கூப்பிட்டவை. விழாவின்ர கடைசியில பிள்ளைகளிண்ட திறமைகளால அந்த இடமே நிறைஞ்சிருக்க. சிறப்பிக்க வந்த பாவி அதுகளப்பற்றி பேசாமல் கட்சிப்பிரசாரத்துக்கு கூலிக்கமர்தினது மாதிரி கொக்கரிச்சுது. மாநகர சபை அமைக்க அறுநூறு மில்லியன் ஒதுக்கினது, காபெட் வீதி முப்பது வருசத்துக்குப்பிறகு நடந்திருக்கிற அற்புதமென்று மூச்சு விடாமல். உடரூசி அடிச்சு விட்டவர் மாதிரி கத்தி முடிச்சார் என்றார் நடேசண்ணை. உந்த வாலாட்டிற கூட்டங்கள பிள்ளைகளுக்கு முன்னால் கொண்டு வந்து மாலையளப் போடுறத நிப்பாட்ட வேணும். இல்லாட்டி வானரப் படையொன்றுத்தான் உருவாக்கிறதா போயிடும் என்று தன் பங்குக்கு மூச்சுப்பிடிச்சு சொல்லி முடிச்சார் கதிரண்ணை.

காலம் கலிகாலமாகிப் போச்சடா என்று பாடிப்போட்டு இருக்க வேண்டியது தான் இன்றைக்கு சமா காணும் வெளிக்கிடுங்கோ என்று கம்பஸ் வாத்தி சொல்லிக் கொண்டு எழும்ப எல்லாரும் கலைஞ்சு வந்திட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை வாய்ப்பு

1. தாதியர்.
2. உதவித் தாதியர் பயிற்சி பெற விரும்புபவர்கள்.

வெளி இடத்து ஆள்களுக்கு இலவச உணவு, தங்குமிட வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

**சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்**
இல. 08, இராமையாச் செட்டியார் வீதி,
யாழ்ப்பாணம்
**0212227259**

- தபால் மூலம் -

## ஆறு மாத கால டிப்ளோமா

**Course Length - Six Month**

20

JUNE 2011 TO NOVEMBER 2011

*தமிழ் மொழி மூலம்*

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**Mobile: 0777 140 844, 071 803 48 48**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
**MARUTHUR . A. HASSEN**
*(B.Sc. Psychology, M.Sc. Psychology)*

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.06.2011

## ஆள் தேவை

வடமராட்சியில் உள்ள பாமசி ஒன்றுக்கு பாமசி வேலையில் நன்கு அனுபவம் உள்ளவர்கள் தேவை.
தொடர்பு: 0771267222

## காணியும் வீடும் விற்பனைக்கு

பருத்தித்துறை வீதியும் சுன்னாகம் வீதியும் இணையும் சந்தியில் (புத்தூரில்) சேச்சுக்குப் பின்னால் 7 ½ பரப்புக் காணியும் 8 அறையும் கொண்ட வீடும் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 077 8694980, 077 9563255, 0041 564933287 (2181)

## வேலையாள் தேவை

உணவு பரிமாறுவோர், ரீமேக்கர், சமையல் உதவி யாளர் தேவை.
அமுல் கிறீம் ஹவுஸ்.
இல.452, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (2180)

## STUDY & WORK IN

**New zeland / Australia / Poland / UK**
**Cyprus / Canada / Switzerland / Swedan**
**Germany / Scotland / Ireland**
**(Study + Work Permit + PR)**

✓ Courses :-
Management, Computing, IT, Travel Tourism, Cookery, Beauty Culture & more than 100 Courses.
✓ Minimum Qualification :- ● 'O' Level ● No Need IELTS
✓ அரச மற்றும் Embassy சட்ட திட்டங்களுக்கு அமைவாக சிறந்த சட்டத்தரணிகளின் உதவியுடன் அனைத்து விதமான VISAக்களும் செய்துதரப்படும்.
✓ Accomodation and Part Time Work Gurantee, Visa Gurantee for Genune Applicants

**Study MBBS/MD/ENGINEERING in East Europe (UKRINE/RUSSIA/BELARUS/GEORGIA)**

✓ SRI LANKA MEDICAL COUNCIL (SLMC)
✓ WORLD HEALTH ORGANIZATION (WHO) Approved Universities
(Fees Start from USD 2400 Pa)
Entry Qualification : A/L 3 Passes ⇒ Admission in Progress

Study MBBS & Engineering in CHINA

**Study in INDIA (New Delhi, Bangalore, Tamilnadu)**

Admissions From Reputed Universities & Colleges
Courses :- (Fees Start from USD 1000 Pa)
Engineering, Medicine (MBBS, BDS, Pharmacy), Computing Business Management, Accounting & Finance, Arts, IT
Entry Qualification : A/L 3 Passes

**SIEG INTERNATIONAL**
169, George R De Silva Mawatha,
Kotahena, Colombo-13. (opposite to McDonalds)
Tel :- 011-2434767
Mobile :- 077 3 502 612

## சமய சந்நிதிகளில்

சங்கரத்தை பிட்டியம்பதி பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் பாலஸ்தாபனம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை முதல் நண்பகல் 12 மணிவரை இடம் பெறவுள்ளது. (313)

* * *

அச்சுவேலி வருணன் ஸ்ரீ காளிகாதேவி சமேத வீரபத்திர சுவாமி ஆலயத்தின் மண்டலாபிஷேகப் பூர்த்திவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மாலை 5 மணிக்கு திருக்கல்யாணம் இடம்பெற்று பூந்தண் டிகை திருவீதி உலா இடம்பெறும். (313)

* * *

வடமராட்சி, ஜூன் 26

அல்வாய் வடக்கு வியாபாரிமூலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் சமேத வீரபத்திர சுவாமி கோயில் பெருந் திரு விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறும் பெருந்திருவிழாவில் எதிர்வரும் 6 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் எதிர்வரும் 7 ஆம் திகதி வியாழக் கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

இந்தப் பெருந்திருவிழாவை ஆலயப் பிரதம குரு சிவநெறிச் செம்மல் சிவப் பிரம்ம ஸ்ரீ சி.வாசுதேவக்குருக்கள் நடத்தி வைப்பார். (236)

* * *

காரைநகர், ஜூன் 26

காரைநகர் பத்தர்கேணி வன்மீக விநாயகர் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றது.

சிவஸ்ரீ நா.ஞானசம்பந்தக் குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்த அலங்கார உற்சவத்தில் அடுத்த மாதம் 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விநாயகப் பெருமான் கிராம வலம் வருவார். (250)

## வீடு விற்பனைக்கு

கொய்யாத்தோட்டத்தில் 1½ பரப்புக் காணியும் சகல வசதிகளுடன் வீடும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 0776330740 (2179)

## கார் விற்பனை

KA- XXXX இலக்கமுடைய TATA INDICA விற்பனைக்கு உண்டு. SILVER COLOUR, Full Option Good Codition
T.P- 0723635810 (2182)

## தேவை

எமது நிறுவனத்துக்குப் ''பொதி செய்யும் பகுதியில்'' வேலை செய்வதற்கு முன் அனுபவமுள்ள ஆண்கள் / பெண்பிள்ளைகள் தேவை.

* நேரில் வரும்போது கிராம சேவகரின் சிபாரிசுக் கடிதமும், சுயவிவரக் கோவையும் கொண்டு வரவும்.
* யாழ்.மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கும், திருமணமாகாதவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

குறிப்பு:- முன்பு சுப்பர் மார்க்கெட்டில் பொதி செய்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

**சிவா நறுமணப் பூங்கா,**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி - 021 222 2567




# எட்குரோ

GREAVES
SINCE 1859

**விவசாய நீர் இறைக்கும் இயந்திரம்**

**Mk12 SP & NSP Engine Driven Pumps**



**எட்குரோ இயந்திரம் இலவசமாக திருத்தி கொடுப்பதுடன், சர்வீஸ் செய்தும் கொடுக்கப்படும்.**

ஜூன் மாதம் 27ம் திகதி காலை 8.30 மணிக்கு **புத்தூர்** கமநல அபிவிருத்தி நிலையம்.
ஜூன் மாதம் 28ம் திகதி காலை 8.30 மணிக்கு **வன்னேரிக்குளம்** கிராம சேவகர் அலுவலகம்
பகல் 230 மணிக்கு **ஆனைவிழுந்தான்** கிராம சேவகர் அலுவலகம்
ஜூன் மாதம் 29ம் திகதி காலை 8.30 மணிக்கு **நெடுங்கேணி** கமநல அபிவிருத்தி நிலையம்.
ஜூன் மாதம் 30ம் திகதி காலை 8.30 மணிக்கு **நெடுங்கேணி** கமநல அபிவிருத்தி நிலையம்.

மேலதிக விபரங்களுக்கு ஸ்ரீபாலன் 0777 699 123

EDNA GROUP

**எட்னா என்ஜினிரிங் (பிரை) லிமிட்டட்**
257, கிராண்பாஸ் வீதி, கொழும்பு-14.
தொலைபேசி: 2498200 பெக்ஸ்: 2472628 E-mail: agro@edna.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மக்கள் நலன் நாடிச் செயற்படுவீர்!

உயிருள்ள சகல சீவராசிகளுக்கும் உணவு இன்றியமையாதது. அவை உட்கொள்ளும் ஊட்டச் சத்துள்ள உணவு வகைகளிலேயே அவற்றின் உடல் நலமும் உயிர் வாழ்வும் தங்கி உள்ளன. உடல் நலம் பேணுவதற்கு சுத்தமான உணவை உண்பது அத்தியாவசியம். தமது சொந்த வீடுகளில் சமைக்கும் உணவுவகைகள் ஊட்டமும் சுத்தமும் சேர்ந்தவையாக இருக்க வேண்டும் என்பதில் மக்கள் மிக அவதானமாகவும் அக்கறையாகவும் இருப்பர்.

ஆனால் உணவு கையாளும் நிலையங்கள் மிகப் பலவற்றில் மக்களுக்கு, வாடிக்கையாளர்களுக்குச் சுத்தமான உணவுகளை வழங்குவதில் போதிய அக்கறையும் கவனமும் செலுத்தப்படுவது மிகவும் குறைவு.

உணவகங்களை நிர்வகிப்போர் வகைவகையான ருசிமிக்க உணவு வகைகளை வழங்கித் தமது வாடிக்கையாளர்கள் எண்ணிக்கையை அதிகரித்து தமது வருமானத்தைப் பெருக்குவதில் காட்டும் ஆர்வத்தை, சுத்தமான உணவு வகைகளைப் பரிமாறுவதில் காட்டுவதில்லை என்பது நீண்டகாலமாக நிலைத்திருக்கும் குறைபாடாகும்.

உணவு கையாளும் நிலையங்களின் வகையறாக்கள் வெவ்வேறு தரங்களிலும் நவீனமான நாமங்களுடனும் பெருகி வந்தாலும் மக்களுக்கு- வாடிக்கையாளர்களுக்கு- வழங்கப்படும் உணவு வகைகளின் தரங்கள் மெச்சத்தக்க அளவுக்கு உயரவில்லை என்ற அதிருப்தி மறைந்து போவதற்கு இன்னும் பல தசாப்தங்கள் கழிந்தாலும் சாத்தியமா என்ற வினா தொக்கி நிற்கவே செய்கிறது.

அதன் காரணமாக, உணவு கையாளும் நிலையங்களை தரப்படுத்தவும், மீள் தரப்படுத்தவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. ஹோட்டல்கள் மற்றும் விருந்தினர் விடுதிகள் அந்தந்த வகையறாக்களுக்கு ஏற்ப ஏற்கனவே தரம் பிரிக்கப்பட்டுள்ளன. எனினும் அவற்றில் அதிகமானவை மக்கள் விருப்பத்துக்கு உரியனவாக மாறவில்லை.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள உணவு கையாளும் நிலையங்கள் இன்னும் தரப்படுத்தப்படவில்லை. சுகாதார அமைச்சு விடுத்த பணிப்புரை ஒன்றுக்கு அமைவாக இங்கும் தேசிய ரீதியாக அமுலில் உள்ள அந்த நடவடிக்கை நடைமுறைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உணவு கையாளும் நிலையங்களில், உணவு விடுதிகள், சிற்றுண்டிச் சாலைகள் மட்டுமன்றி உணவு தயாரிக்கும் தொழிலகங்கள், வெதுப்பகங்கள், பலசரக்கு விற்பனை நிலையங்கள் விரைவில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுத் தரம் பிரிக்கப்படும் என்று பிராந்திய சுகாதார பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

நுகர்வோர் நலனை முதன்மைப்படுத்தி, முன்னெடுக்கப்படவுள்ள இந்தத் திட்டம் முதலில் யாழ். நகரத்திலும் அதன் பின்னர் பிரதேச செயலகங்கள் மட்டத்திலும் நடைமுறைக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அதன் பிரகாரம், சுகாதார அமைச்சினால் தயாரிக்கப்பட்டுள்ள மீளாய்வுப் படிவம் குடாநாட்டில் உள்ள அனைத்துச் சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனைகள் மட்டத்தில் அவற்றில் இயங்கும் உணவக உரிமையாளர்களுக்கும் அறிவுறுத்தல், கருத்தரங்குகள் குடாநாட்டில் நடத்தப்படுகின்றன.

உணவகங்களில் எதிர்காலத்தில் எந்தெந்த வகைகளில் சுகாதாரத்தையும், தரத்தையும் பேணலாம் என்பது குறித்து விரிவாக விளக்கம் அளிக்கப்பட்டு வருகிறது.

இதன்பின்னர் உணவகங்களிலும் மற்றும் உணவு கையாளும் நிலையங்களிலும் மிகமிக இறுக்கமான விதிமுறைகள் கையாளப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. அவற்றை நடைமுறைப்படுத்த மூன்று மாத கால அவகாசம் வழங்கப்படும்.

உணவு கையாளும் நிலையங்களில் இறுக்கமான விதிமுறைகள் கொண்டு வரப்படும் அதேவேளை, அவற்றில் பணியாற்றுவோருக்கு பயிற்சி அளிப்பதற்கும் திட்டங்கள் வகுக்கப்படுவது இன்றியமையாததாகும்.

அவை அமைந்துள்ள சுற்றுச் சூழலில் சுகாதாரம் பேணப்படுவதும் அவசியம். அதே போன்று உணவகங்களின் உட்புறங்களை குறிப்பிட்ட, வகுக்கப்பட்ட படிமுறைகளின் பிரகாரம் சுகாதாரம் பேணுவது கட்டாயம் ஆக்கப்படுவது மிகப் பிரதானமானது.

உணவகங்கள் முன்புறம், உள்பக்கங்கள் பார்வைக்கு சுத்தமாக வைக்கப்பட்டிருந்தாலும் அவற்றின் பின்புறங்களில் உள்ள உணவுக் கழிவுகள் போடும் இடங்கள், சமையற் கூடங்கள், கழிவு நீர் வடிகால மைப்புக்கள் சீராக இருப்பதில்லை.

கழிவு நீர் உரிய முறையில் வெளியேற்றப்படாது பகிரங்க வீதி வடிகால்கள் ஊடாக வெளியேற்றப்படுவதும், உணவகங்களின் பின் வளவுகளில் தோண்டப்படும் குழிகளுக்குள்ளே தேக்கி அக்கழிவு நீர் அயலில் உள்ள கிணறுகளில் ஊறிக் கலந்ததும் யாழ். நகரில் அடிக்கடி கண்டறியப்பட்டுள்ளன. இவ்வாறு குடிதண்ணீர் கிணறுகள் மாசடைவதால் நெருப்புக் காய்ச்சல் போன்ற ஆபத்தான நோய்கள் பரவுவதற்கு ஏதுவாகிறது.

உணவு பரிமாறுவோர் மற்றும் உணவகப் பணியாளர்கள், உணவுப் பண்டங்கள் தயாரிப்பதற்கான மூலப் பொருள்களின் தரம் என்பன குடாநாட்டின் உணவகங்கள் முறைப்படி, விதிப்படி பேணுவதற்கு ஊக்குவிக்கப் படவேண்டும்

சுகாதாரப் பகுதியினர் விதிமுறைகளை வகுத்து, அவற்றைச் செயற்படுத்துவதாகக் கூறுவதோடு காரியம் முற்றுப் பெறாது. சட்டங்கள் செய்து, திட்டங்கள் வகுப்பதோடு எதுவும் கைசேராது. அவை உரிய முறையில் மக்கள் நலன் நாடி செயலாக்கப்படுகின்றனவா என்பதனை நாளாந்தம் நேரில் சென்று கண்டறிய வகை செய்யப்படுவது மிகவும் அவசியம்.

திருட்டை ஒழிப்பதற்கு என்னென்ன சட்டங்கள், எந்த வகை விதிமுறைகள் வகுக்கப்பட்டாலும், அதில் ஈடுபடுபவர்கள் மனம் வைத்துத் திருந்தாவிடில் அதனை ஒழிக்க முடியாது. ஆகவே, உணவு கையாளும் நிலையங்களின் உரிமையாளர்களும் பணியாளர்களும், மனிதாபிமானத்தின் பெயரால், தம்மை நம்பி நாடி வருவோர் உடல் நலனில், அவர்களின் சுகாதாரத்தில் உளப் பூர்வமாகச் செயற்பட வேண்டும். அதன இன்றே செய்க, நன்றே செய்க!

# சிறுவர் துஷ்பிரயோகம் 34,508 முறைப்பாடுகள்

## 11 மாதங்களில் கிடைத்துள்ளனவாம்

கொழும்பு, ஜூன் 26

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக கடந்த 11 மாதங்களில் மாத்திரம் 34 ஆயிரத்து 508 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

சிறுவர் துஷ்பிரயோகங்களையிட்டு முறைப்பாடு செய்யும் 1929 என்ற தொலை பேசி இலக்கத்தினூடாக கடந்த வருடம் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் இந்த வருடம் மே மாதம் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் இந்த முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று அதிகாரசபையின் அதிகாரியொருவர் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

கிடைக்கப் பெற்ற முறைப்பாடுகளுள் 4ஆயிரத்து 670 முறைப்பாடுகளுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளன என்றும் அந்த அதிகாரி கூறினார்.

களுத்துறை, கொழும்பு, கம்பஹா ஆகிய மாவட்டங்களிலிருந்தே அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்றும், வடக்கு, கிழக்கு பிரதேசங்களிலிருந்து குறைந்தளவான முறைப்பாடுகளே பதிவாகியுள்ளன என்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

சிறுவர் துஷ்பிரயோகம், பிச்சை எடுக்க வைத்தல், சிறுவயதில் கட்டாயத் திருமணம், சிறுவர்களை வேலைக்கு அமர்த்தல், உடல், உள ரீதியாகத் துன்புறுத்தல், கொடூரமான தண்டனை வழங்குதல் என்பன தொடர்பாகவே அதிகளவில் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன என்றும் அவர் தெரிவித்தார். (ஒ-சி)

## வெளிநாட்டில் வேலைவாய்ப்பு என்று கூறும்

# ஆசாமிகளின் ஆசை வார்த்தைகளை நம்பி பெண் பிள்ளைகளை எவரும் அனுப்பாதீர்

யாழ்ப்பாணம், ஜூன் 26

தொழில் வாய்ப்புத் தருவதாகவும், வெளிநாடுகளுக்கு அனுப்புவதாகவும் ஆசை வார்த்தை கூறும் எவருடனும் வடபகுதி யுவதிகளை தென்னிலங்கைக்கு அனுப்பாதீர்கள்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவி அனோமா திசாநாயக்க இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:-

வேலைவாய்ப்பைப் பெற்றுத் தருவதாக கூறி வடபகுதியில் இருந்து அழைத்துச் செல்லப்பட்ட யுவதிகள் 7 பேர் கொழும்பில் விபசாரத்தில் ஈடுபடுத்தப்பட்ட சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

இதுகுறித்து சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அதிகாரிகள் குறித்த இடத்துக்குச் சென்று சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது அலுமாரி போன்ற சிறிய இடத்தில் அடைக்கப்பட்டிருந்த 7 யுவதிகளையும் மீட்டனர். மீட்கப்பட்ட யுவதிகளை நீதிமன்ற பிணையில் அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இதில் இருவருக்கு சமூக நோய் ஏற்பட்டுள்ளதாக மருத்து அறிக்கை தெரிவிக்கின்றது.

குறிப்பிட்ட இடத்தில் இருந்து தப்பியோடி வந்த சிறுமியொருவர் கொடுத்த தகவலின் அடிப்படையில் இந்த யுவதிகள் மீட்கப்பட்டுள்ளதுடன், விடுதியை நடத்தி வந்ததாகக் கூறப்படும் மூவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

எனவே இது குறித்து குறிப்பாக வடபகுதியைச் சேர்ந்த பெற்றோர்கள், பாதுகாவலர்கள் அவதானமாக இருக்க வேண்டும். ஆசை வார்த்தைகளைக் கூறும் ஆசாமிகளின் உறுதி மொழிகளை நம்பி யுவதிகளை எவருடனும் செல்ல அனுமதிக்காதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன் என்று வலியுறுத்தி உள்ளார். (ஒ-9)

# 'கேற்வே' ஆங்கிலப் பரீட்சையில் 65 மாணவர்கள் சித்தி பெற்றனர்

யாழ்ப்பாணம், ஜூன் 26

'கேற்வே' நிறுவனத்தில் இளவயதினருக்கான ஜோன் கீல்ஸ் ஆங்கில புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் பயின்று இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் விவரங்கள் வெளியாகியுள்ளன.

இறுதிப் பரீட்சையில் 6 பேர் அதிசிறப்புத் தரத்திலும், 25 பேர் சிறப்புத் தரத்திலும், 34 பேர் சாதாரண தரத்திலும் சித்தியடைந்துள்ளனர்.

சித்தியடைந்தவர்களின் விவரங்களை 349, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள 'கேற்வே' மொழிகள் மற்றும் தகவல் தொடர்பாடல் பயிற்சி நிலையத்தில், அலுவலக நேரத்தில் தொடர்பு கொண்டு பார்வையிடலாம் என நிலைய முகாமையாளர் அறிவித்துள்ளார். (த)

# அரியாலை பூம்புகார் பகுதியில் ப.நோ.கூ. சங்கக்கிளை

அரியாலை பூம்புகார் பகுதியில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளையொன்றை அமைப்பதற்கான கட்டடம் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 'என்றிப்' திட்ட அனுசரணையுடன் அமைக்கப்படும் கிளைக் கட்டடத்துக்கான அடிக்கல் 22 ஆம் திகதி புதன்கிழமை நல்லூர் ப.நோ.கூ.சங்க அதிகாரிகளால் நடப்பட்டது.

நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட இந்தப் பகுதிக்கான கூட்டுறவுக் கிளைச் செயற்பாடுகளை மேற்கொள்ளும் முகமாக நல்லூர் பல.நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நிர் வாகக் கட்டமைப்பில் இந்தக் கிளை செயற்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கிளையின் செயற்பாட்டால் மீள்குடியமர்ந்த பகுதிகளான கிழக்கு அரியாலை, பூம்புகார், நாவலடி மக்கள் தமது நிவாரணப் பொருள்களையும், நுகர்வுப் பொருள்களையும் இலகுவில் பெற வசதியேற்படும். தற்போது யாழ்.பல.நோ.கூ சங்கக் கிளையயான அரியாலைக் கிளையில் நிவாரணப் பொருள்களைப் பெற நீண்ட தூரம் சென்று வர வேண்டியுள்ளதாக மக்கள் தெரிவித்தனர்.(த-135)




உலகக் குருதிக் கொடையாளர் தினத்தை முன்னிட்டு யாழ். மாவட்டத்தில் உள்ள தன்னார்வக் குருதிக் கொடையாளர்கள், இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் வைத்து யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியினரால் கௌரவிக்கப்பட உள்ளார்கள்.

உயிர்காக்கும் உன்னத பணியில் ஒன்றிணைவோம் வாருங்கள்

இரத்ததானம் - உங்கள் பங்களிப்பு

- தொடர்ந்து குறிப்பிட்ட கால இடை வெளியில் இரத்ததானம் செய்யலாம்- நான்கு மாதங்களுக்கு ஒருமுறை.
- உங்கள் நண்பர்களையும் உறவினர்களையும் இரத்ததான சேவையில் இணைத்தல்.
- இரத்த வங்கியுடன் தொடர்பு கொண்டு உங்கள் ஊர்களிலும் அலுவலகங்களிலும் நடமாடும் இரத்ததான முகாம்களை ஒழுங்குபடுத்தல்.
- ஊர் விழாக்களின்போது இரத்ததானம் தொடர்பான துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தும் சுவரொட்டிகளை ஒட்டியும் விழிப்புணர்வை ஏற்படுத்தல்.

இரத்தவங்கி, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம். 021-222 3063.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் வசதியான தொலைத் தொடர்பாடல்

மாங்குளம் அருகே உள்ள கொக்காவில் தொலை தொடர்பு கோபுரத்தின் உத்தியோகபூர்வ செயற்பாடுகள் மீண்டும் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. இது வடக்கில் வசதியான தொலைத் தொடர்பாடலுக்கு பல வழிகளிலும் வலுச் சேர்க்கும் என அரசு தெரிவித்துள்ளது.

குறிப்பாக வடக்கில் உள்ள வன்னி மற்றும் இதர பின் தங்கிய பிரதேசங்களில் மறு ஒலி பரப்பு கோபுரங்கள் அமைக்க வேண்டிய தேவையை பெருமளவில் குறைத்துள்ளது. அத்துடன் தெளிவான தொலைக் காட்சி, வானொலி மற்றும் வேகமான இணைய, தொலை தொடர்பாடல் வசதிகளை இலகுவாக வட பகுதி மக்கள் பெற்றுக் கொள்ள வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

யுத்தம் ஓய்ந்துள்ள கடந்த இரண்டு வருடங்களில் வட பகுதி மக்களால் அரச ஒளிபரப்புச் சேவைகளையே அதிகம் பார்க்க வேண்டிய நிலை காணப் பட்டது. தனியார் ஒளிபரப்பு சேவைகளை டிஸ் அல்லது கேபிள் இணைப்புக்களின் மூலமாகவே நுகர்ந்து வருகின்றனர். தற்போது இந்த கோபுரத்தின் ஊடாக வடக்கில் சேவையை வழங்க பல தென்னிலங்கை தனியார் வானொலி, தொலைக்காட்சி மற்றும் இதர தொலை தொடர் பாடல் நிறுவனங்களும் விண்ணப்பித்துள்ளன.

மேலும் இந்த தொலை தொடர்பு கோபுரத்தின் ஊடாக வடக்கில் டிஜிற்றல் முறையிலான (DVB&T2 system) வானொலி, தொலைக்காட்சி ஒலி, ஒளி பரப்புக்களும் இந்த வருடத்துக்குள் ஆரம்பிக்கப்படும் என தொலைத்தொடர்பு ஒழுங்கு படுத்தும் ஆணையாளர் அனுச பெல்பிற்ற (Anusha Pelpita) தெரிவித்துள்ளார்.

தெற்கு, தென்கிழக்காசிய நாடுகளிலேயே காணப்படும் மிக உயரமான (174 மீற்றரர்) இந்த கோபுரத்தின் புனரமைப்புக்கு 450 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது. 1982-1990 வரை வடக்கில் தெளிவான அலைவரிசையை வழங்குவதிலும் இராணுவ தொலை தொடர்பாடல் தேவைகளுக்குமாக இது பயன்படுத்தப் பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாட்டு முதலீடுகள் அதிகரிப்பு

236 மில்லியன் ஐ.அ. டொலர் பெறுமதியான வெளிநாட்டு நேரடி முதலீடுகளை (FDI) இந்த ஆண்டின் முதல் காலாண்டில் இலங்கை பெற்றுள்ளது. இது கடந்த ஆண் டின் முதல் காலாண்டுடன் ஒப்பிடுகையில் 160 சதவீத அதிகரிப்பு என அரச முதலீட்டு ஊக்குவிப்பு முகவர் நிலையம் தெரிவித்துள்ளது.

இதில் 132 மில்லியன் ஐ.அ. டொலர் பெறுமதியான முதலீடுகளை (56% of FDI) சுற்றுலாத்துறை பெற்றுக் கொண்டதாக இலங்கை முதலீட்டுச் சபையின் ஆணையாளர் ஜெயபதி பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை 2009 , 2010 இல் முறையே 601 , 516 மில்லியன் ஐ.அ.டொலர் பெறுமதியான வெளிநாட்டு நேரடி முதலீடுகளை இலங்கை பெற்றுக் கொண்டதாக மத்திய வங்கியின் புள்ளிவிவரத் தரவுகள் காட்டுகின்றன. இதனை இந்த ஆண்டில் ஒரு பில்லியன் அமெரிக்க டொலராகவும் 2015 இல் இரண்டு புள்ளி ஐந்து பில்லியன் அமெரிக்க டொலராகவும் அதிகரிப்பதற்கு இலக்கு வைத்துள்ளதாக முதலீட்டுச் சபையின் ஆணையாளர் ஜெயபதி பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.

நாட்டின் மொத்த உள் நாட்டு உற்பத்தியை உந்தித் தள்ளுவதற்கு இலங்கை போன்ற வளர்ந்து வரும் பொருளாதாரங்கள் வெளிநாட்டு நேரடி முதலீடுகளையே நம்பி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வட்டி வீதங்களை உயர்த்த இந்திய வங்கிகள் நடவடிக்கை

நாட்டின் பணவீக்கத்தினை கட்டுக்குள் கொண்டு வரும் பொருட்டு வங்கிகளுக்கான வட்டி விகிதத்தை 0.25 சதவீதத்தினால் மேலும் அதிகரித்துள்ளதாக இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர் டீ.சுப்பாராவ் இந்திய ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

கடந்த மே மாதத்தில் இந்தியாவின் பணவீக்கம் 9.06 சதவீதமாக அதிகரித்து இருந்தது.

இதனை கட்டுக்குள் கொண்டு வரும் பொருட்டு வங்கிகளுக்கு வழங்கும் குறைந்த கால கடனுக்கான வட்டி விகிதம் (Repurchase rate) மற்றும் ரிசர்வ் வங்கி, வங்கிகளிடம் இருந்து பெறும் கடனுக்கான வட்டி விகிதம் (Reverse Repurchase rate) ஆகியவற்றினை 0.25 சதவீதத்தினால் அதிகரித்து முறையே 7.5% மற்றும் 6.5% ஆக உயர்த்தியுள்ளது ரிசர்வ் வங்கி.

இதனால் இந்திய வங்கிகள் வட்டி வீதங்களை மீண்டும் உயர்த்த முடிவு செய்துள்ளன. இதன் விளைவாக வீடு, வாகனம், கல்வி, தொழில் இன்ன பிற தேவைகளுக்காக கடன் பெற்றவர்களின் வட்டிச் சுமை மேலும் உயர்வடைவதுடன் தொழில் முயற்சிகளும் பாதிப்படையும் சூழல் இந்தியாவில் உருவாகியுள்ளது.

இவ்வாறு கடந்த ஆண்டு மார்ச் மாதம் தொடக்கம் இது வரையில் பத்து தடவைகள் வங்கிகளிற்கான வட்டி விகிதங்களை ரிசர்வ் வங்கி உயர்த்தியுள்ளது. எனினும் இதே போன்ற தான பணவீக்கப் பிரச்சினைக்கு முகம் கொடுத்து வரும் இலங்கை, அண்மைக்காலமாக நாணய கொள்கை வீதங்களில் எத்தகைய மாற்றத்தை மேற்கொள்ளவில்லை என்பதுடன் இதற்கு இன்னும் அவசியம் ஏற்படவில்லை எனவும் கூறி வருகின்றது.

இந்த மாதத்துக்கான நாணயக் கொள்கை நடைமுறை தொடர்பாக இலங்கை மத்திய வங்கியால் சென்ற வாரம் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், கொள்வனவு மற்றும் மீள் கொள்வனவு விகிதங்கள் முறையே 7% மற்றும் 8.5% ஆக மாற்றமின்றி தொடர்ந்தும் காணப்படும் என அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஓய்வூதியக் கொடுப்பனவில் அதிகரிப்பு

அரச சேவைகளில் இருந்து ஓய்வு பெற்றவர்களுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவுகளில் ஓர் அதிகரிப்பு செய்யப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

01.01.2004 இற்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களுக்கு 750 ரூபாவாலும் 31.12.2005 இற்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களுக்கு 250 ரூபாவாலும் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்படவுள்ளன.

இந்த அதிகரிப்புகள் வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி யில் இருந்து நடைமுறைக்கு வருவதாக அரசு அறிவித்துள்ளது. இவற்றுக்கான விண்ணப்பங்களை பிரதேச செயலகங்களின் ஊடாக பயனாளிகளிடம் இருந்து ஓய்வூதியத் திணைக்களம் கோரியுள்ளது.

தற்போது வங்கிகளில் தவணை வைப்புக்களுக்கான வட்டி வீதங்கள் (ஒரு வருட நிலையான வைப்பு - 8.5%) குறைவாக உள்ள நிலையில் அறுபது வயதுக்கு மேற்பட்ட இலங்கைப் பிரஜைகள் மேலதிகமாக ஒரு சதவீத வட்டியைப் பெற மத்திய வங்கி அனுமதி வழங்கியுள்ளது.

பணவீக்கம் உயர்வாக உள்ள நிலையில் இத்தகைய ஓய்வூதிய மற்றும் வட்டி கொடுப்பனவுகளிலான அதிகரிப்பு பெரும் நன்மை பயப்பதாக இலங்கையின் மூத்த பிரஜைகள் தெரிவிக்கின்றனர்.

# ஏற்றம் காண்கிறது இலங்கையின் ஏற்றுமதி

கடந்த ஆண்டின் முதல் காலாண்டுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டில் இலங்கையின் ஏற்றுமதி வருமானங்கள் 54.3 சதவீதத்தினால் ( 2,720.9 %) ஏற்றம் கண்டுள்ளன. இது இந்த ஆண்டின் முதல் காலாண்டில் ஏற்பட்ட இறக்குமதிச் செலவுகளின் அதிகரிப்பை காட்டிலும் (33.9%) உயர்வான வளர்ச்சியாகும்.

இதனால் இந்த வருட முதல் காலாண்டில் ஏற்பட்ட வெளிநாட்டு வர்த்தக நிலுவை 22 சதவீதத்தினால் சாதக நிலை நோக்கி வளர்ச்சி கண்டுள்ளதை மத்திய வங்கியின் பொருளாதார ஆராய்ச்சி திணைக்களம் வெளியிட்டுள்ள புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

ரூபாவுக்கு எதிராக பலவீனமடைந்து வரும் டொலரின் பெறுமதி, மசகு எண்ணெய் மற்றும் பொருள்களின் உலகலாவிய விலையேற்றத்துடன் உள்நாட்டில் அதிகரித்து வரும் மொத்த கேள்வி போன்றதான நிலைமைகள் இறக்குமதிச் செலவுகளை அதிகப்படுத்தி வருகின்றன.

இதனால் இந்த வருட முதல் காலாண்டில் ஏற்பட்ட இறக்குமதிச் செலவுகளில், உணவல்லாத நுகர்வு பொருள்கள் (103.9%), ஆடைக் கைத்தொழிலுக்கான உள்ளீட்டுப் பொருள்கள் (62.5%), போக்குவரத்துச் சாதனங்கள் (79.1%) போன்றவற்றுக்கான இறக்குமதிச் செலவுகள் ஐம்பது சதவீதத்துக்கும் மேலான அதிகரிப்பைக் பதிவு செய்துள்ளன.

இவற்றுக்கு ஈடு கொடுக்கும் வகையில் ஆடை மற்றும் இறப்பர் சார்ந்த கைத்தொழில் பொருள்களின் ஏற்றுமதியிலான அதிகரிப்பு (63.8%) வர்த்தக நிலுவையை சாதக நிலை நோக்கி இழுத்துச் சென்றுள்ளதை மத்திய வங்கியின் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

இதே போல இந்த வருடத்தின் முதல் காலண்டில், தொழிலாளர்களின் தேறிய வெளிநாட்டு பண அனுப்பல்களும் 27.8 சதவீதத்தினால் ( 1,273.7 %) வளர்ச்சி கண்டுள்ளன.

# பல்வேறு அபிவிருத்திகளில் தேசிய லொத்தர் சபை

தேசிய லொத்தர் சபை ஏறத்தாழ 50 வருட கால நீண்ட வரலாறு கொண்ட நிறுவனமாகும். இந்தக் காலப் பகுதிக்குள் தேசிய லொத்தர் சபை கோடிக் கணக்கான கோடீஸ்வர்கள், இருபது லட்சம் மற்றும் பத்து லட்சம் வென்ற வெற்றியாளர்கள், லட்சாதிபதிகள் உள்ளிட்ட வெவ்வேறு பரிசுகளை வென்ற இலட்சக்கணக்கான வெற்றியாளர்களை உருவாக்கியுள்ளது.

இவர்களுள் ஏராளமானவர்கள் தமது வாழ்க்கைத் தரத்தை மிக உயர்ந்த நிலைக்கு உயர்த்தியிருப்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

தேசிய லொத்தர் சபை நாட்டின் அபிவிருத்திக்குக் கோடிக்கணக்கான நிதியை வழங்கியுள்ளது. நாட்டில் ஏதேனுமொரு இடத்தில் ஏதேனுமொரு அபிவிருத்தி நடவடிக்கை நடைபெறுமானால் பெரும்பாலும் அதற்கு தேசிய லொத்தர் சபை தனது நிதிப் பங்களிப்பை வழங்கியிருக்கும்.

வாரத்தின் ஏழு நாள்களிலும் லொத்தர் சீட்டிழுப்புகளை மேற்கொள்கிறது. சீட்டிழுப்புகளினூடாகவும் வெற்றியாளர்கள் உருவாக்கப்படுவதோடு நாட்டின் அபிவிருத்திக்கு நிதியை வழங்குகின்றது.

கொவிசெத சீட்டிழுப்பு திங்கட் கிழமைகளில் இடம்பெறுவதோடு அதிலிருந்து பெறப்படும் வருமானத்தின் ஒரு பகுதி திறைசேரியினூடாக விவசாய அமைச்சுக்கு வழங்கப்படுகின்றது.

மஹஜன சம்பத சீட்டிழுப்பு செவ்வாய், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் இடம்பெறுவதோடு, அதன் வருமானத்தின் ஒரு பகுதி திரட்டிய நிதியத்துக்கு வழங்கப்படுகிறது. சுபிரி வாசனா சம்பத மற்றும் ஜாதிக சம்பத லொத்தர்கள் சனிக்கிழமைகளிலும் புதன் கிழமைகளிலும் நடைபெறுவதோடு, சுபிரி வாசனா சம்பத மூலம் கிடைக்கும் வருமானத்தின் ஒரு பகுதி விளையாட்டு அமைச்சுக்கும் சமூக சேவைகள் அமைச்சுக்கும் ரணவிரு சேவா அதிகார சபைக்கும், ஜாதிக சம்பத லொத்தரின் மூலம் கிடைக்கும் வருமானத்தின் ஒரு பகுதி சுகாதார அமைச்சுக்கும், தொழில் அமைச்சுக்கும் வழங்கப்படுகிறன. வியாழக்கிழமைகளில் வாசனா சம்பத சீட்டிழுப்பு இடம்பெறுகிறது. அதன் வருமானத்தின் ஒரு பகுதி அரசின் திரட்டிய நிதியத்துக்கு வழங்கப்படுகிறது.

தேசிய லொத்தர் சபையில் செவண மற்றும் சமுர்த்தி என இரண்டு உடனடி (சுரண்டல்) லொத்தர் சீட்டுக்கள் உள்ளன. செவன லொத்தர் வருமானத்தில் ஒரு பகுதி வீடமைப்பு அமைச்சுக்கும் சமுர்த்தி லொத்தர் வருமானத்தின் ஒரு பகுதி சமுர்த்தி அமைச்சுக்கும் வழங்கப்படுகிறது.

வெளிநாட்டு நாணயங்களைக் கொண்டு கொள்வனவு செய்யக்கூடிய இரண்டு லொத்தர்கள் தேசிய லொத்தர் சபையினால் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளன. அதில் ஒன்று கொழும்பு எயர்போட் சுப்பர் ட்றோ. 50 டொலர் பெறுமதியுடையது. மற்றையது நியூ எயர்போட் ட்றோ 10 டொலர் பெறுமதியுடையது. இவற்றின் மூலம் விமான நிலைய அபிவிருத்திக்கு நிதி வழங்கப்படுகிறது.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் மே மாதம் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் வெற்றியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள முழுத் தொகையானது ரூ.1921 மில்லியன் ஆகும். அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ரூ.525 மில்லியன் நிதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இந்த ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் ஜனவரி மாதம் 13 ஆம் திகதி வரை 13 கோடீஸ்வரர்களை உருவாக்கியுள்ளது.

சபையானது வடக்கு மற்றும் கிழக்கின் அனைத்து மாவட்டங்களிலும் விற்பனை நடவடிக்கைகளை விஸ்தரித்துள்ளது. அந்தப் பிரதேசங்களில் மாவட்ட விற்பனை முகவர்கள் மற்றும் விற்பனை முகவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். குறித்த பிரதேசங்களின் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்காக சிங்கள மற்றும் தமிழ் பிராந்திய முகாமையாளர்கள் மற்றும் விற்பனை ஊக்குவிப்பு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

நாம் இதன் மூலம் சில இலக்குகளை அடைய எதிர்பார்க்கிறோம். இதுவரை காலமும் யுத்த சூழலில் துன்புற்று வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் தமது அதிர்ஷ்டத்தை உரசிப் பார்ப்பதற்கு வாய்ப்பளித்தல், விற்பனை நடவடிக்கைகளை அதிகரிப்பதன் மூலம் வருமானத்தை அதிகரித்தல், நாட்டின் அபிவிருத்திக்கு வழங்குகின்ற நிதியின் அளவை அதிகரித்தல் (அதன் மூலம் வடக்கு கிழக்கு அபிவிருத்திக்கு கூடிய பங்களிப்பு வழங்குதல்) என்பவையே இலக்குகளாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை செல்லாத 29 பிள்ளைகள் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர்

## சிறுவர் இ ல்லங்களில் ஒப்படைக்க உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூன் 26

வடமராட்சிப் பகுதியில் பல்வேறு கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த பாடசாலை செல்லாத 29 பிள்ளைகள் நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டனர்.

துன்னாலை கிழக்கு, துன்னாலை மேற்கு, துன்னாலை தெற்கு, கரவெட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களே இவர்கள்.

இவர்கள் நீதிபதி ஸ்ரீநிதி நந்த சேகரன் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு நீதிபதியின் உத்தரவுக்கமைய சிறுவர் இல்லங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

வறுமை மற்றும் பல்வேறு சூழ்நிலைகளால் பாடசாலை செல்லாத 29 பிள்ளைகள் கிராம சேவையாளர்களினால் வீடுவீடாகச் சென்று இனங்காணப்பட்டனர். இவர்கள் அனைவரும் நேற்று முன்தினம் மாவட்ட நீதிபதி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். நீதிபதியின் உத்தரவுக்கு அமைய இவர்கள் யாழ்ப்பாணம் சைவச் சிறுவர் இல்லம், கருணை இல்லம் ஆகிய சிறுவர் இல்லங்களில் சேர்க்கப் பட்டனர்.

இதேவேளை-தும்பளை கடவுளின் குழந்தைகள் சிறுவர் இல்லத்திலிருந்து நெருக்கடி காரணமாகக் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் இடமாற்றப்பட்ட 10 பிள்ளைகளுக்கு மாவட்ட நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்த சேகரன் ஜி.சீ.ஈ சாதாரணப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை வழங்கினார். (த-319)

# கூட்டுக்குக் கல் எறிந்தவர்களை கலைத்துத் தாக்கிய குளவிகள்

யாழ்ப்பாணம், ஜூன் 26

குளவிக் கூட்டைக் கலைத்தோர் குளவிகளால் தாக்கப்பட்டுத் திக்குத் திசை தெரியாமல் ஓடிய சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் நல்லூர் முத்திரைச் சந்திக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது:-

முத்திரைச் சந்திக்கு அரு கில் உள்ள பூங்காவின் மர மொன் றில் குளவிகள் பெரிய கூடு ஒன் றைக் கட்டி அதில் குடிகொண்டி ருந்தன. அந்த இடத்தில் நின்ற இளைஞர்கள் சிலர் அந்தக் கூட்டைக் கல் லெறிந்து கலைத்துள்ளனர். கூட்டிலிருந்து வெளிப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட குளவிகள் வீதியால் சென்ற பலரையும் கலைத்துக் கலைத்துக் கொட்டின. இதனால் அங்கு நின்றவர்கள் அலறியடித்துக் கொண்டு ஓடினார்கள். குளவிகளின் அட்டகாசம் காரணமாக மக்கள் வீதிப் போக்குவரத்தை வேறு பாதைக்கு மாற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்தக் குளவிக் கூட்டுக்குக் கல் எறிந்தவர்களே குளவிகளின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர்.

குளவிகளின் தாக்கம் காரணமாக அருகில் இருக்கும் வலயக் கல்வி அலுவலகத்தில் கடமை புரியும் பலரும் அன்றைய தினம் நண்பகல் சாப்பாட்டுக்கும் வெளியே செல்லவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (த-288)

# வடமராட்சிப் பகுதியில் மீன்கள் விலை உயர்வு

வடமராட்சி, ஜூன் 26

வடமராட்சிப் பகுதியில் மீன் வகைகளின் விலைகள் வெகுவாக உயர்ந்துள்ளன.

மீன்வளம் வடமராட்சி வடக்குக் கடற் பிரதேசத்தில் குன்றியுள்ளதைத் தொடர்ந்து சிறு சிறு மீன்வகைகளே தற்போது பிடிக்கப்படுகின்றன. அதுவும் மிகக் குறைந்தளவிலேயே பிடிக்கப்படுகின்றன. பெரிய மீன்வகைகள் மிக அபூர்வமாகவே பிடிக்கப்படுகின்றன.

இதனால் வடமராட்சி வடக்கு கரையோரப் பகுதியில் வியாபாரிகள் கொள்வனவு செய்யும் சந்தைகளில் சிறுசிறு மீன் வகைகள் கிலோ 500 ரூபா தொடக்கம் 650 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.

இதேவேளை, அரிதாகக் கிடைக்கும் சுறா போன்ற பெரிய மீன்கள் கிலோ ஆயிரம் ரூபா வுக்கு மேல் விற்பனை செய்யப்படுகின்றன.

இந்த விலை உயர்வால் மீன்கொள்வனவாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (த-236)

## மீண்டும் கம்பீரமாக...



புதுப்பொலிவுடன் : யாழ்.முற்றவெளியில் உள்ள யாழ். மாநகர சபையின் வளாகத்தில் அதற்கான புதிய கட்டடத்தை 300 மில்லியன் ரூபா செலவில் அமைக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. இதனையடுத்துக் கொழும்பில் இருந்து வந்த பொறியியலாளர் குழு நேற்று அந்த இடத்தைப் பார்வையிட்டது. (த-23)

# கட்டாக்காலி கால்நடைகளால் அச்சுவேலி விவசாயிகள் சிரமம்

அச்சுவேலி, ஜூன் 26

அச்சுவேலி தெற்கில் கட்டாக்காலிகளின் தொல்லை தாங்கமுடியாமல் இரவு, பகலாகத் தோட்டங்களில் விவசாயிகள் காவல் இருந்து பயிர்களைக் காப்பாற்ற வேண்டியுள்ளதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

அச்சுவேலி தெற்கு தம்பியவளை, கிராய் தோட்டங்களில் செய்கை பண்ணப்பட்டுள்ள வெங்காயம் மற்றும் கத்தரி, வெண்டி முதலிய பயிர்களைக் கட்டாக்காலி கால் நடைகள் மேய்ந்து சேதப்படுத்தி வருகின்றன.

இந்தக் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை குறித்து சம்பந்தப்பட்டவர்களின் 'கவனத்துக்குக் கொண்டுவந்தபோதும் அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கட்டாக்காலிகளைக் கட்டுப்படுத்துவதில் விவசாய சம்மேளனங்கள் உரிய நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளபோதிலும் அச்சுவேலி தெற்கு விவசாய சம்மேளனம் கட்டாக்காலி கால் நடைகளைக் கட்டுப்படுத்துவதில் பாராமுகமாக இருந்து வருவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (த-11)

# 80 வயது கடந்த முதியோருக்கு அரசின் விசேட கொடுப்பனவு

## யாழ்ப்பாணத்தில் விவரம் திரட்டல்

நாவற்குழி, ஜூன் 26

சமூக சேவைகள் அமைச்சு 80 வயதுக்கு மேற்பட்ட முதியோருக்கு விசேட கொடுப்பனவுகளை வழங்கும் திட்டத்தின் கீழ் பயனாளிகளைத் தெரிவு செய்யும் நடவடிக்கைகள் யாழ். மாவட்டத்திலும் இடம்பெற்று 'வருகின்றது.

பிரதேச செயலர்களின் பணிப்பின் பேரில் சமூகசேவை அதிகாரிகள் இந்த வேலைகளைச் செய்து வருகின்றனர்.

பொது சன மாதாந்த உதவிப் பணம் கிடைக்கப்பெறும் 80 வயதுக்கு மேற்பட்டோரின் விவரம்,பொதுசன மாதாந்த உதவிப் பணம், சமூக பாதுகாப்பு ஒய்வூதியம் ஆகியவை கிடைக்கப்பெறாத கைவிடப்பட்ட நிலையிலுள்ள 80 வயதுக்கு மேற்பட்ட முதியோரின் விவரம் என்பன இதன்போது திரட்டப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் 2012 ஆம் ஆண்டின் வரவு - செலவுத் திட்டத் தில் இவர்களுக்கான நிதி ஒதுக்கீட்டை மேற்கொள்வதற்காக இந்தக் கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் இத்தகைய முதியோர் கிராம சேவகரிடம் அல்லது பிரதேச செயலக சமூக சேவை அதிகாரிகளிடம், முதியோர் நலன் உத்தியோகத்தரிடம் பதிவு செய்யமுடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (த-121)

# பஸ் கட்டண அதிகரிப்புக் குறித்து அறிவித்தல் எதுவும் கிடைக்கவில்லை

## போக்குவரத்து ஆணைக்குழு யாழ்.அதிகாரி தகவல்

யாழ்ப்பாணம், ஜூன் 26

தனியார் பஸ் கட்டண அதிகரிப்புத் தொடர்பாக இதுவரை எந்தவித அறிவித்தல்களும் கிடைக்கவில்லை என யாழ். மாவட்ட தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தனியார் போக்குவரத்துச் சேவைகள் அமைச்சின் சி.பி. இரத்நாயக்காவுக்கும் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கங்களுக்கும் இடையில் இடம்பெற்ற பேச்சுக்களைத் தொடர்ந்து தனியார் பஸ் கட்டணங்களை அதிகரிக்கும் தீர்மானங்களை அரசு மேற்கொண்டது.

இந்த 7.6 வீத அதிகரிப்பு எதிர்வரும் ஜூலை மாதத்திலிருந்து நடைமுறைப்படுத்தப்படு மெனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் தொடர்பாக ஏதாவது அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டனவா என்று அவரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவால் அவ்வாறு பஸ் கட்டண உயர்வு தொடர்பான தீர்மானங்கள் எதுவும் எமக்கு வழங்கப்படவில்லை. அந்த அறிவிப்புக்கள் கிடைத்தவுடன் புதிய பஸ் கட்டண அதிகரிப்புத் தொடர்பாகத் தெரிவிக்கப்படும் .-என்றார்.

இதே வேளை பஸ் கட்டண அதிகரிப்புக்குறித்துப் பொது மக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

பஸ்கட்டணம் மற்றும் எரிபொருள் என்பனவற்றின் விலைகள் அடிக்கடி அதிகரிக்கப்படுவதால் தாம் பெரிதும் பாதிக்கப்படுவதாக பொது மக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

(த-15)

# நாயன்மார்கட்டு ஆலயச்சூழலில் இளைஞர்கள் சிலர் அட்டகாசம்

## வழிபடச் செல்வோர் சிரமம்

யாழ்ப்பாணம், ஜூன் 26

நாயன்மார்கட்டு வெயிலுகந்த பிள்ளையார் கோயில் சுற்றாடலில் இளைஞர்கள் சிலரின் அட்டகாசத்தால் அங்கு வழிபடச் செல்வோரும், வீதியால் செல்வோரும் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மேற்படி ஆலயச் சுற்றாடலில் தினமும் ஒன்று கூடும் இந்தக் கும்பல் அங்கு வைத்து மது அருந்துவதுடன், புகைத்தலிலும் ஈடுபட்டு வருவதாகவும், அத்துடன் வீதியால் [illegible] யுவதிகளுடனும் தகாத [illegible]யில் நடந்து கொள்வதாகவும், இதுபற்றித் தட்டிக் கேட்பவர்கள் இந்தக் கும்பலால் தாக்கப்படுவதாகவும் கூறப்படுகின்றது.

மோட்டார் சைக்கிளில் உலா வரும் இந்தக் [illegible] வேதனையளிப்பதாகவும், கடந்த சில தினங்களுக்கு முன்னரும் இந்த வீதியால் சைக்கிளில் வந்த இருவரை மோட்டார் சைக்கிளில் வந்த இந்தக் கும்பல் மோதி சைக்கிளைச் சேதமாக்கியதுடன் நியாயம் கேட்டவர்களை நடுவீதியில் வைத்துப் பொல்லுகளால் தாக்கியதாகவும் கூறப்பட்டது.

எனவே, இந்த விடயத்தில் கோப்பாய் பொலிஸார் தகுந்த நடவடிக்கை எடுத்து இந்தக் கும்பலின் அட்டகாசத்தை முற்றாகக் கட்டுப்படுத்துவதுடன் மேற்படி சுற்றாடலையும் ஆலய வழிபாட்டுக்கு ஏற்றவாறு சீர் செய்து தருமாறும் பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (த-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவகத்துக்கு புதிய பஸ் சேவைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன்26

ஊர்காவற்றுறைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான 778 இலக்க பேருந்து சேவைகள் தற்போது இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்துகள் நேர அட்டவணையின் படி இடம்பெற்று வருகின்றன. யாழ்ப்பாணத்திலிருந்து காலை 7.15 மணிக்கும் முற்பகல் 11.45 மணிக்கும் ஊர்காவற்றுறையிலிருந்து காலை 9 மணிக்கும் பின்னர் பிற்பகல் 2.15 மணிக்கும் சேவை வழங்கப்பட்டு வருகிறது. இந்தச் சேவையானது யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு வங்காளவடியூடாக வேலணை மத்திய கல்லூரி சென்று பின்னர் புளியங்கூடல் சந்தியூடாக சரவணை சென்று பின்னர் தம்பாட்டி சென்று ஊற்காவற்றுறையை வந்தடையும். அதேபோல் ஊர்காவற்றுறையிலிருந்து மேற்குறிப்பிட்ட வழியூடாக யாழ்ப்பாணத்தைச் சென்றடையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-325)



## 46ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் கிருஸ்ணகுமார் அகிலா
(கவிதா)

தோற்றம்: 11.12.1980
மறைவு : 12.05.2011

இமைகள் மூடித் திறப்பதற்குள்
நாள்களோ நாற்பத்தாறாகின
நாம் வாழும் நாள்களில் உம்
நினைவுகள் எம்முடன் வாழும்.

இல.94/12,
தொட்டியடி, விசுவமடு, முல்லைத்தீவு.

கணவர்,
பிள்ளைகள்

(2158) (40-19-50)

## விபத்தில் காயம்

வீதி வளைவில் வாகனத்தை முந்திச் செல்ல முயன்ற மோட்டார் சைக்கிள் எதிர் திசையில் வந்த வாகனத்துடன் மோதியதில் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞருக்கு காலில் காயமேற்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை கைதடி வடக்கில் இடம்பெற்றது. காயமடைந்த நபர்தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார். மோட்டார் சைக்கிளும் வடிவாகனமும் சேதங்களுக்கு உள்ளாகின என்று தெரிவிக்கப்பட்டது. (ம-207)

CHUNDIKULI GIRLS' COLLEGE
JAFFNA

**Wanted**

B.A. Graduate with a good knowledge of English to teach Geography for grades 6-11 English Medium and A/L Tamil Medium classes.

Application closes on 30th June 2011. Only shortlisted candidates will be considered for an interview.

principal

## மரண அறிவித்தல்

### காத்தி மகேந்திரன்



கல்லூரி வீதி, இளவாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட காத்தி மகேந்திரன் 24.06.2011 வெள்ளிக்கிழமை அகால மரணமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற காத்தி மற்றும் செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும் யோகமலரின் அன்புக் கணவரும் நிறோஜன், சாணுஷா ஆகியோரின் அன்புத் தந்தையும் காந்தரூபி, பத்மலோஜினி, விமலேந்திரன், யோகேஸ்வரி, தமேந்திரன், நகுலேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (26.06.2011) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப 2.00 மணிக்கு இளவாலை மட்டிவளை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கல்லூரி வீதி,
இளவாலை.

தகவல்:
காத்தி விமலேந்திரன்
(சகோதரன்).

(2164) (27-23)

## மரண அறிவித்தல்

### திருமதி முருகையா தவமணி

வரணியைப் பிறப்பிடமாகவும் சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட முருகையா தவமணி 24.06.2011 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற முருகையாவின் (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்) அன்பு மனைவியும் பிரபாகரன், கிருபாகரன், கமலாதேவி, சுதாகரன்(கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் வரலட்சுமி, யோகேஸ்வரி, யோகராஜா, செல்வரஜனி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம், கொத்தியாலடி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் , உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மூர்த்தியான் கூடல்,
சுன்னாகம்

(2172)

தகவல்: த.யோகராஜா,
(ஓம் நாராயணா ஸ்ரோர்ஸ், சுன்னாகம்).

மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1978, திருவோணம் 4 இல் செவ்வாய், கிரகபாவம் 42 ¾, கனடா பிரஜாவுரிமை மணமகனுக்கு வடமராட்சியைச் சேர்ந்த மணமகள் தேவை.

தொடர்பு: 075 0390805

ஆள் தேவை

சீலைன்ஸ் கொம்ப்ளெக்ஸ்
பான்ஸிக் கடைக்கு பெண்
பிள்ளைகள் தேவை
வதிரி வீதி, உடுப்பிட்டி.

தொடர்பு: 021 2263588

சமையல்/ரொட்டி வேலை செய்பவர் தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள உணவகம் ஒன்றுக்கு ரொட்டி/சமையல் வேலை தெரிந்த தகுதியானவர் தேவை.

தொடர்பு: 075 707 6000

பணியாளர் தேவை

கணினி விற்பனை நிலையம் ஒன்றுக்கு கணினி தொடர்பான சகல அறிவும் அனுபவமும் உடையவர்கள் தேவை. தகுதி வாய்ந்தவர்கள் தங்களது சுயவிவரத்துடன் நேரில் சமூகம் தரவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

காலம் :-29.06.2011
நேரம்:-மு.ப 11.00-பி.ப.3.00
இடம்:- யாழ்ப்பாண மின்வகம் (காட்சிஅறை)
141, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(8/1176)

STUDY IN LONDON
BEDFORDSHIRE, WORCESTER, WALES
SPOT ASSESSMENT

Postgraduate / Undergraduate Courses

MBA (No work experience required), Computer Networks, Computer Information Systems, Computer Science, Software Engineering, IT, Education Studies Top UP, TESOL, English Literature, Early Childhood Studies, Special Education Needs, Primary Studies with Qualified Teacher Status (QTS), Project Management, Business Studies, Accounting & Finance, Architecture, Law, Media, Art & Design, Fashion, Animation, Music, Social Sciences, Psychology, Biotechnology, Bio Medical Sciences, Pharmacology, Nursing Studies Top Up, Civil Engineering, Quantity Surveying, Construction, Electrical & Electronic, Mechanical Engineering, Mechatronics, Hospitality, Tourism, Sports Science, and .....Many More

Foundation Degree, in Engineering, Computing, Law, Art, Design & Media
PhD Students: Application Approval Time, Approx. 4 Weeks
Direct Entry to MSc Accounting & Finance/Financial Management for ACCA & CIMA Students (Fast Track Available)
IELTS Waived off Conditions apply

University of East London – www.uel.ac.uk
University of Bedfordshire – www.beds.ac.uk
University of West London – www.uwl.ac.uk
University of Worcester – www.worc.ac.uk
University of Wales, Newport – www.newport.ac.uk

Sept. / Oct. 2011 & Feb. 2012 Intake

LOHOS TOPS 400 STUDENTS

Over the last 6 years Mr Loho has successfully counselled, guided and placed more than 400 students to U.K. Universities

- Advanced entry for students with CIM, CIMA, ABE, NCC, BCS, HND, ACCA and other recognised qualifications
- G.C.E. A/L students can apply pending results
- Students having good O/L's / other qualifications / related work Experience may be considered for entry
- Admissions available for Mature students

HELPLINE CALL LOHO 0777 917929

Meet Mr. LOHO ✓ LOHOS GROUP

Please call Sri Lanka Representative's office for more details
Lucky Plaza Building, 4 / 7, 4th Floor,
St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03. Tel : 2577768 / 0777 917929
E-mail : lohosgroup@sltnet.lk www.lohosgroup.com

தமிழில் தொடர்புகளுக்கு : Dr. இந்திராணி Tel:0773-498660
FREE ADMISSIONS + FREE VISA GUIDANCE

CSC® COMPUTER EDUCATION INDIA
ISO 9001 : 2000 CERTIFIED TRAINING CENTRE



கிராபிக்ஸ், அனிமேஷன்
மல்டிமீடியா, வீடியோ எடிடிங்
பயிற்சிகளுக்கு சிறப்புக் கட்டணச் சலுகை!

- 100% செயல்முறைப்பயிற்சி
- இலவச பாடநூல்கள்
- சர்வதேச தர சான்றிதழ்கள்
- தவணை முறை கட்டண வசதி
- மாணவர் விரும்பிய பயிற்சி நேரங்கள்
- அனுபவம் மிக்க விரிவுரையாளர்கள்

ASIAN COMPUTER EDUCATION

| | | |
|---|---|---|
| 2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் T.P : 021-222 5677 | கொடிகாமம் வீதி, நெல்லியடி T.P : 021-2262399 | 230,1ம் மாடி, கண்டி வீதி, சாவகச்சேரி T.P : 021-2270267 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவலை நினைத்து உரலை இடித்த அஸ்வர் எம்.பி.



பிரபாகரனின் மனைவியைப் பராமரிக்கின்றார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, அவரது பிள்ளைகளையும் படிப்பிக்கின்றார் என ஒரு குண்டைத் தூக்கிப்போட்டு நாடாளுமன்றத்தில் மட்டுமல்ல, சர்வதேச மட்டத்திலும் ஒரு கலக்கு கலக்கிவிட்டார் நாடாளுமன்ற உறுப்பினரான ஏ.எச்.எம். அஸ்வர்.

இவர் ஒரு சாதாரண மனிதர் அல்லர். ஆளும் கட்சியின் ஓர் உறுப்பினர். மும்மொழிப் பண்டிதர். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நாடாளுமன்ற விவகார ஆலோசகராகவும் பிரசாரப் பீரங்கியாகவும் இருப்பவர்.

இவ்வளவு பொறுப்புகளையுடைய ஒரு மனிதரின் வாயிலிருந்து வெளிவந்த இந்த வார்த்தைகளைச் சாதாரணமாக எண்ணிவிட முடியுமா? நாட்டின் அதியுயர் பீடமான நாடாளுமன்றத்தில் அல்லவா கூறினார்.

**உலகுக்குக் காட்டுவதற்காக**

உலகிலேயே மனிதாபிமானத்தில் அதிஉயர்ந்த நிலையில் இருப்பவர் நமது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தான் என்று உலகுக்கு காட்டுவதற்காகவே அல்ஹாஜ் அஸ்வர் இப்படிக் கூறினார்.

''ஒஸாமா பின்லேடன் அமெரிக்கப் படையினரால் கொல்லப்பட்டபோது பின்லேடனின் மனைவியும் மக்களும் கொல்லப்பட்டனர். இந்தக் காட்சியைத் தொலைக்காட்சியில் பார்த்து மகிழ்ந்தனர். ஆனால், இங்கே பிரபாகரன் கொல்லப்பட்டாலும் ஜனதிபதியினால் அவரது மனைவி பாதுகாக்கப்பட்டார். பிள்ளைகள் படிப்பிக்கப்பட்டனர். (Prabagaran`s wife looked after and his children are educated by our President.......)

இது அல்லவா மனிதாபிமானம். எங்கள் ஜனாதிபதி மனிதாபிமானத்தின் உச்சியில் நிற்கின்றார்'' என்றல்லவா கூறினார். அழகான ஆங்கிலத்தில் இவர் ஆற்றிய உரை தெட்டத்தெளிவாக நாடாளுமன்றப் பதிவேட்டிலும், இறுவட்டுகளிலும் பதிவாகியுள்ளன.

நாடாளுமன்றத்தில் அஸ்வரின் இந்த உரை ஊடகவியலாளர்களான எங்களுக்குப் பெரும் அதிர்ச்சியையும் அதேவேளை ஆச்சரியத்தையும் ஏற்படுத்திவிட்டது. எங்கள் கண்களையும் காதுகளையும் எங்களாலேயே நம்ப முடியவில்லை.

கிரிக்கெட் அரங்கில் ஏதாவது சந்தேகம் ஏற்பட்டால் மூன்றாவது ஒருவரின் உதவியை நாடுவது போல் நாங்களும் உத்தியோகபூர்வ '' ஹன்ட்சாட்'' பதிவாளர் பிரிவிலும், மொழிபெயர்ப்பாளர் பிரிவிலும் சென்று இதனை உறுதிப்படுத்திக்கொண்டோம். அவர்களும் கூட அஸ்வரின் இந்தப் பேச்சைக்கேட்டு விழிபிதுங்கிப் போய் நின்றனர்.

**ஆப்பிழுத்த குரங்கானார்**

இலங்கை நாடாளுமன்றத்தில் பதியப்பட்ட இந்தச் சாட்சியம் சர்வதேச மட்டத்தில் ஒரு பரபரப்பை ஏற்படுத்திவிட்டது. பிரபாகரனின் மனைவியும் பிள்ளைகளும் உயிருடன் இருக்கின்றனரா? அஸ்வர் பொய்சொல்ல மாட்டாரே. அதுவும் ஜனாதிபதியின் மிக மிக அருகில் இருந்து கொண்டல்லவா இதனைக் கூறியுள்ளார். சபையில் கூறியது உண்மைதானா எனப் புலம்பெயர் நண்பர்களிடமிருந்து தொலைபேசி விசாரணைகள். தமிழ், சிங்கள, ஆங்கில நாளேடுகள் மட்டுமல்ல இணையத்தளங்களும் அதிமுக்கிய விடயமாக இதனை வெளியிட்டன.

அஸ்வரின் இந்த உரையை ஒரு முக்கிய சாட்சியமாகக் கொண்டு ஆள்கொணர்வு மனு ஒன்றை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவும் முடியும். ஜனாதிபதியின் புகழ்பாடப்போய் அல்ஹாஜ் அஸ்வர் ஆப்பிழுத்த குரங்கைப்போல் மாட்டிக்கொண்டார்.

இவ்வளவும் நடந்து 24 மணி நேரங்கள் விபரீதத்தை அறியாத அஸ்வர் அமைதியாக இருந்துவிட்டார். அதிகாலையில் சேவல் கூவும் முன்னரே எழுந்துவிடுபவர் அஸ்வர். காலைக் கடன்களையும் - இறைதொழுகை களையும் முடித்தபின் எல்லா மொழிப் பத்திரிகைகளையும் புரட்டுவது அவரது முதற் கடமை. அதன் பின் தான் தேநீர், சாப்பாடு எல்லாமே.

பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள், அஸ்வரை நிலை தடுமாற வைத்தன. தலையில் கைவைத்துக் கொண்டார்.

இடையில் தொலைபேசி அழைப்புகள், விசாரணைகள். என்ன செய்வது ஏதுசெய்வது என்ற தடுமாற்றம். இப்படியா நான் பேசினேன் என்று அவருக்கே ஒரு பிரமிப்பும், சந்தேகமும்.

ஓடினார், ஓடினார். நடாளுமன்றத்துக்கே ஓடினார். உத்தியோகபூர்வ பதிவேடுகள் இறுவட்டுக்கள் என எல்லாவற்றையும் மீள் பரிசோதனை செய்தார்.

ஐயோ! கடவுளே எல்லாவற்றிலும் அப்படித் தானே இருக்கின்றன. நாடாளுமன்றத்துக்குச் சென்றவுடன் அங்கும் எல்லோரும் கேட்ட முதல் கேள்வி ''என்ன சேர் பிரபாகரனின் மனைவியும் பிள்ளைகளும் உயிரோடு இருக்கின்றார்களா? எங்கே இருக்கின் றார்கள்?'' என்பது தான். இது வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சுவது போலாகிவிட்டது.

**பல்ரி அடித்தார்**

ஊடக நண்பர்கள் நேரடியாகவே விசாரிக்க ஆரம்பித்து விட்டனர். சிங்கள, ஆங்கில ஊடகவியலாளர்களிடம் ஜே.வி.பி தலைவர் ரோஹண விஜேயவீரவின் மனைவி பிள்ளைகள் என்று கூற நினைத்துத் தவறுதலாகப் பிரபாகரன் என்று கூறிவிட்டேன்'' என்றார். என்ன ஐயா ரோஹண விஜேவீர கொல்லப்பட்ட போது ராஜபக்ஷ எங்கே ஜனாதிபதியாக இருந்தார் என அவர்கள் மடக்கிவிட்டனர்.

தமிழ் ஊடகவியலாளர்களிடம் முதலில் பிரபாகரனின் தாயார் என்று சொல்ல நினைத்து பிரபாகரனின் மனைவி, என்று கூறிவிட்டேன் என்றும் பின்னர் தமிழ்ச்செல்வனின் மனைவி, மக்கள் என்று கூறத்தான் நினைத்தேன். தவறுதலாகப் பிரபாகரனின் மனைவி பிள்ளைகள் என்று கூறிவிட்டேன் என்றும் சமாளித்தார். அதிலும் கூட ஒரு தடுமாற்றம் தான்.

அஸ்வரின் நேரம் சரி இல்லையோ என்னவோ வந்ததும் வராததுமாக ''பத்திரிகைகள் எனது பேச்சைத் தவறுதலாகப் பிரசுரித்துள்ளன'' என்று முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்க முயன்றார்.

## புத்திரசிகாமணி

வெறுவாயை மெல்லுபவர்களுக்கு அவல் கிடைத்தது போல் அஸ்வரின் பேச்சுப் பதிவான இறுவட்டு எதிராளி உறுப்பினரான தயாசிறி ஜயசேகரவின் கையில் சிக்கிவிட்டது. சும்மா இருப்பாரா தயாசிறி விட்டேனா பார் என்று குட்டைப் போட்டு உடைத்துவிட்டார். வெள்ளம் தலைக்குமேல் போய்விட்டது எதுவும் செய்யமுடியாது.

உண்மையை ஒப்புக்கொண்டார். ஐயோ நான் தவறிழைத்து விட்டேன். அதற்காக இந்தச் சபையில் மன்னிப்புக் கோருகின்றேன் என்று ஒருமுறைக்குப் பல முறை கூறினார். எவருக்கோ புகழ் பாடப் போய் தனது செல்வாக்கையும் கீர்த்தியையும் தாழ்த்திக் கொண்டார் அல்ஹாஜ் அஸ்வர். கடைசியில் அவலை நினைத்துக் கொண்டு உரலை இடித்த கதை மாதிரிப் போய்விட்டது. ✱

# தமிழ்ப் பணி புரிந்த கந்த முருகேசனார்

ஈழத்தில் தோன்றி தமிழ் கூறும் நல்லுலகில் அறிஞராகத் திகழ்ந்து புகழ் பரப்பிய தமிழ்த் தாத்தா கந்தமுருகேசனார். தனக்கெனச் சிறப்பிடம் பெற்ற பெரியார் இவர். சுயமாகக் கற்று அறிஞராகிப் பண்டிதர்களையும், வித்துவான்களையும், பட்டதாரிகளையும் தமிழ்கூறும் நல்லுலகுக்குத் தந்த பெருந்தகை. 'உபாத்தியார்' என்றும் 'தாத்தா' என்றும் அன்பாக அழைக்கப்பட்டவர் இவர்.

தென் புலோலியில் 27.04.1902 இல் கந்தப்பர் தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் இரண்டாவது மகனாகப் பிறந்தார். மிகவறிய விவசாயக் குடும்பம் அவருடையது. 4ஆம் தரம் வரையே கற்றார். முதல் 3 வகுப்புகளையும் தட்டாதெரு மெதடிஸ்த மிஷன் பாடசாலையிலும் 4 ஆம் தரத்தை வேலாயுதம் மகா வித்தியாலயத்திலும் கற்றார். வறுமையால் கல்வியை இடைநிறுத்தி னாலும் 'ஈழமணி' ஆசிரியர் புலவர் க.முருகேசபிள்ளையிடம் கந்தபுராணமும், நன்னூல் காண்டிகையுரையில் பதவியல் வரையும் கற்றார். பின்பு தானாகவே சிற்றிலக்கண, பேரிலக்கண நூல்களை எல்லாம் சுலபமாகக் கற்று, சிந்தித்து அறிஞரானார். 25 வயதளவில் உடல் நிலையில் பாதிப்பு ஏற்பட்டமையால் நூல்களையே தன் வாழ்க்கைத் துணையாக்கி வாழ்வில் ஏற்பட்ட சோதனைகளைச் சாதனைகளாக மாற்றியவர்.

வலுவிழந்து முடமாகி அவரது வாழ்வில் புயல் வீசிய போதும் அவரது பண்பட்ட உள்ளம் புண்படவில்லை. அவருக்குக் கிடைத்த புதிய நண்பர்களான நூல்களையும் ஏட்டுச் சுவடிகளையும் இரவு பகலாகப் படித்து, சிந்தித்து, சிறந்த சிந்தனையாளரானார்.

கந்த முருகேசனார் சிந்தித்தார். அதன் விளைவு கன்னித்தமிழ் புதுமெருகு பெற்றது. தமிழின் சந்தத்தையும் அதன் முருகையும் உலகுக்கு உணர்த்தினார்.

பனைமரச்சோலையான மருத நிலத்தின் வல்லிபுர மாயவனின் திருக்கோயில். அதனயலில் இருந்த 'தமிழகம்' என்ற குடிசையே அவரது வசிப்பிடம். குடிசையின் முற்றத்தில் மல்லிகைப் பந்தல் நிழல் விழும். குடிசையின் திண்ணையில் அகன்ற நெற்றி, அழகிய மூக்கு, காந்தக் கண்கள், கவர்ச்சியான வதனத்தோடு, கந்தமுருகேசனார் அமர்ந்திருப்பார்.

எழுந்துலாவ இடமளிக்காத கால்கள் அவரை ஓரிடத்தில் உட்கார வைத்தாலும் அகத்தியர், கிரேக்க ஞானி சோக்கிரட்டீஸ், வங்கக்கவி தாகூர், ஆங்கில மேதை பெர்ணாட்ஷோ ஆகியோரை நினைவூட்டும் உருவப் பொலிவு மிக்கவர். அவரது 'தமிழகம்' ஒரு திண்ணைப் பள்ளிக்கூடம். மகாகவியின் சாந்திநிகேதன் போல் மாணாக்கரால் நிறைந்திருக்கும் அனைத்துக் கலைகளதும் பிறப்பிடமாக அது திகழ்ந்தது.


அன்பு, அமைதி கட்டுப்பாடு ஒழுங்கு நிறைந்த பள்ளி அது. அவருடன் உதவியாகக் கற்பித்தல் பணியில் ஓரிரு சட்டாம்பிள்ளைகளும் இருந்தனர்.

கந்த முருகேசனார் எழுதிய ''நல்லை நாவலர் கோவை'' எனும் நூல் அவரது மாணவர்களால் பிற்காலத்தில் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. அது தவிர செந்தமிழ்ச் செல்வி சஞ்சிகையில் வெளிவந்த 'தமிழர் மணமுறை', சமூக முன்னேற்றத்தில் வெளிவந்த 'விதிகன்மம்' ஆகியவை அவரது ஆய்வுக் கட்டுரைகளாகப் பிரபல்யம் பெற்றன.

அண்ணாத்துரை போன்ற அறிஞர்களுடனும் ரீ.கே.சீனிவாசன் போன்ற அரசியல் வாதிகளுடனும் தொடர்புகளைப் பேணி வந்தார். சமய நூல்களை மாணாக்கருக்குக் கற்பிக்கும் தோறும் கேட்டல், கிரகித்தல், தெளிவடைதல் எனும் மூன்று நிலைகளிலும் தேர்ச்சி பெறும் வகை தேர்ந்து கற்பிப்பார்.

சித்திரக் கவி புனைவதிலும் சிலேடையாகப் பேசுவதிலும் வல்லவர். ஒழுக்க விழுமியம் தமிழரின் வாழ்வியலின் சிறப்பு என்பார். அவருடைய கவியாற்றலும், நகைச் சுவையுணர்வும் வெளிப்பட்ட ஒரு சம்பவம் இது.

ஒரு சனிக்கிழமை காலை ஆசிரியர் முழுகுவதற்கு ஏற்பாடாயிற்று. ஸ்நானத்தைத் தொடங்கியவர் இடையில் சவர்க்காரத்தைத் தேடினார். காணவில்லை. பக்கத்தில் நின்ற மைத்துனர் ''நான் கொண்டு வருகிறேன்'' என வேகமாய் சென்றவர் நாழிகை பல கழிந்தும் வரவில்லை. பொறுமை இழந்த தாத்தா ஒரு கவியைத் தூதாகத் தொடுத்துவிட்டார். அந்தக் கவிதை இதோ,



*கணபதிப் பிள்ளாய் சோப்புக்*
*கையுடன் வருவே னென்றாய்*
*மணமது கூடினாயோ மாதரைக்*
*கண்டாய் கொல்லோ,*
*குணமதுக் கொண்டாய் கொல்லோ*
*குளிர்முக மின்னும் காணேன்*

*பிணமதாய்ப் போக வேண்டாம்*
*பேசாம லோடி வாராய்*

அவர் தனது இறுதிக் காலங்களில், நிறைமதி நாள் களில் கற்றவர்கள் பலர் சேர்ந்து கருத்துப் பரிமாற்றம் செய்யவேண்டும் என அவாவுற்றார். அவரது ஆசை நிறைவேறும் முன்பே அமரராகிவிட்டார். அவரின் நினைவாக யாழ்.பல்கலைக் கழகத்தில் அறிஞர் கந்த முருகேசனார் விருது வழங்கப்பெற்று வருகிறது. ✱

இ.குகநாதன்,
கரவெட்டி வேலாயுதம் மகா வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வீடு வாடகைக்குண்டு**

நல்ல சூழலில் 07 அறைகளையும், 02 குளியல் அறைகளையும், 01 சமையலறையையும் கொண்டதுமான வீடு வாடகைக்குண்டு. அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது. பூங்கனிச் சோலைக்கு அருகில்.

தொடர்புகளுக்கு -0777207260, 0750406396

# உபகரணங்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 26

நீர்வேலி காமாட்சி அம்பாள் கூட்டுறவுக் கைத்தொழில் சங்கத்துக்கு அதன் தொழில் முயற்சியை மேம்படுத்தும் நோக்கில் இலங்கைக் கைத் தொழில்கள் அபிவிருத்திச் சபையால் நவீன இயந்திர உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இந்த உபகரணங்கள் சங்கத்தில் வைத்து வழங்கப்படவுள்ளன. இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்துகொள்வார்.(ம-4)

## தென்னை வள உற்பத்தி பயிற்சி நெறி

தென்னை வளத்திலிருந்து பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திப் பொருள்களைத் தயாரிப்பது தொடர்பான பயிற்சிநெறி ஒன்று சாவகச்சேரி பிரதேச செயலக பிரிவிலுள்ள கச்சாய் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்தப்பயிற்சி நெறிக்குப் பிரதம விருந்தினராக பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொள்வார்.

இந்தப் பயிற்சி நெறியில் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிலுள்ள தென்னைவளங்களைப் பயன்படுத்தி உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் மற்றும் உற்பத்தியில் ஈடுபடவுள்ள தொழில் முயற்சியாளர்கள் கலந்து கொள்வர்.

(ம-4)

**12ஆவது பிறந்தநாள் வாழ்த்து**



26 . 06 . 2011

தயாபரன் - சுபா தம்பதியரின் இரண்டாவது செல்வப் புதல்வி நவீனா தனது 12ஆவது பிறந்த தினத்தை இன்று (26.06.2011) ஞாயிற்றுக்கிழமை சுவிஸில் மிகச் சிறப்பாகக் கொண்டாடுகின்றார். இவரை அம்மம்மா, தாத்தா, அப்பப்பா, அப்பம்மா மற்றும் உறவினர்கள் ஆகியோர் கல்வியில் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ்கவென நல்லூர் முருகனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

தகவல்:
வ.மார்க்கண்டு
(தாத்தா).
கைதடி மேற்கு,
கைதடி.

நவீனா

(..57)(38)



அம்பாள் துணை

**அளவெட்டி வடக்கு**
**தவளக்கிரி முத்துமாரி அம்மன் ஆலய**
**கர வருஷ மகோற்சவ விஞ்ஞாபனம் - 2011**

நிகழும் மங்களகரமான கர வருஷம் ஆனிமாதம் 12 ஆம் நாள் நாளை (27.06.2011) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் மகோற்சவம் இடம்பெறும்.

| | | |
|---|---|---|
| கொடியேற்றம் | மு.ப. 10 மணி | 27.06.2011 திங்கள் |
| இரதோற்சவம் | மு.ப. 9 மணி | 06.07.2011 புதன் |
| தீர்த்தோற்சவம் | | 07.07.2011 வியாழன் |

மகோற்சவ காலத்தில் அடியார்கள் ஆசார சீலர்களாக வருகை தந்து அபிஷேகத்துக்குரிய பால், தயிர், இளநீர், பூ, பழம் என்பவற்றை தந்து அம்பிகையின் திருவருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்

ஆலய பரிபாலன சபை

(48,20)

**STUDY IN UK, CANADA, USA, New Zealand CYPRUS, POLAND & GERMANY**

- UK → அதிகூடிய கட்டணம் - ரூபா. 150,000/- , Student Visitor Visa
- USA → கட்டணம் ஆகக்கூடியது 2 லட்சம் மட்டுமே. IELTS -5.0
- CANADA → IELTS, Sponsor தேவையில்லை. No age limit, PR
- POLAND → பகுதி நேர தொழில் வாய்ப்பு விசா கிடைத்த பின்பு Tuition fee செலுத்த வேண்டும்.
- GERMANY → Tuition Fee இல்லை, IELTS 5.5, PR
- CYPRUS → பகுதி நேர தொழில் வாய்ப்பு விசா கிடைத்த பின்பு Tuition fee செலுத்த வேண்டும்.
- New Zealand → IELTS - 5.0 + Work Permit

நாடுமுழுவதிலும் முகவர்கள் தேவை

பஸ்னா - 0778 438403, 0771000044, அல்சரா - 0778339943

READ International
E-mail: read.int@gmail.com
No:201-1/1A, Galle Road, Dehiwala ( Opposite to The Finance/HNB)

**வேலைகள் செய்து கொடுக்கப்படும்**

வயறிங், பிளமிங், வர்ணப் பூச்சுக்கள் போன்ற வேலைகள் துரிதமாக செய்து கொடுக்கப்படும்.
தொடர்பு :- 0777111335,021 222 3687
171/4, 1ஆம் ஒழுங்கை, அரசடி வீதி, நல்லூர், யாழ். (2169)

**வீடு வாடகைக்குண்டு**

யாழ்.சப்பல் வீதியில் 8 அறைகள் கொண்ட வீடு (கார் தரிப்பிட வசதி கொண்ட) வாடகைக்குண்டு. தனியார் நிறுவனம் அல்லது அரசசார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு- 0778192190 (கார்த்திக்) (2161)

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1974, 1976 இல் பிறந்து வெளிநாட்டுப் P.R உடையவர்களுக்கும், 1977 இல் பிறந்த பட்டதாரி, அரச பணி செய்பவருக்கும் மணமகள் தேவை.
தொடர்பு :- 0776568910 (2169)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

தரமான புறொயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் விநியோகம் செய்யப்படுகின்றன. பெற்றுக்கொள்ள விரும்புவோர் பதிவுகளை மேற்கொள்ளவும்.
"சிற்றி பாம் ரேடேர்ஸ்"
ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு.

**மணமகள் தேவை**

1966 ஆம் ஆண்டு, சுவாதி நட்சத்திரத்தில் பிறந்த யாழ்.இந்து உயர் கௌரவ குடும்பம். எழுத்து திருமணம் மட்டும் நடந்து London இல் விவாகரத்துப் பெற்ற எவ்வித பொறுப்புகளும் அற்ற யாழ்ப்பாணத்தில் நிரந்தரமாக வசிக்க விரும்பும் எவ்வித தீய பழக்கங்களும் அற்ற அழகான படித்த மணமகனுக்கு மணமகள் தேவை. 1970 ஆம் ஆண்டுக்குப் பின் பிறந்தவர்கள் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்பு: 0757319536

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் முதலாம் குறுக்குத் தெருவில் 3 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புக்கு:-
077 5732864 (c/1060)

**DIPLOMA IN PROJECT MANAGEMENT**

சமூக சேவைத்துறை தொழில் வாய்ப்பிற்காக எமது நிறுவனத்தினால் நடத்தப்படும் மேற்குறிப்பிட்ட பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் இப்போது கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் கீழ்வரும் முகவரிக்கு எழுதுவதன் மூலம் விண்ணப்பப் படிவத்தையும் ஏனைய விவரங்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

தொலைக் கல்வி முறையில் (Distance learning) நடத்தப்படும் இப்பயிற்சி நெறியானது அரச சார்பற்ற நிறுவனத் தொழில் வாய்ப்புகளை எதிர்பார்ப்பவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாகும்.

Programme Coordinator- DIPM,
Mecwin Resource,
P.O.Box 206,
Kandy

**பெண் பராமரிப்பாளர் தேவை**

வயோதிபப் பெண் ஒருவரை வீட்டில் தங்கியிருந்து பராமரிக்க 30 வயதுக்கு மேற்பட்ட பெண் பராமரிப்பாளர் தேவை.
தொடர்பு: 0776133432, 0213735933

**மணமகன் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1984,5'2" பூராடம், 2ல் செவ் - தனு ராசி, மொ.கி. பாவம் 65¼ பிரபல நிறுவனத்தில் [Factory] Accounts Assistant மணமகளுக்குத் தகுதியான 1,2,4,7,12 இல் செவ்வாயுள்ள உள்நாட்டு வெளிநாட்டு மணமகனை பெற்றோர் எதிர்பார்க்கிறார்கள். விவரங்களை Pathush93 @ gmail. com க்கு அனுப்பவும்/ மாலையில் மட்டும் 0779940039 தொடர்பு கொள்ளவும்.

**இறைச்சிக் கோழி விற்பனை**

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6மணி தொடக்கம் இரவு 8மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர்,
19, முருகேசர் லேன், நல்லூர்.

**கார் விற்பனைக்கு**

TOYATA CARINA 15- சிறி கார் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:
021 3219888, 0759823282

**வீடு, காணி விற்பனைக்கு**

கந்தரோடை சுன்னாகம் வீதியில் வீட்டுடன் கூடிய 5பரப்புக்காணியும் பத்துப் பரப்பு நெல்/தோட்டக்காணியும் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0775479332

**வீடு விற்பனைக்கு**

கொக்குவில் மேற்கு, ஆடியபாதம் வீதியில் (K.K.S. Road இல் இருந்து 100m) தூரத்தில் 3½ பரப்பு வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.
(49,19,20) தொடர்பு: 0776008212, 0775217453.

**மணமகள் தேவை**

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட டொக்டர் வயது 38 R.C மணமகனுக்கு தகுந்த மணமகளை மாமன் எதிர்பார்க்கின்றார். இந்துக்களும் R.C மதத்தைத் தழுவ விரும்பின் விண்ணப்பிக்கலாம்.
தொடர்பு: 0776032451, 0213215576

**அருள் முருகன் திருமணப் பணியகம்**
**மணமகன் தேவை**

1984, புனர்பூஷம்-3, செவ்வாய்க்குற்றமில்லை, கிரகபாவம் 72 ¾, உயர்கௌரவ குடும்பம், MBBS வைத்தியராக உள்ள மணமகளுக்கு Doctor or Engineer- or உயர்தகுதிகள், பதவிகளிலுள்ள உள்நாடு மணமகன் எதிர்பார்க்கப்படுகின்றார்
03, யாழ்.வீதி, சிறாம்பியடி லேன், (Cosy Restourant Lane) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 222 9334.

"உங்கள் பிள்ளைகளுக்கேற்ற மணமக்கள் தேவைகளுக்கு திருமணத்தின் பின்னரான பாதுகாப்புக்கும், மிக நம்பகமான சேவைகளே இன்றையதேவை"

**வீடு விற்பனைக்கு**

இல.35, பொன்னையா வீதி (உப தபாற் கந்தோர் வீதி), ஆனைக்கோட்டையில் 2பரப்புக் காணியில், கட்டிய குறை நிலையில் மாடி வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0774527671




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு, வவுனியாவில் நீர்ப்பாசனக் கட்டுமானங்கள்

முல்லைத்தீவு, ஜூன் 26

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் வடமாகாண சபை ஊடாக முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் பல நீர்ப்பாசனக் கட்டுமானங்கள் புனரமைக்கப்படவுள்ளன.

ஆசிய அபிவிருத்தி வங்கியினதும், இலங்கை அரசினதும் நிதியுடன் முரண்பாடுகளால் பாதிப்புற்ற பிரதேசங்களுக்கான அவசரகாலக் கருத்திட்டத்தின் கீழும் அடிப்படைச் சமுதாயத்துக்கான சேவைகளை மேம்படுத்தல் திட்டத்தின் கீழும் இவை நடைபெறவுள்ளன. அடுத்தமாதம் 23 ஆம் திகதி வரை இதற்கான கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்க முடியுமெனத் திட்டப் பணிப்பாளர் எந்திரி க.சோ.சிவபாதம் அறிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கல்விளான்குள நீர்ப்பாசன அணைக்கட்டு, இதேகுளத்தின் நீர்ப்பாசன வாய்க்கால் என்பவை புனரமைக்கப்படவுள்ளன.

கொல்லவிளான்குளத்தின் நீர்ப்பாசன அணைக்கட்டு, வாய்க்கால் ஆகியவையும் வவுனியா மாவட்டத்தில் அலியா மருதமடு நீர்ப்பாசன அணைக்கட்டு, நீர்ப்பாசன வாய்க்கால் புனரமைப்பு என்பனவும் இடம்பெறவுள்ளன.

அத்துடன் கொம்புவைத்த குளம் நீர்ப்பாசன அணைக்கட்டு வேலை, நீர்ப்பாசன வாய்க்கால் புனரமைப்பு என்பவையும் நடைபெறவுள்ளன.

கடந்த சில மாதங்களாக வன்னிப் பிரதேசத்தின் பெரும்பாலான குளங்களின் புனரமைப்புத் தொடர்பான கேள்வி கோரல்களை பொருளாதார அபிவிருத்தி அமைச்சு மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-121)

# முல்லைத்தீவில் காசநோய் அதிகரிக்கும் வாய்ப்பு

## டாக்டர் சி.யமுனானந்தா கூறுகிறார்

முல்லைத்தீவு, ஜூன் 26

முல்லைத்தீவு மாவட்டத்தில் காசநோய்ச் சிகிச்சைப் பிரிவு இல்லாத காரணத்தால் காசநோயாளர் பன்மடங்காக அதிகரிக்க வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன என காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரியான டாக்டர் சி.யமுனானந்தா தகவல் தெரிவித்துள்ளார்.

மிகவும் பரந்த பிரதேசமான முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது மீள்குடியமர்ந்த மக்கள் அதிகமாக வாழும் பிரதேசம் என்பதால் காசநோய் அதிகரிப்பதற்கான வாய்ப்புகளும் ஏற்பட்டுள்ளன.

இதனால் இங்கே காசநோய் வைத்தியசாலையை நிறுவ வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக வடமாகாண பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பணிமனையால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இல்லாவிடில் எதிர்காலத்தில் காசநோயாளர் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்படும் எனவும் அவர் எச்சரிக்கை செய்துள்ளார். (க-313)

மாதா அருள் வேண்டி...



சௌகரியமான இடம்: மடுமாதா ஆலயத்துக்கு வருகை தந்த தென்னிலங்கையைச் சேர்ந்த மக்கள் ஆலயத்தை அண்டியுள்ள இடத்தில் கூடாரங்கள் அமைத்துத் தங்கியுள்ளனர். (601)

# மணல் நிறைந்து மக்களை வாட்டும் மண்டைக் கல்லாறு வெளி வீதி

பூநகரி, ஜூன் 26

பூநகரி, மன்னார் வீதியின் மண்டைக்கல்லாறு வெளி வீதியில் பயணிக்கும் மக்கள் சொல்ல முடியாத அளவு சிரமங்களுக்கு ஆளாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீதி மோசமாகச் சிதைந்து காணப்பட்டதால் அதற்கு மாற்றீடாக மணல் போடப்பட்டுள்ளது. ஆனால் சைக்கிள் அல்லது மோட்டார் சைக்கிள் இந்த மணலூடாகச் செல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. இவற்றில் செல்பவர்களின் வாகனங்கள் மணலில் புதைவதால் மிகுந்த சிரமங்களின் பின்னரே அவர்களால் இந்த இடத்தைக் கடந்து செல்ல முடிகின்றது. சில வேளைகளில் சிலர் விழுந்து எழும்புவதும் உண்டு.

அத்துடன் வேறு இடங்களிலும் மணல் குவிந்துள்ளது. 12 ஆம் கட்டைப் பகுதியிலுள்ள தேக்கம் காட்டை அண்டிய வீதியிலும் மணல் குவிந்துள்ளதால் பயணிகள் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

இந்த அவல நிலையை மாற்றுவதற்கு உரிய அதிகாரிகள் ஆவன செய்ய வேண்டுமென்பதே பாதிக்கப்பட்டு வரும் மக்களின் ஒரே கோரிக்கையாக உள்ளது. (க-496)

# இடமாற்றம்

முல்லைத்தீவு, ஜூன் 26

முல்லைத்தீவு, துணுக்காய் பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றிய திருமதி கலைச்செல்வி ஜெகராசா கோப்பாய் பிரதேச செயலகத்துக்கு இடமாற்றம் பெற்றுக் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார். (க-121)

# ரெலோவின் தேசிய மாநாடு இன்று வவுனியாவில்

மன்னார், ஜூன் 26

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தேசிய மாநாடு இன்று ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் நடைபெறுவதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என அதன் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இந்த மாநாட்டின் போது அடுத்த ஆண்டுக்கான கட்சியின் நிர்வாகிகள் தெரிவு இடம்பெறுவதோடு எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாகவும் ஆராயப்படும்.

இதேவேளை இந்தத் தேசிய மாநாட்டில் பல்வேறு அரசியல் தீர்மானங்களும் நிறைவேற்றப்படவுள்ளன.

வடக்கு, கிழக்கு மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 49 பொதுக்குழு உறுப்பினர்களால் கட்சியின் அடுத்த ஆண்டுக்கான நிர்வாகிகள் தெரிவுசெய்யப்படுவர்.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பலப்படுத்துவதற்கான தீர்மானங்களும் இந்தத் தேசிய மாநாட்டின்போது நிறைவேற்றப்படவுள்ளன என செல்வம் அடைக்கலநாதன் மேலும் தெரிவித்தார். (க-601)

# தனித்து இயக்க ஏற்பாடுகள்

அக்கராயன், ஜூன் 26

கிளிநொச்சி, அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தைத் தனித்து இயக்குவதற்கான ஏற்பாடுகளை கிளிநொச்சி வலயக் கல்விப் பணி மனையினர் மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கராயன் மகாவித்தியாலயம் 'இசுறு' பாடசாலையாகத் தெரிவு செய்யப்பட்ட நிலையில் இதன் ஆரம்பப் பிரிவு அக்கராயன் ஆரம்ப வித்தியாலயமாக உருவெடுத்துள்ளது. ஆனால் இதுவரை இதற்கான கட்டட வசதிகள், புதிய அதிபர் நியமனம், ஏனைய வள ஒதுக்கீடு என்பன வழங்கப்படாத நிலையே காணப்படுகிறது.

இந்த நிலையில் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையினர் அக்கராயன் ஆரம்ப வித்தியாலயத்தைத் தனியாக இயக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். தற்போது இந்த ஆரம்ப வித்தியாலயத்தில் 142 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். இதேவேளை முழங்காவில் மகாவித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவும் தனியான பாடசாலையாக இயங்கவுள்ளது. (க-410)

# பெருந்திருவிழா 29 ஆம் திகதி ஆரம்பம்

முல்லைத்தீவு, ஜூன் 26

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டானில் உறைந்து அருள்பாலிக்கும் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் பிரமோற்சவத்துக்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியான நிலையிலுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் 29 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் ஆலயப் பெருந்திருவிழா தொடர்ந்து 16 தினங்கள் நடைபெறவுள்ளது. அடுத்த மாதம் 11 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 12 ஆம் திகதி சப்பரத் திருவிழாவும், மறுநாள் தேர்த் திருவிழாவும், 14 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.

மக்கள் மீள்குடியமர்ந்த பின் இடம்பெறும் இந்த விழாக்களில் அதிகளவான பக்தர்கள் கலந்து கொள்வார்களென எதிர்பார்க்கப்படுகின்றது. (க-500)

# சைவச்சிறார் இல்லத்துக்கு உதவுமாறு வேண்டுகின்றார் அதன் தலைவர்

கிளிநொச்சி, ஜூன் 26

மகாதேவா சைவச்சிறார் இல்லத்தில் வாழ்கின்ற வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள சிறுவர்களின் உணவு, உடை, உறையுள், சுகாதாரத் தேவைகளுக்கு உதவுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார் அந்த இல்லத்தின் தலைவரான தி.இராசநாயகம்.

தற்போது கட்டட வசதிக் குறைபாடுகளால் இந்த இல்லம் பாதிக்கப்பட்டுள்ளது. எம்மிடம் போதியளவான காணி உண்டு. செல்வந்தர்களும், வெளிநாட்டு உறவுகளும், அரச நிறுவனங்களும் பெண்கள் தங்குவதற்கான இருமாடிக் கட்டட வசதிகளைக் கட்டி உதவினால் எதிர்காலப் பெண் சந்ததிகள் நீடித்து நிலைத்து வாழும் சூழல் ஏற்படும்.

தற்போது இந்த இல்லத்தில் வாழ்கின்ற 265 சிறார்களுக்கும் நாளாந்தம் 39 ஆயிரத்து 450 ரூபா செலவாகின்றது.

இந்தச் செலவுகளுக்கு உதவிவருகின்ற அன்புள்ளங்களை வாழ்த்துவதோடு எதிர்காலத்திலும் இவ்வாறான உதவிகளை வழங்குமாறு மேலும் கேட்டுக் கொண்டுள்ளார் சைவச்சிறார் இல்லத்தின் தலைவரும் வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளருமான தி.இராசநாயகம்.

இன்று கிளிநொச்சி ஜெயந்தி நகரில் அமைந்துள்ள மகாதேவா சைவச்சிறார் இல்லத்தில் பிள்ளைகள் விழா இடம்பெறவுள்ளதையொட்டியே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (க-392)

# கல்வி அதிகாரிகளின் கண்பார்வை கிட்டாத இராசேந்திரம்குளம் தமிழ் வித்தியாலயம்

வவுனியா, ஜூன் 26

வவுனியா தெற்கு, இராசேந்திரம்குளம் தமிழ் வித்தியாலயம் போதிய அடிப்படை வசதிகள் இன்றி இயங்கி வருவதனால் இந்தப் பாடசாலை மாணவர்களின் கல்விநிலை பாதிக்கப்படுவதுடன் பல மாணவர்கள் வேறு பாடசாலைகளுக்குச் செல்வதையும் அவதானிக்க முடிகின்றது.

வவுனியா இராசேந்திரம் குளம் தமிழ் வித்தியாலயம் தரம் ஒன்று முதல் 11 வரையான வகுப்புக்களைக் கொண்டு இயங்கிவருகின்றது. இந்தப் பாடசாலையில் சுமார் இருநூறுக்கும் அதிகமான மாணவர்கள் கல்வி கற்று வரும் நிலையில் போதிய பௌதீக வளம் மற்றும் ஆளணி வளங்கள் அற்றுக் காணப்படுகின்றது. இதனால் மாணவர்களின் கல்வி மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் இந்தப் பாடசாலை கால் நடைகளின் உறைவிடமாகவும் காணப்படுகின்றது. அதுமட்டுமன்றி பாடசாலைக்கென ஒரு பெயர்ப் பலகைகூட இல்லாத நிலையே உள்ளது. பாடசாலையின் இந்த நிலையால் இந்தப் பகுதிகளைச் சேர்ந்த ஏராளமான மாணவர்கள் வேறு பாடசாலைகளுக்குச் செல்வதையும் காண முடிகின்றது.

அத்துடன் ஏனைய பின்தங்கிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் பாடசாலையை விட்டு விலகிச் செல்வதையும் அவதானிக்க முடிகின்றது.

இதில் உரிய அதிகாரிகள் கவனமெடுத்து இந்தப் பாடசாலையைப் பாதுகாக்க வேண்டுமெனக் கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-6)

# வரவு செலவுத் திட்டம்

மன்னார், ஜூன் 26

மன்னார் நகரசபை வரவு செலவுத் திட்டச் சுருக்கம் - 2011 என்னும் சிறுகையேடு ஒன்றை வெளியிட்டுள்ளது.

இதன் மூலம் மன்னார் நகரசபையின் வரவு செலவு தொடர்பான விவரங்களை ஒவ்வொரு வரியிறுப்பாளர்களும் பார்வையிட முடியுமென நகரசபையின் தலைவர் சந்தான்பிள்ளை ஞானப்பிரகாசம் தெரிவித்தார்.

மன்னார் நகர சபைக்கான தேர்தல் நடைபெற்று புதிய நிர்வாகத்தினால் சமர்ப்பிக்கப்படும் முதலாவது வரவு செலவுத் திட்டம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (க-601)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகள் தேவை

பிரித்தானிய (U.K) குடியுரிமையுடைய, லண்டன் IT துறையில் வேலை செய்யும், 1979 இல் பிறந்த விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு நல்ல குணமுடைய படித்த பெண்ணை எதிர்பார்க்கின்றோம். அண்மையில் எடுத்த புகைப்படம், சாதக விவரத்துடன் தொடர்பு கொள்ளவும்.

0774050936.

## சேவை

Dish TV, Sun Direct உட்பட அனைத்து விதமான சனல்களுக்கும் எம்மிடம் கட்டணம் செலுத்தலாம் 15 நிமிடங்களுக்குள் உங்களது தேவை நிறைவேற்றப்படும்.

அழையுங்கள்: 0774050936


# பயிற்சி பெற்றோருக்கு சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 26

வாழை நாரிலிருந்து பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்திப் பொருள்கள் உருவாக்குவது சம்பந்தமான பயிற்சியை நிறைவு செய்த பயனாளிகளுக்கு சான்றிதழ் வழங் கும் நிகழ்வு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் நடத்தப்பட்ட இந்தப் பயிற்சியை பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு ஏற்பாடு செய்திருந்தது.இந்த நிகழ்வுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இந்தப் பயிற்சி நெறியைப் பூர்த்திசெய்த பயனாளிகளை இந்த நிகழ்வில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ம-4)


## 45ஆம் நாள் நினைவலைகள்



அமரர்
தியாகராஜா கருணீசன்

அன்னை மடியில்
24.07.1953


இறைவனடியில்
13.05.2011

எம் குடும்ப ஒளி விளக்கே!
பாதியில் எம்மை விட்டுப் பிரிந்து
மாயமாய் எங்கு சென்றீர்
என்றும் உம் நினைவுகளுடன்
நடைபிணமாய் நாம் இங்கு...!
உம் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சண்டிலிப்பாய் வீதி,
பண்டத்தரிப்பு.

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 1948.11.12
இறப்பு: 2010.07.07

கூவில் கீரிமலையைச் சேர்ந்த
**கதிரவேலு செல்லக்கிளி**

சொந்த மண்ணுக்குச் சென்று சந்தோசமாக வாழ்வோம்
என நம்பியிருந்த காலத்தில் கொடிய நோய் வந்து
உம்மை சூழ்ந்து கொண்டதுவே அப்பா
சுற்றியிருந்த எம்மைப் பாரினிலே தவிக்கவிட்டு
காலனவன் பிரித்தெடுத்தானே நம் அப்பாவை
கீரிமலையில் உங்களது உறவுகள் எங்களை
செல்லக்கிளியின் பிள்ளைகள் எனக்கூறும்போது
துடித்துப் போகின்றது நம் இதயம் என்றும் உங்கள் நினைவுடன்...

அன்னாரின் நினைவஞ்சலி நிகழ்வும் மதியபோசனமும் இன்று (26.06.2011) ஞாயிற்றுக்கிழமை வித்தகபுரம், பன்னாலை எனும் முகவரியிலுள்ள அவரின் தற்போதய இல்லத்தில் நடைபெறும்.

வதிவிட முகவரி:
10 ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(48,21,25)

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வீதி, கட்டைப்பிராயில் வீட்டுடன் 3 ½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொ.பே. இல. 0779966395, 0757080203 (5178)

## யாழ். நகரில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள மிருக வைத்தியசாலை



இல 46, பிறவுண் வீதி (Brown Road) யாழ்ப்பாணம் எனும் முகவரியில் முன்னர் இயங்கிய அரசாங்க மிருக வைத்தியசாலைக்கு அருகாமையில் புதிதாக, யாழ். மிருகவைத்திய சத்திரசிகிச்சை நிலையம் (Jaffna Veterinary Clinic Surgery) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வைத்திய நிலையத்திலிருந்து பெறக்கூடிய மிருக வைத்திய சுகாதார சேவைகளாவன

★ நோய்சிகிச்சை (Disease Treatment)
★ சகல விதமான சத்திரசிகிச்சை (Surgery) - விசேடமாக நாய், பூனைகளுக்கான கருத்தடை சத்திரசிகிச்சை.
★ நோய்த்தடுப்பூசி (Vaccination) விசேடமாக கோழிகளுக்கான கம்போறோ (Gumboro) ரனிக்கற் (Ranikhet) நோய்களுக்கான தடுப்பு மருந்துகள்.
★ மருந்தகம் (Pharmacy)
★ இலவச பண்ணை வளர்ப்பு மற்றும் மிருகவைத்திய ஆலோசனைகள்.
★ நல்லின நாய்க்குட்டிகளை வழங்குதல்.
★ தெள்ளு, உண்ணிகளுக்கான மருந்துகள்.
★ நடமாடும் மிருக வைத்திய சேவை (Mobile Veterinary Services - Home Visit)

இந்தவைத்திய நிலையமானது சனி, ஞாயிறு உட்பட வாரத்தின் ஏழு நாள்களும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 8.00 மணி வரை திறந்திருக்கும்.

-நிர்வாகி.

## விற்பனைக்கு

அழகிய வர்ண மீன்கள், தொட்டிகள், அழகுப் பொருள்கள், ஆபிரிக்க லவ்பேட்ஸ், தாரா, காடை, புறா, கோழிக்குஞ்சு, முயல், கினிப்பிக், நாய்க்குட்டிகள், கூடுகள், இனிப்பு ஒட்டுத் தோடை, பல இன பூங்கன்றுகள், பூச்சாடிகள் அனைத்தும் விற்பனைக்கு உண்டு.

யாழ். அக்கூரியம், 941,கே.கே.எஸ் வீதி, தட்டாதெருச்சந்தி, யாழ்ப்பாணம்.

## கோழிக்குஞ்சு விநியோகம்

35நாளில் 2Kg மேல் வளர்ச்சியடையக் கூடிய No1- BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 29.06.2011 விநியோகிக்கப்படும்.

* றாஜீவ், நவாலி, ஆனைக்கோட்டை
* P.ரவி, சாவகச்சேரி - 0775591366
* ஜென்சி பாம், பருத்தித்துறை - 0773541771
* துர்க்கா பாம், சுன்னாகம்



(49,22,20)

T.P: 0212222867, 0776090926.

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கோண்டாவில் கிழக்கு பலாலி வீதியில் 7,3 பரப்பளவுள்ள காணிகள் விற்பனைக்குண்டு. (கோண்டாவில் சந்தியிலிருந்து 100 மீற்றரில் காணி உண்டு.)

தொடர்புகளுக்கு:- 0779239334.

## இறைச்சிக் கோழி விற்பனை

கல்பேட் புறொய்லர் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்யப்பட்டது 420/- மட்டும்.

கூடுதல் கொள்வனவு செய்வோருக்கு விசேட விலைக் கழிவு உண்டு

விஜயகுமார்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை. (5181(45))

## காணி விற்பனைக்கு

கொக்குவில் சம்பியன் லேன், நந்தாவில் ஒழுங்கையில் குட்டி வைரவர் கோயிலுக்கு அருகில்1¾ பரப்புக்காணி சுற்றுமதில், கிணறு வசதிகளுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: கு.குமாரகுலசிங்கம்
ஏழாலை வடக்கு, ஏழாலை. T.P: 021 3205671 (5099)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்: 17.04.1929
மறைவு: 27.05.2011



கடந்த 27.05.2011 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் குமாரவேலு காசிப்பிள்ளை**
(கலாபூஷணம்)

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (26.06.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

முருகன் கோயில் வீதி,
தச்சன்தோப்பு, கைதடி.

(48,20,22)

குடும்பத்தினர்

## விற்பனைக்கு

5மாதம் நிரம்பிய அல்சேசன் பெண் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0750714970

## வேலையாள் தேவை

தோட்டத்தைப் பராமரிக்க தோட்ட அனுபவமுள்ள குடும்பப் பொறுப்புகளற்ற, தங்கி வேலை செய்யக்கூடியவர் தேவை.

தொடர்பு: 0772881103

## வாடகைக்கு

மானிப்பாய் வீதி, ஓட்டுமடத்தில் புனித செபஸ்தியார் ஒழுங்கை முன்பாக உள்ள தொழில் முயற்சிகளுக்கான வெற்றுக் காணி வாடகைக்கு உண்டு.

(49,19,20) தொடர்புகளுக்கு: 0777412948

## காணி விற்பனைக்குண்டு

கச்சேரிக்கும், கனகரட்ணம் மகாவித்தியாலயத்துக்கும் இடையில் முதலியார் ஒழுங்கையில் அண்ணளவாக 1½ பரப்பு வெற்றுக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 0773151631

## GERMAN/ SWISS

German/ Swiss மொழிகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகின்றன German Embassy இல் கேட்கப்படும் A-1 Certificate இறுதி வரை கற்பிக்கப்படும்.

German Institute,
No.10, Palaly Road, Jaffna. (49,19,20)

## EXPO PAVILION

### VACANCIES

EXPO PAVILION – Jaffna has the following Hotel vacancies with immediate effect.

**ASSISTANT MANAGER**

a. Smart, friendly and pleasing personality
b. Ability to converse fluently in English language
c. Desire to interact with local and foreign customers
d. Knowledge of Computer and basic accounts
e. Pervious experience in Hotel or Front office is advantage
f. Ability and willing to work long hours

**STEWARDS CUM HOUSEKEEPING BOYS**

a. Pleasant and pleasing personality
b. Ability to converse in English language will be a distinct advantage
c. Previous experience will be advantageous
d. Honest and character
e. Ability and willing to work long hours

**ASSISTANT COOKS**

a. Able to prepare Sri Lankan, Chinese and Western cuisine and Pastry items
b. Previous experience is NECESSARY and will be advantageous
c. Ability and willing to work long hours

Please register post your Bio-Data with copies of certificates, with two non-related referees and contact details to reach us before the 6th July 2011.

Please indicate on the top of the envelop the job you have applied for.

*The Manager*, **Expo Aviation (Pvt) Ltd**
**40, Kandy Road, Chundikulli, Jaffna**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லோரே, தீயோரை நாடாதீர்




மனிட வாழ்வில் நாம் சந்திக்கும் ஒவ்வொரு மனிதனையும் கூர்ந்து நோக்கினும் அவர்களை ஒவ்வொருவரிலும் இவர் நல்லவர், இவர் கெட்டவர் என்று பிரித்தறிதல் என்பது இலகுவானதல்ல. ஆனால் நல்லவர்களையே நாம் விரும்பிச் சேர முயலுகின்றோம். எம்மிடமுள்ள குணங்களின் மேலாதிக்கமே அவற்றையும் தெரிவு செய்கிறது எனலாம். நல்லவர்களைத் தேர்ந்து அவர்களோடு சேர்ந்திருக்குந்தோறும் பூவோடு சேர்ந்த நாரும் மணம் வீசும் என்பது போல், எமது குணங்களும் அவர்களின் எண்ணங்களால், செயல்களால் நறுமணம் வீசுகின்றன. அல்லது அவர்களின் நற்குணங்கள் எம்மிடையே வழக்கமாகி நாமும் நல்லவர்களாய் மதிக்கப்படுதல் கூடும்.

பழம்பெரும் பெண் புலவரும் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், ஆதியாம் நல்லுரைகளை ஆக்கி எமக்கு அளித்தவருமான ஔவையார் அவர்கள் இதனையே தனது வாக்குண்டாம் எனும் மூதுரையில் இவ்வாறு கூறுகிறார்.

*நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க*
*நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே - நல்லார்*
*குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு*
*இணங்கி இருப்பதுவும் நன்று*

நல்லவர்களைக் காண்பதுவும் அவர்களின் நல்ல சொற்களைக் கேட்பதுவும் நல்லவர்களைப் பற்றிப் பேசுதலும் நல்லவர்களை நாடிச் சேருதலும் அவர் செய்த நற்காரியங்களை மதித்து அவர் சொற்படி நடப்பதுவும் உயர்வானதே என்கின்றார் ஔவையார்.

இத்தகைய நல்லோருடன் சேர்தல் என்பது இங்கு இலகுவானதல்ல என்பதை நாம் எமது அனுபவத்தில் கண்டிருத்தல் கூடும். ஏனெனில் நல்லவர்களை ஊரும் உலகமும் போற்றுகின்ற போதும் அவர்களின் நற்செயல்களைப் பின்பற்றி அவர்களைப் போல் நல்லவர்களாய் வாழ்தல் என்பது நல்லவர்களால் மாத்திரமே செயற்படுத்தக்கூடியதாக இருக்கும். நல்லவர்களாக நல்லது சொல்லி நல்லது செய்து வாழ்வதையே எல்லோரும் விரும்பினும் நல்லவர்களாக வாழ்தலில் உள்ள இடர்ப்பாடுகள் நல்லவர்களாக வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கே புலப்படக்கூடிய உண்மையாகும். இதனை உணர்த்த முயன்ற ஔவையார் நல்லாரைக் குறித்துக் கூறிய செய்யுளை அடுத்துத் தீயாரின் குணங்கள் பற்றிய செய்யுள் மூலம் அவர்களோடு சேர்தலைத் தவிர்க்கச் செய்யும் பொருட்டு இவ்வாறு கூறுகிறார்

*"தீயாரைக் காண்பதுவும் தீதே திரு அற்ற*
*தீயார் சொற் கேட்பதுவும் தீதே - தீயார்*
*குணங்கள் உரைப்பதுவும் தீதே அவரோடு*
*இணங்கி இருப்பதுவும் தீது"*

நல்லதைச் செய்தலுக்குத் துணை நிற்கும் நல்லாருடன் சேர்வதில் உள்ள இயலாமையினால் நல்லவற்றைச் செய்வதில் அநேகர் பின்னிற்கும் நிலையில் நல்லவைக்கு எதிரான தீயவைகளைச் செய்பவர்களையும் அத்தகைய செயல் புரிவோரை நோக்கி அவர்களுடன் சேர்தலையும் தவிர்ப்பதன் மூலம் நல்லவர்களாகப் பிரகாசித்தல் இயலும் என்பதாய் ஔவையார். கொண்டிருந்த சிந்தனை இந்தச் செய்யுளில் வெளிப்படுத்தப்படுகிறது. நன்மை செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாதிரு என்று சொல்வதாக அந்தச் செய்யுள் அமைந்துள்ளது.

தீமையும் உள்ளத் தூய்மையின்மையும் சூழ்ந்துள்ள நிலையில் அத்தகைய செயற்பாடுகளுக்குக் காரணராகிய தீயவர்களுடன் சேராதே என வலியுறுத்துகிறார் ஔவையார். தீமையை விரும்பும் தீயமனமும் அவர் தம் தீயசெயலும் தீமையால் எமது சூழலை மாசடையச் செய்துள்ளது. அவற்றை நீக்க அல்லது அழிக்க எண்ணினால் தீயவை செய்யும் தீயவரை ஒதுக்கி வைத்தலும் அவர் தம் செய்கைகளைப் பாராட்டாமலும் அவர்களின் சொற்களுக்கும் செயல்களுக்கும் மதிப்பளிகாமலும் விடு என்கிறார் அவர்.

இந்த நிலையில் இன்றைய நாள்களில் நாம் மதிப்பளித்துப் போற்றுகின்ற பெரியார்கள் எத்தகையோர் என்பதைக் கணிப்பிட்டு நோக்கிப் பார்த்தல் அவசியமாகின்றது. உண்மையை மறைத்துப் பொய்யுரைத்து ஒழுக்கம் குலைந்து பண்பிழந்து வாழ்வோர், பணம், பொருள், பதவிகளில் இருப்பதன் மூலம் உயர்ந்தோர் என மதிக்கப்படலாம்.

ஆனால் நல்லவர் என மதிக்கப்படுவதற்கான தகுதி தீயோருடன் சேர்ந்திருத்தலைத் தவிர்த்தலே என்பது ஔவையாரின் செய்யுள்களின் மறைபொருளாகும். அதனையே அவர் தமது செய்யுள்களின் மூலம் வலியுறுத்துகிறார். நாம், எமது வாழ்வின் சிறப்புக்களாகக் கருதிப் பல்துறை சார்ந்த சான்றிதழ்களையும் பதவிகளையும் பணம், பொருள்களாகிய அழியும் பொருள்களை நாடித் தேடி நாளெல்லாம் அலைகின்றோம்.

கல்விசார் சிறப்புகள் யாவும் சான்றிதழ்களுடனும் போற்றுதல்களுடனும் தேங்கி நின்று விடுகின்றன.

**தர்மினி பார்த்திபன்**

வாழ்க்கையைச் சிறப்பிக்கும் வகையில் அவை வாழ்வோடு இயங்கி உயிர்வாழாமையினால் கற்றதன்படி ஒழுகும் பழக்கத்திலிருந்து விலகி நிற்கின்றோம். நல்லவை சிதைந்து, நல்லவர்கள் சிறுமைப்பட்டு நிற்பதைக் காணும்போது இந்தத் தீமையின் சுழலில் சேர்ந்து போகத் தெரியாதோர் என்று அவர்களை மதிப்பிடுகின்றோம்.

அர்த்தமற்ற புகழ்ச்சியும் போற்றுதல்களும் அதிகரித்துள்ளமையால் நல்லனவும் நல்லவரும் தம்மை மறைத்துக்கொள்ளத் தீமைகளும் தீயவரும் பெருகும் நிலையில் நாமும் தீமைகளுடன் இயைந்து வாழ முயலுகின்றோம். இவையே தொடரும் துன்பங்களுக்குக் காரணமாகி, அகலாத தீமையின் ஆட்சிக்கு உட்படுகின்றதெனலாம்.

இத்தகைய வாழ்க்கையால் எம்மையும் தீமையின் சேற்றினுள்ளே புதைத்து விட்டோமோ? என ஐயுற வேண்டியுள்ளது. இத்தீமையிலிருந்து விலகத் தீயவரோடு இணங்கி இருத்தலைத் தவிர்ப்போம். நல்லன செய்ய முயலுவோம். தீயோரிடமிருந்து விலகி நடப்போம்.

---

# விலகாத உறவுகள்




"நான் சொல்லுறது எதையாவது நீங்கள் கேட்டிருக்கிருக்கிறியளே கலியாணம் கட்டி இருபத்தொன்பது வருசமும் இப்பிடித்தானே. எத்தனை தரம் சொல்லுறனான் எதையும் நாலைந்து தரம் யோசித்து சொந்த முடிவாக எடுக்க வேணும் என்று நான் சொன்னா அது பெண்டாட்டியினுடைய சொல்லக் கேட்டதாப் போயிடும்."

சமையலுக்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருந்த மனைவி கூறியதை தலையைக் குனிந்தவாறே செவிமடுத்துக் கொண்டிருந்தார் நாகராசா.

தான் தோற்றுப் போகும் சமயங்களிலெல்லாம் நாகராசா இப்படித்தான் தலையைக் குனிந்து கொண்டு ஏதோ பெரும் யோசனையில் இருப்பது போல் இருப்பார். அதைப் பார்த்துப் பழகி அலுத்துக் கொண்டவள் அதைப் பெரிதாகப் பொருட்படுத்துவதுமில்லை. "சாத்திரி என்னவாம்? இந்தக் குறிப்பும் பொருத்த மில்லையாமோ?"

"ஓ... இந்தக் குறிப்புக்குத் தேடுகிறது கஷ்டமாம் என்று தான் இண்டைக்குப் போன புதுச் சாத்திரி யாரும் சொன்னவர்"

என்னப்பா, ஏதோ சாந்தி செய்தா சரியெண்டு அது செய்தாப்பிறகும் இன்னும் சரிவரேல்ல யெண்டால்... இந்தக் காலத்தில் சாத்திரமும் சாந்தியும்தான் ஆரோ பாக்கினமே? டொலரில சீதனம் குடுக்கிற இந்தக் காலத்தில உழைச்சு வைக்காத நீங்கள் தேடி வர்றதுகளையும் தட்டிக் கழிக்கக் கூடாது. இப்ப பாருங்கோ ஒன்றும் இல்லாமல்... வயசு வந்த பிள்ளையள வைச்சுக் கொண்டிருக்கிறம்.

மனைவி காமாட்சி கூறுவதும் சரியாகத் தான் பட்டது நாகராசாவுக்கு. நான் சொல்லுறன் எண்டு கோவிக்காதையுங்கோ, அந்தப் பெடியன ஒருக்கா விசாரிச்சுப் பாருங்கோவன். பலன் அதுதான் என்றால் எப்படியும் நடக்கும். இப்பவே இப்படிச் சீதனம் கேக்கிற எங்கட ஆக்கள் முப்பது வயசுக்குப் பிறகெண்டால் குடுத்துக் கட்டுமே. அவையள் கேக்கிறத குடுக்கிறதுக்கும் சேர்த்துத்தான் வைச்சிருக்கிறியளோ?

அவள் கூறிக் கொண்டிருக்க நாகராசாவுக்கு அன்றைய அந்தக் காட்சியே கண்முன் ஓடிக்கொண்டிருந்தது.

"அப்பா வேண்டாம் அப்பா நான் இனி அவரோட கதைக்க மாட்டன் அம்மா.. சொல்லுங்கம்மா...."

"அப்பா...."

"ச்சீ! என்னப்பார்த்து அப்பா என்றியா? நாயே உங்களையெல்லாம் அந்த நாளைய மாதிரி வீட்டி லயே வைச்சிருந்திருந்தா இண்டைக்கு என்ர மானமும் வெளியில் போயிருக்காது."

"அவனோட கதைக்கேக்க தெரியாத அப்பா.. இப்ப என்னடி அப்பா"

"அப்பா !" மீண்டும் அவளின் மன்றாட்டக் குரல்

அவள் கெஞ்சிக் கேட்டும் அவர் ஓங்கிய கை அவள் தலைமுடியைப் பற்றிப் பிடிக்க "வேண்டாமப்பா விடுங்கோ.... இப்பென்ன குடிமுழுகிப் போனது மாதிரி, வயசுக்கு வந்த பிள்ளைய..."

கோபத்தின் உச்சத்தில் நின்றவரின் கைகள் மனைவியையும் பதம்பார்த்தன.

"எல்லாம் நீ வளர்த்த வளர்ப்புத்தான்; நானெல்லோ வெளியில போறது. நீங்கள் வீட்டில் இருப்பியள். அவன் மாணிக்கம் என்னையேன் அப்படிக் கேள்வி கேட்க வேணும்? ச்சீ பிள்ளையளப் பெத்து பரிசுகெட வேண்டி இருக்கும் .

மாணிக்கமும் நாகராசாவுடன் சேர்ந்து பழகா விட்டாலும், அவரது திமிர் மாணிக்கத்துக்கும் ஊரோடு ஒத்ததாக, ஊறியிருந்தது. அதனால் தான், அவனும் நாகராசாவிடம் கேள்வி கேட்டு அவனைத் தூண்டிவிட்டார். தலைவிரி கோலமாக விக்கி விக்கி அழுது கொண்டு நின்ற மகள் வாணியின் கோலமே, நான்கு வருடங்கள் கழித்து இப்பொழுதும் கண்முன் நின்றது.

நாகராசா நினைக்கிற அளவுக்கு அவனோடு சேர்ந்து ஊர் சுற்றவில்லை. அவள் வேலை புரிந்த அலுவலகத்தில் ஒன்றாக வேலை புரிந்தவன். அதே அலுவலகத்தில் வேலை பார்த்தவளான காந்திமதி என்னும் கூனியால்தான், வீட்டில் இவ்வளவு பிரச்சினையும் நடந்தது. அவளின் மெருகூட்டிய வார்த்தைகள் வாணியின் தந்தை காதிலும் எட்டியது. ஊருக்கே உபதேசம் கூறுபவருக்குத் தான் பெற்ற பிள்ளையைப் பற்றி அறிந்தவரின் உள்ளம் ஆவேசமடையாது இருக்குமா?

"நாளைக்கு இந்தச் சனங்கள் என்னை நாலு கேள்வி கேட்டால் நான் தலைகுனிவதோ?" என்ற நினைப்பு அவரிடம் நிரம்பி வழிந்தது.

எல்லாவற்றையும் சேர்த்துத்தான் வாணிக்கு வந்ததும் வராததுமாகத் தன் அசுர நிலையை வெளிப் படுத்தினார். பாவம் வாணியை அன்றிலிருந்து வேலைக்கும் போகவிடாது வீட்டு வேலைக்கே அமர்த்தப்பட்டாள்.

**கீர்த்தி**

என்ன செய்வது? பெற்றோரும் அதே பருவத்திலிருந்து வந்தவர்களாயினும் ஏனோ? தாங்கள் பெற்ற பிள்ளைகளைப் பற்றியே புரிந்து கொள்ளாதவர்களாக இருக்கிறார்கள்?

ஓரளவாவது குடும்பச் சுமையில் தானும் பங்கெடுக்கலாம் என்றுதான் அவளும் உயர்தரம் எடுத்துப் பெறுபேறு வருமுன்னரே வேலைக்குச் செல்ல ஆரம்பித்தாள். அங்குதான் ராகுலனைச் சந்தித்தாள்.

புதிதாக வேலைக்குச் சென்ற வாணிக்கு, பல விடயங்களில் உதவியும் விளக்கங்களும் கொடுத்த ராகுலன் காலப்போக்கில் அவளின் தனிப்பட்ட விடயத்திலும் தலைப்போடப் பின்நிற்கவில்லை.

அவன் கதைக்கும் போதெல்லாம்,

(20 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# STUDY IN U.K

நாங்கள் தயாராகின்றோம்

நீங்கள் O/L, A/L சித்தியடைந்துள்ளீரா?

**July/September intake**

நீங்களும் பட்டதாரி ஆகலாம். அரியதோர் சந்தர்ப்பம்
உங்கள் உயர்கல்வியை வெளிநாடுகளில் மேற்கொள்வதற்கு நாங்கள் தயாராக உள்ளோம்.

★ G.C.E. O/L தகைமையுடன் அடிப்படை ஆங்கில கற்கை நெறியினை U.K இல் தொடரலாம்.
★ IELTS கற்கை நெறிவகுப்புகளும்/ ஆலோசனைகளும்.
★ குறைந்த செலவில் Sponsor ஏற்பாடு
★ குடும்பத்துடன் பயணிக்கக்கூடிய ஏற்பாடு
★ மிகக்குறுகிய காலத்தில் Visa பெற்றுக்கொடுக்கப்படும்.
★ இலகு தவணை கட்டண சலுகை முறை வழங்கப்படும்
★ மேலும் Course Fees/Sponsor விசேட சலுகை கட்டணம்



மேலதிக விவரங்களுக்கு: P.S.C (Pvt) Ltd
இல.19A, புகையிரத வீதி, கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில், யாழ்ப்பாணம்.
(49,20,22)

T.P: 0778328290, 0755766786, 0723635645.

# அரிய சந்தர்ப்பம்

நீங்கள் அடகு வைத்த நகைகளை உங்களால் மீட்க முடியாத சந்தர்ப்பத்தில் அதை நாங்கள் எங்கள் பணம் மூலம் மீட்டுத் திரும்ப அடகு வைப்பதற்கு உதவுவோம். (இச் சேவைக் கட்டணமாக 2% அறவிடப்படும்) அல்லது பவுணின் அதிக பெறுமதிக்கு வாங்குவோம். அநியாயமாக உங்கள் உடைமைகளை இழக்காமல் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்துவதற்கு

**உடனே அழையுங்கள்: 0774050936**

# காணி விற்பனைக்குண்டு

எழுவைதீவு வடக்கு, கடற்கரை ஓரமாக இறங்கு துறையில் இருந்து வடக்கே 100-150 மீற்றர் தூரத்தில் முன்னர் கோழிப் பண்ணை இருந்த காணிக்கு வடக்காக 10½ பரப்புக் காணி உடன் விற்பனைக் குண்டு. அரச, அரசசார்பற்ற நிறுவனங்களும் விரும்பத்தக்கது. தரகர் தேவையில்லை.

**தொடர்பு: 0213214924**

# கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima No.1 புறொயிலர் கோழிக்குஞ்சுகள் Prima கொம்பனி உத்தரவாதத்துடன் நியாயமான விலையில் சிவப்புப் பேட்டுக் குஞ்சுகளும் (விலை ரூபா 150) 30.06.2011 காலை விநியோகிக்கப்படும். முன் பதிவு செய்யவும்.

★ சூட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை - 0778996085
★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமனாறு - 0776904590
★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி - 0774656377
★ நல்லூர் பாம் சென்ரர், பிரதான வீதி, பருத்தித்துறை - 0771392593

**நல்லூர் பாம் சென்ரர்**
*19, முருகேசர் லேன், நல்லூர். தொ.பே.இல. 021 222 6944*

# மாங்கல்யா திருமண சேவை

நம்பிக்கையான துரிதமான சேவை நடப்பதை என்னுடன் தொடர்பு கொண்டவர்கள் நன்கு அறிவர். கவலைப்பட்டு அலைந்துதிரிந்து மனதுக்கேற்ற ஜாதகங்கள் கிடைக்கவில்லையென்று கவலைப்படாமல் முழு விவரங்களுடன் சகல நாள்களிலும் ஒரு மணிக்கு பின் நேர்வுக்கு நேரில் சந்திக்கலாம்.

உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்களின் ஜாதகக் குறிப்புகள் உண்டு. கு. திருவிளங்கம், 90 சட்டநாதர் கோவில் வீதி, நல்லூர். தொ. பே. இல. 0217200811, மொ/ என் 0771386846

# திருமண ஆண்டு பொன்விழா

நிறைவுநாள் வாழ்த்துக்கள்



26 . 06 . 2011

**திரு.திருமதி பசுபதி பரமேஸ்வரி**
தம்பதியர்

இன்று (26.6.2011) ஞாயிற்றுக்கிழமை தமது திருமண வாழ்வில் பொன்விழாக் காணும் தம்பதியர் உடல் உள நலத்துடன் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

மகன்மார், மகள்மார்,
மருமகன்மார், மருமகள்மார்,
பேரப்பிள்ளைகள், பெறாமக்கள்
மற்றும் உறவினர்கள்.

*இல.12, 4ஆம் ஒழுங்கை, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.*

(49,22,23)

# மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த உயர் கல்வி கற்று தற்பொழுது கனடாவில் தொழில் புரியும் P.R உள்ள அனுஷ நட்சத்திரம் உடைய மணமகனுக்கு 35 வயதுக்கு உட்பட்ட படித்த அழகிய மணமகள் தேவை.
தொடர்பு: T.P:- 001647622 6103
nicetalk2011yahoo.com
E-mail:- or/sms மூலம் தொடர்பு கொள்ளவும்.

# காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகரின் மத்தியில், சாவகச்சேரி தனங்கிளப்பு வீதியில் விளையாட்டு மைதானத்துக்கு அருகில் குடியிருப்புக் காணி 135 பரப்பு விற்பனைக்கு உள்ளது. வர்த்தக நோக்கில் (ஹோட்டல், தொழிற்சாலை) பயன்படுத்த சிறந்த இடம்.

**தொடர்பு: 0755680218, 021222 8202, 0755680228.**

# குரு கிர்பா வின் சேவையை நீங்கள் பெற்றுவிட்டீர்களா?

**இல்லை என்றால்.....**

எமது முகவர்கள் தங்களிடம் வரும்போது இதனைப் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்.

**"வாழ்க வளமுடன்"**

# IDM Affiliated Campus

**Jaffna Branch**

Affiliated Campus — Sri Lankan Brand *for* Higher Education

# 216 Navalar Road, Jaffna, Sri Lanka | T: 021 222 9901 | info@idmjaffna.com | www.idmjaffna.com

## IDM யாழ் நகரக் கிளை வழங்கும் வேலை வாய்ப்புக்களுடன் கூடிய கற்கை நெறிகள்

- HND in Software Development
- HND in Computer Network Technology
- HND in Business management
- Advanced Diploma in Computer Networks
- Certificate in Multimedia and web application
- Programming Languages ( C/JAVA/VB.NET/PHP/MySql)
- MCITP : Enterprise Administrator
- MCSE (Microsoft Certified Systems Engineer)
- CCNA (Cisco Certified Network Associate)
- Diploma in Business Management
- Tally
- ACCPAC
- e Commerce
- Linux Administration
- Business English
- Diploma in ICT
- Diploma in PC Assembling
- e-Citizen (பெற்றோருக்கானது)

☆ Digital Library, e-Leaning, போன்ற புதிய வசதிகள்

## HND கற்கை நெறிகளின் பின்

☆ உலகம் முழுவதும் அங்கிகரிக்கப்பட்ட சான்றிதழ்கள்
☆ ஐக்கிய இராச்சியம் (UK) செல்லக்கூடிய வாய்ப்பு
☆ Company களுடனான விசேட தொழில் பயிற்சி

புதிய வகுப்புக்கள் விரைவில் ஆரம்பம்
Student Gift
இலவசம்
TP #: 021 222 9901

**மேலதிக விபரங்களுக்கு IDM இன் யாழ் நகரக் கிளையை அணுகவும்**
மாணவர்கள் பெற்றோர் சகிதம் வருகை தந்து மேலதிக விபரங்களைப் பெறுவது வரவேற்கத்தக்கது

# Study in the UK

**Without IELTS- Public Funded Colleges And Universities**

**Sep/Jan Intakes In Progress**

2011 July 4ஆம் திகதி அமுலுக்கு வரும் புதிய நடைமுறையின் கீழ் Higher Educational Institutions (HEI) அல்லது Public Funded Colleges மற்றும் University களில் G.C.E (O/L) ஆங்கிலத்தில் திறமைச் சித்தி (C), G.C.E (A/L) மூன்றுபாடங்களில் திறைமைச் சித்தி (C) யுடன் IELTS இல்லாமல் கற்கை நெறிகளைத் தொடரலாம்.

1st Degree English Medium என்பதை உறுதிசெய்தால் IELTS இல்லாமல் Post Graduate Level கற்கைநெறிகளைத் தொடரலாம்

20 HRS- Part time Job, Dependant Visa என்பன மேற்கூறிய கற்கைகள் தொடர்பில் உத்தரவாதம் அளிக்கப்படுகிறது.

Settlement Visa (கணவன்-மனைவி) மூலம் UK செல்பவர்களுக்கான வீசா தொடர்பில் ஆவணங்கள் வெற்றிகரமாக செய்து தரப்படும்

**Eisc EXPRESS**
**INTERNATIONAL STUDIES & CONSULTANTS**



30-1/14, W.A.De Silva Mawatha, Colombo-06
(Above Hotel Saravana Bavan)
Tel: 2500207 E-mail: eisc_2007@yahoo.com
Robin-0777 222422 Selva-0714 299935
Web: www.expresslanka.com
(49.22,25)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராமனுக்கு அகலிகையும் அன்னை



அகலிகை சாபவிமோசன பகுதியில் இராமன் கால்பட்டு வண்ணமாய் எழுந்தாள் அகலிகை. ''அன்னையே இது எவ்விதம் நடந்தது'' என்று வினாவினார் இராமர். இந்திரன் மூலம் அவள் கற்புக் கலைந்த கதைசொல்லி முடித்தார் விஸ்வாமித்திரர். அதன் பிறகும் 'அம்மா' என்று வணங்குகிறான் இராமன்

அவள் செயல் அறிந்த பிறகு அம்மா என்று அழைக்க யாருக்காவது மனம் வருமா? இராமன் ஏன் அகலிகையை அம்மா என்று அழைத்தான் தெரியுமா?

தன் தவறுணர்ந்த "சாபவிமோசனம் இல்லையா" என்று கேட்டாள் அகலிகை ''தசரத குமாரனாக இராமன் வருவான். அவன் பாதம் பட்டதும் கல்லுரு தவிர்தி என்று அருளினார் கௌதம முனிவர். இந்த வரம் கொடுத்தபோது இராமன் கருவாகவுமில்லை; உருவாகவுமில்லை.

அந்த இராமன் எப்போது வருவான்? என்று அவன் உருவாகும் முன்னரே அவனை எண்ணி உருகினாள் அகலிகை. அவள் நெஞ்சு இராம நினைப்பில் நின்றது; நிலைத்தது.

கோசலை வயிற்றில் ஸ்ரீராமன் கருவாகும் முன்னரேயே அகலிகை மனதில் கருவாகிவிட்டான்.

கோசலை கருவில் சுமந்தாள், அகலிகையோ கருத்தில் சுமந்தாள். கோசலை கருக்காலம் மட்டுமே சுமந்தாள். அகலிகை சாப விமோசனக் காலம் முழுமையும் சுமந்தாள்.

கருவில் சிலகாலம் சுமந்தவள் அம்மா என்றால் கருத்தில் பலகாலம் சுமந்தவளும் அன்னையே.

யோ.டினோஜா,
யா/அச்சுவேலி மத்திய கல்லூரி.

# நூலறிவு

**இலக்கண நூல்கள்:-**
அகத்தியம், தொல்காப்பியம், நன்னூல், வீரசோழியம், யாப்பருங்கலம், தண்டியலங்காரம், யாப்பருங்கலக் காரிகை.

**பத்துப்பாட்டு:-**
திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, முல்லைப் பாட்டு, மதுரைக் காஞ்சி, பட்டினப்பாலை, மலைபடுகடாம்.

**எட்டுத் தொகை:-**
நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு, கலித்தொகை, பரிபாடல், பதிற்றுப்பத்து, அகநானூறு, புறநானூறு.

**ஐம்பெருங்காப்பியம்:-**
சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, சீவக சிந்தாமணி, குண்டலகேசி.

**ஐஞ்சிறுகாப்பியம்:-**
சூளாமணி, உதயணராகாவியம், நாககுமாரகாவியம், யசோதரா காவியம், நீலகேசி.

**சமய நூல்கள்:-**
பன்னிரு திருமுறைகள், சீறாப்புராணம், கந்தபுராணம், சேது புராணம், தேம்பாவணி, இரட்சணிய யாத்திரிகம், நாலாயிரந் திவ்விய பிரபந்தம்.

லிபிசேண்யா நாகேந்திரன்,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.



# அறிவுத் தகவல்கள்

அறிவின் அந்தம் - அன்பு
கல்வியின் அந்தம் ஒழுக்கம்.
தர்மத்தைச் செய்யுங்கள் கர்மத்தை செய்யாதீர்கள்.
மற்றவர்களை கீழே தள்ளிவிட்டு நீ ஏணியில் ஏற முயற்சிக்காதே.
இன்று என்பது நம்பிக்கையின் வசம்;
நாளை என்பது இறைவன் வசம்.
இன்று தோற்றவன் நாளை ஜெயிப்பான்.
ஊதாரி வருங்காலப் பிச்சைக்காரன்.
பருவத்தே பயிர் செய்.
பணம் வந்து போகும்; நல்லொழுக்கம் வந்து வளரும்.
பணிவு வாழ்வை உயர்த்தும்
தெரிந்திரு; தெரியுமென்று இருக்காதே.
தன்னடக்கம் தலைசிறந்த குணம்.
ஒவ்வொருவரது இலக்கும்
உயர்வானதாக இருக்கவேண்டும்.

ஆ.கபிலன், தரம்5
புனித தெரேசாள் மகளிர் கல்லூரி.



# வணங்குவான் அருள்வேண்டி...



நட்ட கல்லைத் தொட்டுத் தரையில்
குட்டிக் குட்டிக் கும்பிடுவான்
பட்டையாகத் திருநீறணிந்து
பொட்டும் வைப்பான் நெற்றியிலே

மொட்டு மலர்கள் கொய்து மாலை
கட்டிச் சாத்தி வணங்குவான்
ஏட்டில் படித்த வழியில் நின்று
நாட்டுவான் நல்லறங்களை நன்றே

அந்தணர் பூசைக் கருகிலிருந்து
ஆலயத் தொண்டுகள் செய்வான் நாளும்
சுந்தரமூர்த்தியின் உருவச்சிலைக்கு
மந்திரஞ் சொல்லித் தீபங்கள் காட்ட

சிந்தை நெகிழ்ந்து சிரம்மேல் கரந்தூக்கி
நல்ல மனத்தோடு அரோகரா எனச்சொல்லி
செந்தமிழ்த் தேவாரம் திருவாசகம் பாடி
பக்திப் பெருக்கோடு
வணங்குவான் அருள்வேண்டி

த.அப்புத்துரை,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

## விடை தெரியுமா? 113

### உங்களுக்கும் பரிசில்கள்

1. பிரான்ஸ் நாட்டின் உயர் விருதுக்கு என்ன பெயர்?
2. பாக்கிஸ்தான் நாட்டின் தேசிய மொழி யாது?
3. அல்-குவைதா இயக்கத்தின் புதிய தலைவர் ஆக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?
4. தூத்துக்குடிக்கும் கொழும்புத் துறைமுகத்துக்கும் இடையில் அண்மையில் ஆரம்பமான கப்பல் சேவையின் பெயர் என்ன?
5. பெண்களுக்கு மிக ஆபத்தான நாடுகள் வரிசையில் இந்தியா எத்தனையாம் இடத்தைப் பிடித்துள்ளது?

**விடைகள் 111**


1. மாத்யூஸ் காலின்ஸ்
2. ரஷ்ய மொழித்தினமாக
3. ஹபிகி புனேயா போகொம்போ
4. 4 ஆவது இடத்தில்
5. ஹமீடியா

**வெற்றி பெற்றவர் விவரம்**

1.யோ.சுபாஷினி,
தரம் 4, யாழ்.மட்டுவில் கமலாசினி மகாவித்தியாலயம்.

**விடை தெரியுமா?**
தெரிந்தால் 02.07.2011 இற்கு முன்னர் சரியான விடைகள் அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.




த.மாதுரி,
யா/கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி.



த.விதுர்சன், தரம் 8ஏ,
யா/மகாஜனக் கல்லூரி.



க.ரூபன், தரம் 7பி,
யா/புற்றளை மகாவித்தியாலயம்.



பா.கோபிநாத், தரம் 6ஏ,
யாழ்.இந்துக் கல்லூரி.



த.வினிதன், தரம் 4ஏ,
யா/ஸ்கந்தவரோதய ஆரம்பப் பிரிவு.




க.மதுசன், தரம் 6
கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் விடுதலைப் புரட்சி

கண்டதும் காதல் கொள்வார்
அன்பே வாழ்க்கை என்பார்
கண்ணே மணியே
கொஞ்சும் கிளியே என்று
கொஞ்சு தமிழ் பேசிடுவர்
நெஞ்சில் பல வஞ்சங் கொண்டு
மஞ்சள் கயிறு தந்து
மணம் முடிக்க வேண்டுமென்றால்
லஞ்சங் கொடு என்பார்
லட்சணமான ஆடவர்
எட்டணா உழைத்து
பத்தனா செலவு செய்யும்போது
பத்து லட்சம் நீ கேட்டால்
நித்திலத்தில் வாழத்தான் தோன்றுமா?
''பசும்பொன்னே பட்டுப் பெண்ணே'' என்றவன்
பசும் பொன் பத்துக் காசு போடென்பான்!
பசு விற்றாலும் வராதடா பத்துக்காசு
காதலைக் கண்ணியமாய் நினைத்திடும்
கன்னியர் கண்தனில் கண்ணீர் இருக்கும்!
காலம் முழுதும் மனதில் வைத்து
காதலைப் போற்றிடுவாள் கன்னியவள்!
வாழ்ந்தால் உன்னோடு
இல்லையேல் மண்ணோடு
என்றவள் மாய்ந்தாள்!
வாழ்ந்தால் பொன்னோடு
இல்லையேல் வேறு பெண்ணோடு
என்றவன் வாழ்ந்தான்!
காதல் எதுக்கடி கண்ணே
சாதல் செய்வதற்கா?
பொன்னைக் கொடுத்துத்தான்
பெண் மணப்பது என்றால்
மண்ணில் நடத்து பெண்ணே
''பெண் விடுதலைப் புரட்சி''

கோற்றையூர்
மகே.மேனன்





# சுமை

என்
நினைவுகளை
சுமந்து
வாழும்
என்
இதயத்துக்குள்
ஏன்
சுமக்க முடியவில்லை
என்
காதலையும்

# கொலை அல்ல இது தலை சிறந்த கலை



கொலைக் களத்தின் நாயகர்க்கு
பாராட்டு விழாக் காட்சி
கொலையுண்ட நம்மவர்க்கு
சாந்தனின் இசைக் காட்சி
மானுடம் மரித்த மண்ணில்
நாம் மண்டியிட்டு வாழும் காட்சி
நீதியின் நிழலறியா மனுநீதித் தோழர்கள்
இது கொலை இல்லை இலங்கையின்
தலை சிறந்த கலை என்பர்
இந்தக் காட்சிகள் மாற
சூழ்ச்சிகள் நிறைந்த
ஆட்சி மாற வேண்டும்

குறிஞ்சி முல்லை பூத்த மண்
குருதியில் தோய்ந்த காட்சி
குழந்தையும் குமரியரும் குடும்பமாய்
எறிகணையில் எரிந்த காட்சி
துடிக்க துடிக்க கொன்ற பின்பும்
துகில் உரியும் துன்பக் காட்சி
சிரம் தாழ்த்தி சரணடைந்தோரை
சிரத்திலேயே சுட்ட காட்சி

- பாவலன்



# அனைத்தையும் மறந்தேன் அன்னையைத் தவிர

சிறு வயதில் நிலாக் கதை பேசி
சிறுபட்டாய் பறந்த
பாலர் பருவமது மறந்தேன்
அன்னை உன் கை ஊட்டிய உணவைத் தவிர

காலமது கடந்து பாலர் பருவமது முடிந்து
பள்ளிப் பருவ ஆரம்பத்தில்
மச்சான் மச்சான் என்று முட்டாள் தினத்தன்று- அவனை
தேடி ஓடிய நினைவுகள் மறந்தேன்
அன்னை உன் குரலைத் தவிர

O/L பரீட்சையது முடிந்து A/L படி எடுத்து வந்து
அங்கு மனதைத் தட்டிய சிறிய காதலனை நினைத்து
மனம் தனை உருக்கி வடித்த கண்ணீரை மறந்தேன்
அன்னை உன் அறிவுரையைத் தவிர

கடும் புயல் வீசுகின்ற தருணமதில்
காற்றாய்ப் பறக்கின்ற இதயமதில்
குடியிருந்த மன்னவனைத் தேடி அலைந்த
இரகசிய ரணங்கள் மறந்தேன்
அன்னை உன் சிரிப்பைத் தவிர

இப்பாரதனில் சுகமான வாழ்க்கையில் சுமையாக வந்த
சுகமான வலிகளை கனிவாக நினைத்து
கருத்தோடு எழுதுகின்றேன்
எத்தனை துன்பங்கள் என்னை விரட்டியபோது
அனைத்தையும் மறந்தேன் அன்னையைத் தவிர

ரி.மேரி றோஸ்,
செட்டிக்குளம், வவுனியா.



# “அரசடி விநாயகனுக்கு ஆரோக்கியமான போட்டி”

யோகியொருவன் போதித்ததை,
போகிகள் தூஷணமாக்கித் தூவுகின்றனர் - எம்மிடம்!
“புத்தத்தை உன் புத்திக்குள் ஏற்று” - தரலாம்
சொத்துரிமை, முத்தாபரணம்,
வித்தியாவுதவி, நித்தமும் சோறென்று
பித்தம் பிணித்த மருந்துக் குப்பிகளுடன்
மத வர்த்தகர்கள் எம் தெருக்களில், மலிவாய்!!

“ மதம், மனிதம் தைத்து மனமிணைக்கும்
நூல்” என்று பீடுடன் பின்பற்றினோமே!
வெட்டித் துணிக்கும்,
கட்டியணைத்துக் கழுத்தில் பாய்ச்சும்,
தங்கக் கத்தரிக் கோலென்று,
பித்தாந்தம் பேசுமுங்கள்,
“சித்தார்த்தத்தை” எப்படி ஏற்பது?

சுருங்கிய வயிறுகளின்,
மடிப்பெடுக்கும் மத்தியானக் ‘கஞ்சி’களின்
முன், பின், மூன்று வேளை “பிரித்” என்று
மருந்தெழுதும் நீயா
சமரச மத வைத்தியன்?

அதிதாகம் தணிக்க அகலவாய் திறந்த பின்னும்,
அம்மணம் மறைக்க ‘ஆடை’ கொடுக்க முன்னும்,
ஆகாயம் மறைக்க ‘கூரை’ கொடுக்க முன்னும்,
ஆதாயம் தேடும் உன் “மூளைச் சலவை”க்கு
மன அழுக்கை வெளிறடிக்கும்,
‘மார்க்க சக்தி’ உண்டென்று எப்படி நம்ப??
எப்படிடா உங்கள் அடக்குமுறை விஷக்கிணறு
வற்றாமல் ஊறுகின்றது எப்பொழுதும்?

நல்லவேளை!
அஞ்ஞானம் அகல “அரசகுமாரன்” அமர்ந்த மரம்
“தென்னை”யோ, “பனை” யோ இல்லை!
“அரசடி” விநாயகர்களுக்கு வந்த
“ஆரோக்கியமான போட்டி” அளவோடு நின்றதில்
ஆசுவாசம் இப்போது!!
“குரலில் கொஞ்சம் உரப்பேற்றி, உண்மை
கேட்டதை” குற்றமென்று,
அழுகல் கரைத்து அபிஷேகிக்கத் தூண்டுவதா
அன்பில் கிளர்ந்த அகிம்சை மதம்?
எதை,
“வற்றாப்பளை” மணலூறிய வற்றிய குருதியை,
வழுதெடுத்து பொங்கும் “வரசக்தி” அம்மனை,
“நவாலி” யில் சிதறிய நானூறு சொந்தங்களை,
புனல், புலம் காக்கும் “பேதுறு”த் தந்தையை,
பொட்டென்று மறந்து விட்டு
சட்டென்று சங்கமமாக - என்ன
“சட்டத்திருந்த மூலமா” உன் சமயம்??
அதே வைகாசி நாளில்,
பிறவுலக தேசங்களில்,
மெலிதாய் எரிந்த ஈகைத்திரிகளின் முன்,
தலைகுனிந்து நாணியது போதி மாதவனின் “சம்புத்வம்”!!
ஆரிய குளத்தில் “திணிக்கப்பட்ட”
பாற்சோற்றுத் திரளையின் மேல்
சிறு திட்டாய் உறைந்து கிடந்தது,
“முள்ளிவாய்க்கால் இரத்தம்!!

- சொந்தரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக உறவை உடைப்பதற்கு திரைமறைவில் சதித்திட்டம்.....!

ஞாயிறு காரம்

**சந்திரசேகர ஆசாத்**

> தமிழக முதல்வர் எடுத்திருக்கும் தீர்மானம் நிலைத்துத் தொடர வேண்டுமானால் தமிழக மக்கள் தொடர்ந்து அழுத்தங்களைக் கொடுத்த வண்ணமே இருக்க வேண்டும்.

அண்மையில் 23 இந்திய மீனவர்கள் மன்னார் கடற்பரப்பில் வைத்து அவர்களின் படகுகள், மீன்பிடி உபகரணங்கள் ஆகியவற்றுடன் கைது செய்யப்பட்டு, மன்னார் நீதிபதி முன் நிறுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் உடனடியாகக் கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்கக் கோரி போராட்டத்தில் குதித்தனர். மூன்று நாள்கள் மீன்பிடியை நிறுத்தி நடத்தப்பட்ட போராட்டம் இந்திய அதிகாரிகளின் வாக்குறுதியை அடுத்து கைவிடப்பட்டுள்ளது.

ராஜதந்திர நடவடிக்கைகள் மூலம் இந்திய மீனவர்களை உடனடியாக விடுவிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

நீண்ட காலமாகவே இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பிலும் இலங்கை மீனவர்கள் இந்தியக் கடற்பரப்பிலும் அத்துமீறி மீன்பிடிப்பதாகக் குற்றம் சுமத்தப்பட்டு வருகிறது. இந்தப் பிரச்சினை தொடர்பாக ஏராளமான மீனவர்கள் கைது செய்யப்பட்டுப் பின் விடுவிக்கப்பட்டுள்ளனர். அதற்கு மேலாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சுட்டும் அடித்தும் கடலில் மூழ்கடிக்கப்பட்டும் கொல்லப்பட்டனர். அவர்களின் மீன்பிடி உபகரணங்களும் நாசமாக்கப்பட்டன.

இதில் கவனிக்க வேண்டிய ஒரு முக்கிய விடயம் அத்துமீறும் இலங்கை மீனவர்கள் இந்தியத் தரப்பால் கைது செய்யப்பட்டுப் பின் விடுவிக்கப்படுகின்றனர். இந்திய மீனவர்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் கொல்லப்படுகின்றனர். இதுவரை அத்துமீறிய இலங்கை மீனவர்களில் அதிகமானோர் தென்னிலங்கையைச் சேர்ந்த சிங்கள மீனவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. எப்படியிருந்த போதிலும் இது ஒரு தொடரும் பிரச்சினையாக மட்டுமன்றி எரியும் பிரச்சினையாகவும் இருந்து வருகிறது.

இந்தப் பிரச்சினை தொடர்பாக இலங்கைத் தரப்புக்கும் இந்தியத் தரப்புக்குமிடையே பல தடவைகள் பேச்சுக்கள் நடத்தப்பட்டு சில இணக்கப்பாடுகள் காணப்பட்ட போதிலும் அத்துமீறல்கள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. இலங்கை, இந்தியாவைச் சேர்ந்த மீனவர் சங்கங்களுக்கிடையே இடம்பெற்ற பேச்சுக்கள் கூட வெற்றியடையவில்லை.

### ஏன் இந்த நிலைமை?

மன்னார் வளைகுடா உலகிலேயே அதிகமாக மீன்கள் படும் இடங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. இந்தக் கடற்பரப்பில் அமைந்துள்ள கண்ட மேடைகள் அதிக மீன்கள் உற்பத்தியாகும் மையமாக மட்டுமன்றி வேறு இடங்களில் காணமுடியாத பல கடல்வாழ் உயிரினங்களையும் கொண்டுள்ளது. ஆண்டாண்டு காலமாக இந்த வளைகுடாப் பகுதியை இலங்கை, இந்திய மீனவர்கள் பயன்படுத்திப் பலன் பெற்று வந்தனர்.

போர் இடம்பெற்ற காலங்களில் கடல் வலயத் தடைச் சட்டம் காரணமாக இலங்கை மீனவர்கள் தங்கள் தொழிலை மேற்கொள்ள முடியாத நிலைமையில் இந்திய மீனவர்கள் இந்தப் பகுதியைப் பயன்படுத்தி வந்தனர். எனினும் இந்தக் காலப் பகுதியில் ஏராளமான மீனவர்கள் இலங்கைப் படையினரால் கொல்லப்பட்டனர்.

இந்தக் கொலைகள் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்டதாக இலங்கை அரசு குற்றம் சாட்டியபோதும், இந்திய மீனவர்களும் மக்களும் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. போர் முடிந்த பின்பும் பல இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கொல்லப்பட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டபோதும் இலங்கை அரசு அதை மறுத்தே வந்தது.

இந்தக் கடற் பிரதேசம் தொடர்பாக இலங்கை மீனவர்களுக்கும் இந்திய மீனவர்களுக்குமிடையே பிரச்சினைகள் உண்டு. இவை பேசித் தீர்க்கக் கூடியவை மட்டுமல்ல ஒரு சிநேகபூர்வமான அணுகுமுறையூடாக பேசித் தீர்க்கப்பட வேண்டியவை என்பதும் முக்கியமானதாகும்.

ஆனால், இந்தப் பிரச்சினையை மையமாக வைத்து இலங்கை அரசும் அரசுடன் இணைந்துள்ள தமிழர் மத்தியில் உள்ள சில தீய சக்திகளும் தமிழக மக்களுக்கும் இலங்கைத் தமிழ் மக்களுக்குமிடையே முரண்பாடுகளையும் கசப்புணர்வையும் ஏற்படுத்தும் வகையிலான சதி முயற்சிகளில் ஈடு பட்டு வருகின்றன. இது அரசி யல் உள்நோக்கம் கொண்டது மட்டுமன்றி இந்தியத் தமிழ் மக்களிடமிருந்து இலங்கைத் தமிழ் மக்களைத் தனிமைப்படுத்தும் நயவஞ்சக நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.

### குரல் கொடுத்த நாயகன்

எனவே எமது மீனவர்கள் உணர்ச்சி வசப்பட்டு இவர்களின் சதி வலையில் வீழ்ந்து விடாமல் எச்சரிக்கையாக இருப்பது முக்கியமானதாகும்.

கலைஞர் மு.கருணாநிதி தமிழக முதல்வராக இருந்தபோது இந்திய மீனவர்கள் பருத்தித்துறைக் கடலில் நூற்றுக்கணக்கில் புகுந்த போது அவர்கள் இலங்கை மீனவர்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். திடீரென அங்கு தோன்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தான் அந்தப் பிரச்சினையைத் தீர்க்கப் போவதாகப் பிரகடனம் செய்தார். தமிழக முதல்வருக்குத் தந்தியடித்துவிட்டு முதல்வரின் மகள் கனிமொழியுடன் தொடர்புகொண்டார். இவர்களும் இந்தியப் பிரதமருக்குத் தந்தியடிக்க அமைச்சரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‌ஷவுடன் தொடர்புகொள்ள மறுநாள் இந்திய மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இந்திய மீனவர்களுக்காக முதல்வர் கருணாநிதியும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் அரும்பாடுபட்டு விடுவித்ததாகவும் இலங்கை மீனவர்களுக்காக டக்ளஸ் குரல் கொடுக்கும் நாயகனாகவும் ஒரு தோற்றப்பாடு ஏற்படுத்தப்பட்டது. ஆனால் அந்தக் காலப்பகுதியில் இலங்கை, இந்திய அரச ஊடகங்களில் இந்திய மீனவர்கள் இலங்கை மீனவர்களால் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர் என்ற செய்தி முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுத் திரும்பத் திரும்ப வெளியிடப்பட்டது.

ஆனால், இது திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட ஒரு நாடகம் என்பது ஓரிரு நாள்களிலேயே அம்பலப்பட்டது. தமிழக மீனவர்களுக்கும் இலங்கை மீனவர்களுக்குமிடையே மோதலையும் முரண்பாடுகளையும் ஏற்படுத்தி தமிழக மக்கள் ஈழத் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்கும் நிலையை இல்லாமல் செய்ய மேற்கொள்ளப்பட்ட திட்டமிட்ட சதி என்பது புலனாகியது. சில கேள்விகள் எழுப்பப்பட்ட போது சில உண்மைகள் அம்பலத்துக்கு வந்தன.

இலங்கை- இந்தியக் கடல் எல்லையிலும் ஏன் இந்தியக் கடற்பரப்பிலும் கூடத் தேடிச் சென்று இந்திய மீனவர்களை வேட்டையாடும் இலங்கைக் கடற்படை, இந்திய மீனவர்கள் பருத் தித்துறையை அண்மிக்க எப்படி அனு மதித்தது? இந்திய மீனவர்கள் தரையிறக் கப்பட்ட சில நிமிடங்களுக்குள் பெருந்தொகையான பொலிஸாரும் அமைச்சர் ஒருவரும் எப்படி அந்த இடத்துக்கு வந்தனர்? அவ்வளவு பெருந்தொகையான இந்திய மீனவர்கள் வந்த போதும் நிராயுத பாணிகளான இலங்கை மீனவர்களை எதிர்த்து ஏன் போராடவில்லை?

இந்திய மீனவர்களுக்கும் இலங்கைத் தமிழருக்குமிடையேயான நெருக்கமான உறவை இலங்கை- இந்திய அரசுகள் எப்போதுமே விரும்பியது கிடையாது. தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்துக்கு எதிராக இந்த அரசுகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு இந்த உறவு எப்போதுமே அச்சுறுத்தலாக விளங்கி வந்தது.

### சதி முயற்சி முறியடிப்பு

இலங்கைத் தமிழ் மக்களுக்கும் இந்திய மீனவர்களுக்குமிடையே முரண்பாடுகளையும் மோதல்களையும் ஏற்படுத்துவது இரு அரசுகளின் முக்கிய இலக்குகளில் ஒன்றாக இருந்தது. அதற்கு ஏற்ற வகையில் செயற்படத் தமிழ் மக்கள் மத்தியில் உள்ள அரசின் பங்காளிகளும் எப்போதும் தயார் நிலையிலேயே இருந்தனர். இப்படியான நிலையில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் கடற்படையினரின் தந்திரமான, ரோந்து நடவடிக்கை காரணமாகப் பருத்தித்துறைக் கடலுக்குள் பிரவேசிக்க நிர்ப்பந்திக்கப்பட்டனர். ஏற்கனவே இதை எதிர்பார்த்துக் காத்திருந்த இலங்கை அரசின் அடிவருடிகள் இலங்கை மீனவர்களை உசுப்பேற்றிக் கடலில் இறங்கினர். இந்திய மீனவர்கள் கரைக்குக் கொண்டுவரப்பட்ட சிறிது நேரத்தில் பொலிஸார் வந்து விடவே அவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இலங்கைத் தமிழருக்கெதிரான இந்திய மீனவர்களை ஆர்ப்பாட்டத்தில் இறக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் இந்திய மீனவச் சங்கங்கள் அதை முற்றாகவே நிராகரித்துவிட்டன. எனவே இலங்கை, இந்தியத் தமிழ் மக்களிடையே விரோதத்தை ஏற்படுத்த மேற்கொள்ளப்பட்ட சதி முயற்சி முறியடிக்கப்பட்டது. இதை வைத்து அரசியல் வியாபாரம் நடத்த முயன்ற அரசியல்வாதிகளும் மூக்குடைக்கப்பட்டனர்.

எனினும் தோல்வியை ஏற்க மறுத்த சில அரசியல் சக்திகள் மீனவர்களை ஏவிவிட்டு இந்திய மீனவர்களின் அத்துமீறலை எதிர்த்து யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் தூதரகம் முன்பாக நடத்த முய்றசித்த மறியல் போராட்டம் கூட மீனவர்களின் ஒத்துழைப்பு இன்மையால் கைவிடப்பட்டது.

### தமிழக உறவு இறுக்கமானது

இலங்கைப் படையினரின் கொடுமை காரணமாகத் தமிழ் மக்கள் புலம்பெயர்ந்து இந்தியா சென்றபோது அவர்களைப் பாதுகாப்பாகக் கொண்டு சென்று சேர்த்தவர்கள் தமிழக மீனவர்கள். இலங்கை அரசு பொருளாதாரத் தடை போட்டு எம்மை வாட்டிய போது எமக்கு உயிரைப் பணயம் வைத்து எரிபொருள் கொண்டு வந்து தந்து எமது வீடுகளில் விளக்கெரிய வைத்தவர்கள் அவர்கள். எமக்கு இன்னல்கள் வரும் போது ஆர்ப்பாட்டம், ஊர்வலம் எனப் பொங்கி எழுந்து எமக்கு ஆதரவு தருபவர்கள் அவர்கள்.

அன்றும் இன்றும் என்றும் எமக்கும் தமிழக மக்களுக்குமான உறவு இறுக்கமானது; நிரந்தரமானது. இன்று தமிழக முதல்வர் எடுத்திருக்கும் எமக்கு ஆதரவான நிலைப்பாடு தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட வேண்டுமானால் தமிழக மக்களின் தொடர்ச்சியான அழுத்தம் அவசியம். எனவே இந்திய அரசும் இலங்கை அரசும் இலங்கை அரசில் பங்கு வகிக்கும் தமிழ்க் கட்சிகளும் இந்த உறவை உடைக்க மேற்கொள்ளும் சதிகளுக்கு எதிராக விழிப்பாக இருக்க வேண்டும்.

தமிழக மீனவர்களுக்கும் இலங்கை மீனவர்களுக்குமிடையே பிரச்சினைகள் உண்டு. அவை சிநேகபூர்வமான பேச்சுக்கள் மூலம் தீர்க்கப்பட வேண்டியவை.

இந்தப் பிரச்சினைக்குள் தமிழ் மக்கள் விரோத சக்திகள் உட்புகுந்து எமக்கும் தமிழக மக்களுக்குமிடையேயுள்ள இருந்த உறவை உடைக்க அனுமதிக்கக் கூடாது. நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எதையும் செய்ய என்னால் முடியும் என்ற மனவலிமையுடன் உள்ளேன்



பாண்டியம்மா

கடல்வளங்களை அதிமாகக் கொண்ட யாழ்.மாவட்டத்திலுள்ள ஏழைக் குடும்பங்களின் வாழ்வில் ஒளி வீச இயற்கை அன்னை அள்ளிக் கொடுத்த வரம் தான் கடற்றொழில்.

கடற்றொழிலாளர்கள் ஒரு பகுதியில் வாழும் பாஷையூர்ப் பிரதேசத்தின் பொதுச் சந்தையில்தான் இந்தப் பெண்மணியைச் சந்தித்தேன். கடந்த 15 வருடங்களாக சந்தையில் மீன்களை வாங்கச் செல்லும் மக்களுக்கு மீனைவெட்டிக் கொடுத்து உழைத்து வருகிறார் இந்த திருமதி சத்தியசீலன். பாஷையூரை நிரந்தர இடமாகக் கொண்ட இந்த 49 வயதுப் பெண்மணி கணவனின் இறப்புக்குப் பின் தனது 5 பிள்ளைகளையும் வளர்க்கும் பொறுப்பை எற்றுக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஆகியுள்ளது.

''பரம்பரையாகவே தனது உறவுகள் அனைவரும் கடற்றொழில் செய்வதால் தானும் இந்தத் தொழிலைத் தேர்ந்தெடுக்க காரணமாக இருந்தது என்கிறார் இந்தப் பெண் மணி.

ஆண்கள் கடலுக்குச் சென்று மீன்களைப் பிடித்து வருவார்கள். ஆனால் கடற்றொழிலைப் பொறுத்தவரையில் ஆண்கள் தான் தொழில் செய்ய வேண்டும் என்பது கிடையாது. எமது பிரசேதத்தில் அதிகமான பெண்களும் கடல்சார்ந்த தொழில்களைச் செய்து வருகின்றனர்.

என்னுடைய கணவர் கடல் தொழில் செய்ததால் நானும் கடல் தொழிலுடன் தொடர்புடைய இந்தத் தொழிலைத் தேர்ந்தெடுத்தேன். இங்கு மீன் வாங்க வருபவர்கள் அனைவரும் கூடுதலாக மீனை வெட்டிக்கொண்டு தான் செல்வார்கள் இது எனது தொழிலுக்குச் சாதகமாக உள்ளது என்றார் சந்தோசமாக. குடும்பத் தலைவர் இல்லாத இவரது குடும்பத்தில் வறுமையை அவரது முகத்தோற்றம் எடுத்துக் காட்டினாலும் சலிக்காது தனது தொழிலை ஆர்வத்துடன் செய்துவருகிறார். வேலை செய்யும்போது அவரது கண்ணுக்குத் தெரிவதெல்லாம் மீன் வாங்கிக்கொண்டு போபவர்கள் தான். அவரது கையின் வேகமும் கத்தியின் கூர்மையும் கைக்கு வரும் மீனை ஒரு நொடியில் துண்டுகளாகவும் கழிவுகளாகவும் தரப்படுத்தி விடுகின்றது. இந்தச் சந்தைக்கு மீன் வாங்க வருபவர்கள் இவரது பார்வையில் இருந்து தப்பிச்செல்ல முடியாத படி அழஅழகாக மீனை அரிந்து கொடுப்பதில் வல்லமை பொருந்தியவர் என்பதால் இவரிடம் தான் அனேகமானவர்கள் மீனைத் துண்டுகளாக வெட்டி எடுத்துக் கொண்டு செல்கிறார்கள். ஐந்து பிள்ளைகளின் தாயாரான இவருக்குப் பொறுப்புக்கள் அதிகம் என்றே கூறவேண்டும். ஊனமுற்ற மகளும் ஏனைய பிள்ளைகளும் இவரது உழைப்பை நம்பித்தான் உள்ளனர். ஒவ்வொரு நாளும் மீன்வெட்டிக் கொடுக்கும்போது 300 ரூபாவுக்கு மேல் வருமானம் வரும். அதுவே கடல்தாய் எனக்குத் தந்த கூலியாக நினைக்கிறேன் என்று கூறுகிறார் இவர்.

சந்தையில் அதிகமாக மீன் விற்பனை செய்தால், எனக்கும் அதிகமாக மீன்கள் வெட்டக் கிடைக்கும். ஏனென்றால் இந்த மீன்களை வெட்டுவதன் மூலம் வருமானம் தான் எனது அன்றாடம் சீவியத்தைப் போக்குவதற்கு உதவுகின்றது. சமுர்த்தி நிவாரணம் மூலம் மூன்று மாதங்களுக்கு ஒருமுறை இரண்டு கிலோ மா அரிசி ஒரு கிலோ சீனி, பருப்பு, தேங்காய் எண்ணெய் போன்றவற்றைத் தருவார்கள். இந்தப் பொருள்கள் 6பேர் கொண்ட எனது குடும்பத்தின் அன்றாடச் செலவுக்குப் போதுமா? அதனால் தான் நானும் மனத் தைரியத்துடன் வெட்கத்தைவிட்டு இந்த வேலையைச் செய்கின்றேன். நான் இருந்து வேலை செய்யும் இடத்துக்கான வாடகைப் பணம் 40 ரூபா போக மீதிப்பணம் ஓரளவு எனது அன்றாடச் செலவுக்கு உதவியாக இருக்கின்றது. சந்தையில் குறைந்தது முற்பகல் 11 மணிவரை தான் வேலை செய்வேன் அதன்பிறகு வீட்டுக்குச் சென்று பிள்ளைகளுக்கு சாப்பாடு சமைத்துக் கொடுப்பதில் இருந்து ஏனைய வீட்டு வேலைகளைச் செய்வேன் இன்று பெண்களில் பலர் நாள் முழுவதும் வேலை செய்தாலும் 200 ரூபாவுக்கு மேல் ஊதியம் பெறுவதில்லை. குறைந்த நேரத்தில் கஸ்ரப்பட்டாலும் அதற்கேற்ப ஊதியத்தைப் பெற்று மகிழ்வடையும்.

இந்தப் பெண்மணியின் சுறுசுறுப்பு அவரது வயதுக்கு மீறி நிற்கின்றது.பார்க்கும் பார்வையில் ''அம்மா மீன் வெட்டித் தாங்களேன்'' என்று கேட்கும் அளவிற்கு அவரது சுறுசுறுப்பான வேலை. இன்னும் கொஞ்சம் கூடவாக ஊதியம் பெற்றுக் கொடுக்கும் என்று நானும் சந்தோசப் பட்டுக் கொண்டிருந்தேன். கடல் தாய் இரக்கம் காட்டினால்தான் இவர்கள் இன்றும் உயர்ந்த ஊதியம் பெற வாய்ப்புக் கிடைக்கும் அதனை கடலன்னை செய்வார் என்றே எண்ணுகின்றோம்.

# விதவைக்கு வாழ்வு வாழ்க்கைக்கா...



இழந்த துன்பகள்
துயரங்கள் மறைந்து
மீண்டும் பூத்தது புது வாழ்வு
பெண்ணுக்கு பட்டம்
இரண்டாம் தாரம்
ஆடவனுக்குப் பட்டம்
விதவைக்கு வாழ்வு கொடுத்தவன்
வார்த்தைகள் வருடலாய்
தொடந்தது
பார்வைகள் ஏராளம்
தாரம் மனைவிக்குப் பட்டம்
இறைவன் கொடுத்தது
இதுவென்றால்
இரண்டாம் தாரம் இதற்கும் காரணம்
அவன்தானே.

நிஷா, கொக்குவில்.

# உயிரோடு உருவாகும் உறவை உருக்குலைக்க எண்ணலாமோ...?

இன்றைய நவீன உலகில் அதிகமான குடும்பப் பெண்கள் கர்ப்பந்தரிப்பதைப் பின் போடுவதற்கும், அதனைத் தடுப்பதற்கும் சட்டத்திற்கு முரணான பல்வேறுவிதமான முறைகளைக் கையாண்டு வருகின்றார்கள். இதனால் தமக்கு ஏற்படும் உயிரிழப்புக்களையும் பின் விளைவுகளையும் பற்றி ஒரு நிமிடம் கூட யாரும் சிந்திப்பது கிடையாது என நோக்கும்போது மிகவும் வேதனையளிக்கும் விடயமாகவே இருக்கின்றது. ஒரு பெண் கர்ப்பம் தரித்த பின்னர் அதனைச் அழிக்கவோ அல்லது குழந்தை பிறந்த பின்னர் அதனை வளர்க்கவோ இயலாது என எண்ணும் பட்சத்தில் அந்தக் கருவினை ஒரு மருத்துவருடைய ஆலோசனையுடனும் அதற்கு ஏற்ற பாதுகாப்புடனும் கலைப்பதே மிகவும் சிறந்ததாகும். அது மட்டுமன்றி தாயின் உடல் நலனுக்கும் ஏற்புடையதாகும். இவ்வாறு செய்வதைக்கூட சமூகத்தின் நலனை அல்லது பெண்களின் முன்னேற்றத்தை விரும்பும் எவரும் விரும்ப மாட்டார்கள் என்றே கூறவேண்டும்.

இவற்றையெல்லாம் விட்டுவிட்டுத் தமக்குத் தாமே மருத்துவம் செய்வதன் மூலம் தற்போது பாரதூரமான பல விளைவுகளைச் சந்தித்துக் கொண்டிருக்கும் பெண்களுடன் உயிராபத்துக்களை எதிர்கொள்ளும் பெண்களுமே அதிகமாக இருக்கின்றனர்.

முன்னைய காலங்களில் எமது மூதாதையர்களின் கருக்கலைப்புக்கான கருத்துக்கள் இன்றும் பின் தங்கிய நிலையிலுள்ள கிராமங்களில் கொண்டுதான் இருக்கின்றன. முன்னைய காலத்தில் மருத்துவ உலகம் சற்று பின் தங்கி இருந்த போது கருக்கலைப்புக்கான முறைகளை எமது மூதாதையர் தாமே உருவாக்கி அதனைச் செய்து வந்தார்கள். அதிலும் அதிகமான கருக்கலைப்புக்களை அவர்களும் தவிர்த்தே வந்தனர். ஆனாலும் கால ஓட்டம் மாறமாற அதனால் பெரும் பிரச்சினைகளையும் உயிராபத்துக்களையும் சந்திக்கத் தொடங்கினார்கள்.

ஆனால் இன்றும் நவீனமயமான காலம் தோன்றியும் மருத்துவ வளர்ச்சி அடைந்த பின்னரும் இன்றும் எமது பெண்கள் பின்தங்கி இருப்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாக உள்ளது. இதிலும் கூடுதலாக பெண்கள் தமது கர்ப்பத்தை யாருக்கும் தெரியாமல் வெட்கம் அல்லது பயம் காரணமாகத் தமக்குள்ளே அடக்கி வைத்துக்கொண்டு சட்டத்துக்கு முரணான கருக் கலைப்பில் ஈடுபட்டு வருகின்றார்கள் என்பதை சமுதாயத்தில் உள்ள அனைவரும் புரிந்து கொள்ளவேண்டும்.

இது நாமாகக் கூறும் தகவல் மட்டுமல்ல அண்மையில் யாழ். குடாநாட்டில் நடைபெற்ற வைத்திய ஆய்வுகளின்போது எடுக்கப்பட்ட தகவல்கள். முரணாகத் தானே கருக்கலைப்பில் ஈடுபடும் போது குருதிப்பெருக்கு அதிகமாக ஏற்பட்டு மீண்டும் ஒருமுறை கருவைச் சுமக்க முடியாத நிலைக்கு ஆளாவதுடன் அநாவசியமான உயிரிழப்புக்களைச் சந்திப்பதுதான் வேதனைக்குரிய விடயமாகும்.

இவ்வாறான கருக்கலைப்பைத் தவிர்க்க பெண்கள் விழிப்புணர்வுடன் இருக்கவேண்டியது அவசியமாகும்.

அதுமட்டுமன்றி பெண்கள் தமது கருவைச் சுமக்க இயலாது எனும் பட்சத்தில் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட வைத்தியர்களுடன் தொடர்பு கொண்டு தகுந்த ஆலோசனை களைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுவர்களை காணும் ஏனையவர்கள் உடனடியாக அருகிலுள்ள குடும்பநலத்திட்ட அதிகாரிகளுக்கு தெரியப்படுத்துவதே சிறந்தது.

சஞ்ஜீவன், தெல்லிப்பழை.

# கங்காவின் கடிதங்கள்



என்றும் என் கண்மணிக்கு... உன் பிரச்சினைகளை எனக்கு கூறியிருந்தாய் புரிந்துகொள்ள முடிகிறது நான் கூறுவதையும் கொஞ்சம் கேள். எத்தனை துன்பங்களுக்கும் நெருக்கடிகளுக்கும் மத்தியில் தான் உன்னை நான் உன் கணவனின் கைகளில் கொடுத்தேன்.

வாழ்க்கை என்றால் ஆயிரம் பிரச்சினைகள் இருக்கும். பெண்ணாகப் பிறந்துவிட்டால் எதையும் அனுசரித்து தான் போகவேண்டும். அதற்காக அடிபணிந்து போகவேண்டும் என்பது அர்த்தம் இல்லை.

'கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்' என்று இருந்து விடு என்று நான் ஒருபோதும் சொல்லமாட்டேன். அதற்காக உன் சுயகௌரவத்தையும் நீ எவரிடமும் விட்டுக் கொடுக்கக்கூடாது. அது உன் கணவனாக இருந்தாலும் சரிதான்.உன் கணவனுடன் ஆயிரம் பிரச்சினைகள் உனக்கு வரும். அதை நீ ஒரு பொருட்டாக எண்ணாமல் தனியாக இருக்கும்போது உன் பிரச்சினைகளையும் உன் கணவனின் பிரச்சினைகளையும் மனம் விட்டுப்பேசுங்கள்.

அவைதான் உனக்குத் தீர்வாக அமையும். அதைவிடுத்து நேருக்கு நேர் முகத்துக்கு முகம் முரண்பட்டு விடாதே. இதனால் உங்கள் உறவில் விரிசல் நிலைதான் தோன்றும். நீங்கள் உங்கள் உறவு நிலையில் விரிசல் ஏற்படுவதைச் சிந்திக்கா விட்டாலும் உன் குழந்தைகளுக்காக இருவரும் ஒற்றுமையாக இருந்தேயாக வேண்டும்.

உங்கள் பிள்ளைகள் எதுவும் அறியாத பிஞ்சு உள்ளம் கொண்டவர்கள். நீங்கள் செய்யும் சிறு தவறுகள் அவர்களின் எதிர்காலத்தைக் கேள்விக் குறியாக மாற்றிவிடக்கூடாது.

ஏன் உனக்கே தெரியும் கோரத் தாண்டவமாடிய யுத்தத்தால் எத்தனையோ பிள்ளைகள் அனாதைகளாக்கப்பட்டுள்ளனர். அவர்களின் எதிர்காலம் தான் என்ன என்று எண்ணும்போது என் மனமே வேதனையடைகிறது. உனக்கும் அந்த உணர்வுகள் இருக்கும் என்று நிச்சயமாகத் தெரியும்.

அவ்வாறான ஒரு நிலை உன் பிள்ளைகளுக்கு வேண்டாம். என்ன நான் கூறியது உனக்குப் புரிந்திருக்கும் என்று நினைக்கிறேன்.

இத்துடன் எனது மடலை முடித்துக் கொள்கிறேன். உனக்கு ஏதாவது பிரச்சினைகள் சந்தேககங்கள் இருந்தால் தயங்காமல் நீ என்னிடம் கேள். நான் ஒரு நல்ல பதிலை உனக்காக நிச்சயம் தருவேன்.

அன்புடன்....
கங்கா.

திலகம் பகுதிக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர் திலகம், உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாவலர் பரம்பரையில் நற்றமிழ் ஆசான்



**இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை பிறந்ததினம் நாளை**

வடக்கில் ஒரு பண்டிதமணியையும் கிழக்கில் ஒரு புலவர்மணியையும் உருவாக்கித் தமிழ்கூறும் நல்லுலகுக்கு அளித்த பெருமை நாவலர் பெருமானின் காவிய பாடசாலைக்கு உண்டு.

காலத்தின் தேவையறிந்து இறைவனால் ஈந்தருளப்பட்ட தெய்வத் திருமகன் நாவலர் பெருமான். சைவ சமயத்தையும் அதற்குக் கருவியாகிய தமிழ்மொழியையும் வளர்ப்பதிலும் பேணுவதிலும் கருத்தூன்றித் தமது இம்மைப் பயன்கள் யாவற்றையும் துறந்து பிரம்மச்சரியம் காத்து புரிந்த அவரது தவம் வீணாகவில்லை. இன்று நாம் காணும் சைவப்பாடசாலைகள் சைவ ஆசிரியர்கள், சைவசமய மாணவர்கள் என்றிவைகள் யாவும் அவரின் தவத்தின் பேறேயாம்.

அத்தவத்தின் விசேடம் ஒரு பண்டிதமணியையும் தோற்றம் பெறச்செய்தது. இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை மட்டுவில் சின்னத்தம்பிக்கும் தனங்கிளப்பு வள்ளியம்மைக்கும் சிதம்பர தரிசனத்தின் பேறாக உதயம் செய்த தனிமகன். தன்னிகரில்லாத் தமிழ்மகன். ஆரம்பக் கல்வியை அயலிலுள்ள பாடசாலைகளிலும் ஆசிரியர்களிடமும் கற்று முடித்த பின் பதினெட்டு வயது வரை புராணங்களையும் பிறவற்றையும் கற்றுத் தேர்ந்த கணபதிப்பிள்ளை அவர்கள் நாவலர் காவியபாட சாலைக்குக் கற்பதற்காக வருகைதந்தமை நாமனை வரும் செய்துரு கொண்ட தவமேயாகும். பண்டிதமணிக்கு மாணவர்களாகிய நமது நெஞ்சிலோர் ஆலயம் என்றும் உண்டன்றோ?

1899 ஆம் ஆண்டு ஆனிமாதம் இருபத்தேழாம் திகதி (27.06.1899) தோன்றிய பண்டிதமணி அவர்கள் 13.03. 1986 வரை இப்பூவுலகில் வாழ்ந்துள்ளார். 86 வருடங்கள் 8 மாதங்கள் 16 நாள்கள் அவர் இந்த நிலவுலகில் வாழ்ந் துள்ளார்.

மதுரைத்தமிழ்ச் சங்கப் பண்டிதராகவும், பயிற்றப்பட்ட ஆசிரியராகவும் கற்றுத் தேறிய பண்டிதமணிக்குச் சைவாசிரிய கலாசாலையில் தமிழ் விரிவுரையாளராகப் பதவி கிடைத்தமை நாம் பெற்ற பெரும் பேறேயாம். முப்பது ஆண்டுகாலம் அங்கு கற்பித்து ஆயிரக்கணக்கான மாணவர்களைச் சைவ உலகுக்கு ஈந்த பெரு மகனைத் தமிழ் கூறும் நல்லுலகம் என்றும் மறந்துவிட முடியாது.

சைவா சிரிய பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராக இருந்ததோடு அந்த வளாகத்தில் ஒரு மும்மொழிக் காவிய பாடசாலையையும் வைத்து நடத்தினார். அங்கு கற்றுத்தேறிய பண்டிதர்கள் பலர் இந்த நாடு முழுவதும் சேவை செய்தமையை அனைவரும் அறிவர். நைஷ்டிகப் பிரமச்சரியம் காத்து பேச்சிலும் எழுத்திலும் எண்ணத்திலும் தூய்மை பேணி வாழ்ந்த பண்டிதமணியின் பேச்சைக் கேட்பதற்கும், எழுத்தை வாசிப்பதற்கும் ஓர் இரசிகர் கூட்டம் அன்று யாழ்ப்பாணத்தில் இருந்தது.

நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமேயெனக் கூறும் நக்கீரர் பரம்பரையைச் சேர்ந்தவர் அவர். தமிழ் இலக்கண இலக்கியத்தில் மூழ்கியிருந்த அவரைச் சைவசித்தாந்த உலகுக்கு அழைத்தவர் எங்கள் உப அதிபர் மௌன தவமுனிவர் பொ. கைலாசபதி ஆவார். சைவாசிரிய பயிற்சிக் கலாசாலையில் அன்று பதவி வகித்த அதிபர் மயிலிட்டி சி.சுவாமிநாதன், உப அதிபர் பொ.கைலாசபதி, பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை ஆகிய மூவரையும் மூன்று கண்கள் என கனக. செந்திநாதன் குறிப்பிட்டுள்ளார். பண்டிதமணியைப் பல்வேறு கோணங்களில் பல்வேறு அறிஞர்கள் கண்டுள்ளனர். எல்லாவற்றுக்கும் நிலைக்களனாக விளங்கிய எங்கள் பண்டிதரையா எங்களுக்கு ஞானத்தந்தை, தமிழ்தந்த தாய். அவருடைய கற்பித்தல் உத்தி விமர்சனப் போக்கு வேறுயாரிடமும் காண முடியாத அரும்பெரும் பொக்கிஷம். பண்டிதமணி அவர்களைப் பல பட்டங்கள் தேடிவந்தன. அவற்றுள், இலக்கிய கலாநிதி, பண்டிதமணி என்னும் இரு பட்டங்களும் அவர் பெயருடன் சேர்ந்து சாகாவரம் பெற்று விட்டன.

பண்டிதமணி அவர்கள் ஆயிரத்துக்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதிக் குவித்தார். பத்திரிகையில் அவர் எழுதிய கம்பராமாயணக் காட்சிகள் இராமாயணத்தைச் சமுதாயத்துக்குப் படம் பிடித்துக் காட்டின. அவரது கட்டுரைகள் ஒவ்வொன்றையும் விவரிக்கலாம்.

அந்தக் கட்டுரைகள் சில நூலுருப் பெற்றுவிட்டன. இன்னும் பெற வேண்டியவை பல உள்ளன. பண்டித மணி நூல் வெளியீட்டுச் சபையினர் அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர்.

கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியும் ஐயா அவர்களுக்கு நேரடி மாணவர் பலர். அவரோடு வந்து தங்கி உறவாடிக் கற்ற மாணவர் பலர். ஒன்றாக உலாவிய நண்பர்கள் பலர்.

இவர்களால் அலங்கரிக்கப்பட்ட திருநெல்வேலி கலாசாலை வீதியிலுள்ள பண்டிதமணி இல்லம் அன்று கண்ணுவ ரிஷியின் ஆச்சிரமமன்றோ?. என்றும் எம்நெஞ்சக் கோயிலில் வீற்றிருக்கும் எங்கள் ஞானத் தந்தை பண்டிதரையாவுக்கு இன்று வயது நூற்றுப் பன்னிரண்டு. அவர் நாமம் என்றும் ஒலிக்கட்டும்.

பண்டிதை
திருமதி பொன் பாக்கியம்
( தலைவர், பண்டிதமணி நூல் வெளியீட்டுச் சபை)

# முட்டு, தொய்வைத் தணிக்கும் திப்பிலிப் பொடி

## திப்பிலி

வேறுபெயர் - கோலகம், பிப்பிலி
தாவரவியற் பெயர் - Piper Longum (பைபர் லோங்கம்)
குடும்பம் - Piperaceae (பைபரேசியே)
சிங்களப்பெயர் - திப்பிலி
சமஸ்கிருதப்பெயர் - கங்கு, பிரியங்கு, சியாமா
ஆங்கிலப்பெயர் - Long Pepper.

திரிகடுகத்தில் (சுக்கு, மிளகு, திப்பிலி) ஒன்றான இதில் அரிசித்திப்பிலி, ஆனைத்திப்பிலி என்ற வகைகள் உண்டு. வெற்றிலை, மிளகு, திப்பிலி ஆகிய மூன்றும் ஏறத்தாழ ஒரே மாதிரியானவை. வேர் ஏறிகள். தனி இலைகள் பெரியவை. இருதயவடிவானவை. நுனி கூராக இருக்கும். காய் சற்று நீளமானது. மிளகிலும் பார்க்கக் காரமானது. திப்பிலியைப் பொடி செய்து கடுக்காய்த்தூள் சம அளவில் சேர்த்துத் தேனில் கலந்து காலை, மாலை சாப்பிட்டு வர இருமல், இளைப்பு, முட்டு, தொய்வு என்பன தணிவடையும். திப்பிலிப் பொடியை வெற்றிலைச் சாறும் தேனும் கலந்து சாப்பிட்டு வந்தாலும் மேற்கூறிய நோய்கள் ஆச்சரியப்படத்தக்கவகையில் தணிவடையும்.

திப்பிலிப் பொடியைப் பசும்பாலில் கலக்கிக் குடித்து வந்தால் இருமல், வாய்வு, வயிற்றுப் பொருமல் முதலியன நீங்கும்.



## முடக்கொற்றான்

வேறுபெயர் - உழிஞை, கொற்றான், முடக்கறுத்தான், முடக்கு நீக்கி, முடக்குத்தீர்த்தான்.
தாவரவியற் பெயர் -Cardiospermum helicacabum (காடியோஸ் பேமம் ஹெலிகாகேபம்)
குடும்பம் - Sapindaceae (சபிண்டேசியோ)
சிங்களப் பெயர்-வல்பெனெல்ல
சமஸ்கிருதப் பெயர் - இந்திரவல்லி
ஆங்கிலப் பெயர் - Baloon Vine

பண்டைத் தமிழர் அரணை முற்றுகையிடும் போது முற்றுகைக்கு அறிகுறியாக உழிஞைப் பூவை சூடுவர் என்று சங்க இலக்கிய நூல்கள் கூறுகின்றன. இச்சின்னஞ்சிறு மூலிகைக் கொடிக்கு யுத்தபூமியில் கூட எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள் நம் முன்னோர்?

இது கொடிவகுப்புக்குரியது. கூட்டிலைகள்

**நலம்தரும் தெய்வீக மூலிகைகள்**


சிற்றிலைகளின் நுனி கூர்மையாக இருக்கும். பூக்கள் பொன்மஞ்சள் நிறமானவை.

மெல்லிய காற்றடைத்த முக்கோணவடிவான கனிகள் தந்துகள் மூலம் வேலிகள் பிற தாவரங்களில் பற்றி ஏறும்.

இதன் பெயருக்கேற்ப முடக்கு+அறுத்தான். அதாவது மூட்டுக்களில் ஏற்படும் வாதம், வாத வீக்கம், வலி முதலியவற்றை இது நீக்கவல்லது. இதன் இலை, கொடி, வேர் முதலிய அனைத்துப் பாகங்களையும் எடுத்து குடிநீர் செய்து காலை, மாலை 60 மில்லிலீற்றர் பருகிவர இந்த நோய்கள் படிப்படியாகக் குணங்காணும்.

நாரிப்பிடிப்பு, வயிற்றுப் பொருமல்(வாய்வு) வாய்வுப்பிடிப்பு முதலியவற்றுக்கு முடக்கொற்றான் இலையை மிளகு, சீரகம், பெருங்காயம் சேர்த்து ரசம் வைத்துப் பருகிவர உடன் குணமாகும்.

முடக்கற்றான் இலை, வாதமடக்கி இலை, ஊமத்தை [illegible] என்பவற்றை நெருப்பில் [illegible] வீக்கம் வற்றும். மூட்டுவேதனையும் குறையும்.



## உத்தமாகாணி

வேறுபெயர் - வேலிப்பருத்தி, உத்தாமணி, உத்தம கன்னிகை
தாவரவியற்பெயர் -Daemia extensa (அஸ்கிளிபியேடேசியோ)
சிங்களப் பெயர் -மட்ட ஹங்கு
சமஸ்கிருதப் பெயர் -எலகண்டக

இது கொடிவகுப்புக்குரியது. சுற்றிப்படர்ந்தேறும் தண்டு மெல்லியது,மயிருள்ளது, தனிஇலைகள், இதயவடிவானவை, பூந்துணரில் மஞ்சள் நிறச் சிறுபூக்கள் காணப்படும்.இலையை ஒடித்தால் பால்வரும். இதன் இலையைக் குடிநீரிட்டு 5 மில்லி வரையில் குழந்தைகளுக்குப் புகட்ட மந்தம், வயிற்றுப் பொருமல், செரியாமை நீங்கும். வயிற்றிலுள்ள புழு வெளிப்படும். இலைச்சாற்றையும் சுண்ணாம்பையும் கலந்து மூட்டுவீக்கங்களுக்குப் பூசிவர வீக்கம் வற்றும். உத்தமா கணி இலைச்சாற்றுடன் சிறிதளவு உப்பும், வசம்புசுட்ட கரியும் சேர்த்து சுண்டக் காய்ச்சி அதில் 5 மில்லிலீற்றர் அளவில் எடுத்து வெந்நீர் கலந்து வயிற்றுப் பாரம், மூல வாயு, செரியாமை, மாந்தம் முதலிய நோய்களுக்குக் கொடுக்கலாம்.

(தொடரும்...)



Dr. சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத் துறை, யாழ்.பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 168

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | 5 | 6 | |
| 7 | | | | | 8 | | |
| | | 9 | | | | 10 | 11 |
| | 12 | | | | 13 | | |
| 14 | | | | 15 | | | |
| | | 16 | 17 | | | 18 | |
| 19 | 20 | | | | 21 | | 22 |
| 23 | | | | 24 | | | |

அனுப்புபவர் பெயர்:........................................................

விலாசம்:........................................................

........................................................

கையொப்பம்:........................................................

### இடமிருந்து வலம்

1. ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்று
7.உருவம்
8.ஒரு தானியம்
9.ஒரேயளவு அல்லது ஒன்றுக்கொன்று பொருந்தும் என்பதைக் குறிப்பது.
10.இர/பிச்சை எடு
12.ஏற்புடையது
13.யாகம்
14.மாறான தன்மை
15.விடிவது
16.குண்டு வெடிப்பது இப்படி
19.புலவன்
21.அருந்தி/ குடித்து
23.திடீரென
24.புத்தியற்றவன்.

### மேலிருந்து கீழ்

1.கள் இறக்கும் தொழிலை இப்படி அழைப்பர்
2.சட்ட ரீதியான மதுவை விட இதற்குத் தான் கிராக்கி
3.கர்ணன் பிறந்தது இவற்றுடன்.
4.சிங்கம்
5.செவிலி/ உதவி செய்யும் பெண்.
6.இல்லாள்
11.தண்டிகை
12.பெருக்கல் குறி
13.தொழில்
14.பின் அரைவாசி அல்ல.
15.கருமை/ இருள்
17.காட்டுமிருகம்
18.நீர்வீழ்ச்சி
20.தழும்பு
21.வலைஞன் வைத்திருக்கும் பை
22.அச்சம் / பயம்

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக் கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 166 இற்கான சரியான விடைகள் வருமாறு:

### இடமிருந்து வலம்

(1)சுசந்திகா (5)சதா (7)வைகோ. (8)கண்காட்சி. (10)தகுதி (12)வட. (13) அரனி. (14)சிலம்பு (16)தின். (17)அவன். (18)பாரும். (19) நாதி. (20) தியாகம். (22)அம்மா. (23)துன்புறல்.

### மேலிருந்து கீழ்

(1)சுவை (2)சகோதரன். (3)திகதி. (4)காண் (5)சட்டம் (6)தாசி (9)காவலன். (11)குளி (13)அதிபதி (14)சிவம் (15) புத்திமான் (17)அரும்பு (18)பாகன் (19)நாம். (21)யாது. (22)அல்.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 166 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** த.கவின், மு.ஐயன் கருக்குளம், அ.த.க.பா. புத்துவெட்டுவான்.

**2 ஆம் பரிசு** திருமதி ச.சந்திரராசா, பறாளாய் வீதி, சுழிபுரம்.

**3 ஆம் பரிசு** வ.இரத்தினசிங்கம், கம்பர்மலை, வல்வெட்டித்துறை.

**4 ஆம் பரிசு** கா.வேலுப்பிள்ளை, 407.ஹொறவப்பொத்தான வீதி, இறம்பைக்குளம்.

**5 ஆம் பரிசு** திருமதி ச.பாலசுந்தரம், தாதிய சகோதரி, நீரிழிவு நிலையம், போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்.

### பாராட்டுப் பெறுவோர்

**ஸ்ரனிஸ்லாஸ் மரிய வொறின்டா,**
புனர்வாழ்வு நிலையம், பூந்தோட்டம், வவுனியா.

**எஸ்.சம்பூரணி**
அரசடி ஒழுங்கை, வட்டுத் தெற்கு, வட்டுக்கோட்டை.

**திருமதி பா.நவநீதா,**
கவியரசன் அழகுமாடம், பருத்தித்துறை வீதி, புத்தூர்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங் களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 168**
நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன் கிழமைக்கு முன்னர், 06.07.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப் படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.168 க்கான விடைகள் 10-07-2011 ஞாயிறு உதயனில் ஞாயிறு உதயனில் பிரசுரமாகும்.

# விலகாத...

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாணிக்கு அவள் அப்பாவே கண்முன் தோன்றுவார். ''வாணி! நான் எதிர்பார்த்துத்தான் உமக்கு உதவி னான் என்று நினைக்காதையும் ...... உம்மளப் பிடிச்சிருக்கு அதுதான் கேட்கிறன். நீர் உடனே சொல்ல வேண்டும் என்றில்லை, வடிவா யோசிச்சு முடிவெடும். நான் என்னுடைய விருப்பத்தைச் சொன்னன்! ''

அவன் கேட்டதன் பின் அவளுக்கு அவனுடன் கதைப்பதற்கே அச்சமாக இருந்தது. வீட்டுக்குத் தெரிந்தால் நிலைமை என்னாகும் என அவள் முற்கூட்டியே ஊகித்திருந்தாள்.

''ராகுலன் இது நான் தனிச்சு எடுக்கிற முடிவு இல்ல. நீர் வேணுமென்றால் வீட்ட வந்து கதையும்'' அவள் முடிந்த முடிவாக அவனுக்குக் கூறிவிட்டாள்.

வாணி கூறிய கூற்றினால் அவன் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

''உம்மட அப்பா எவ்வளவு பெருமைப்படுவார் பாரும். தன்னுடைய மகளைத்தேடி வலிய வந்திற்றினம் என்று..

''பாவம் என்ன நடக்கப் போகுதோ'' என்று வாணி உள்ளுக்குள் வேதனைப்பட்டுக் கொண்டாள்.

ராகுலன் வாணியின் தந்தையிடம் சென்று கேட்பதற்கிடையில் பக்கத்து அறையில் இருந்து எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த காந்திமதியினால் பரப்பப்பட்ட கதை தந்தையின் செவிகளில் எட்ட ராகுலன் மீது மக்கள் குழுமியிருந்த அந்தத் தெருவில் வைத்து தன் கோளைத் தனத்தை அரங்கேற்றிய கையோடுதான் வீட்டுக்கு வந்தவர் வாணியைக் கண்டதும் அடுத்த கட்ட ஆக்ரோஷத்தை அவளில் வெளிப்படுத்தினார்.

''அவன் ஆரெண்டு தெரியுமாடி? உன்னை வேலைக்குப் போகவிட்டதா? குடும்பம் நடத்த விட்டதா?''

சாதி, மதம் என்ற வெறியோடு வாழ்ந்து வரும் நாகராசாவின் முன் வாணி எது சொல்லியும் எடுபடாமல் போனது. அவள் எடுத்த ஒரே முடிவு வேலைக்குப் போவதில்லையென்பதே.

வாணி தன் உள்ளத்தில் உறுத்திக் கொண்டிருப்பதை எப்படியும் யாரிடமாவது கூறவேண்டும் போலிருந்தது. அம்மாவிடம் தானே மனம் விட்டுப் பேசலாம். ''அம்மா! நாங்க அப்படி ஒன்றும் ஊர் சுற்றித்திரி யேல்ல ராகுலன் கேட்டவர்தான் நான் உள்ளதைச் சொன்னதும் வீட்ட வந்து கேக்கிறன் என்றுதான் சொன்னவர்''

''அப்பாவைப் பற்றி தெரிஞ்சும் அவன் கேக்கப் போறன் என்றிருக்கிறானே'' ''என்னம்மா! ஒரு மனுசருக்கு தங்களுடைய விருப்பத்தை இன்னொருவரோட சொல்லுறதுக்கு உரிமை இல்லையெண் டால் இதென்னம்மா உலகம்'' என்னைக் கூட்டிக் கொண்டு போறென்றா சொன்னவர் அப்பாவிடம் விருப்பம் கேட்கத்தானே இருந்தவர்''

வாணிக்கு தன்னுள் இருந்த பெரும் மூடையை அவிழ்த்து வைத்தது போன்ற பெரும் நிம்மதி.

இன்று நான்கு வருடங்கள் உருண்டோடிவிட்டன. இன்னும் குறிப்புச் சரிவரப் பொருந்தாததால் வெறுப்பின் விளிம்பு நிலையில் நின்ற நாகராசா அன்றைய நிலையை இப்போது நினைத்துப் பார்க்கிறாரென்றால் அவர் திருந்திவிட்டார் என்று தான் எண்ணவேண்டும்.

அவரின் உள்ளத்தை உணர்ந்து கொண்டதைப் போலவே, காமாட்சியும் அவனை விசாரிக்கும்படி கூறினாள். மீண்டும் மதியமளவில் வெளியில் சென்று வந்த நாகராசா ஒன்றும் கூறாது தலையைக் குனிந்தவாறே இருந்ததைக் கண்டதும் இவளுக்குக் கோபம் அதிகரிக்க

''வலிய வந்ததுகளை றோட்டில் வைச்சு அனுப்பிய உங்களுக்கு இன்னும் எத்தின காலம் இதோட திரியப் போறியளோ? மற்றவளுக்கும் வயசு வந்திற்றுது. ரெண்டு குறிப்பையும் ஒண்றாக் கொண்டு திரியுங்கோ, சமூகத்துக்கு உபதேசம் சொல்லுற உங்களுக்கு, இந்த சாதி, மதத்தை விட வேணுமென்ற புத்தி இன்னும் வரேல்ல. அவனவன் என்னென்னமோ கண்டுபிடிக்கிறான். நீங்கள் இன்னும் எத்தின சாதி கண்டுபிடிக்கலாம் என்ற நினைப்பில இப்ப ஆரேன் இதுகள பெரிசாப் பார்க்கினமே. எங்கையோ, உத்தியோகமும் காசும் இருந்தாச் சரி என்று இண்டைக்குச் சனம்.

உங்கள மாதிரிச் சில பேர் கதைக்கிறதுக் கென்றே இருப்பினம். எங்க அவையள் ஒரு மாப்பிளையைத் தருகினமே அப்படிப்போனா நாலுகதை; இப்படிப் போனா நாலுகதை, கதைக்கிற நாக்குக்குத்தான் நரம்பில்லையெண்டால், கேக்கிற காதுக்குமா நரம்பில்லை''.

குட்டிப் பிரசங்கமே வைத்து முடித்தவள் கணவனுக்கு அருகில் வந்து வினவ முதல் நாகராசாவே கூறினார்.

பெடியனுக்கு முற்றாகிற்றுதாம் அவனுக்கு விருப்பமில்ல. நல்ல சீதனம் வந்தாப் போல...தாய், தகப்பன் பிடிவாதமா இருந்திற்றினமாம்....

''பேசினது ஆராக்களெண்டு தெரியுமோ? எப்படிக் கூறுவதென்று தெரியாமல் பிசகிக் கொண்டு நின்ற நாகராசாவின் பதிலை ஆவலுடன் எதிர்பார்த்தாள் காமாட்சி.

''என்னப்பா ஆராக்கள்?''

''எங்கட மாணிக்கத்தின்ர ரெண்டாவதுக்காம்''

''பாருங்கோ! அதுகளுக்கு பிள்ளையளின்ர வாழ்க்கைதான் பெரிசு. அந்த நாளேல ஐயோ வீட்டுக் கேற்றுக்கும் எடுக்காதவன் ரெண்டு வருஷம் லண்டனில போயிருந்ததோடு திருந்தீற்றான்''

நீங்கள் இப்படியே நாலுசனம் என்ன சொல்லும் என்று குட்டிச்சுவராகிக் கொண்டு, பொம்பிளப் பிள்ளையளின்ர வாழ்க்கையில மண்ணள்ளிப் போட்டுக் கொண்டு இருங்கோ.

வெந்த புண்ணில வேல் பாய்ச்சிய நிலையில் காமாட்சி இத்தனை காலமும் தான் வாய் திறக்காமல் இருந்ததன் விளைவை உணர்ந்தவளாகக் கூறிக்கொண்டிருந்தவள்;

''என்னப்பா, சொல்லுறனென்று கோவிக்காதேங்கோ, தெரியாத மாதிரி, ஆரேன் புறோக்கர விட்டு விசாரிச்சுப் பார்த்... அவள் கூறிமுடிக்க முன்னரே ''புரோக்கரிட்டயும் சொல்லீற்றேன் பெடியனோட என்னெண்டு கதைக்கிறது அவனோட நான் கதைக்கேல்ல....'' மனம் துன்புற்றது.

எல்லாவற்றையும் அறையில் இருந்து கேட்டுக் கொண்டிருந்த வாணிக்கு, ஜன்னலூடாக வீசிய இந்த இளந்தென்றல் பல இனிய நினைவுகளைப் பரிசளித்துச் சென்றது.

அகம்பாவத்தால் ராகுலனை ஏசிக் கண்டித்ததை நினைத்து முகட்டை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்த நாகராசா ஏதோ ஒரு துணிவோடு திடீரென எழுந்தார். அனுபவமே நிறைந்த பாடங்களாக அவர் தனது வீட்டுப் படலையை நோக்கி நடந்தார். அங்கே எதிரில் ராகுலனைக் கண்ட நாகராசா ஒரு கணம் அவனை ஆச்சரியத்தோடு பார்த்தார்.

ராகுலனின் புன்னகை வாணி மீது அவன் கொண்டிருந்த அன்பின் வெளிச்சமாக ஒளிர்ந்தது. யன்னலினூடாக வாணியின் முகம் தெரிந்தது. நாகராசா தனது அகம்பாவத்தின் அர்த்தம் புரியாமல் அங்கலாய் தார். அன்பு கொண்ட நெஞ்சங்கள் அகலா. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 24

# வாழ்நாள் முழுவதும் எமது பற்களைப் பாதுகாப்போம்

ஏன் எங்களுக்கு வாழ்நாள் முழுவதும் பற்கள் தேவை?

* உணவை அரைத்துச் சாப்பிடுவதற்கு.
* சொற்களைச் சரியாக உச்சரிப்பதற்கு.
* பற்சூத்தை, பற்சிதைவால் அதிக வேதனை ஏற்படுவதுடன் ஏனைய உறுப்புக்களிலும் நோய் ஏற்படும் என்பதனால்.
* முகத்தின் வசீகரமான தோற்றத்துக்கு.

### பிரதான பற் சுகாதாரப் பிரச்சனைகள்

பற்சூத்தை, முரசு நோய்கள், பற்காவி, தவறி விழுந்து பல் உடைதல், ஒழுங்கற்ற பல் வரிசை.

### பற்சூத்தை

உணவு உட்கொண்ட பின் பற்களை உரிய முறையில் சுத்தம் செய்யாவிட்டால் பற்களில் தங்கி இருக்கும் மாச்சத்து உணவுத் துணிக்கைகளும் (Starch) இனிப்பு வகைகளும் 10 நிமிடங்களில் வாயினுள் உள்ள பக்ரீரியா கிருமித் தாக்கத்துக்கு உள்ளாகி அமிலம் தோன்றும்.

இந்த அமிலம் பல் மிளிரியின் வழமையான அமைப்பை அழிப்பதால் பற்சூத்தை ஏற்படுகின்றது.

### பற்சூத்தையின்போது பல்லில் ஏற்படும் மாற்றங்கள்

ஆரம்பத்தில் பல்லில் கறுப்பு நிறபுள்ளி தோன்றும் சூடான அல்லது குளிரான உணவுகளை உட்கொள்ளும் போது பல்லில் கூச்சம் ஏற்படும்

பின்னர் அந்தப் புள்ளி உள்ள இடத்தில் அரிப்பு ஏற்பட்டு துவாரம் ஏற்படும்.தொடர்ந்து பல்லில் நோவு ஏற்படும். இறுதியில் பல்லில் தாங்கமுடியாத வலி ஏற்படும்.

### பற்சூத்தையை கட்டுப்படுத்தல்

ஆரம்பத்திலேயே இனங்கண்டு ஒழுங்காக பல் துலக்குவதன்மூலம் கட்டுப்படுத்த முடியும். முக்கியமாக இரவு உணவு எடுத்த பின்னர் இனிப்பான, ஒட்டும் தன்மையுள்ள உணவுகளைத் தவிர்த்தல்- இனிப்பான உணவு வகைகளைப் பிரதான சாப்பாட்டு வேளையின் பின் மாத்திரம் உட்கொள்ளுதல்.

உணவு உட்கொண்டபின் வாயை நன்றாகச் சுத்தப்படுத்துதல்.

பற்சூத்தை ஏற்பட்ட பல்லை மேலும் பரவாது அடைத்தல்.

ஆறுமாதங்களுக்கு ஒரு தடவையேனும் பல் வைத்தியரின் ஆலோசனை பெறுதல்.

### முரசு வியாதி

பற்களைச் சரியான முறையில் துலக்காது விடும் போது பற்களுக்கும் முரசுக்கும் இடையில் படியும் பற்தாதிலுள்ள (பிளாக்) கிருமிகளின் தாக்கத்தால் முரசு வியாதி ஏற்படுகிறது. பற்தாது நீண்டகாலமாக அகற்றப்படாதவிடத்து கடினமாகிப் பற்காறையாக மாறுகிறது (Tartar)

### முரசு நோய்களின் அறிகுறிகளாகப் பின்வருவன ஏற்படும்

வாய்த் துர்நாற்றம்,முரசிலிருந்து ரத்தம் கசிதல்,முரசு கரைதல், முரசின் விளிம்பு பகுதி வீங்கி முரசு கடும் சிவப்பு நிறமாதல்

### பற்களைச் சரியான முறையில் துலக்குதல்

பற்தூரிகை,புளோரைட் அடங்கிய பற்பசை கொண்டு சரியான முறையில் காலையிலும், இரவு உணவு உட்கொண்டவுடனும் பற்களைத் துலக்குங்கள்.

மேற்தாடை, கீழ்த் தாடையிலுள்ள அனைத்துப் பற்களினதும் வெளிப்புறம், உட்புறம், மேற்புறம் ஆகிய பகுதிகளை ஈறுகளின் தசையில் சுத்தம் செய்யுங்கள். பற்களும் முரசும் சந்திக்குமிடத்தைக் குறைவான அழுத்தத்தைப் பிரயோகித்துச் சுத்தம் செய்யுங்கள்.

நாக்கையும் குறைவான அழுத்தத்தைப் பிரயோகித்துச் சுத்தம் செய்யுங்கள்



**Dr. டேவிட், பல்வைத்திய நிபுணர், ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி.**

# மதம் ஒரு மருத்துவப் பெருஞ்சுடர் 9

நவீன மருத்துவத்துறையிலே நோயை சுகப்படுத்துவதற்கான அடிப்படை தத்துவங்களாக என்ன சொல்லப்பட்டிருக்கின்றன எனப் பார்ப்போமாயின்-

1.என்ன நோய் இருக்கிறது என்பதை அறிகுறிகளிலிருந்தும் சோதனைகளில் இருந்தும் அறிந்து கொள்ளுதல்.

2.நோய் ஏற்பட்டதற்கான அடிப்படைக் காரணங்களைக் கண்டறிந்து கொள்ளுதல்.

3.இவை அனைத்தையும் கருத்தில் எடுத்து நோயாளிக்கு பொருத்தமான சிகிச்சை முறைகளைத் தெரிவுசெய்து வழங்குதல்.

இந்த நவீன மருத்துவத்தின் சிகிச்சை முறையின் தத்துவத்தைப் பல்லாயிரக் கணக்கான வருடங்களுக்கு முன் திருவள்ளுவர் தனது திருக்குறளில் ஆணித்தரமாக வலியுறுத்தி இருக்கிறார்.

*''நோய்நாடி நோய்முதல்நாடி*
*அதுதணிக்கும்*
*வாய்நாடி வாய்ப்பச்செயல்''*

என்று செல்லியிருக்கிறார்.

அதாவது நோயை அதன் குணம் குறிகளிலிருந்து அறிந்து அது ஏற்பட்டதற்கான காரணத்தையும் அறிந்து எல்லாவற்றையும் தீர்ப்பதற்கான உபாயங்களையும் அறிந்து மருத்துவம் செய்தல் வேண்டும் என்று சொல்லியிருக்கிறார். இவருக்கு அன்றே இதைச் சொல்லிக்கொடுத்தவர் யார்?

திருமூலர் தனது திருமந்திரத்தில் மொத்த மனிதனையே மதத்தின் அத்திபாரமாக வைத்துப் பாடிருக்கிறார்.

*''உள்ளம் பெருங்கோயில் ஊன் உடம்பு*
*ஆலயம்*
*வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்*
*தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்*
*கள்ளப் புலனைந்தும் காளா*
*மணிவிளக்கே''*

ஒருவரின் உடலும் உள்ளமும்தான் அவனது உண்மையான கோயில். அதனை சிறப்பாகப் பராமரிக்க வேண்டியதே ஒவ்வொருவரினதும் முதற் கடமையாகும். இதனைச் சரிவர செய்துவந்தால் நாம் பல நோய்களிலிருந்தும் துன்பங்களிலிருந்தும் காப்பாற்றப்படுவோம். ஒருவனுடைய உயிரே அவனின் கடவுள்.(சீவன் சிவலிங்கம்)என்று திருமூலர் அழகாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

ஒருவர் தனது மனச்சாட்சிக்கு விரோதமான காரியங்களைச் செய்தல் கூடாது. அவ்வாறு செய்தால் அது நம்மை கடுமையான நோயாளி ஆக்கிவிடும் என்ற உண்மையை வள்ளுவர் மிகவும் அழகாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

*''தன்நெஞ்சறிவது பொய்யற்க*
*பொய்த்தபின்*
*தன்நெஞ்சே தன்னைச்சுடும்''*

இவ்வாறாகப் பல அரிய மருத்துவக் கருத்துக்களைக் கூறும் மதநூல்களிலிருந்து அதிகூடிய பயன்களை மக்கள் பெற்றுக் கொள்வதற்கு இக்கருத்துக்கள் மேலும் மெருகேற்றப்பட வேண்டும். இந்த நூல்களில் இருக்கும் காலத்துக்கு ஒவ்வாத கருத்துக்களின் முக்கியத்துவம் குறைக்கப்பட வேண்டும். மதக் கருத்துக்கள் மக்களின் பகுத்தறிவுக்கு விளங்கக் கூடிய வடிவத்துக்கு மாற்றப்பட வேண்டும். இதன் மூலம் எமது அடுத்த சந்ததியினருக்கு மதங்களில் இருக்கும் நம்பிக்கையை அதிகரிக்கச் செய்து அவர்களை நல் வழிப்படுத்தவும் முடியும்.

*மதம் ஒரு மருத்துவப் பெருஞ்சுடர் என்ற இந்தத் தொடர் கட்டுரையின் கருத்தோட்டங்களுடன் நீங்கள் பூரணமாக உடன்பட்டால் "A" எனவும் ஓரளவு உடன்பாட்டால் "B" எனவும் உடன்படவில்லை எனில் "C" எனவும் இக்கருத்துக்களை எதிர்ப்பதாயின் "D" எனவும் ரைப் செய்து 0773604094 என்ற இலக்கத்துக்கு SMS செய்துவிடுங்கள்.*

**சி.சிவன்சுதன்,**
**வைத்திய நிபுணர்,**
**யாழ்.போதனா வைத்தியசாலை.**

### இதுவரை கிடைக்கப்பெற்ற SMS முடிவுகள்

| | | |
|---|---|---|
| 'A' | 78 பேர் | 91.7% |
| 'B' | 4 பேர் | 4.7% |
| 'C' | 1 பேர் | 0.01% |
| 'D' | 3 பேர் | 3.52% |

# உடல் மெலிவாகக் குருக்கக் காரணம்

கே: சிலர் அடிக்கடி தடிமனால் பாதிக்கப்பட்டு, தும்மல், மூக்கிலிருந்து நீர்வடிதல் என்பவற்றால் அவஸ்தைப்படுகிறார்கள். இதற்கு என்ன காரணம்? இதை எவ்வாறு தடுக்கலாம்?

**கி.மோகன், கரவெட்டி, வயது 32.**

ப:இந்த அறிகுறிகளுக்கு ஒவ்வாமையால் சுவாசப்பாதை யில் ஏற்படும் அழற்சியே காரணமாகும். இதை ஆங்கிலத்தில் Allergic Rhinitis என்பர். இது கிருமித் தொற்றினால் ஏற்படும் நோய் அல்ல . தூசு மற்றும் காற்றில் கலந்துள்ள மகரந்த மணி என்பன சுவாசப் பாதையைத் தூண்டி சில இரசாயனப் பதார்த்தங்களை உற்பத்தி செய்வதால் ஏற்படுகின்றது. இதனால் அரிப்பு,வீக்கம், மூக்கிலிருந்து நீர் வடிதல், கண்கள் வீங்கி சிவத்தல்,மூக்கடைப்பு என்பன ஏற்படுகின்றன.

குறித்த ஒரு நபருக்குச் சில பொருள்கள் ஒவ்வாமையை ஏற்படுத்தும். அவற்றைக் கண்டறிந்து தவிர்ப்பதே இந்த நிலை ஏற்படுவதைத் தடுக்கும் வழியாகும். சிலருக்குக் காலநிலை மாறுபாட்டின் போதும் இவ்வாறு ஏற்படலாம். இதனைத் தவிர்க்க முடியாதவர்கள் மருந்துகளை குளிகைகளாகவோ அல்லது நாசியினுள் விசிறியோ (Nasal spray) உள் எடுக்கலாம். உதாரணமாக Diphenhydranine, Cetriazine மற்றும் Loratidine. என்பனவாகும் இதில் முதலில் கூறியது நித்திரையைக் கூட்டும் என்பதனால் பின்னைய இரு மருந்துகளை பகல் வேளைகளில் பாவிக்க முடியும். அவ்வாறு பாவிக்க வேண்டியவர்கள் வைத்திய ஆலோசனையின் பின்னரே எடுக்க வேண்டும்.

கே: எனது உடல் தொடர்ந்தும் மெலிவாகவே இருக்கின்றது. எவ்வளவுதான் சத்தான உணவுகளை எடுத்தாலும் பயனில்லை. தயவு செய்து எனது உடல் குண்டாக மாறுவதற்கு ஒரு யோசனை கூறுங்கள்.

**வே.மாலதி, வயது 40, கொடிகாமம்.**

ப: முதலில் நீங்கள் எப்பொழுதும் மெலிவானவரா அல்லது உங்கள் நிறை அண்மைக் காலமாக குறைவடைந்து செல்கின்றதா என அறிய வேண்டும்.

நிறை குறைவதற்கு சில நோய் நிலைமைகளும் காரணமாகலாம் உதாரணமாக தைரொக்சின் சுரப்பி அதிகமாக இருத்தல், உணவு அகத்துறிஞ்சல் குறைவாகவுள்ள நோய்கள், அனுசேபத் தொழிற்பாடுகளில் குறைவுள்ள நோய்கள் இவ்வாறான நோய்கள் இல்லை என உறுதிப்படுத்திய பின்பு உங்கள் நிறையை அதிகரிக்கும் முயற்சிகளில் இறங்கலாம். நோய்கள் இல்லாத நிலையில் ஒருவரின் நிறை குறைவாக அமைவதற்குப் பின்வரும் காரணிகள் ஏதுவாகலாம்.

பரம்பரைக் காரணி, உணவின் தரம் குறைவாக இருத் தல், உண்ணும் பழக்கத்தில் குறைபாடு இருத்தல்.

கீழ்வருவன உங்கள் நிறையை அதிகரிப்பதற்கு உதவலாம்

1.காலை உணவை நேரத்துக்கு உண்ணல் (உ+ம் 7 மணி)

2.இரவு உணவை நேரந்தள்ளி உண்ணல் (உ+ம் 10 மணி)

3.உணவுக்கு முன் பால் மற்றும் தேநீர் அருந்துவதை தவிர்த்தல்

4.மூன்று வேளை பிரதான உணவிலும் கலோரி நிறைந்த உணவுகளை சேர்க்கவும்.

(உ+ம் - பயறு சேர்ந்த பாற்சோறு- காலை உணவு )

5. முற்பகல் 10 மணி, பிற்பகல் 4 மணி ஆகிய வேளைக ளிலும் உணவு உட்கொள்ளும் பழகத்தை ஏற்படுத்தவும்.

உ+ம்- பாலும், கலோரி கூடிய பிஸ்கட்டுகளும்

6 . உங்கள் நிறையை 2 கிழமைகளுக்கு ஒருமுறை அளக்கவும். இவற்றை முயற்சி செய்து பார்த்தபின்பு உங்கள் நிறை குறைந்து கொண்டு சென்றால் வைத்திய ஆலோசனையை மீண்டும் நாட வேண்டும்.

**Dr. திருமதி பி.செல்வகரன்,**
நீரிழிவு சிகிச்சை நிலையம், யாழ்.போதனா வைத்தியசாலை.

*உதயனின் இந்த வைத்திய மலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவினால் தொகுத்து வழங்கப்படுகிறது. மலர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி... **நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்திய சாலை, [illegible]** என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். உங்கள் வினாக்களும் [illegible] பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
26 ஜூன் 2011 ஞாயிற்றுக்கிழமை

# கொஞ்சம்... கொஞ்சமாக... உயிரைக் கொல்லும்...

**இன்று உலக நல்லொழுக்க தினம்**

**யாழ்.** குடாநாட்டில் மது பாவனை அதிகரித்துச் செல்கின்றது என்று பலரும் சொல்கிறார்கள். இளைஞர்கள்- மாணவர்கள் சிலர் எப்படியோ, நண்பர்களின் தூண்டுதலாலோ சம வயதுக் குழுவினரின் அழுத்தங்களாலோ மெல்லக் குடிக்க ஆரம்பிக்கின்றனர். பின்னர் மதுவின் வகைகளிலும் பாவனையிலும் பெரும் அதிகரிப்பு ஏற்பட்டு மனித குலம் மதுவுக்கு அடிமையாகி அழிவுப் பாதையில் செல்ல ஆரம்பிக்கிறது.

மது அருந்தியவுடனேயே இரைப்பை மூலமும் சிறுகுடல் மூலமும் மிக எளிதாகவும் விரைவாகவும் உறிஞ்சப்பட்டு குருதிச் சுற்றோட்டம் மூலம் உடலின் எல்லாப் பாகங்களுக்கும் எடுத்துச் செல்லப்பட்டுவிடும்.

மதுவின் வகை, அதன் தன்மை, உள்ளெடுக்கும் அளவு, நேரம் என்பவற்றைப் பொறுத்து மனிதனில் அது ஏற்படுத்தும் விளைவுகள் இருக்கும். மனிதனின் மூளையே ஏனைய உறுப்புகளைப் பார்க்கிலும் அதிகளவில் மதுவால் பாதிக்கப்படுகின்றது. 50 மில்லிகிராம் அளவில் மது குருதியில் இருக்கும் போது மனோநிலையிலும் நடத்தையிலும் மாற்றம் ஏற்படத் தொடங்கும். மனத் தடைகள், கூச்ச சுபாவம் நீங்கிவிடும்.

குருதியில் மதுவின் அளவு அதிகரிக்க மூளையின் செயற்பாடு மேலும் பாதிக்கப்படும். இதனால் வாகனம் செலுத்தும் திறமையும் பாதிக்கப்படுகிறது.

மது அதிகரிக்க அதிகரிக்க

* தீர்மானம் எடுக்கும் திறமை பாதிக்கப்படும்.
* தலைச்சுற்று ஏற்படும்.
* பார்வை மங்குதல், ஒழுங்கற்ற சிந்தனை.
* பலத்துச் சத்தம் போட்டுக் கதைத்தல்.
* தன்னால் எல்லாம் முடியும் என்று சவால் விடுவர்.
* பொருள்கள் இரண்டாகத்தெரியும்.
* உச்சரிப்பில் தெளிவின்மை.
* நடையில் தள்ளாட்டம்.
* மயக்கநிலை.
* அறிவற்றநிலை; கட்டுப்பாடு அற்று சிறுநீர் கழித்தல்.

மது 500 மில்லிகிராமுக்கு மேல் தொடர்ந்து எடுத்தால் அறிவற்ற நிலை நீண்டு சுவாசம் பாதிக்கப்பட்டு மரணம் சம்பவிக்கலாம்.

அற்ககோல் மெல்ல மனிதனைக் கொல்லும் ஆட்கொல்லி நஞ்சாகும். கொஞ்சம் குடித்தால் என்ன என்று பலரும் கேட்பார்கள். கொஞ்சம் கொஞ்சமாக மரணத்துக்கு இட்டுச்செல்வதே அது.

மதுவால் மிகவும் பாதிக்கப்படுகின்ற இன்னொரு உறுப்பு ஈரல் ஆகும். அதிக மதுவால் ஈரலில் சிரோசிஸ் எனப்படும் நோய் ஏற்படுகிறது. இதில் ஈரல் சுருங்கி கடினமாகித் தனது செயற்பாடுகளை மெல்ல மெல்ல இழக்கும். இந்த சிரோசிஸ் என்னும் நோயால் உலகில் அதிக மரணங்கள் ஏற்படுகின்றன.

மதுவால் உடல் பாதிப்புக்களோடு பல விதமான உளப் பாதிப்புக்களும் ஏற்படுகின்றன. ஆரம்பத்தில் மது மனக் கவலையை மாற்றுவது போலிருக்கும். காலப்போக்கில் மதுவுக்கு உடல் பழக்கப்பட்டுவிட அதிக அளவு மதுவை எடுக்கவேண்டி ஏற்படுகிறது.

இந்த நிலை தொடரும்போது முன்னைய நோக்கங்கள் இல்லாமற்போக மனக்கவலை அதிகரிக்கும். அதிக மது நரம்புத் தொகுதியைப் பாதித்து சோர்வடையச் செய்யும்; மனோநிலையும் சோர்வடையும். இதன் விளைவாக சந்தேகம், துக்கம், விரக்தி, பயம் போன்றவை ஏற்படும். கடைசியில் மனம் பாதிக்கப்பட்டு மனநோயாளி ஆகிவிடும் சந்தர்ப்பங்கள் அதிகம். சிலர் தற்கொலை எண்ணமுடையவர்களாகவும் காணப்படுவர்.

இன்று உலக நல்லொழுக்க தினமாகும். இங்கு 'நல்லொழுக்கம்' என்பது குடி, போதைவஸ்த்து அற்றநிலையாகும். குடிக்க ஆரம்பித்துவிட்ட இளைஞர்களும், குடிக்கு அடிமையாகியுள்ள மற்றையோரும், குடியை எப்படியாவது இன்றிலிருந்து விட்டுவிடவேண்டும் என்று தீர்மானமெடுத்துக்கொள்ள வேண்டும். அதனை என்றும் காப்பாற்ற வேண்டும்.

குடும்பத்தில் மனைவி குடிக்கு அடிமையாகிவிட்ட கணவரை அதிலிருந்து மீட்க உதவவேண்டும். வீண் வாய்த் தர்க்கங்களில் ஈடுபடாமல் நல்லாதரவுடன் குடியை விடுவதற்கு வழிகாட்ட வேண்டும். தகுந்த வைத்தியரை, உள மருத்துவ நிபுணரைச் சந்தித்து அவரது ஆலோசனையுடன் தொடர்ந்து முயன்று குடியின் அடிமை நிலையிலிருந்து மீளலாம்.

இளைஞர்கள் ஆரம்பத்திலிருந்தே பாவிக்காமல் இருக்க, போதிய மது பற்றிய - அதன் தீமைகள் பற்றிய- தகவல்கள் தெரிந்தவர்களாக இருக்கவேண்டும். அவர்களுக்கு அந்த விழிப்புணர்வு கொடுக்கப்பட்டிருக்க வேண்டும்.

இளைஞர்கள் போதைக்கு அடிமையாகாமல் மாற்று வாழ்க்கை முறைகளை அமைத்துக்கொள்ள வேண்டும். சிறந்த நூல்களைத் தேர்ந்தெடுத்து வாசிக்க வேண்டும். போதைக்கு அடிமையாகாமல் மகிழ்வாக இருப்பதற்கு நல்ல ஓய்வுநேரப் பொழுதுபோக்குக்களைத் தேர்ந்தெடுத்து செயற்படுத்த வேண்டும்.

* சமய ஆன்மிகத்துறைகளில் ஈடுபடல்.
* விளையாட்டுத் துறையில் ஈடுபடல்.
* பூந்தோட்டம், வீட்டுத்தோட்டம் அமைத்தல்.
* கதை, கவிதை, நாடகம் எழுதுதல்.
* துன்பத்திலுள்ள, சமூகத்தில் பாதிக்கப்பட்டோருக்காக உதவுதல்.
* மது ஒழிப்புக்காகப் பாடுபடும் அமைப்புக்களுடன் இணைந்து பாடுபடல்.

இவ்விதச் செயற்பாடுகளில் இளைஞர்கள்- மாணவர்கள் ஒவ்வொரு நாளையும் திட்டமிட்டு நேரத்தை வீணாக்காது ஈடுபடும்போது மதுபோன்ற தீய பொருள்களை நாட வேண்டிய நிலைமை ஏற்படாது. எப் போதும் ஏதோவொரு செயற்பாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருத்தல் வேண்டும். குடிபோதை, புகை அற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்குவதில் ஒவ்வொரு இளைஞனும்- மாணவனும்- பங்கு கொண்டு பாடுபடவேண்டும். அப்போது தான் நமது மக்கள் உய்ய வழி ஏற்படும். வாழ்க்கை என்பது ஓர் இன்பமான அனுபவம் என்கிறார்கள். அதனை அனு பவிக்க வேண்டும்.

அதனை அடைவதற்குப் பல வழிகளுண்டு. மதுக் கலாசாரத்தை முற்றாக ஒழித்து, எமது கலாசாரத்துடன் மதுவைச் சேர்த்துக் கொள்ளாத ஓர் உயர்ந்த வாழ்க்கை முறையை இன்றிலிருந்து முழு மனிதகுலமும் பெற்று வாழவேண்டும். ✱

இர. சந்திரசேகர சர்மா
முன்னாள் ஆலோசகர், சுற்றாடல்,
குடிபோதைவஸ்து தடுப்புத் திட்டம், யோரூட்.

# சாதனைக் கலைஞரை சந்திப்போம், சிந்திப்போம்


ஈழத்தின் செவ்விசை (கர்நாடக இசை) வரலாற்றில் சாதனை படைத்தோர் பலர். எனினும் கடந்த ஐம்பது ஆண்டு காலமாகத் தனது ஆழமான இசை ஞானத்தால் உலகப் புகழ்பெற்ற செவ்விசைப் பாடகராக எம் மத்தியில் வாழ்ந்து கொண்டிருப்பவர் சங்கீதரத்தினம் ஏ.கே.கருணாகரன்

இவர் ஆண்டுதோறும் சென்னையில் நடைபெற்று வரும் மார்கழி இசைவிழாவில் ஒவ்வொரு முறையும் தனது இசைக் கச்சேரிகளை வழங்கி வருகின்றார். ஈழத்து இசைத் துறையின் பெருமையை இன்று வரை தமிழகத்தில் காத்துவரும் இவர் தற்போது யாழ்.பல்கலைக்கழக இசைத் துறையில் உதவி விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார்.

குருகுல முறைப்படி இசை கற்று ஆற்றுகைத் துறையில் ஒப்பற்று விளங்கிவரும் இவர் அரை நூற்றாண்டு காலமாகக் கலைத்துறையில் சேவையாற்றுகிறார்.

அமரர்களான ஆறுமுகம் கந்தவனம் - இராசம்மா தம்பதியரின் மகனாக 12.05. 1945 இல் கரவெட்டியில் பிறந்தார் தனது சிறு வயதிலிருந்து இசைபாடும் திறன் கொண்டவராகப் பாடசாலைக் காலத்தில் போட்டிகளில் முதலிடம் பெற்று புகழ் மிக்க சிறுவனாக யாழ்ப்பாண மாவட்டம் முழுவதும் இசைக் கச்சேரிகளை வழங்கி வந்த காலத்தில், 1961 ஆம் ஆண்டு மருதனார் மடத்தில் தொடங்கப்பட்ட இராமநாதன் இசைக் கல்லூரியில் முதலாவது அணி மாணவராகச் சேர்த்துக்கொள்ளப் பட்ட பத்து மாணவர்களுள் ஒருவராக இணைந்து தனது இசைக்கல்வியை மேலும் வளர்த்துக் கொண்டார்.

இந்தக் காலத்தில் இசை ஆசிரியராகப் பணியாற்றியவர் தமிழ் நாட்டின் புகழ்பூத்த இசைமேதை மகாராஜபுரம் வி. சந்தானம்.



நான்கு ஆண்டுகள் இராமநாதன் இசைக் கல்லூரியில் கற்றுச் 'சங்கீதரத்தினம்' என்னும் பட்டம் பெற்றார். அதன்பின் தமிழகம் சென்ற மகாராஜபுரம் சந்தானம், கருணாகரனைச் சென்னைக்கு அழைத்துத் தன்வீட்டில் தங்கியிருந்து குருகுல முறையில் இசை கற்கும் கிடைத்தற்கரிய வாய்ப்பை இவருக்கு ஏற்படுத்திக் கொடுத்தார்.

அத்தோடு நின்றுவிடாமல் சென்னை மத்திய இசைக்கல்லூரியிலும் சில ஆண்டுகள் கற்று சங்கீத வித்துவான் என்னும் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். இந்தக் காலத்தில் சங்கீதத் துறையின் பெரு மரங்களாக விளங்கிய செம்மங்குடி ஸ்ரீநிவாச ஐயர், கே.வி.நாராயணசாமி, டி.எம்.தியாகராஜன், டி.கே.கோவிந்தராவ், டி.பிருந்தாம்மா, ராம்நாட் கிருஷ்ணன் போன்ற இசை வல்லுநர்களிடம் நேரடியாகப் பாடம் கேட்கும் பாக்கியம் பெற்றார்.

தமிழகத்தின் பல பாகங்களிலும் இவரது இசைக் கச்சேரிகள் இடம்பெறத் தொடங்கின. அத்துடன் சென்னை வானொலியில் 1967இல் இவரது இசைக் கச்சேரி ஒலிபரப்பப்பட்டபோது ஈழத்தின் கலைத் துறையினர் அனைவரும் பேரானந்தம் கொண்டனர்.

1968 இல் சங்கீதவித்துவான் என்னும் கற்கைநெறியைத் திறம்பட முடித்துத் தனது தாய்நாட்டுக்கு வந்த இவர் 1981 ஆம் ஆண்டுவரை பல முறை தமிழகத்துக்குச் சென்று சென்னை வானொலியிலும் வேறு பல இடங்களிலும் தனது இசைக் கச்சேரிகளைத் தமிழகத்தின் புகழ்பெற்ற துணையிசைக் கலைஞர்களுடன் வழங்கி வந்தார்.

இலங்கை வானொலியில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகப் பணியாற்றியதுடன் யாழ். பல்கலைக்கழகத்துடன் இணைக்கப் பட்டிருந்த இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் போதனாசிரியராக நியமனம் பெற்றுக் கொண்டார். பத்து ஆண்டுகள் இங்கே பணியாற்றி பின் 1989 ஆம் ஆண்டு சிங்கப்பூரில் இருக்கும் இந்திய நுண் கலைக் கழகத்தில் இசை ஆசிரியராகப் பதவியேற்றார். இதன் பின்னர் 2001 இல் இருந்து 2005 வரை மட்டக்களப்பு விபுலாணந்தா இசை, நடனக் கல்லூரியிலும் தனது ஆசிரியத் துவத்தை நிலைநாட்டிக் கொண்டார்.

ஏ.கே. கருணாகரன் ஒரு தனித்துவமான பாடகர். சங்கீதத்தின் வரன்முறை தவறாத பாணியை இவர் பாடும் முறையில் நாம் கண்டு கொள்ளலாம். மெல்லிசைத் தன்மையையோ சினிமாத் தனத்தையோ இவரது கச்சேரிகளில் காணமுடியாது. தோடி, தர்பார், பேகட, அடாணா, பைரவி, சங்கராபரணம் போன்ற அதிநுட்பமாகப் பாடப்படவேண்டிய இராகங்களை அப் பழுக்கின்றி பாடவல்லவர்.

வர்ணத்தில் தொடங்கி தில்லானா, திருப்புகழில் கச்சேரியை முழுமைப்படுத்தி முடிக்கும் திறன் கொண்ட வாய்ப்பாட்டுக் கலைஞராக இன்றுவரை தன்னைப் பக்குவப்படுத்தி வருகின்றார்.

மக்களை இன்புறச் செய்யவேண்டும் என்பதற்காக சங்கீதத்தின் மரபுகளைப் புறந்தள்ளிவிடும் மனப்பாங்கு சிறிதளவும் இல்லாத இவர் ஆற்றுகையாளராக மட்டுமல்லாமல் சிறந்த இசை ஆசிரியராகவும் திகழ்கிறார். இசை கற்பித்தல் நுட்பங்களை இவர் இவ்வாறு கூறுகின்றார்.

''விஞ்ஞானத் தொழில் நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தி இசை கற்பிப்பதை விட மாணவருக்கு நேரடியாகக் கற்பிப்பதே சிறந்ததாகும். பாடல்களை ஒலிப் பதிவு செய்து சிஷ்யர்களுக்குக் கொடுப்பதும் நல்ல இசை ஆசிரியருக்குரிய இலட்சணமாகாது. குருவின் முன்னால் அமர்ந்து பயபக்தியோடு படிக்கும் பாடங்களை எவராலும் எளிதில் மறந்து விட முடியாது. எனது ஆசான்களிடம் நேரடியாகக் கற்றுக்கொண்ட பாடல்கள், சங்கதிகள், நுட்பங்கள், கணக்கு வழக்குகள் அத்தனையும் இன்றும் என் மனதில் பசுமரத்தாணிபோல் நிலைத்து நிற்பதற்குக் காரணம் குருபக்தியோடு நேரடியாக இருந்து கற்றுக் கொண்டமையும் அவற்றைப் பல மணிநேரம் தனியே இருந்து பயிற்சிசெய்து கொண்டமையும் ஆகும்'' என்று தனது அடிமனக் கருத்துக்களைத் தன் அனுபவத்தினூடாக இடித்துரைக்கின்றார் கருணாகரன்.

அரைநூற்றாண்டு கால ஈழத்தின் இசைக் கலை வரலாற்றில் தனித்துவமான இடத்தைப் பெற்று தன்னிகரற்ற பாடகராக விளங்கும் இவர் இலங்கை, இந்தியா, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் மட்டுமல்லாமல் சீனா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, சுவிஸ், ஆஸ்திரேலியா, கனடா, நியூசிலாந்து, தாய்லாந்து, தென்னாபிரிக்கா போன்ற நாடுகளுக்கும் சென்று இசைக் கச்சேரிகளை வழங்கிய தனித்துவமானதொரு செவ்விசைப் பாடகராக விளங்குகின்றார்.

எனினும் இதுவரை காலத்தில் தான் படித்துப் பெற்றுக்கொண்ட பட்டங்களான சங்கீதரத்தினம், சங்கீதவித்துவான் போன்றவற்றை விட வேறு எந்தவொரு விருதையோ அல்லது கால்கடுக்க அலைந்து விண்ணப்பித்துப் பெறும் 'பூஷண' பட்டங்களையோ பெற்றுக் கொள்ளாமல் தன்மானத்தோடு தனது இசைத் திறனில் மட்டும் நம்பிக்கைகொண்ட ஒரு சிறந்த தமிழராக வாழ்ந்து வருகின்றார். ✱

வசாவிளான் தவமைந்தன்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைதூக்கும் தலையீடுகள்; தவிர்க்கப்படுவது எப்போது?

இலங்கையின் இறுதிக் கட்டப் போரில் இடம்பெற்ற கோரக் காட்சிகள் கொண்ட 'கொலைகள' ஆவணப் படத்தை அலைவரிசை-4 (Channel-4) தொலைக்காட்சி வெளியிட்டு இலங்கை அரசுக்கு தலையிடியை ஏற்படுத்தியுள்ளது. இந்த வேளையில், இலங்கை அரசோ அதனை முற்றாக நிராகரித்து அதற்கும் தமக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை, தாம் சுத்தமான சூசைப்பிள்ளை என்பதற்கான ஆதாரங்களைத் தேடிப் பொறுக்கும் முயற்சியில் இறங்கியிருக்க... அந்த ஆவணப்படக் காட்சிகளுக்குத் தாம் தான் கதாநாயகர்கள் என்பதனைக் கடந்த 16 ஆம் திகதி அளவெட்டி மகாஜன மண்டபத்தில் இலங்கை இராணுவத்தினர் சொல்லாமற் சொல்லியிருக்கிறார்கள்.

### அளவெட்டிச் சம்பவம் நிரூபித்துக் கொண்டது

2009 மே 19 இற்குப் பின்னரான வடக்கு, கிழக்கு சூழல் முற்றுமுழுதாக இராணுவ மயப்படுத்தப்பட்ட நிலையில், பயங்கரவாதத்தை வேரறுத்துத் தமிழ் மக்களுக்கு முன்னெப்போதுமில்லாத சுதந்திரத்தை வழங்கியுள்ளதாக அரசு தம்பட்டம் அடித்து வருகிறது. இந்த நிலையில்-போர்க்குற்றம் தொடர்பான ஐ.நாவின் கேள்விகளுக்கு பதில் வழங்காமல் மௌனம் காத்துவரும் நிலையில்-அளவெட்டி சம்பவம் நடந்தேறியிருக்கிறது.

தமிழ்மக்களுக்குத் தீர்வொன்றை வழங்கி திருப்திப்படுத்துவதை விடவும் தற்போது அரசுக்குள்ள 'பலம்வாய்ந்த' நிலையைத் தளர்வுறச் செய்யாத அல்லது தமிழர்கள் ஒன்றுபடுவதால் ஏற்படக்கூடிய நெருக்கடிகளைத் தவிர்த்துக் கொள்ளும் முகமான நீண்டகால நிகழ்ச்சிநிரல் ஒன்றுடன்தான் வடக்கு, கிழக்கு விவகாரங்களில் காய்நகர்த்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்கிற மனப்பக்குவம் இன்று மக்கள் மனதில் மேலோங்கி நிற்கிறது.

ஊடகங்களைப் புரட்டி உருட்டினாலும் அதனை உறுதிப்படுத்துகிற மாதிரியான செய்திகளே வெளிவருகின்றன. அந்த வகையில் அளவெட்டிச் சம்பவத்தையும் வரிசைப்படுத்த முடியும்.

### தொடரும் இராணுவ மயம்

சில வருடங்களுக்கு முன்பு படையினரால் ஏற்படுத்தப்பட்டது போன்ற நெருக்கடி, கெடுபிடி தற்போது இல்லை; ஆனால், அதனைச் சடுதியாக ஏற்படுத்தக்கூடிய வல்லமையோடுதான் படையினர் விளங் குகின்றனர் என்பது நிரூபிக்கப்பட்டிருக் கிறது!

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் வெற்றி கொள்ளப்பட்டதாக முரசறையப்பட்ட காலத்திலிருந்து வடக்கு, கிழக்கில் இராணுவத்தின் பிரசன்னம் தளர்த்தப்பட வேண்டும் என்னும் கோரிக்கை தமிழ் மக்களாலும் அவர்களின் பிரதிநிதிகளான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினாலும் அரசுக்கு முன்வைக்கப்பட்டே வந்தது; வருகிறது. அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த இந்தியாவின் தேசியபாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன், வெளிவிவகார செயலாளர் நிருபமா ராவ், பாதுகாப்பு செயலாளர் பிரதீப்குமார் ஆகியோரை உள்ளடக்கிய மூவரணியிடமும் தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் சென்ற குழுவினர் இதனையே வலியுறுத்திவிட்டு வந்தனர்.

உயர்பாதுகாப்பு வலயங்களாக இருந்த பகுதிகளில் மக்களை மீளக்குடியமர அனுமதித்தல், யாழ் நகரப்பகுதி மற்றும் தனியார் காணிகளிலிருந்து விடைபெறுதல், வீதி சோதனை மற்றும் காவலரண்கள் அகற்றப்படல், பலவருடங்களாக மக்கள் பாவனைக்குத் தடைவிதிக்கப்பட்டிருந்த வீதிகள் திறக்கப்படுதல் என ஆங்காங்கே சில பல 'நல்ல பிள்ளை' செயற்பாடுகள் இடம்பெற்றிருந்தாலும், ஒட்டு மொத்த இராணுவப் பிரசன்னம் 'சுத்தி சுத்தி சுப்பற்ற கொல் லைக்குள்ள' என்பதாகத்தான் இருக்கிறது.



> 'காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள்' என்கிற நிலையில் தொடர்கிற இந்த வகையான செயற்பாடுகளின் ஓர் அத்தியாயமே அளவெட்டியிலும் எழுதப்பட்டிருக்கிறது.

'சரி, படையினர் தமது படைமுகாம்களுக்குள் தமது நடவடிக்கைகளை மட்டுப்படுத்த நாம் எமது பாட்டில் எங்கள் அலுவலர்களைப் பார்ப்போம்' என்றொரு சமரச உணர்வுடன் வாழ முயற்சித்தாலும் அதற்கான சந்தர்ப்பமும் இல்லை என்பதை நிரூபிப்பதுபோல் பல சம்பவங்கள் அரங்கேறி ஓய்ந்திருக்கின்றன.

1.யாழ்.புகையிரத நிலையத்தில் வந்து தங்கியிருந்த தென்னிலங்கை மக்களை இரவோடிரவாக நாவற்குழிப் பகுதியில் குடியேற்றம் செய்தமை.

2.தென்னிலங்கை உல்லாசப் பிரயாணிகள்- யாழ். நூலகத்தைப் பார்வையிடத் தவிர்க்கப்பட்ட நேரமொன்றில் பார்வையிட முயன்ற போது அதில் தலையிட்டு பரபரப்பை ஏற்படுத்தியமை.

3.சங்கானையில் இடம்பெற்ற பிராமணக் குருவின் பலியெடுப்பின் பின்னணியில் ஆயுத வழங்குநராக இருந்தமை.

4.பிரபாகரனின் தாயார் பார்வதி அம்மாளின் மரணச்சடங்கு நேரத்திலும் அதன் பிற்பட்ட நாள்களிலும் பொது மக்களுக்கு அசௌகரியம் ஏற்படுத்தியமை.

5.வெள்ளரசுக்கிளை யாழில் வீதியுலா வந்தபோது பாடசாலை மாணவர்களையும் அதில் பங்கெடுக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டமை.

6.நீதிமன்றத்தால் தடை விதிக்கப்பட்ட நிலையிலும் மேற்கொள்ளப்பட்ட பதிவு மற்றும் புகைப்படப்பிடிப்பு நடவடிக்கைகள்.

### நீடிப்புச் செய்யப்படும் அவசரகாலச் சட்டம்

புலிகள் இயக்கம் தற்போது இலங்கையில் இல்லை எனக் கூறிவரும் அரசு, அது மீள முனைப்புப் பெறுவதற்கு தன்னுடைய கவலையீனம் ஒருபோதும் காரணமாகிவிடக்கூடாது என்பதில் மிகுந்த எச்சரிக்கையாக இருக்கிறது.

மாதா மாதம்- பெண்களுக்கு மாத விடாய் வருவது போன்று-அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது இந்தப் பின்னணியிலேதான். அதேபோன்று வடக்கு, கிழக்கில் வதிவோரும்- கறையான்களைப் போன்று-கூடிக்கலந்து பேசி கலவரம் ஒன்றை கட்டவிழ்த்து விடுவார்களோ என்கிற பயத்தில்தான் ஒன்றுகூடலோ விளையாட்டு நிகழ்வோ பொதுக்கூட்டமோ எதை நடத்துவதானாலும் 'இராணுவத்தினரின் அனுமதி' என்ற ஒன்றைப் பெற்றிருக்க வேண்டியது கட்டாயம் என்கிற நடைமுறை அமுலாகி வருகிறது.

அந்த அனுமதியைப் பெற்றிராத பட்சத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற நிகழ்வில் புகுந்து ரகளை பண்ணி குழப்புகிற சம்பவங்களும் ஆங்காங்கே நடைபெற்று வருகின்றன.

முள்ளிவாய்க்கால் படு கொலைகளின் இரண்டாம் ஆண்டு நினைவு தினத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் யாழ்.கலைத்தூது மண்டபத்தில் அனுஷ்டித்தபோது அதில் பங்கெடுத்தவர்களுக்கு இடைஞ்சல் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் மாணவர்களுக்கான கருத்தரங்கொன்றை நடத்த ஆயத்தமான அன்றைய தினம் அவ்விடமெங்கும் படையினரைக் குவித்து பதற்றத்தை ஏற்படுத்திருக்கிறார்கள்.

நூலக ஒன்று கூடல் நிகழ்வொன்றை நடத்த எத்தனித்த போது அங்கு நுழைந்த இராணுவத்தினர், அந்த ஒன்று கூடலுக்கு அனுமதி பெறப்பட்டிருக்கிறதாவென வினாவியதுடன் சீருடை தரிக்காத இராணுவத்தினரின் பிரசன்னத்துடன் கூட்டத்தைத் தொடருமாறும் இடம்பெறுகின்ற உரைகளின் பிரதிகளைத் தமக்குத் தருமாறும் கோரியிருக்கின்றனர்.

'காமாலைக் கண்ணனுக்கு கண்டதெல்லாம் மஞ்சள்' என்கிற நிலையில் தொடர்கிற இந்த வகையான செயற்பாடுகளின் ஓர் அத்தியாயமே அளவெட்டியிலும் எழுதப்பட்டிருக்கிறது.

### ஹத்துருசிங்கவின் சத்தியம்

அளவெட்டி அட்டூழியம் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதாகவும் யாழ். மாவட்டத்தில் இனிமேல் இப்படி ஒரு நிகழ்வு அரங்கேறாமல் பார்த்துக் கொள்வதாகவும் யாழ்.மாவட்ட படைகளின் கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பத்திரிகையாளரையும் 'சமாதானப்' படுத்தியிருக்கிறார்.

பிரான்சிஸ் மரியன்

சங்கானையில் பிராமணக்குருக்கள் கொல்லப்பட்ட சம்பவத்தின் சூத்திரதாரி இனங்காணப்பட்ட பின்பும் அண்மையில் பாதுகாவலர் மண்டபத்தில் இடம்பெற்ற வர்த்தகர்களுடனான சந்திப்பிலும் இதேபோன்று 'இனிமேல் நடவாது' என்றே அவர் கூறியிருந்தார்; ஆனால் அது பொய்த்துவிட்டது.

எதிர்வரும் ஜூலை 23 இல் உள்ளூராட்சி தேர்தலுக்கான வாக்கொடுப்பு நடைபெற இருக்கையில், அளவெட்டியில் நிகழ்ந்த அட்டூழியம் ஏற்படுத்திய சலசலப்பு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டங்களுக்கான சனச்செறிவை சற்று பாதிக்கத்தான் போகிறது. ஏற்கனவே த.தே.கூ. மற்றும் ஜே.வி.பி. வேட்பாளர்களின் விவரங்களைப் படையினர் சேகரிப்பதில் ஆர்வம் காட்டிய நிலையில், இந்தச் சம்பவம் தேர்தலில் கடைப்பிடிக்கப்படப் போகின்ற ஜனநாயகம் குறித்து கேள்வி எழுப்பி நிற்கிறது.

வடக்கு, கிழக்கில் வதிகின்ற மற்றும் மீளக்குடியேறி வதிய முயல்கின்ற தமிழர்களின் இயல்பு வாழ்க்கைக்கு இடையூறு விளைவிக்கும் படைத்தரப்பின் தலையீடுகள் தவிர்க்கப்பட வேண்டும்; மெல்ல மெல்லமாகத் தளர்த்தப்பட வேண்டும். இல்லையேல் தமிழர் மனங்களை வெல்வது என்பது அரசுக்கு மணல் கயிறு திரித்த கதையை ஒத்திருக்கும். ✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஹ்ரைன், ஜோர்தானில்

### உடனடி தொழில் வாய்ப்பு




பஹ்ரைன், ஜோர்தானுக்கு சாதாரண கல்வி அறிவுடன் வேலையின்றி இருக்கும் **யுவதிகளுக்கும்** அனுபவமுள்ள **இளைஞர், யுவதிகளுக்கும்** மத்திய கிழக்கில் தமிழ் பேசும் நிருவாகத்தினால் நடாத்தப்படும் ஆடைத்தொழிற்சாலையில் உடனடி தொழில் வாய்ப்பு

- **Juke Machine Operator - 400 Nos.** USD 145 + OT / Rs: 16240/- + OT
- **Final Checker - 75 Nos.** USD 145 + OT / Rs: 16240/- + OT
- **Helper - 75 Nos** USD 135 + OT / Rs: 15120/- + OT

(பயிற்சிபெற்ற / பயிற்சிபெறாத)

அனைத்தும் அடங்கலாக Rs: 30,000/- சம்பளம்

நிபந்தனைகள்:
- உணவு, தங்குமிடம், மருத்துவ வசதி இருவழி விமான டிக்கட் என்பன இலவசம்.
- ஒப்பந்த காலம்: - பஹ்ரையின் - 2வருடம், ஜோர்தான் - 3 வருடம்.
- ஏனைய அனைத்தும் பஹ்ரையின், ஜோர்தான் நாட்டு தொழில் சட்டதிட்டங்களுக்கு அமைவானது.

அரச கட்டணம் மட்டுமே செலுத்த வேண்டும் அதற்கும் வசதி இல்லாதவர்களுக்கு வட்டியில்லாத கடன் வசதி செய்து தரப்படும்.

வெளிநாட்டு பிரதிநிதிகளினால் தினசரி காலை 10 மணி முதல் நேர்முகப்பரீட்சை நடத்தப்படுகின்றன, நேரே வாருங்கள்.

மேலதிக விபரங்களுக்கு: **மலர் - 0772366516**

AI/56/Advt:06/11 AI/56/Advt:07/11

## ஹில்டொப் டுவர்ஸ் & ட்ரவல்ஸ்

(வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனம்)

இல: 111, செட்டியார் தெரு, கொழும்பு - 11.

### வீடு, காணி விற்பனைக்கு

தாவடி மானிப்பாய் வீதியில் பாடசாலைச் சுற்றாடலில் 3½, 2½, 6பரப்புக்களுடன் கூடிய மூன்று வீடுகள் விற்பனைக்கு உண்டு. அத்துடன் தனிக் கிணற்றுடன் 5பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 077-2209458



## சந்நிதிமுருகன் அன் ரவல்ஸ்

திருமண மற்றும் சுற்றுலாவுக்கான பஸ் சேவை

குளிரூட்டப்பட்ட திருமணக் கார்

Phone: 021 222 8076, 077 711 0199, 077 201 8275



241, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(வீரமாகாளி அம்மன் கோயில் அருகில்)

### தவறிவிட்டது

சந்திரசேகரம் அருள்நேசன் என்பவரது மோட்டார் சைக்கிள் புத்தகம், Tax சிட்டை என்பன பச்சை கலர் File உடன் கனகபுரத்துக்கும் இரணைமடுவுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு: கோ.சந்திரசேகரம், இல.136, 7 ஆம் வீதி, சாந்தபுரம், கிளிநொச்சி. T.P: 0244907122, 0777521187- லிங்கன்.

### வீடு காணி விற்பனைக்கு

யாழ். பல்கலைக்கழகம், யாழ். இந்து மகளிர் கல்லூரி, யாழ். இந்துக் கல்லூரி ஆகியவற்றுக்கு அருகில் கந்தர்மடத்தில் இந்து மகளிர் கல்லூரி வீதிக்கும் அரசடி வீதிக்குமிடையில் அமைந்த 5 பரப்புக் காணி (சிறிய வீடு, கிணறு, சுற்றுமதிலுடன் அமைந்தது) விற்பனைக்குண்டு. தரகர்கள் அனுக வேண்டாம்.

தொடர்பு: 0779673557

# VISA - வீசா

## Consultancy Service

***UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND, SWITZERLAND, FRANCE, GERMANY, NORWAY, DENMARK,***

Visit / Tourist, Business, Family Students, Migration, Medical Visas

**Call : 0776 209 887**

**SIC**, 101/35, Stanley Road, Jaffna
(Behind PEOPLES BANK)

## தேவை

யாழ்.நகரில் அமைந்துள்ள பிரபல TILE ஸ்தாபனத்துக்கு Sales Boy & Accounts Assistant (Female) தேவை.

★ அனுபவம் இல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம்.
★ திறமைக்கு ஏற்ற சம்பளம் வழங்கப்படும்.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-
வி.இ. 4154
C/O உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(49)

மின்னஞ்சல் முகவரி: suren@metrohomes.lk



HERO CYCLES

KENTON

## ஹீரோ, கென்டன் காட்சியறை





சிறியோர் முதல் பெரியோர் வரையானஅனைவரினதும் சொகுசான சைக்கிள் சவாரிக்கு Hero, மவுண்டன், BMX சைக்கிள்களை எமது காட்சியறையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.

ஒரிஜினல் ஹீரோ லேடீஸ் சைக்கிள்களும் ஆண்கள் சைக்கிள்களும் பெற்றுக்கொள்ளலாம்.

ஹீரோ, கென்டன் விநியோகத்தர்கள்
ஸ்ரார் ரேடர்ஸ்
இல.258, 260, மானிப்பாய் வீதி.
ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 4921672

சிறுவர்களின் மின்சார மீள்நிரப்பு (Recharchable) கார்களை மலிவு விலையில் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.



(49)

# UK Westminster Academy


யின் சர்வதேச சான்றிதழ்களை பெற அரியதொரு சந்தர்ப்பம் @ London Metropolitan College

## IELTS

GENERAL / ACADEMIC

**Full Time & Part Time** for Student Visa & Settlement Visa Applicant

திறமை வாய்ந்த ஆசிரியர்களால் பாடநெறிகள் நடத்தப்படுகின்றன



### English Courses

- Certificate in English
- Diploma in English
- Advanced Diploma in English
- Business English
- Spoken English

### Access courses

- Ms-Office
- Network(Cable, wifi)
- Computer Hardware

1 Month LKR 6000

### Programming Courses

- C# > VB.Net
- Visual Basic > Java

2 Months LKR 18000

### Accounting Package

- Tally > Quick Book

2 Months LKR 15000

### Web Development

- Html, PHP, Javascript
- Domine & Hosting
- MySQL, WordPress, Joomla Installaition

100 Days LKR 22000

### Multimedia Courses

- 3D Max > Maya
- Photoshop > Cool 3D
- Premium Pro CS3

2 Months LKR 25000

### SW Development

- System Analyst & Database Design Concept
- Programming language (VB.net & C#)
- SQL & Access Database Creation

100 Days LKR 22000

**Foundation Programmes** > Business Management > Computer Application

LMC
LONDON METROPOLITAN COLLEGE

**LONDON METROPOLITAN COLLEGE**
No: 197, Arasady Road, Jaffna.
(Between Kanthamadam Junction & Hindu Ladies College)
Tel: 021 222 7230, 021 753 8395


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காய்கதிர் போல் பற்றும் உன தெழில் பாட்டு

(நாளை (27.06.2011) கவிஞர் கலாநிதி இ.முருகையனின் இரண்டாம் ஆண்டு நினைவு நாள்)



நேரிசை வெண்பா

நாட்டின் நலம்நாடி நாட்டமுடன் நற்கவிதை
தீட்டி உணர்வுகளைப் பொங்குவித்தோன் - பாட்டாலே
உண்மை வழியுரைத்த எங்கள் முருகையன்
வண்மை தமிழுலகில் வாழும்

கண்கெட்ட மாந்தர்க்குக் கண்ணொளி யாய்க்கவிதை
புண்பட்ட நோயர்க்கும் புத்திமதி - பண்பட்ட
உன்னுணர்வை உள்வாங்கி உன்னதப் பாவுரைத்து
தன்னுணர்வை நாட்டும் தமிழ்

குற்றங் கடிந்து குணதிசைக் காய்கதிர்போல்
பற்றும் உனதெழில் பாட்டு - நற்றமிழர்
ஈராண்டென்ன? ஈரா யிரமினி வந்தாலும்
ஈர நினைவிருக்குங் காண்

ச.லலீசன்,
விரிவுரையாளர்,
கோப்பாய் ஆசிரிய கலாசாலை

# மருத்துவம் சம்பந்தமான கருத்துக்களில் சரியான வழிநடத்தல்கள் தேவை

பொது மக்களை பிழையாக வழிநடத்தும் பல விடயங்களையும், தீங்கு விளைவிக்கும் விடயங்களையும் கடந்த ஞாயிறு உதயனில் குறிப்பிட்டிருப்பதை இங்குசுட்டிக்காட்ட வேண்டியது மருத்துவன் என்ற ரீதியிலே எனது கடமையாகும்.

"சலரோகத்துக்கு ஆட்டாமா ரொட்டி, குரக்கன்மா பிட்டு, ஒரு துண்டு மீன், என கட்டுப்பாடுகள் அதிகம்" எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. உண்மையில் நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு இவற்றைச் சிறந்த உணவாகக் கொள்ள முடியாது. ஒவ்வொரு உணவிலும் மரக்கறி ஒன்றாவது இருத்தல் வேண்டும். அத்துடன் பெருமளவு புரத உணவுகள் சேர வேண்டும். ஆட்டாமா, குரக்கன் மா,அரிசி மா, போன்ற மாப்பொருள் உள்ள உணவு வகைகளை பெருமளவில் குறைத்துக் கொள்ளவேண்டும்.

"சலரோகத்துக்கு, கொலஸ்ரோல் நோய்கள் இருந்தால் உடம்பை உருக்கச் சொல்லிப் போட்டாங்கள்" என்று குறிப்பிடப்பட்டிருந்தது. உண்மையில் இந்த நோய்கள் ஏற்பட்டால் மாப்பொருள் வகைகளைக் குறைத்து அதற்கு ஏற்றாற்போல் புரத உணவு களையும் விற்றமின் நார்த்தன்மையுள்ள உணவுகளையும் கூட்டி உடம்பை இறுக்கும் செயல் முறையே செய்யப்பட வேண்டும். உடம்பை உருக்குதல் என்னும் சொற் பிரயோகம் ஆர்வத்துடன் நிறையைக் குறைத்துவரும் நோயாளர்களின் மன உறுதியைப் பாதிக்கும்.

எமது சமுதாயத்திலே நிறை அதிகரிப்பு ஒரு பெரிய பிரச்சினையாக உருவெடுத்திருப்பதுடன் இதன் காரணமாக நீரிழிவு நோய், பாரிசவாதம், குருதி அமுக்கம் போன்ற நோய்கள் ஏற்பட்டு பல உயிரிழப்புகளும் நடந்து வரும் இக் கால கட்டத்திலே இதைத் தடுப்பதற்கு பல விழிப்புணர்வுச் செயற்பாடுகளும் நடை பெற்றுவரும் இன்றைய நிலையிலே, நிறை குறைப்பு முக்கியமல்ல என்ற தொனியில் எழுதப்பட்டிருந்தமை பற்றி எமது சமுதாயத்துக்குத் தீங்கை விளைவிக்கும்.

"சலரோக நோய் ஏற்பட்டுவிட்டால் ஒன்றுமே தின்னக் கூடாது என்று சொல்லு றாங்கள்" என்பது ஆபத்தான கருத்தாகும். நீரிழிவு நோய் உள்ளவர்கள் பால், முட்டை, பருப்பு, மீன், சுறா,கோழிஇறைச்சி, பயறு, சோயா, மரக்கறி, பழவகைகள், கௌபி என பல ஊட்டச்சத்துள்ள உணவுகளை அதிகம் எடுக்க வேண்டும். அப்பொழுதுதான் அவர்களுக்கு நோய் எதிர்ப்புச் சக்தி கூடும். உடல் ஆரோக்கியம் பெறும்.

மருத்துவம் சம்பந்தமான தகவல்கள் உயிருடன் சம்பந்தமானவை. அவற்றை மக்கள் சரியான முறையில் விளங்கிக் கொள்ள உதவ வேண்டும். "சலரோகம் ஏற்பட்டு விட்டால் கண்டது கடியதெல்லாம் சோதிக்கச் சொல்லுறாங்கள். ஒருதொகை ரெஸ்ருகள் எடுக்க வேண்டும் என்று எழுதித் தருகினம்.இதற்குமட்டும்2,000-3,000செல வாகுது" என்று எழுதப்பட்டிருந்தது. ஒருவருக்கு சலரோகம் நோய் ஏற்பட்டு விட்டால் அப்படையில் FBS/PPBS, Lipid Profile, UFR, BU,ECG, HbA1C, Urine microalbumin, FBC ஆகிய சோதனைகள் செய்தே ஆகவேண்டும். இதில் இரகசிய மொன்றுமில்லை. அவர் யாழ்ப் பாணத்திலிருந்தாலும் கொழும்பிலிருந்தாலும் லண்டனில் இருந்தாலும் அமெரிக்காவில் இருந் தாலும் இந்த சோதனைகளைச் செய்துதான் ஆக வேண்டும். இதனை தனியார் இடங்களில் செய்வதாயின் உண்மை யில் 3,000 ரூபாவுக்கும் மேல் செலவாகலாம்.

Dr.சி.சிவன்சுதன்

நோயாளர்களின் பூரண பாதுகாப்புக்காக இது போன்ற சோதனைகள் காலத்துக்குக் காலம் மீண்டும் செய்யப்பட வேண்டும் என்பது உலக விதிமுறையாகும். இது சம்பந்தமாக நோயாளர்களுக்குப் போதிப்பதற்கு எடுக்கப்பட்டுவரும் முயற்சிகளுக்கு வேட்டுவைப்பது விரும்பத்தக்கது அல்ல. சோதனைகளுக்காகவும் மருந்துகளுக்காகவும் செலவு செய்வதில் கஷ்டம்உள்ளவர்கள் யாழ். போதனா வைத்தியசாலை யிலே தமது சிகிச்சையை பெற்றுக் கொள்ள முடியும். யாழ் போதனா வைத்தியசாலை யிலே சிகிச்சைபெறுவதில் பல அனுகூலங்கள் இருக்கின்றன. அடிக்கடி வைத்தியரைச் சந்திக்க முடியும், பல சோதனைகளை வைத்திய சாலையிலேயே செய்து கொள்ள முடியும். பல மருந்துகளை வைத்தியசாலையிலேயே பெற்றுக்கொள்ளலாம், அத்துடன், யாழ். போதனா வைத்தியசாலையில் அமைக்கப் பட்டிருக்கும் நவீன நீரிழிவு சிகிச்சை நிலையத்தில் அரசாங்க வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளர்களுக்கு மட்டுமே சிகிச்சைபெறும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டு வருகிறது. எனவே நீரிழிவு நோய் ஏற்பட்டுவிட்டால் பெரும் கஷ்டம் என்று நோயாளர்களை பய முறுத்துவதைத் தவிர்த்துக் கொள்வது நல்லது.

நோயாளர் தான் அவசரமாக தருகிற இடத்தில் சோதித்துக்கொண்டு போய் காட்டிய போது - இப்படியான சோதனைகளுக்கு ஒரு MLT தேவை. அவர் சைன் பண்ணாட்டி நாங்கள் அந்த றிப்போட்டுகளை எப்படி நம்புவது என்று கேட்டதாகவும் பின்னர் தான் தனது சினேகிதருடன் பேசியபொழுது அவர் "எல்லா இடமும் ஒரே லெவலிலைதான் சோதிப்புக்கள் இருக்கும், டாக்குத்தர் வியாபாரத்திற்குத்தான் அப்படி சொல்லியிருப்பார்" என்று சொன்னதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. குருதிச் சோதனைகள் மிகவும் கவனமான முறையிலே செய்யப்பட வேண்டும். காரணம் இந்த சோதனைகளின் முடிவுகளை பொறுத்தே ஒருவருடைய மருத்துவ சிகிச்சை முறை தீர்மானிக்கப்படுகிறது. இதன் காரணமாகவே குருதிப் பரிசோதனை செய்பவர்களுக்குப் பல வருடங்கள் பல்வேறுபட்ட பயிற்சிகள் வழங்கப்பட்டு அவர்களின் செய்திறன் சோதிக்கப்பட்டு அவர்களுக்கு MLT என்ற பட்டம் வழங்கப்படுகிறது. எந்தக் குருதிச் சோதனைகளும் MLT இன் கண்காணிப்பிலேயே நடத்தப்பட வேண்டும்என்பது உலகவிதி முறையும்சட்டமுமாகும். அண்மையில்எமது DPDHS கூட இதற்கென பிரத்தியேக கூட்டம் ஒன்றை கூட்டி, யாழ்ப்பாணத் தில் இயங்கும் அனைத்து குருதி சோதிப்பு நிலையங்களும் MLT ஒருவரின் கண்காணிப்பிலேயே இயங்க வேண்டும் என்று குறிப்பிட்டதுடன் தராதரமின்றி செய்யப்படும் குருதி சோதனைகளால் ஏற்படும் ஆபத்து நிலை பற்றியும் விரிவாக விளக்கப்பட்டிருந்தது. எனவே இந்த விடயங்கள் மக்களை சென்றடைய வேண்டும்.

இங்கு பணிபுரியும் வைத்தியர்களுக்கு வியாபாரம் தான் பிரதானமான நோக்கமாக இருந்தால் பல கஷ்டமான சூழ்நிலைகளினூடே அவர்கள் இத்தனை காலமும் யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கவேண்டிய அவசியம் என்ன இருந்தது? தெற்கிற்கோ பிற நாடுகளுக்கோ சென்றால் அவர்கள் இலகுவாகப் பெரும் பணம் ஈட்டிக்கொள்ள முடியும்.

# அவன் - இவன்




விமர்சனம்

ஒரு சாதாரண கிராமத்தில் களவெடுத்தல் என்பது ஒரு தொழிலாக மேற்கொள்ளப் படுகிறது. அதாவது, பரம்பரைத் தொழிலாக மேற்கொள்ளப்படும் இந்தக் களவெடுத்தல் தொழிலை அந்தக் கிராம மக்கள் செய்யாவிட்டால் தெய்வக் குற்றமாக போய்விடும் என்று அந்த ஊர் மக்களின் மூடநம்பிக்கை. இப்படிப்பட்ட அந்தக் கிராமத்தில் உள் நுழையும் ஆதர் வில்சனின் கமெரா அவன்- இவன் என்ற உண்மைக் கதையைக் காட்சிப்படுத்தியிருக்கிறது.

இந்தப் படத்தை இயக்கி இருக்கின்றார் பாலா. இதுவரை அடிதடி பாத்திரங்களில் கலக்கிவந்த விஷால் இந்தத் திரைப்படத்தில் பெண்மை ததும்பும் பாத்திரத்தில் பின்னியெடுத்திருக்கிறார். ஆரம்பமே கலகலவென நகைச் சுவையில் படத்தின் காட்சியமைப்பு நகர்கிறது. இந்தக் கிராமத்தில் ஒரே தந்தைக்கு இருதாரங்களின் மூலமாகப் பிறந்த பிள்ளைகள்தான் ஆர்யாவும், விஷாலும். இருதாரம் கட்டியவனின் யதார்த்த வாழ்வில் என்ன வெல்லாம் நடக்கும் என்பதையும்இந்துப் படத்தின் ஒவ்வொரு காட்சியமைப்பும் தெளிவுபடுத்துகின்றன. இந்தக் கிராமத்தில் ஜமீந்தாராக நடித்திருக்கும் ஜீ.எம்.குமார் தனிக்கட்டையாக அரண் மனையில் வாழ்கிறார். இந்த ஜமீந்தாரைச் சுற்றியதாக இந்தப் படத்தில் கதை பின்னப்பட்டிருக்கிறது. வாரிசுகள் இல்லாமல் தனி மனிதனாக வாழ்ந்து வருகிறார் ஜமீந்தார். இதனால் விஷாலையும், ஆர்யாவையும் தன் பிள்ளைகளைப் போல் வளர்த்து வருகிறார். ஜமீந்தாரின் சொல்லுக்குக் கட்டுப்பட்டவர்களாகவே இருவரும் வளர்ந்து வருகிறார்கள். ஆனால், ஆர்யாவும், விஷாலும் அடிக்கடி மோதிக்கொள்வார்கள். தந்தை ஒன்றாகிய போதிலும் தாய்மார் இருவர் என்பதால் அவர்களுக்குள் எப்பொழுதும் ஒரு பனிப்போர் இருந்து கொண்டே இருக்கும்.

இப்படி செல்கின்ற கதையில் கதாநாயகிகளாக இருவர் திணிக்கப்பட்டிருக்கிறார்கள். பொலிஸ் கான்ஸ்டபிளாக ஜனனி ஐயரும், மாணவியாக மதுஷாலினியும் நடிக்கிறார்கள். விஷால் ஜனனி ஐயரையும், ஆர்யா மதுஷாலினியையும் காதலிக்கிறார்கள். இதனை அறிந்ததும் ஜமீந்தார் எதிர்க்கிறார். இதனால் ஜமீந்தாருக்கும் ஆர்யா, விஷாலுக்கும் இடையில் சிறு பிரிவு ஏற்படுகிறது. அவர்கள் எப்படி ஒற்றுமையாயிருக்கிறார்கள் என்பதை அழகாக இந்தப் படத்தின் காட்சியமைப்பில் அமைத்திருக்கிறார்கள். இப்படிச் செல்கின்ற இந்தப் படத்தில் மிருகவதை என்ற ஒன்றைக் காட்டியிருக்கிறார் பாலா. இதுதான் இந்தத் திரைப் படத்தின் உயிர்நாடி. கட்டாக்காலி மாடுகளை இறைச்சிக்காகக் கடத்தி விற்கும் வில்லனாக ஆர்.கே. நடித்திருக்கிறார். இவனது குற்றச் செயல்களைக் கண்டு பொங்கி எழுகின்ற ஜமீந்தார் ஆர்.கேயை பொலிஸில் பிடித்துக் கொடுக்கிறார். இங்குதான் திரைக்கதையில் திருப்பம் ஏற்படுகிறது. பொலிஸின் பிடியில் இருந்து வெளியில் வருகின்ற ஆர்.கே, ஜமீந்தாரைக் கொடூரமான முறையில் கொல்கின்றான். ஜமீந்தாரை நிர்வாணமாக்கிச் சாட்டையினால் விரட்டி விரட்டி அடித்துக் கொலை செய்கின்ற காட்சி வன்னியில் இறுதி யுத்தத்தில் சிங்களப் படைகள் தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட காட்சியை ஒத்ததாக இருக்கின்றது. அதன்பின் ஜமீந்தாரை கொலை செய்த ஆர்.கேயை ஆர்யாவும், விஷாலும் கொலை செய்து ஜமீந்தாரின் பிரேதத் துடன் சேர்த்து எரிக்கிறார்கள். அத்தோடு படத்தின் கதை முடிகிறது. இயக்குநர் பாலாவின் மூலம் முன்னணி கதாநாயகனாக உயர்ந்த நடிகர் ஆர்யா இந்தப் படத்தின் சிறப்புத் தோற்றத்தில் வருவார். இந்தியாவின் அனைத்துப் பாகங்களிலும் சிறுவர்களைப் படிப்பிக்க உதவுகின்ற அகரம் பௌண்டேஷனைப் பற்றி நடக்கின்ற நிகழ்வில் அதிதியாகக் கலந்து கொள்வதுபோல் வந்து பல உண்மைகளைச் சொல்லிச் செல்கிறார். இந்தப் படத்தில் இது ஒரு விளம்பரமாக இருந்தாலும் ஒரு செய்திக்காக அந்தக் காட்சியை வைத்திருக்கிறார் பாலா. ஆர்யாவின் முன்னால் விஷால் மேடையில் நவரசங்களைச் செய்துகாட்டுகிறார். திரைக்குள் இருக்கின்ற அனைவரும் கண்கலங்கியதோடு மாத்திரமல்லாமல் படத்தைப் பார்த்த அனைவரும் கண்கலங்கினர். மாறுகண், பெண்மை நடை கொண்ட நடிப்பு என விஷால் இந்தப் படத்தில் புதிய பரிமாணத்தை எடுத்திருக்கிறார். தமிழ் சினிமாவில் இயக்குநர் பாலாவின் படங்களில் ஒரு கரு புதுமையாக இருக்கும்.

இந்தக் கருவின் ஊடாக மக்கள் அவலத்தைக் காட்சிப்படுத்துவதற்குப் பாலா தயங்கியதில்லை. பாலாவின் சேது படத்திலிருந்து நந்தா, பிதாமகன், நான்கடவுள், இப்பொழுது வெளிவந்திருக்கும் அவன்-இவன் போன்ற ஒவ்வொரு படத்தின் காட்சியமைப்பும் வெவ்வேறாக இருந்தாலும் தமிழ் சினிமா உலகில் எவருமே எண்ணத் தோன்றாத மக்களின் கதையைப் பாலா எடுப்பது சிறப்பம்சம். இலக்கிய உலகில் யதார்த்த நடையில் எழுதக் கூடிய தரமான எழுத்தாளர்களில் ஒருவர்தான் எஸ்.இராமகிருஷ்ணன். இவரது சிறுகதைகள் இதற்குச் சான்று. பல படங்களில் எஸ்.இராமகிருஷ்ணனின் வசனம் எழுதி இருந்தாலும் இந்தப் படத்தின் வசனங்கள் மிகவும் யதார்த்தமாக இருக்கின்றன. சாதாரண கிராமத்துக் குடும்பத்தில் லாவகமாக வருகின்ற கெட்ட வார்த்தைகள் முதல் பெரியவர்களின் பௌவியமான வார்த்தைகள்வரை அனைத்தையும் மிக நுணுக்கமாகத் தனது வசனத்தின் மூலம் உயிர் கொடுத்து திரைக்கதையோடு உலாவ விட்டிருக்கிறார் எஸ்.ராமகிருஷ்ணன். இந்தப் படத்தில்வரும் பாடல்களை நா.முத்துக்குமார் எழுதி, யுவன் சங்கர்ராஜா இசை அமைத்திருக்கிறார். படத்தின் கதை நகர்வுக்குள் வரும் பின்னணி இசையும், பாடல்கள் வரியும் உயிர் கொடுத்திருப்பது ரசிகர்களை ரசிக்க வைத்திருக்கிறது. திறமையான யதார்த்த எழுத்தாளர் எஸ்.ராமகிருஷ்ணனை இந்தப் படத்தில் வசனத்தை எழுத வைத்து விட்டு சில விரசமான வார்த்தைகளை யதார்த்தம் என்ற போர்வையில் உலாவ விட்டிருப்பது சிறு உறுத்துதலாக இருந்தாலும் கதையோட்டத்துக்கு இது பொருந்தும். இந்தப் படத்தின் கதை பாலாவுக்கு நல்ல ஒரு பரிவட்டம்.

- குமார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Metro PC SYSTEMS

T.P - 0779591134 175 / 3 KASTHURIYAR ROAD JAFFNA

Intel Dual Core 3.0GHZ Processor
G41 Intel CHIPSET M/B
Ram 02GB DDR 3
500GB SATA HDD
15.6" LCD Monitor
USB Optical Mouse
USB Keyboard (English, Tamil, Singalam)
Branded ATX Casing
DVD Writer
36900/=

Intel Dual Core 3.0GHZ Processor
G41 Intel CHIPSET M/B
Ram 02GB DDR 3
500GB SATA HDD
15.6" LCD Monitor
USB Optical Mouse
USB Keyboard
Branded ATX Casing
DVD Writer
Free Dongle
41500/= Dongle FREE

Intel Dual Core 3.2GHZ Processor
G41 Intel CHIPSET M/B
Ram 02GB DDR 3
500GB SATA HDD
18.5" LCD Monitor
USB Optical Mouse
USB Keyboard
Branded ATX Casing
DVD Writer
Free Dongle
42900/= Dongle FREE

Intel Dual Core 3.0GHZ Processor
G41 Intel CHIPSET M/B
Ram 02GB DDR 3
500GB SATA HDD
18.5" LED Monitor
USB Optical Mouse
USB Keyboard
Branded ATX Casing
DVD Writer
Free Dongle
44000/= Dongle FREE

Intel Core i3 3.06GHZ Processor
Intel H55CHIPSET M/B
Ram 02GB DDR 3
500GB SATA HDD
18.5" LCD Monitor
USB Optical Mouse
USB Keyboard
Branded ATX Casing
DVD Writer
Free Dongle
52450/= Dongle FREE

Intel Core i3 3.06GHZ Processor
Intel H55 CHIPSET M/B
Ram 04 GB DDR 3
1000 GB SATA HDD
18.5" LCD Monitor
USB Optical Mouse
USB Keyboard
Branded ATX Casing
DVD Writer
Free Dongle
57500/= Dongle FREE

Intel Core i5 3.2GHZ Processor
Intel H55CHIPSET M/B
Ram 02GB DDR 3
500GB SATA HDD
18.5" LCD Monitor
USB Optical Mouse
USB Keyboard
Branded ATX Casing
DVD Writer
Free Dongle
62500/= Dongle FREE

மிகவும் குறைந்த விலையில்
27, 28, 29, 30 நாட்கள் மட்டும்

T.P 0779591134 175/3 Kasthuriar Road Jaffna

## அரியாலை கிழக்குக்கு பஸ் சேவைகள்

கொழும்புத்துறை, ஜூன் 26

அரியாலை கிழக்குப் பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்து வருகின்றமையை அடுத்து அந்தப் பகுதிக்கான பஸ் சேவையை யாழ். மாநகர சபை மேற்கொண்டுள்ளது. பாடசாலை மாணவர்களின் வசதி கருதி தினமும் இரு சேவைகள் காலை 7 மணிக்கும் பிற்பகல் 2.30 மணிக்கும் நடை பெறுகின்றன.

யாழ்.மாநகர சபைக்கு இந்திய அரசு வழங்கிய பஸ்களே இந்தச் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன.

இந்தச் சேவை யாழ். நகரில் இருந்து கிழக்கு அரியாலைவரை நடைபெறுகின்றது. (ம-135)

## சுயதொழில் கடனுதவி

தென்மராட்சி, ஜூன் 26

சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் ஆறு பேருக்குச் சுயதொழில் உதவிக் கடனாக 3 லட்சத்து 90 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

சாவகச்சேரி பூவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் யாழ்ப்பாணம் வாழ்வாதார கடன் முகாமைத்துவ சேவை நிலைய உதவிப் பணிப்பாளர் எஸ்.கலாதரன் ஆறு பயனாளிகளுக்குத் தலா 65 ஆயிரம் ரூபா வீதம் வழங்கினார்.

இந்த ஆறு பயனாளிகளுக்கும் சங்கத்தால் தலா 30 ஆயிரம் ரூபா வீதம் சுய தொழில் கடன் உதவி முன்னர் வழங்கப்பட்டது.

குறித்த காலப்பகுதியில் தமக்குக் கிடைத்த வருமானங்களைக் கொண்டு கடனைத் திருப்பிச் செலுத்தியதையிட்டு இவர்களுக்குக் கடன் தொகையை அதிகரித்து வழங்குமாறு பிரதேச கிராம அபி விருத்தி அலுவலர் எஸ். ரவிகரன் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து கடன் தொகை 65 ஆயிரம் ரூபாவாக அதிகரித்து வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சங்க அங்கத்தவர்கள் 50 இற்கு மேற்பட்டவர்களுக்கு யாழ்ப்பாணம் வாழ்வாதார கடன் முகாமைத்துவ சேவை நிலையத்தால் இதுவரை 15 லட்சம் ரூபாவரை சுய தொழில் உதவிக் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

விவசாயம், கால் நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, சிறு வியாபாரம், உணவுப் பொருள்கள் தயாரித்து விற்றல் போன்ற சுய தொழில்மேற்கொள்ள கடன்கள் வழங்கப்படுவதாகச் சங்கச் செயலாளர் திருமதி ம.கீர்த்திநாதன் தெரிவித்தார்.

நிலையத்தால் இதுவரை 7 கட்டங்களாக சங்கத்தின் ஊடாகக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்தார். (ம-207)

ஓரியன்டல் அக்கூரியம் (மல்ரி பாம் சென்ரர்)

வளர்ப்பு கலர் மீன் வகைகள், நவீன வகையான மீன் தொட்டி, மீன் தொட்டி உபகரணங்கள், வளர்ப்புக் குருவிகள், நாய்க்குட்டி இனங்கள், செல்லப் பிராணிகள், பூக் கன்றுகள், பூஞ்சாடிகள் என்பன. நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

தொடர்பு: மல்ரி பாம் சென்ரர்
61, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.
0217912997, 0754985400,0759880000

யாழ்→கொழும்பு, கொழும்பு →யாழ்
மற்றும் உள்ளூர் வான்சேவை
(குளிரூட்டப்பட்டது)
தொ.பே: 0759880000
AC & Non AC

## மரண அறிவித்தல்

### றோமாம்பிள்ளை பிரான்சிஸ்

குடத்தனை வடக்கு, குடத்தனையைப் பிறப்பிடமாகவும் பாரிஸ், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட றோமாம்பிள்ளை பிரான்சிஸ் நேற்று முன்தினம் (24.06.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.


அன்னார் றோமாம்பிள்ளை- செபமாலையம்மா தம்பதியரின் அன்பு மகனும் யக்கிளின் (பிரான்ஸ்) அன்புக் கணவரும் அருமைத்துரை தேவதாஸ் (Pastor C.P.M), யோகராணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அக்னெஸ் தவமணி, யோகராசா ஆகியோரின் மைத்துனரும் ஜஸ்ரின் (லண்டன்), ஜெனிபேட், ஜசிந்தா (சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் சித்தப்பாவும் றொபிந்தன், டிலானி, எனிஸ்ரன், சுதர்சன், நிக்சன், கீர்த்தனன் ஆகியோரின் மாமனும் ஹரிஸ், அபினேஸ், அபிசரோன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரது நல்லடக்கம் பற்றி விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ரோ.அருமைத்துரை (சகோதரன்)

இல.59/1, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (2171)

## மரண அறிவித்தல்



### சீனி கனகசபை

(ஓய்வு பெற்ற ஆசிரியர், இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்)

விழிசிட்டி, தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் தற்போது கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருவாளர். சீனி கனகசபை அவர்கள் கடந்த 23-06-2011 (வியாழக்கிழமை) அன்று சிவபதம் அடைந்தார். அன்னார் காலஞ்சென்ற சீனிவாசகம் மற்றும் சின்னம்மா அவர்களின் அன்புப்புதல்வரும், அமரர் தவமணியின் அருமைக்கணவரும், சிறீறஞ்சனா(கொழும்பு), சுலோஜனா(ஆசிரிய ஆலோசகர், களுத்துறை), கற்பனா(லண்டன்), சிறீகுமார்(லண்டன்), சிறீவதனா(அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவகுமார், சகாதேவன், செகராஜசிங்கம்(லண்டன்), சாய்ஈசன்( ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அமரர்கள் பொன்னுப்பிள்ளை, திருநாவுக்கரசு, சுப்பிரமணியம், சோதிமுத்து(யாழ்ப்பாணம்), கிருஸ்ணமூர்த்தி(ஹட்டன்), Dr. நவரத்தினம்(லண்டன்), Eng. கந்தசாமி ( ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், அச்சுதன்(லண்டன்), தார்மீகன், அச்சனா, சகிறா, லட்சாயினி மற்றும் றித்திகா(லண்டன்), ஷைஷ்கர்னி மற்றும் கஜானன்(அவுஸ்திரேலியா) ஆகியோரின் ஆசைப்பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (26.06.2011) ஞாயிற்றுக் கிழமை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகளின்பின் மாலை 3:00 மணியளவில் கல்கிசை பொதுமயானத்தில் தகனம் செய்யப்படும். இத்தகவலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: பிள்ளைகள்

T.P: 011-3158065
011-2361609


இல் 07-1/2, 55ம் ஒழுங்கை,
வெள்ளவத்தை.

திருப்பதி போனால் வாழ்க்கையில் திருப்பம் வரும்
வேளாங்கன்னி மாதாவிடம் போனால் வேதனை தீரும்
16875/= +Tax
4DAY 3NIGHT
விமானப்பயணச்சீட்டுக்கள் தங்குமிட வசதிகள் பயணஒழுங்கமைப்புக்கள் அனைத்தும் உள்ளடக்கப்பட்டுள்ளன.
Nation Popular Travels & Tours
NO: 82.பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்
Hotline: 0214920920
Tel : 0114375357
Mobile :0773083820
www.nationtravels.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரும்... ஆனா வராது

**ஒரு வேளை இலங்கையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்பட்டாலும் யாழ்ப்பாணத்தில் மின்சாரப் பிரச்சினைக்கான தீர்வு கிடைக்குமா? என்பது சந்தேகமே!**



மாலை வேளை. தொலைக் காட்சியில் தினமும் இடம் பெறும் தொடர் நாடகத்தை வழமை போல அன்றும் பார்த்துக் கொண்டிருந்தார் அந்த தாய். அவருக்கு அருகில் ஐந்து வயதே உடைய அவரது இரண்டாவது மகன் சஞ்ஜீவ். தினமும் மாலையில் தாயுடன் சேர்ந்து மகனும் தொடர் நாடகத்தை லயிக்கத் தவறுவதில்லை.

நாடகம் ஆரம்பமாகி பதினைந்து நிமிடங்கள் முடிந்திருக்கும். நாடகத்தில் முக்கியமானதொரு கட்டம் போய்க் கொண்டிருந்தது. இந்த வேளையில் திடீரென அணைந்தது மின்சாரம். நாடகத்தில் லயித்துப் போயிருந்த தாயார் சினம் கொண்டவராக "இந்தக் கரண்டும் உவங்களும் படுகிறபாடு. இனிப் எப்ப கரண்ட் வருமோ தெரியாது" என்றார். இந்த வேளையில் சற்றும் எதிர்பாராதவாறு பக்கத்திலிருந்த ஐந்து வயது மகன் "அம்மா கரண்ட் வரும் ஆனா வராது" என்றான். அவன் கூறியது போல மூன்று மணித்தியாலங்களுக்கு மேலாக மின்சாரம் வரவேயில்லை.

வைகைப் புயல் வடிவேலுவின் 'வரும் ஆனா வராது' என்ற இந்த நகைச்சுவை வசனம் யாழ்ப்பாணத்து மின் விநியோகத்துக்கு நன்கு பொருத்தமானது என்றே படுகிறது. அதற்கு காரணமும் இருக்கிறது. எந்த நேரத்தில் நிறுத்தப்படும்? எந்த நேரத்தில் மீண்டும் வரும்? என்பதை எல்லாம் யாழ்ப்பாணத்து மின்சாரத்திடம் நீங்கள் கேட்க முடியாது. அதுதான் நினைக்கும் நேரம் வரும். வராமல் விடும். அது மின்சாரத்தின் விருப்பம்.

ஒருவேளை இலங்கையில் இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு எட்டப்பட்டாலும் யாழ்ப்பாணத்தில் மின்சாரப் பிரச்சினைக்கான தீர்வு கிடைக்குமா? என்பது சந்தேகத்துக்கு உரியதே.

### தீர்வேதுமின்றி...

இந்த மின்சாரப் பிரச்சினை இன்று நேற்று தொடரும் பிரச்சினை அல்ல. 1996ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தை இராணுவம் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்த பின்னரான காலப் பகுதியிலிருந்து தொடரும் ஒரு மிக முக்கிய பிரச்சினை. இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு என்பது இன்றுவரை எட்டாக் கனியாகவே இருந்து வருகிறது.

பிரச்சினை வருகின்ற போதெல்லாம் அதனை அந்த நேரத்தில் ஒரு சீருக்குக் கொண்டு வருவதற்காகக் காணப்படும் தற்காலிக ஏற்பாடுகள் தான் இந்தப் பிரச்சினை இவ்வாறு நீண்டு செல்வதற்கு மிக முக்கிய காரணம். தற்காலிகத் தீர்வு எட்டப்பட்ட பின் நிரந்தரத் தீர்வுக்கான எந்தவொரு முயற்சியும் எடுக்கப்படாமையே இந்தப் பின்னடைவுக்கான அடிப்படை.

யாழ்.குடாநாட்டில் இலங்கை மின்சார சபையின் செயற்பாடுகளை முற்றாகக் குறை கூறுவதற்காக நாங்கள் இந்த விடயத்தை இங்கே சுட்டிக் காட்ட விளையவில்லை. யாழ். மக்கள் பல்வேறு துன்பங்களை அனுபவித்து - துயரங்களைச் சுமந்து - அல்லற்பட்டு மீண்டும் தமது சொந்த இடத்துக்குத் திரும்பி வந்த போது தன்னிடம் அப்போது இருந்த வளங்களை மட்டுமே வைத்துக் கொண்டு ஒரு உச்சக் கட்டமான சேவையை மின்சார சபை வழங்கியது என்பதை யாழ்ப்பாண மக்கள் என்றுமே மறக்க மாட்டார்கள்.

நெருக்கடி நிறைந்த- எரிபொருள் தட்டுப்பாடு மிக்க - போர் சூழல் கொண்ட அந்தக் காலப் பகுதி யில் குடாநாட்டுக்கு மின்சாரத்தை வழங்குவதற்கு மின்சார சபையின் அதிகாரிகள், பணியாளர்கள் கொடுத்த அர்ப்பணிப்பான சேவையின் மூலம் குறித்த நேரங்களிலாவது மின்சாரம் கிடைக்கக் கூடிய நிலைமை அப்போது ஏற்பட்டது. இந்த சேவை பாராட்டப்பட வேண்டிய ஒன்று.

ஆயினும் காலத்துக்கு ஏற்றவாறு அனைத்து விடயங்களும் மாறும் போது நாங்களும் அவற்றுக்கேற்றவாறு எம்மையும் மாற்றியமைத்துக் கொள்ளவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் காலத்தின் போக்குக்கு ஈடு கொடுக்க எம்மால் முடியாமல் போய் விடும். யாழ்ப்பாண மின்சார சபையும் அதற்கு விதி விலக்கல்ல. யாழ்ப்பாண மின் விநியோகத்தை சீராக்குவதில் முன்பு போர்ச் சூழலைக் காரணம் காட்டி மின்சார சபை தப்பித்துக் கொண்டாலும் இப்போது அதற்கு காரண காரியம் கூறுவதற்கு இடமில்லை.

இனப் பிரச்சினை தவிர ஏனைய பிரச்சினைகளுக்கு தீர்வுகள் எட்டப்பட்டுவரும் இந்த வேளையில் யாழ்ப்பாணத்தில் மின்வெட்டுக்கு மட்டும் இன்னும் தீர்வு கிட்டவில்லையே எனப் பலரும் அங்கலாய்த்துக் கொள்வது மின்சார சபை அதிகாரிகளுக்குத் தெரியாத ஒன்று அல்ல. ஆயினும் இதற்கு ஏன் இன்னும் ஒரு நிரந்தரமான தீர்வு எட்டப்பட்டாமல் உள்ளது என்பது தான் தெரியவில்லை.

### உள்நோக்கம் என்ன?

இவற்றை வைத்துப் பார்க்கும் போது இதில் உள்நோக்கம் ஒன்று உள்ளது என்றே எண்ணத் தோன்றுகின்றது. யாழ்.குடாநாட்டுக்கு முழுமையாக மின்சாரத்தை விநியோகிக்கக் கூடிய நிறுவனங்கள் பல உள் நாட்டிலும் சரி வெளிநாட்டிலும் சரி உள்ளன. அவ்வாறான நிறுவனங்களைத் தேடிப் பிடிப்பது என்பது இலங்கை அரசுக்கு பெரிய வேலையல்ல. ஆயினும் குடாநாட்டுக்கு மின்சாரம் வழங்குவதற்கு வரும் நிறுவனங்கள் அரைகுறை வலுக்கொண்டவையாகவே 1996 முதல் இன்று வரையுள்ளன. அவ்வாறான நிறுவனங்களுடன் தான் அரசு ஒப்பந்தம் செய்து கொள்கிறது.

குடாநாட்டுக்கான மின் விநியோகத்தை மேற்கொண்ட 'கூல் எயார்', 'அக்றிக்கோ', 'நொதேர்ன் பவர்' ஆகிய நிறுவனங்களில் எந்தவொரு நிறுவனமும் முழுமையான மின் விநியோகத்தை மேற்கொள்ளவில்லை. எல்லாம் அரைகுறைதான். மின்வெட்டு இல்லாமல் இந்த நிறுவனங்கள் மின் வழங்கிய வரலாறே கிடையாது. என்ன செய்ய முடியும்? அந்த நிறுவனங்களால் வழங்கக் கூடிய மின்சாரம் அவ்வளவுதான். அவர்களைக் குறை கூறிப் பயன் இல்லை.

### எதிர்பார்த்தது கிடைக்கவில்லை

குடாநாட்டுக்கு மின் வழங்க இறுதியாக ஒப்பந்தம் செய்து வந்த நிறுவனம் 'நொதேர்ன் பவர்'. குடாநாட்டுக்கு முழுமையான மின் விநியோகத்தை மேற்கொள்வது என்ற ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே அந்த நிறுவனம் இங்கு வந்தது. கிட்டத்தட்ட 22 கிலோ வாட்ஸ்ஸுக்கு மேற்பட்ட வலுக் கொண்ட மின்சாரத்தை அந்த நிறுவனம் வழங்கும் என அப்போது எதிர்பார்க்கப்பட்டது. இந்த நிறுவனத்தின் வருகையுடன் குடாநாட்டில் மின்வெட்டே இல்லாமல் போய் விடும் என்றும் அப்போது அதிகாரிகளால் கூறப்பட்டது. அந்த நிறுவனத்தின் மின்பிறப்பாக்கிகள் உயர் வலுக் கொண்டவை என்றும் பறை தட்டப்பட்டது. இதைக் கேட்டதும் யாழ்ப்பாண மக்களுக்கு ஒரே சந்தோஷம். மின்வெட்டற்ற மின்சாரம் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் அவர்களும் இருந்தார்கள். ஆயினும் அந்த எதிர்பார்ப்புகள் எல்லாம் தவிடுபொடி.

### நிலைமை படுமோசம்

இப்போது நிலைமையே தலைகீழ். எதிர்பார்த்ததுக்கு முற்றிலும் மாறாக அடிக்கடி மின்வெட்டு. தினமும் மின் தடை. கடந்த சில தினங்களாக யாழ்ப்பாண மின்சாரத்தின் நிலைமையோ பாடு மோசம். முழுமையான மின் விநியோகத்தை மேற்கொள்ளவென யாழ். வந்த 'நொதேர்ன் பவர்' ஒரு நாள் கூட முழுமையான விநியோகத்தை வழங்கவில்லை. வந்த நாள் முதல் அந்த நிறுவனத்தின் மின் பிறப்பாக்கிகளுக்கு ஏதோ ஒரு கோளாறு தொடர்ந்த வண்ணமே இருக்கிறது.

முடிவின்றித் தொடரும் இந்த மின் வெட்டினால் இப்போது சீற்றத்தின் உச்சிக்குப் போய் இருக்கிறார்கள் குடா நாட்டு மக்கள். அந்தளவுக்கு இந்த மின் வெட்டு அவர்களை போட்டுத் தாக்கியிருக்கிறது.

யாழ்.குடாநாட்டின் தற்போதைய உச்சக் கட்ட மின் பாவனை 40 மெகா வாட்ஸ். இந்த உச்சக் கட்டப் பாவனை மாலை 6 மணியிலிருந்து இரவு 10.30 மணிவரை. ஏனைய நேரங்களில் 22 மெகா வாட்ஸ் யாழ்ப்பாணத்துக்கு போதுமானது. தற்போது 'அக்றிக்கோ' நிறுவனம் 12 மெகா வாட்ஸ் மின்சாரத்தையும், இலங்கை மின்சார சபை 10 மெகா வாட்ஸ் மின்சாரத்தையும், 'நொதேர்ன் பவர்' 18 மெகா வாட்ஸ் மின்சாரத்தையும் வழங்கி வருகின்றன.

### காரணம் கற்பிக்கும் அதிகாரிகள்

'நொதேர்ன் பவர்' நிறுவனத்தின் மின்பிறப்பாக்கிகளுக்கான எரிபொருள் தீர்ந்தமையே கடந்த சில நாள்களாக மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டமைக்கு காரணம் என்று மின்சார சபை அதிகாரிகள் காரணம் கற்பித்தனர். எரிபொருள் கிடைத்ததும் அது சீராகி விடும் என்றனர்.

கடந்த சில தினங்களாகத் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் மின்வெட்டால் பொதுமக்களின் அன்றாட அலுவல்கள் பல தடைப்பட்டுள்ளதுடன் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களின் பணிகளும் மோசமாகப் பாதிப்படைந் துள்ளன. மக்களுக்கான அத்தியாவசிய சேவைகளில் ஒன்றாக மின்சாரம் உள்ளது. அதில் பிரச்சினை ஏற்பட்டால் அனைத்தும் தடைப்பட்டு விடும் - ஸ்தம்பிதம் அடைந்துவிடும் என்பது இந்த மின்சார சபை அதிகரிகளுக்குத் தெரியாதா?

எப்போது மின் தடை வரும் என்ற ஏக்கத்துடன் பணியாற்ற வேண்டிய நெருக்கடி நிலைமையில் அலுவலகப் பணியாளர்களும் வங்கி ஊழியர்களும் உள்ளனர். இந்த இடங்களுக்குச் செல்லும் பொது மக்கள் தமது அலுவல்களை நிறைவு செய்வதற்கு நீண்ட நேரம் காத்திருக்க வேண்டிய சூழ்நிலையும் ஏற்படுகிறது. இதனால் அவர்களது ஏனைய பணிகள் பாதிப்படைகின்றன. அத்துடன் மின் தடை காரணமாக எரிபொருள் நிலையங்களில் கூட்டம் அலை மோதுகின்றது. மின்சாரம் வரும்வரை அங்கு காத்திருக்க வேண்டும். இவற்றை விட திடீரென வந்து திடீரெனச் செல்லும் மின்சாரத்தால் வீடுகளிலுள்ள மின் பாவனைப் பொருள்கள் பழுதடைந்து விடுகின்றன.

### பரீட்சைகள் நெருங்கும் வேளை

இவற்றை விட மற்றொரு முக்கிய பிரச்சினை மாணவர்களின் கல்வி. இரவில் அடிக்கடி இடம்பெறும் மின்வெட்டால் தமது கல்வியை தொடர்வதில் பாடசாலை மாணவர்களும் சரி பல்கலைக்கழக மாணவர்களும் சரி பெரும் சிரமப்படுகிறார்கள். ஜீ.சி.ஈ. உயர் தரப்பரீட்சை எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் நடைபெற இருக்கிறது. அதற்கான ஆயத்தத்திலும் மாணவர்கள் ஈடுபட்டுள்ளார்கள். இவர்களுக்கும் இந்த மின் தடை பெரும் பிரச்சினையாகவே இருக்கிறது. "இந்த மின்வெட்டினால் கடையில் ஒரு சீரான வியாபாரத்தைக் கூட மேற்கொள்ள முடியவில்லை. இதற்கு எப்போது தீர்வோ தெரியாது" என்கிறார் யாழ்.நகரப் பகுதி வர்த்தகர் மகாலிங்கம்.

"பகலில் பாடசாலை, ரீயூசன் என்று திரிந்துவிட்டு வீடு வரும் மகன் இரவில் படிப்பதற்கு இந்தக் கரண்ட் எந்த நேரம் வரும் என்டு தெரியாது" என்கிறார் உயர்தர மாணவன் டிலக்ஷனின் தாயான பார்வதி.

"எக்ஸ்சாம் வாற நேரம் பாத்துத் தான் இந்த கரண்ட் கட்டும் வரும்" என்கிறார் பல்கலைக்கழக மாணவி சுகன்யா.

ஒட்டு மொத்தத்தில் இந்த மின்தடை காரணமாக குடாநாடு முழுவதும் பாதிப்படைகிறது. அனைத்து சேவைகளும் இதனால் முடக்கப்படுகிறது. குடாநாட்டின் பொருளாதாரத்திலும் பாதிப்பைச் செலுத்தக் கூடிய கட்டத்துக்கு இந்த மின் விநியோகப் பிரச்சினை வந்து விட்டது. ஆயினும் அதற்கான நிரந்தரத் தீர்வு பற்றித் தான் இதுவரை எவரும் யோசித்ததாக - சிந்தித்தாகத் தெரியவில்லை.

இந்த விடயத்தில் இனிமேலாவது அதிக அக்கறை காட்டி யாழ்ப்பாணத்தில் மின்வெட்டற்ற ஒரு நல்ல நிலைமையை உருவாக்க வேண்டியது இலங்கை மின்சார சபையின் கடமையல்லவா.

இந்தப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரமான தீர்வை எட்டுவதற்கு உரிய தரப்புக்களுடன் தொடர்பு கொண்டு யாழ். மக்களின் நிலைமைகளை எடுத்து விளக்கி குடாநாட்டுக்குச் சீரான மின்விநியோகத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டால் அதனைச் செய்தவர் களுக்கு யாழ். மக்கள் என்றும் நன்றியுடையவர்களாக இருப்பார்கள். இதே பத்தியில் அவர்களைப் பாராட்ட நாமும் தயங்கமாட்டடோம். இந்த கட்டுரை எழுதி முடிக்கப்படும் வேளையிலும் மின்வெட்டு தனது வேலையை கட்டத் தவறவில்லை. வரும்! ஆனா வராது!!

**அதிரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள சகல நிறுவனங்களுக்கும் தேவையான கணக்குப் பதிவு(Book keeping) கணக்காய்வு (Auditing) சகல விதமான வரி(Tax) சம்பந்தமான வேலைகள், ஆலோசனைகள் முறைப்படி செய்து தரப்படும்.
தொடர்பு- T.P-0776220087

## தோட்டக்காணி விற்பனைக்கு

பருத்தித்துறை, கொடிகாமம் பிரதான வீதிக்கு அருகில் புலோலி இணைவொல்லையில் 6 பரப்பு 7½ குளி தோட்டக்காணி விற்பனைக்கு அல்லது குத்தகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: T.P-0113171542

## வீடு வாடகைக்கு

154, கோயில் வீதியில் A/C, வீட்டுத்தளபாடங்கள் ரெலிபோன், இன்ரநெற் வசதிகளுடன் வீடு வாடகைக்குண்டு. யுனிசெவ்விற்கு அருகில், N.G.O கள் விரும்பத்தக்கது.
தொடர்புகள்- 0212229989, 0775414189

## கடை வாடகைக்கு

யாழ். நவீன சந்தைக்கு முன்பாக (13'x120')கடை வாடகைக்கு உண்டு.
தொ.பே-0770790690, 0778212136

## மரண அறிவித்தல்

### டேவிற் அல்வின்



யாழ்ப்பாணம், 70/20, மத்தியூஸ் வீதியைப் பிறப்பிடமாகவும், 60/4, சொலமன் லேன், சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட டேவிற் அல்வின் நேற்று (25.06.2011) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லர் டேவிட்- அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முகமது இப்ராஹிம்- திரேசம்மா தம்பதியரின் மருமகனும், றாகிலாவின் அன்புக் கணவரும், உஷா, ஆஷா(ஜேர்மனி), றொக்சன் (ஆஸ்திரேலியா), மேரி, சதீஸ்(ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ராஜன்(ஷெரோன் ஹாட்வெயார்), ஜோன்சன்(ஜேர்மனி), தஸ்மினா(ஆஸ்திரேலியா), மகாராஜா (போதகர், சீயோன் தேவாலயம்), சஜானி(ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான கிறேகரி, தங்கராஜா(பிரான்ஸ்), அலெக்சாண்டர்(உரிமையாளர், லொயலாஸ்) மற்றும் தேவு(பிரான்ஸ்), புவனா, ராஜேஸ்(பிரான்ஸ்), குமார்(பிரான்ஸ்) காலஞ்சென்ற ரவி(பிரான்ஸ்) மற்றும் செல்வக்குமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், மாசில்லா (பிரான்ஸ்) , காலஞ்சென்றவர்களான சந்திரா, யூசுப் மற்றும் பஸிர், றமீன்(தனு எலக்ரிக்கல், கட்டட ஒப்பந்தகாரர்), சுபேர் (பொலநறுவை), றகூப்(வவுனியா), காலஞ்சென்ற பஜீர் மற்றும் லைலா(சவுதி), றஜித்தா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

60/4, சொலமன் லேன்,
சுண்டுக்குளி.

தகவல்:
மனைவி

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், பிறவுண் றோட்டில் 17/1 இலக்கத்தில் 2 மாடி வீடு, 10 அறைகளுடன் வாடகைக்கு உண்டு. (நிறுவனங்கள் விரும்பத்தக்கது)
தொடர்புகளுக்கு-0778072985

## வீடும் காணியும் விற்பனை

நாவலர் வைரவர் கோயிலடி, இளவாலையில் 5 பரப்புக் காணியும், சகல வசதிகளுடன் கூடிய வீடும் விற்பனைக்குண்டு
தொடர்பு- 0770366385, 0213002371

## காணி விற்பனைக்கு

யாழ். உரும்பிராய் கிழக்கு கற்புலம் வீதி 23 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. (கோப்பாய் வீதி, ஞானவைரவர் கோயிலுக்கு மிக அருகில்)

தொடர்புகளுக்கு-
ராஜா/ செல்வா
0774121657/ 0113159059

## மரண அறிவித்தல்

### சின்னையா பரமலிங்கம்



இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா பரமலிங்கம் 25.06.2011 சனிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான தம்பாபிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, சிவலிங்கம் மற்றும் ஞானேஸ்வரி (கனடா), பாலசிங்கம் (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தனலட்சுமி, யோகராசா ஆகியோரின் மைத்துனரும் சிவகரனின் (நிகழ்ச்சித்திட்ட உதவியாளர், பிரதேச செயலகம், கரைச்சி) அன்புத் தந்தையும், துஷ்யந்தியின் அன்பு மாமனும், லாகித்தியனின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 மணிக்கு கச்சாய் வீதி, கொடிகாமத்தில் உள்ள மகனின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் தெற்கு, தாவடி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சாய் வீதி,
கொடிகாமம்.

(கி/ 1181)

தகவல்:
சிவகரன்-(மகன்)

## உயிரூட்டுகின்றோம்



பழுதான தொழில்சார் மின்சார உபகரணங்களைத் திருத்திக்கொள்ளவும், புதிய உபகரணங்களையும் உதிரிப்பாகங்களையும் கொள்வனவு செய்யவும், எங்களது ஸ்தாபனத்தை நாடுங்கள்.

**உத்தரவாதங்கள் எங்களது நிலையத்திலேயே, உடனே செய்து கொடுக்கப்படும். (கொம்பனிக்கு அனுப்பி செய்வதில்லை)**

செயின்சோ, ஜெனறேட்டர், மரவேலை இயந்திரம், மின் உபகரணங்கள், வோசிங் மெசின்,மின்சார கேத்தல்கள், றயிஸ் குக்கர் போன்றவற்றின் உதிரிப்பாகங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**GREEN HOUSE TRADING COMPANY (PVT) LTD.**
இல. 05, கருவப்புலம் ஒழுங்கை, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு. (திருநெல்வேலி). 021 2226459.
(நல்லூர் பிரதேச செயலகத்திற்கு அருகில்)

## எவரெஸ்ட் தாளங்காய்த் தைலம்



* வாதம், மூட்டுவீக்கம், மூட்டுவேதனை என்பவற்றுக்குச் சிறந்த நிவாரணி.
* யாழ்ப்பாணத்துப் பாரம்பரிய சித்த மருத்துவர்களின் கையாட்சி முறைப்படி தயாரிக்கப்பட்டது.
* யாழ்ப்பாணத்தில் உள்ள எல்ல மருந்தகங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

**எவரெஸ்ட் மருந்தகம்**
(பதிவு Ay/MF/JA/295)
உசன், மிருசுவில்.

## கேக் பயிற்சி வகுப்புகள்

கேக் கலையில் உங்களின் திறமையை மேலும் வளர்த்திட ஓர் அரிய சந்தர்ப்பம். கண்களையும் மனங்களையும் கவரும் (American) கேக் வகைகள் வடிவமைப்புக்கான பயிற்சி வகுப்புகள் சான்றிதழ் வழங்கப்படும். பொருள்கள் இலவசம். சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பம்.

தொடர்புகளுக்கு-
**Seyon Cake Art & Academy**
இல.58, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
0719095284

## உதவி கண்ட்ராக்டர்கள் அவசரமாக தேவை.

ஓமந்தை மாவட்டத்தில் எங்களுடைய பாதைகள் திருத்தும் வேலைகளுக்கு பின்வருமாறு குறிப்பிட்ட வேலை ஆட்கள் தேவை.

- "சட்டரிங்" தொழிலாளிகள்.
- தொழிலாளிகள்.
- சமையல்காரர்கள்.

* இருப்பிடம் இலவசமாக தரப்படும்.

கீழ்காணும் விலாசத்திற்கு உடனடியாக வந்து சந்திக்கவும்.

I.C.C - ஸ்தல காரியாலயம்,
201-மைல்தூண் (A-9- பாதை)
கண்டி றோட்,புளியங்குளம்.

ICC

தொடர்பு கொள்ளும் இலக்கம்: 0777749789.

## வீடு விற்பனை

பொன்னையா லேன், ஆனைக்கோட்டையில் இரண்டு பரப்புடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு . விலை பேசித் தீர்மானிக்கலாம். தரகர் இல்லை.
தொ.பே- 0718451438

## கார் வாடகைக்குண்டு

திருமணச் சேவைக்குரிய அதி சொகுசு கார் வாடகைக்குண்டு.
தொடர்பு- 0772306390
0212223851

## SAN INTERNATIONAL Pvt (Ltd).

San International நிறுவனம் மாணவர்களின் நன்மைகருதி வழங்க இருக்கும் மற்றும் ஒரு குறுகிய கால வழிகாட்டி...
**01.07.2011 ஆரம்பமாகவுள்ளது.**

### Sumana Beauty culture & Home Science Academy

13 வருடகால அனுபவம் வாய்ந்த ஆசிரியரால் நடத்தப்படும்
Diploma and Certificate Courses...

* Facial * Make up (Bridal, Hindu, Christian& Reception Brides)
* Hair Style * Cake Making & Icing
* Dress Making * Saree Working

(49,21,23)



* பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்
* வெளிநாட்டுக்குச் செல்லவுள்ள மாணவர்கள், யுவதிகளின் நன்மை கருதி குறுகிய கால கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.
* Uk Student Visa, அனைத்து நாடுகளுக்குமான விசா ஒழுங்குகள் மிகச்சிறந்த முறையில் மேற்கொள்ளப் படுகின்றன.
* UK. செல்லவுள்ள மாணவர்களுக்கான குறுகிய கால ஆங்கிலப் பயிற்சி மற்றும் அவர்களுக்கான ஆலோசனைகள் எமது UK கிளை நிறுவனத்தால் இலவசமாக வழங்கப்படும்.

Contact us :- No, 69, Arasady Road, Jaffna.
T.P: 0212223440, 0773982979.

## பிராந்திய விநியோக முகவர்கள் தேவை

රිචඩ්
අභ්‍යාස පොත් - ලිපි ද්‍රව්‍ය

ரிசட் அப்பியாச புத்தகங்கள், காகிதாதிகள், வெளியீடுகள், பேனைகள், பென்சில்களை விநியோகிப்பதற்கு கீழ்காணும் பிராந்தியங்களில் முகவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

1. பொரளை, மரதானை, களுத்தறை, எல்பிட்டிய, காலி, திஸ்சமஹாராம, ஹம்பந்தொட்டை, மத்துகம. மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் - 0773 540020
2. வவுனியா, கிளிநொச்சி, மன்னார், ஓட்டமாவடி, ஏறாவூர், வாழச்சேனை, மட்டக்களப்பு, சம்மாந்துரை, காத்தாங்குடி, திருகோணமலை, மூதூர், அம்பாறை, தம்புத்தேகம, கெக்கிராவ, மடவச்சி, பதவ் ஸ்ரீ புர. இப்போதே அழையுங்கள் - 0773 540021
3. இரத்தினபுரி, பெல்மடுல்லை, பலங்கொடை, கஹவத்தை, ஹட்டன், மஸ்கெலிய, பொகவன்தலாவை, தலாவக்கலை, நுவரெலியா, ராகலை. இப்போதே அழையுங்கள் - 0773 540033

| உங்களிடமிருந்து தேவையானது | எம்மிடமிருந்து உங்களுக்கு |
|---|---|
| லொறி வாகனம், ரூபா 2 லட்சம் முதல் 10 லட்சம் வரையிலான வங்கிப் பிணையம், களஞ்சிய வசதிகள் மற்றும் சிறந்த முயற்சி. | விற்பனை பிரதிநிதியொருவர், வாகன கொடுப்பனவு, தேவையான விளம்பரம் மற்றும் வியாபார பங்கிலாபம். |

**மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 0773 540005**

රිචඩ්
අභ්‍යාස පොත් - ලිපි ද්‍රව්‍ය

வ/ப ரிசட் டிரேடின் தனியார் நிறுவனம்
இல. 64, பெரகும்பா வீதி, குருநாகல்.
Fax: 037 4690701 Email: richard@richard.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலை- ஜொலிஸ்ரார் மோதும் கிரிக்கெட் இறுதியாட்டம் இன்று காலை




யாழ்ப்பாணம், ஜூன் 26
கொக்குவில் மத்திய சன சமூக நிலையத்தால் நடத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் யாழ். பல்கலைக்கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இந்தப் போட்டிக்குப் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி இ.விமலன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினராகக் கொக்குவில் இந்துக் கல்லூரியின் விளை யாட்டுத்துறை முன்னாள் பொறுப் பாசிரியர் உமாசுதன் கலந்து கொள்ளவுள்ளார்.

இறுதியாட்டத்தில் மோதும் இரு அணிகளும் பலமான நிலையில் உள்ளமையால் ஆட்டம் விறுவிறுப்பானதாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (த-23)

## பெரியமடு ம.வி சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 26
மடு கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டியில் 15, 19 வயது பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான கரம் போட்டியில் பெரியமடு மகா வித்தியாலய அணி சம்பியன் பெற்றது.

19 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான பூப்பந்தாட்டப் போட்டியிலும் பெரியமடு மகாவித்தியாலயம் சம்பியனாகியுள்ளது. (த-23)

## உதைபந்தாட்டம்

சென்.ஜேம்ஸ் வித்தியால யத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவையொட்டி யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையே உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடத்தவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் யாவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (த-23)

# கொக்குவில் இந்துக் கல்லூரியை 52 ஓட்டங்களால் வென்றது சென்றல்

யாழ்ப்பாணம், ஜூன் 26
யாழ். மத்தியகல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் 17வயதுப் பிரிவு அணிகளுக்கு இடையிலான சிநேகபூர்வ கிரிக்கெட் ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி 52 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

கடந்த புதன்கிழமை மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதிக்கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கொக்குவில் இந்துக் கல்லூரி அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.மத்திய கல்லூரி அணி 43.4 ஒவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 278 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் நிறேஷ் 94 ஓட்டங்களையும் யூலியஸ் 90 ஓட்டங்களையும் சர்மிகன் 22 ஓட்டங்களையும் பெற்றனர். உதிரிகளாக 37 ஓட்டங்கள் பெறப்பட்டன.

பந்து வீச்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி வீரர்களான ஆதித்தன் 8.4 ஓவர்கள் பந்து வீசி 26 ஓட்டங்களுக்கு ஆறு விக்கெட்டுக்களையும், பார்த்தீபன் 9 ஓவர்கள் பந்து வீசி 42 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

278 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணியினர் 50 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 226 ஓட்டங்களை மட்டும் பெற்றனர்.

இதில் ஆதித்தன் 65 ஓட்டங்களையும், தேவ்விகன் 31 ஓட்டங்களையும், சுலோசன் 28 ஓட்டங்களையும், கீர்த்திகன் 22 ஓட்டங்களையும், சாந்திகன் 20 ஓட்டங்களையும் பெற்றதுடன் உதிரிகளாக 30 ஓட்டங்களும் பெறப்பட்டன.

பந்து வீச்சில் யாழ். மத்திய கல்லூரி அணி வீரர்களான யூலியன் 7 ஓவர்கள் பந்து வீசி 15 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், கஸ்ரேண் 9 ஓவர்கள் பந்து வீசி 41 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், ஜேன்திரன் 7 ஓவர்கள் பந்து வீசி 39 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும், டார்வின் 8 ஓவர்கள் பந்து வீசி 42 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (த-23)



இலங்கை ரெனிஸ் சங்கத்தின் ஏற்பாட்டில் பாட்லீட் பினான்ஸ் அனுசரணையுடன் யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே நடத்தப்பட்ட 'ரெனிஸ் 105' சுற்றுப் போட்டித் தொடரில் ஆண்களுக்கான கிறீன் பந்து போட்டியில் வெற்றியீட்டிய சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி யினர், விருந்தினர்கள், பொறுப்பாசிரியர்களுடன். (த-23)

## காலிறுதியாட்டம் நாளை

கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தி வரும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் காலிறுதியாட்டம் நாளை திங்கட்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரி விளையாட்டுமைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ள இந்த ஆட்டத்தில் வட்டக்கச்சி லக்கிஸ்ரார் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து தர்மபுரம் விளைபூமி விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (த-23)

## இறுதிப்போட்டிகளுக்கு 4 அணிகள் தகுதி

'சமபோச' நிறுவனத்தின் அனுசரணையுடன் இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையேயான 13 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டத்தில் பெண்கள் பிரிவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி, குளமங்கல் ஆர்.சி. ஆகியனவும் ஆண்கள் பிரிவில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி, சென். பற்றிக்ஸ் கல்லூரி ஆகியனவும் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளன.

நேற்று யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் முதலில் இடம்பெற்ற பெண்கள் பிரிவினருக்கான ஆட்டத்தில் கிளிநொச்சி மகா வித்தியாலய அணியை எதிர்த்து குளமங்கல் ஆர்.சி. வித்தியாலய அணி மோதிக் கொண்டது.

இதில் குளமாங்கல் ஆர்.சி. வித்தியாலய அணி எதிர்த்து விளையாடிய கிளிநொச்சி மகா வித்தியாலய அணியை 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது.

பெண்களுக்கான மற்றுமொரு அரையிறுதியாட்டத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து கிளிநொச்சி சிவநகர் அ.த.க அணி மோதியது. இதில் இரு அணியினரும் எதுவித கோல்களையும் பெறாததால் ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது. ஆட்டம் வெற்றி தோல்வி காண்பதற்காக 5 சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி எதிர்த்து விளையாடிய கிளிநொச்சி சிவநகர் அ.த.க. பாடசாலை அணியை 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆண்களுக்கான அரையிறுதி ஆட்டத்தில் முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து அருணோதயக் கல்லூரி அணி மோதியது. இதில் இளவாலை சென். ஹென்றிஸ்கல்லூரி அணி எதிர்த்து விளையாடிய அருணோதயக் கல்லூரி அணியை 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்டது.

ஆண்களுக்கான அரையிறுதி ஆட்டத்தில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதிக்கொண்டது.

இதில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி எதிர்த்து விளையாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை 4:0 என்ற கோல்கணக்கில் வெற்றிகொண்டது. (த-23)

# பிரதேச செயலகங்களுக்கு இடையிலான தடகளப் போட்டிகளில் வென்ற வீரர்கள்

வலி.வடக்கு, ஜூன் 26
வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட செயலக விளையாட்டுப் பிரிவு, யாழ். மாவட்ட பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடைபெற்ற ஆண்களுக்கான விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள் விவரம் வருமாறு:

**100 மீற்றர்**
எட்வின் எடின் (யாழ்ப்பாணம்), எஸ்.சிவசங்கர் (யாழ்ப்பாணம்),எம்.அபிதா (ஊர்காவற்றுறை).

**200 மீற்றர்**
எட்வேட் எடின் (யாழ்ப்பாணம்),எம்.ஜெனோசன் (சண்டிலிப்பாய்),எஸ்.விநோதன் (சாவ கச்சேரி).

**400 மீற்றர்**
எ.டொமிக்கோ (ஊர்காவற்றுறை),எம்.தினேஸ் (வேலணை), ஈ.அமல்ராஜ் (கரவெட்டி).

**800 மீற்றர்**
எம்.தினேஸ் (வேலணை), ஆர்.சேந்தன் (நல்லூர்).

**1500 மீற்றர்**
என்.ரஜீகரன் (மருதங்கேணி), ஆர்.கஜேந்திரன் (சாவகச்சேரி), எ.அனோஜன் (யாழ்ப்பாணம்).

**5000 மீற்றர்**
என்.ரஜீகரன் (மருதங்கேணி), எஸ்.ஞானேந்திரன் (நெடுந்தீவு),என்.ஜெகதீஸ்வரன் (தெல்லிப்பழை).

**10,000 மீற்றர்**
என்.ரஜீகரன் (மருதங்கேணி), எஸ்.ஞானேந்திரன் (நெடுந்தீவு),என்.ஜெகதீஸ்வரன் (தெல்லிப்பழை).

**உயரம் பாய்தல்**
பி.அபிராகன் (யாழ்ப்பாணம்), பி.பாலசங்கர் (நல்லூர்), ஆர்.சதீசன் (நல்லூர்).

**கோலூன்றிப் பாய்தல்**
கே.கணதீபன் (தெல்லிப்பழை),நி.பாலகுமார் (பருத்தித்துறை), எஸ்.நவநீதன் (தெல்லிப்பழை).

**குண்டுபோடுதல்**
ஜீ.பிரகாஷ் (நல்லூர்), எஸ். விஷ்னுகரன் (யாழ்ப்பாணம்), வி.ஹரிகரன் (பருத்தித்துறை).

**தட்டெறிதல்**
வி.ஹரிகரன் (பருத்தித்துறை), எ.கிருஷ்ணமூர்த்தி (யாழ்ப்பாணம்), எஸ்.விஷாகரன் (யாழ்ப்பாணம்).

**நீளம் பாய்தல்**
எ.ரகீன்ராஜ் (சண்டிலிப்பாய்), வி.ஜஸ்மினன் (உடுவில்), என்.ரஜீகரன் (சாவகச்சேரி).

**முப்பாய்ச்சல்**
என்.ரஜீகரன் (சாவகச்சேரி), எ.ரகீன்ராஜ் (சண்டிலிப்பாய்), வி.ஜஸ்மினன் (நல்லூர்).

**400 மீற்றர் தடைதாண்டல்**
எஸ்.அனிஸ்ரன் (தெல்லிப்பழை),எ.அனோஜன் (யாழ்ப்பாணம்),கே.தேவசஞ்சிவி (காரைநகர்).

**110 மீற்றர் தடைதாண்டல்**
எல்.எரிக்பிரதாப் (யாழ்ப்பாணம்),கே.ஐங்கரன் (ஊர்காவற்றுறை),கே.ஜெயக்குமார் (சங்கானை).

**4×100 மீற்றர் அஞ்சல் ஓட்டம்**
யாழ்ப்பாணம் பிரதேச செயலகம், ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவு, தெல்லிப்பழை பிரதேச செயலகம்.

**4×400 மீற்றர் அஞ்சல் ஓட்டம்**
யாழ்ப்பாணம் பிரதேச செயலகம்,சாவகச்சேரி பிரதேச செயலகம்,தெல்லிப்பழை பிரதேச செயலகம்.

(த-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### சின்னையா சதாசிவம்

யாழ்ப்பாணம், ஆவரங்காலைப் பிறப்பிட மாகவும், 1 ஆம் யூனிற், முரசுமோட்டையை வசிப் பிடமாகவும் கொண்ட சின்னையா சதாசிவம் நேற்று (25.06.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2011) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் ஐயங்கோயி லடி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண் பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
விஜயன் (மருமகன்).

## மரண அறிவித்தல்

### சரவணமுத்து இந்திரராசா (ஓய்வுபெற்ற மின்சாரசபை ஊழியர்)

வரியப்புலம், சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், ஐயனார் கோயி லடி, மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து இந்திரராசா நேற்று (25.06.2011) சனிக்கிழமை காலமாகிவிட்டார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறி விக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஐயனார் கோயிலடி,
மல்லாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## தென்மராட்சிக் கல்வி வலய புதிய அலுவலகத் திறப்பு விழா

தென்மராட்சி, ஜூன் 26

தென்மராட்சி கல்வி வலயத்துக்கென நிர்மாணிக்கப்பட்ட புதிய அலுவல கத்தை எதிர்வரும் 15 ஆம் திகதி திறக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றன.

கல்வி வலய அலுவலகத்திற்கென கொள்வனவு செய்யப்பட்ட காணியில் புதிய மாடிக்கட்டடத்தின் தரைமாடி வேலை கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

கடந்த வருட மாகாண மட்ட அபி விருத்தி நன்கொடை நிதியில் 16 மில் லியன் ரூபா செலவில் இந்தப் புதிய கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிக்கென தனியான கல்வி வலயம் உருவாக்கப்பட்ட நாள் தொடக்கம் தனியார் கட்டடங்களில் இந்த அலுவலகம் இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது. (த-207)

கணக்கீடு A.P.பகீரதன் B.B.A (FM Spl.)

அறிவித்தல்

என்னிடம் கல்வி கற்ற அனைத்து மாணவர்களுக்குமான வகுப்புக்கள் அதே நேர அட்டவணைப்படி வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகில் அமைந்துள்ள

DCM கல்வி

நிறுவனத்தில் நடைபெறும்.

வீடு வாடகைக்கு தேவை

சிறிய குடும்பத்துக்கு நல்லூர், பிறவுண் வீதி, திருநெல்வேலி பல்கலைக்கழகத்துக்கு அண் மித்த பகுதிக்குள் வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்புக்கு: 0718475326

விற்பனைக்கு

டெல்மி இன ஒரு வயது நிரம்பிய நாய் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- மணியம், புத்தூர் மேற்கு, புத்தூர்.
0777965852, 0214921892

உடனடி வேலைவாய்ப்பு

உலக தரம் வாய்ந்த முன்னணி நிறுவனங்கள் யாழ். குடா நாட்டில் தமது சேவைகளை விஸ்தரிக்க உள்ளன. கவர்ச்சியான ஆளுமைமிக்க இருபாலாரும் தேவை.

ஆங்கில அறிவு உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

எதிர்வரும் 04.07.2011 இற்கு முன்பு சுயவிவரக்கோவையுடன் 4x6 Size புகைப்படத்தினையும் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

விளம்பர இல: 4155

C/O உதயன் பத்திரிகை நிறுவனம், யாழ்ப்பாணம்.

(அனைத்து தரவுகளும் பூரணப்படுத்தப்படாத பட்சத்தில் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.)

யாழ் நகரில்...

வெளிநாட்டில் உயர்கல்வி தொடர்பான மாபெரும் இலவச கருத்தரங்கு

UK, USA, CYPRUS, NEW ZEALAND, SINGAPORE, MALAYSIA, GERMANY, ITALY, FRANCE, HOLLAND, JAPAN, THAILAND,

மேற்குறிப்பிட்ட நாடுகளுக்கு மாணவர் விசா சம்பந்தமான விடயங்கள் கலந்து ஆலோசிக்கப்படவுள்ளன.

இக்கருத்தரங்கில் புதிய விசா நடைமுறைகள் மற்றும் புதிய சட்டதிட்டங்கள், குறைந்த செலவில் எவ்வாறு பட்டப்படிப்பினை மேற்கொள்ளுதல், IELTS இன்றி விண்ணப்பிப்பதற்கான ஆலோசனைகள், புலமைப்பரிசில்களுக்கு விண்ணப்பிப்பது எப்படி? இது போன்ற இன்னும் பல பயன்தரக்கூடிய விடயங்களும் கலந்து ஆலோசிக்கப்படவுள்ளன.

மற்றும் உங்கள் விசா தொடர்பான அனைத்து சந்தேகங்களை கேட்டுத் தெளிவுபடுத்திக் கொள்ளலாம்.

10 வருடங்கள் நம்பகரமான சேவை!

இடம் : வீரசிங்கம் மண்டபம், (யாழ்ப்பாணம்)
காலம் : 02.07.2011 (சனிக்கிழமை)
நேரம் : மு.ப 9.00 மணிக்கு.

இக்கருத்தரங்கிற்கு வருகை தரும் 50 மாணவர்களுக்கு 50% பதிவுக் கட்டணக் கழிவு வழங்கப்படும். இக்கட்டணக் கழிவினைப் பெற்றுக்கொள்ள JS, உங்கள் பெயரையும் Type செய்து 0755 091 091 எனும் இலக்கத்திற்கு SMS செய்யவும்.

எமது அரசாங்க பதிவிலக்கம்: PV67191

GREENWICH COLLEGE
No. 34, Galle Road, Dehiwala.
Tel: 011 2 713 214,
e-mail: info@greenwich.lk,
web: www.greenwich.lk

UK ன் QISAN அமைப்பில் அங்கீகாரம் பெற்ற EBS நிறுவனத்துடன் இணைந்து

விற்பனைக்கு

36 - 1xxx உழவு இயந்திரம் பெட்டியுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0778027540

கார் விற்பனைக்கு

NISSAN TIIDA, DOCTOR USED, BRAND NEW, LOW MILEAGE, 2007/12 MODEL, AMYTHEST GRAY COLOUR, AUTO, FULL OPTION, KF WP XXXX, AMW WARRANT PERIOD, ALLOY, FOG LAMP, REVENUE CAMARA
தொடர்பு: 0777 315473

வீடு வாடகைக்குண்டு

நுணாவில் சந்தி A-9 வீதியில் அறவழிக்கு முன்பாக பெரிய வீடு வாடகைக்குண்டு. அரச, தனியார் நிறுவனம், குடும்பத்தவரும் விரும்பத்தக்கது.
தொடர்பு: 0779647382, 021 5680251

மணமகள் தேவை

UK யிலிருந்து வந்திருக்கும் யாழ் இந்து கௌரவ குடும்பம், வயது 33, உயரம் 6 அடி, மூலம் 4 ஆம் பாதம், பாவம் 36 தனுராசி உள்ள மணமகனுக்கு மெல் லிய உயரமான மணமகள் தேவை.
தொடர்பு:- 0774012091

பணிப்பெண் தேவை

வீட்டுப் பணிப்பெண் தேவை.
50 வயதுக்குட்பட்டவர் தொடர்புகொள்ளவும்.
T.P. 021 2223851, 0779990199

விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

யாழ்ப்பாணத்தில் புதிதாக அறிமுகப் படுத்தியிருக்கும் புதிய Brand தேயிலையை விநியோகம் செய்வதற்கு ஆர்வமுள்ள Motor Bike செலுத்துவதற்கு அனுமதிப் பத்திரமுடைய விற்பனைப் பிரதிநிதிகள் தேவை.
வயது 20-30
கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.
T.Ramanan
40, School Avenue, Dehiwala.
T.P. 0773916626

மணமகள் தேவை

யாழ். இந்து. நல்லூரைப் பிறப்பிடமாகக் கொண்ட அரச சேவையிலுள்ள மணமகனுக்கு 1970 ஆம் ஆண்டுக் கும் 1974 ஆம் ஆண்டுக்குமிடையில் பிறந்த படித்த (தொழில் புரியும் அவசியமில்லை) மணமகள் தேவை. இடம்பெயர்ந்த வட பகுதியை சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்கலாம்.
M.Bavan, 521/3, Galle Road, Wellawatte, Colombo - 6 T.P. 0758090467

Mega Offer

| Printer | UPS | Router | Monitor | Dongle |
|---|---|---|---|---|
| Epson<br>Laser Printer - 11000/=<br>Ink Jet Printer - 4600/=<br>Photo Printer - 23500/=<br>CD Printer - 26500/= | DCP 650VA - 3800/=<br>1200VA - 9900/=<br>1KVa to 10KVa | D-Link<br>4 Port- 6300/=<br>4 Port Wireless 6800/=<br>Single Port - 3000/= | 19"Dell -10500/=<br>16" Topview - 9250/=<br>19" Asus - 11500/=<br>Kingston 4GB pen drive 900/= | MF180 - 3500/=<br>E 153 - 4000/=<br>Huawei - 5000/=<br>ZTE MF112 - 4750/=<br>Optus - 5250/=<br>D-Link - 5600/= |

Thirumurugan Com Net

No.259, KKS Road, Jaffna
No.05, Thirunagar Road, Kilinochchi
T.P_ 021 222 7835

சகலவிதமான கணனி உதிரிப்பாகங்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

Head phone, Woofer
Mother Board, Web camera
Key Board, Mouse



EPSON EXCEED YOUR VISION
D-Link Building Networks for People

## மரண அறிவித்தல்

### திருமதி அண்ணாமலை பவளம்



கோண்டாவிலைப் பிறப்பிட மாகவும் ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அண்ணாமலை பவளம் கடந்த 24.06.2011 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான கந்தர் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மூத்த மகளும் காலஞ் சென்றவர்களான வைத்தி - வள் ளிப்பிள்ளை தம்பதியரின் மருமக ளும் காலஞ்சென்ற வைத்தி அண்ணாமலையின் அன்பு மனை வியும் லீலாவதி, அம்பிகாவதி, மகேந்திரன், சந்திரன், ஜெகநாதன் ஆகியோரின் பாசமிகு தாயும் குமரேசு, காலஞ்சென்ற சின்னத் தம்பி மற்றும் யோகராணி, சிவனேஸ்வரி, சிவரஞ்சனி ஆகியோரின் பாச மிகு மாமியும் செல்லம்மா, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் கதிரவேலு, சின்னையா, சோதி ஆகியோரின் மைத்துனியும் ஈஸ்வரன், கணேஸ்வரன், ஞானேஸ்வரி, நந்தகுமார், லோஜனா, தர்ஷினி, கேதீபன், சதீபன், மோகனதீபன், பிரதீபன், உதயராஜன், இந்துகா, சாரங்கன், சஞ் சீவன், சுபனேஷ், ஜெவிசன், ஜெனோசன், ஜெனித்தன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கபிஷானி, அக்ஷிகா, பபிஷன், ஷபிநாத், அபிசாத் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.06.2011) ஞாயிற்றுக் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆனைக்கோட்டை கரையாம்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible] ஒழுங்கை,
ஆனைக்கோட்டை.

தகவல்: மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(சி/1187)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சனல் 4 போர்க்குற்றக் காட்சிகள் குறித்து இராணுவத்தினர் மத்தியில் விசாரணை

கொழும்பு, ஜூன் 26

இலங்கையின் போர்க்குற்றம் குறித்து சனல் 4 இற்கு தகவல் வழங்கியோர் தொடர்பாக இராணுவத்தின் உள்ளக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இராணுவத்தின் அனைத்துப் படைப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களும் இந்த விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

விசாரணைகளை இரகசியமான முறையில் மேற்கொள்ளுமாறு பாதுகாப்பு உயர் மட்டத்தில் இருந்து அறிவுறுத்தல் வழங் கப்பட்டுள்ளதாகவும் - அறிய வருகிறது.

வன்னி இறுதி யுத்தத்தின்போது படை யினர் கட்டுப்பாடு ஏதுமின்றி சுதந்திரமாக செயற்பட்டதாலும், அனைவரும் கைத்தொலைபேசி ஊடாக வீடியோ படங்களை எடுத்ததாலும் விசாரணைகளை மேற்கொள்வோர் குழப்ப நிலையில் காணப்படுகின்றனர். இதனால் விசாரணை கள் மந்தகதியில் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-9)

## நகரில் கைகலப்பு

யாழ். நகரில் கே.கே.எஸ். வீதியில் - சுந்திரத் சந்திக்கு சமீபமாக நேற்று மாலை லொறிச் சாரதி நடத்துநர் மற்றும் வர்த்தக நிலைய ஊழியர்களுக்கு இடையே இடம்பெற்ற கைகலப்பினால் அப்பகுதி யில் பரபரப்பு நிலவியது.

இரு தரப்பினருக்கும் இடையில் இடம்பெற்ற வாய்த்தர்க்கம் ஒரு கட்டத்தில் கைகலப்பாக மாறியது. இதனால் அப்பகுதியில் சடுதியாக பரபரப்பு ஏற்பட்டு போக்குவரத்தும் சிறிது நேரம் தடைப்பட்டிருந்தது.

தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு சென்ற யாழ். பொலிஸார் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததுடன் கைகலப்பில் ஈடுபட்டவர்களை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரணைகளின் பின் எச்சரிக்கை செய்து விடுவித்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-9)

## பேச்சு மூலம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடனடியாகச் செயற்படுத்துவதற்கும் அரசு தீர்மானித்துள்ளது.

வடமாகாணத் தேர்தல் நடத்தப்படுவதற்கு முன்பாக இவை அனைத்தும் பூர்த்தி செய்யப்படும் என்று அரச வட்டாரம் தெரிவித்தது.

தனியார் ஓய்வூதியத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு முயற்சித்த போது நாடு முழுவதும் அதற்கு உறுதியான எதிர்ப்புக் கிளம்பியதை அடுத்து, இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒன்றை அறிவிப்பதற்கு அரசு தயங்குகிறது என்று மூத்த அமைச்சர் ஒருவர் தெரிவித்தார். (உ-ஐ)

**புவியியல் கருத்தரங்கு பிற்போடல்**

26.06.2011 ஞாயிற்றுக்கிழமை New Degree College சங்கத்தானை, சாவகச்சேரியில் நடைபெறவிருந்த பேராசிரியரின் கருத்தரங்கு தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

ஏற்பாட்டாளர்.

**பஸ் விற்பனைக்கு**

NDxxxx தொடரிலக்கமுடைய ASHOK LEYLAND 54 ஆசனங்களைக் கொண்ட பஸ் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு-0777876309




## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

"கிளிநொச்சியில் நிலைமை மோசம். 57 சதவீதமானோர் இங்கு வறுமைக்கோட்டுக்குக் கீழேயே வாழ்கின்றனர். அவர்களிலும் 12 வீதத்தினர் மோசமான வறுமையில் வாடுகின்றனர்.'' என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாழ்க்கைச் செலவு மிக அதிகமாக இருப்பதால் வடக்கில் உள்ள பெரும்பான் மையான மக்களுக்கு போதிய உணவு கிடைப்பதே கடினமானதாக உள்ளது என்பததையும் அறிக்கை குறிப்பிடுகிறது.

''வன்னியில் மீளக்குடியமர்ந்த மக்களில் 77 சதவீதமானவர்கள் இன்னமும் - போர் முடிந்து 2 ஆண்டுகள் ஆகிவிட்டபோதும் - தற்காலிகக் கொட்டில்களிலேயே தங்கி இருக்கின்றனர்; இது மிகப்பெரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. அவர்களுக்கான சுகாதார வசதிகளும் மோசமாக உள்ளன. இந்த மாதிரியான வறுமை மற்றும் சரியான வசதியற்ற வாழ்க்கை காரணமாக குடிபோதைக்கு அடிமையாதல் சிறுவர் துஷ்பிர யோகம், சிறுமிகள் கர்ப்பங்கள் என்பன அதிகரிக்கின்றன'' என்றும் ஐ.நா. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## விருதலைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாகக் கலந்துகொள்கிறோம்'' என்றார் ஸ்ரீகாந்தா.

வெளிநாட்டில் உள்ள ரெலோ உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டதும் இந்த முடிவு எட்டப்பட்டதற்குக் காரணம் என்றும் அவர் தெரிவித்தார்.

''எம்முடன் இணைந்து பணியாற்றியவர்களில் யாராவது ரெலோ இயக்கத்தில் இணைய விரும்பாவிட்டால், அவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் உள்ள வேறு கட்சிகளில் இணைந்து கொள்ளலாம்'' என்றும் ஸ்ரீகாந்தா தெரிவித்தார்.

ரெலோவில் இணைவதன் மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் உள்வாங்கப்பட்டாலும் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளில் தாம் விட்டுக்கொடுப்பு எதையும் செய்யமாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

''இந்தியா செய்த துரோகத்தையும் மறந்துவிடமாட்டோம். ஆனால் கூட்டமைப்புக்குள் இருப்பதால் அதைப் பற்றி அடக்கி வாசிக்க வேண்டி இருக்கும்'' - என்றார் ஸ்ரீகாந்தா. (உ-14)

**பகுதி நேர பெண் வைத்தியர் தேவை**

யாழ்.நகரில் இயங்கும் தனியார் வைத்தியசாலைக்குப் பெண் மருத்துவர் தேவை. சித்த, ஆயுர்வேத மருத்துவர்கள் மட்டும்.
விண்ணப்பங்கள் நேரடியாகக் கையளிக்க வேண்டிய முகவரி.

இல. 26, Brown Road, Jaffna. T.P.: 021 222 0288
Technical College க்கு முன்பாக

## கண்ணீர் அஞ்சலி



எமது செயலக சமூக சேவை உத்தியோகத்தர் அன்புக்குரிய ப.சிவகரன் அவர்களின் அன்புத் தந்தை

### சின்னையா பரமலிங்கம்

அவர்கள் நேற்று (25.06.2011) இயற்கை எய்தினார். இதனால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உதவி அரசாங்க அதிபர்
பணிமனை , கரைச்சி,
கிளிநொச்சி.

உதவி அரச அதிபரும்,
சக உத்தியோகத்தர்களும்

## மரண அறிவித்தல்கள்

### சரவணமுத்து சிவஞானம்

கோவிலாக்கண்டி, மறவன்புலோவைப் பிறப்பிடமாகவும், கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து சிவஞானம் கடந்த 22.06.2011 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இராஜபூவதியின் அன்புக் கணவரும், ஞானவதி, இராஜசந்திரன், ஞானசந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஆனந்தகுமாரன், மதிவதனா, ஜெயந்தினி ஆகியோரின் மாமனாரும், பிரசன்னா, சுவித்தா, றெனிதன் மற்றும் றெமிதா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற சிவமணி மற்றும் சிவபாதசுந்தரம், சிவசோதி, கார்த்திகேசு ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(26.06.2011)ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக கோப்பாய் கந்தன்காடு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோப்பாய் வடக்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி சிவராஜா பூரணவதி (வவா)



மட்டக்களப்பைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில் நாகபூஷணி அம்பாள் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவராஜா பூரணவதி கடந்த (24.06.2011) வெள்ளிக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவராஜாவின் அன்பு மனைவியும், கௌரி (ஜேர்மனி), பிரதீபன் (இத்தாலி), பிரஸ்தாபன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும், றகுபரன் (ஜேர்மனி), சுகிர்தா (இத்தாலி), பிரசாந்தி (மட்டக்களப்பு) ஆகியோரின் அன்பு மாமியும், ராம்கி, வெற்றிக், அபிஸ்ணன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாகபூஷணி அம்பாள் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (2191)

தகவல்:
வேலுப்பிள்ளை றட்ணசிங்கம்
(குடும்பம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Deutsch, Dutch, French, Italian

கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ். கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட் சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch, Italian, French வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

Vivekananda Academy
(Centre For International Language Studies)
No.3, 2nd Lane, Palaly Road, Jaffna.
(அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரே யொரு வெளிநாட்டு மொழிக்கல்வி நிறுவனம்.

GOV.Reg.No W/A 76795 T.P : 0774842464, 0213216928, 0779927117

## வாடகைக்கு

யாழ். நகரின் ஸ்ரான்லி இணைப்பு வீதியில் பிரபல வங்கிகளுக்கு அருகில் வங்கி அல்லது வர்த்தக நிறுவனங்களுக்கு பொருத்தமான விசாலமான கட்டடம் வாடகைக்கு உண்டு.

தொடர்பு - 0750496867

## BIT@ESOFT

புதிய பிரிவுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன இன்றே இலங்கையின் முதல்தர நிறுவனமான எம்முடன் இணையுங்கள்

Call@ 077 3099308 / 021 2224142

ESOFT Computer Studies
No. 166/3, Navalar Road, Jaffna

நெல்லியடி 021 2264940
சாவகச்சேரி 021 2270333
கிளிநொச்சி 021 2285444

## HND@ESOFT

சர்வதேச தரத்திலான கணனி உயர் டிப்ளோமா கொழும்பு அல்லது இலண்டன் சென்று பட்டப்படிப்பின் இறுதியாண்டைத் தொடரும் வாய்ப்பு யாழ் மண்ணில் எவருமே வழங்காத விசேட கட்டணச் சலுகை இன்றே இணையுங்கள்.


Call@ 077 3099308 / 021 2224142

ESOFT Computer Studies
No. 166/3, Navalar Road, Jaffna

நெல்லியடி 021 2264940
சாவகச்சேரி 021 2270333
கிளிநொச்சி 021 2285444

## புதிய முதலீடு

**50,000/- க்கு மேல்**
மாத வருமானம்



### ஐஸ் கிரீம் இயந்திரம்

கூல்பார், ஸ்நெக் பார், ஹோட்டல், பாடசாலை, கென்டின், பேக்கரி, பார்மசி, சுப்பர் மார்க்கட், குரொசரி போன்ற விற்பனை நிலையங்களுக்கு உகந்தது.

- ஒரே இயந்திரத்தில் மூன்று வெவ்வேறு வகையான ஐஸ்கிரீம் வகைகளை விற்பனை செய்யலாம். சோயா / வெனிலா / சொக்கலேட்
- சுயமாகவே தயாரிக்கும் திறன்.
- இலவச பயிற்சி
- உத்தரவாதத்துடன் / விற்பனையின் பின் சேவை

BRAND NEW
Rs.99,000/- upwards

WINRICH INTERNATIONAL (PVT) LTD.
No.18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03.

Hotlines: 077 3918870 / 077 1066902

**BIT** கணினிப் பட்டதாரியாக அரிய சந்தர்ப்பம
புதிய பிரிவிற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. Call me: 0776577359
BIT கற்கைநெறியினைத் தொடர்ச்சியாக 10 வருடங்கள் கற்பிக்கும் ஆசிரியரால் அனைத்துப் பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன.
MIS Open Source College — By Mr R.Kumaran-B.Sc. (Computing & IS)
74, [illegible]

## e.com

Pay 2000/= and get 4 Courses

Free Books!..



2000/= கட்டணத்துடன் 30.06.2011 முன் புதிவு செய்து 04 கற்கைநெறிகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்

80% Discount

Microsoft Office 07/10
+
Internet & E-Mail
+
Windows
+
Linux

No.95A Temple Road, Nallur, Jaffna.
K.K.S Road, Kondavil, Jaffna.
Call : 021-7429005, 021-7200902

## உள்நாட்டு வெளிநாட்டு துரித கடிதங்கள் பொதிகள் பரிமாற்ற சேவை



Our Agents DHL aramex SriLankan Cargo ups

மஹாராஜா நிறுவனத்தினர் யாழ்.நகரில்...!



உங்கள் வெளிநாட்டு உள்நாட்டு உறவுகள் அனுப்பும் பொதிகளை எமது யாழ்.கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் வெளிநாட்டில் உள்ள உறவுகளுக்கு பொருள்களையும் ஆவணங்களையும் குறைந்த செலவில் பாதுகாப்பாகவும் விரைவாகவும் உத்தரவாதத்துடனும் அனுப்பி உறவை வலுப்படுத்த நம்பிக்கையுடன் நாடவேண்டிய இடம்.

G.T.V Enterprises (Pvt) Ltd.
ஜீ.ரீ.வி என்ரரிறைஸ்சஸ் (பிறைவேற்) லிமிட்.



11Kg இற்கு அதிகமான பொதிகளிற்கு விசேடகட்டண சலுகை

உள்நாட்டிற்கான பொதிகள் நாட்டின் எப்பாகத்திலும் ஒப்படைத்த அடுத்த நாளில் விநியோகிக்கப்படும்.

யாழ்ப்பாணம்:- #225, Kasthuriyar Road, Jaffna. T.P: 0212224338.
#272, K.K.S. Road, Jaffna. T.P:0212224825.
கொழும்பு: #18/3,Dr.E.A Cooray Mawatha, Wellawatte. T.P: 0112360926, 0112259849.

## Dr. தர்ஷனனின் ஆதர்ஷ்



**இசைக்குழுவின் இன்னிசை கானங்கள்**

- கர்நாடக இசைப் பாணியிலான சினிமாப் பாடல்கள்
- பழைய சினிமா, பக்திப் பாடல்கள்

இடம்: வீரமாகாளியம்மன் ஆலயம்
காலம்: 30.06.2011 - வியாழன் - மாலை 7 மணி

- தொட்டித் திருவிழா - 5 மணிக்கு

சி. காமராஜ் குருக்கள்.

## வீடு விற்பனைக்கு

வீடு,வங்கிகள், தனியார் நிறுவனங்கள், விருந்தினர் விடுதி (Guest House & Restaurant) மற்றும் வேறு தேவைகளுக்கும் உகந்த, வாகனத்தரிப்பிட வசதிகளுடன், பாவனைக்குத் தயார் நிலையில் சகல வசதிகளுடன் கூடிய விசாலமான கட்டடம் ஆஸ்பத்திரி வீதியில் விற்பனைக்குண்டு.

தொடர்பு:- தொ.பே: 0774528818

## PERSONAL& GROUP CLASSES

- Spoken English With Grammar (இலக்கணத்துடனான பேச்சு ஆங்கிலம்)
- From Basic (அடிப்படையில் இருந்து)

மாணவர்கள், தொழில் புரிவோர் மற்றும் வெளிநாடு செல்ல விரும்புவோருக்குமானது.

- Maths, Science, English, History (கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், வரலாறு) — Grade 1-O/L / தரம் 1-O/L
- In Both English And Tamil Medium (தமிழ்மொழிமூல மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள்)

வீட்டிற்கு வந்து கற்பிக்கப்படும்

(49,25,22) Tel:0750715058

## CITY COLLEGE OF ENGLISH

BRITISH COUNCIL

# IELTS



IELTS Registration Centre for British Council.

நீங்கள் எங்கு IELTS படித்திருந்தாலும் எமது நிலையத்தில் வந்து பதிவு செய்து பரீட்சை எடுக்க முடியும்.

We Provide

- A Placement test which determines to which level of English you belong.
- Updated course modules
- Materials approved by British Council which are quite new including Cambridge 8
- 20 practice test
- Free IELTS Pack & Mock Exams

| Course Schedule | Saturday & Sunday |
|---|---|
| Duration | 10 Weeks |
| Time | 2.00 p.m 5.00 p.m |
| Commencement | 02.July.2011 |

எமது கல்லூரிக்கு யாழ்ப்பாணத்தில் வேறு கிளைகள் இல்லை.

**வகுப்புகள் 02.07.2011 ஆரம்பம்**

CITY COLLEGE OF ENGLISH
143, Adiyapatham Road, Thirunelvely. T.P: 0213216027 - 0778803887
(திருநெல்வேலிச் சந்திக்கும் கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையில்)

## DHL உத்தரவு பெற்ற முகவர்

உள்நாடு,வெளிநாடுகளில் உள்ள உறவுகளுக்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவை

10Kg மேற்பட்ட பொதிகளுக்கு விசேட விலைக்கழிவு
24 மணி நேரத்தில் உள்நாட்டிற்கான துரித கடிதங்கள் பொதிகள் சேவையினைப் பெற்றுக்கொள்ளலாம்

London -Rs.750
Canada, U. S. A, France, Denmark, Germany, Italy, Norway, Swiss
Rs.900

உள்நாடு,வெளிநாடுகளில் உள்ள உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள்,அன்பளிப்புபொருட்கள்,DVD,CD போன்ற பொருட்களை மிகவிரைவாகவும் பாதுகாப்பாகவும்அனுப்பிட



திருமுருகன் கொம்நெற்

TCN Express,
2B,Nelsan place,COlombo-06.
Customer service No.021 222 7835

இல.259 கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம். இல.18.பிரதானவீதி.நெல்லியடி. இல.05.திருநகர் பிரதான வீதி, கிளிநொச்சி. இல.46.ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26.06.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமியின் காந்த சக்தியை உணரும் தன்மை மனித கண்களுக்கு உண்டு

பூமியின் காந்தத் தன்மையை உணரும் சக்தி மனித கண்களில் உள்ள புரதத்துக்கு உள்ளது. பறந்து செல்லும் பூச்சிகளின் கண்களில் காந்தப்புலம் தெரிவது இல்லை.

அதே பூச்சிகளுக்கு மனித கண் புரதத்தை செலுத்திய போது அந்த பூச்சிகள் பூமியின் காந்த புலப் பகுதியைக் கடக்கும் போது பதில் அளிப்பதாக இருந்தது. காந்த திசையைக் காட்டும் கருவியாக மனித கண் புரதம் இருக்கும் என்ற ஆய்வு விபரம் நேச்சர் தகவல் தொடர்பாடல் ஆய்வு இதழில் வெளியாகி உள்ளது.

இந்த ஆய்வு குறித்த சர்ச்சையை நீடித்த போதும் புதிய கண்டுபிடிப்பு ஆச்சரியம் அளிப்பதாக உள்ளது. மனிதர்களைப் போல இடம்பெயரும் பறவைகளுக்குப் பதிவு செய்யும் கிரிப்டோகிராம் மூலக்கூறு இருப்பது தெரியவந்துள்ளது.

1980 ஆம் ஆண்டு முதல் மனித கண் புரதம் குறித்து மான்செஸ்டர் பல்கலைகழகப் பேராசிரியர் ரொபன் பேக்கர் ஆய்வை மேற்கொண்டு இருந்தார். அதில் மனிதர்களுக்கு காந்த சக்தியை அறியும் ஆற்றல் இருப்பதையும் கண்டறிந்தார்.

பழமை வாய்ந்த புரதம் பெரும் வடிவ நிலைகளாக இருக்கும் போது கிரிப்டோ கிராம் என அழைக்கப்படுகின்றன. பூமியில் ஒவ்வொரு விலங்குக்கும் இந்தப் புரதம் உள்ளது.

இடம்பெயரும் பறவைகள், மொனார்கோ பட்டாம்பூச்சி, பழப்பூச்சிகள் ஆகியவற்றுக்குத் தாங்கள் செல்லும் பாதையைக் கண்டறிய கண்ணில் உள்ள கிரிப்டோகிராம் புரதம் உதவுகிறது எனவும் அவர் கூறியுள்ளார்.

# வீட்டு வேலை செய்பவர்கள் தமது கல்வியில் திறமையானர்களாகத் திகழ முடியும்

குழந்தைகளின் புரிந்து கொள்ளும் திறன், அறிவாற்றல், அறிவுக் கூர்மை தொடர்பாக அமெரிக்காவின் நியூயோர்க் பல்கலைக்கழகத்தின் சார்பில் அண்மையில் ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது. இந்த ஆய்வில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை சேர்ந்த சுமார் 1,850 குழந்தைகளையே உள்ளடக்கியிருந்தனர்.

இதுபற்றி ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளதாவது:


குழந்தைகளின் கல்வி மேம்பட அவர்களுக்கு குடும்ப சூழல் குறித்த விழிப்புணர்வு சிறுவயது முதல் ஏற்படுத்தப்பட வேண்டும். இதற்கு முதல் அடியாக மற்றவர்களைச் சார்ந்திருக்காமல் தன் வேலைகளை தானே செய்து கொள்ள அவர்களைப் பழக்க வேண்டும்.

வீட்டு நிர்வாகம் குறித்த விடயங்களை அவர்கள் அறிந்து கொள்வது அவர்களின் எதிர்காலம் மற்றும் கல்வி மேம்பாட்டுக்கு பெரிதும் உதவுவதுடன் நடுத்தர மற்றும் ஏழை குடும்பங்களில் இது மிக முக்கியம் பெறுகிறது.

பணக்கார வீடுகளை விட நடுத்தர, ஏழை குடும்பங்களில் குழந்தைகள் அதிகம் வேலை செய்து பழக்கப்பட்டிருப்பார்கள். இது கல்வியில் அவர்களது புரிந்து கொள்ளும் திறனை அதிகரிக்கிறது.

சூழ்நிலையைச் சமாளிக்கும் திறன், புதிதாகத் தெரிந்து கொள்ளும் ஆர்வம் ஆகியவையும் அதிகமாகின்றன.. தாயுடன் அதிக நேரம் செலவிடுவதன் காரணமாகக் கதைகளைக் கேட்கின்றனர். சிறுசிறு விடயங்களையும் தெரிந்து கொள்கின்றனர். கல்வியில் சாதனை படைக்க இது அவர்களுக்கு உந்துகோலாக அமைகிறது எனவும் ஆய்வில் தெரியவந்துள்ளது.


வாழ்க்கையில் அனைத்து விடயங்களையும் தேடிப்பார்க்கும் நான், பஜாஜ் மோட்டார் சைக்கிளொன்றை கொள்வனவு செய்தது, அதன் புதிய வடிவத்திற்கேற்ப சிறந்த செயற்பாட்டையும் கொண்டிருப்பதனாலேயே ஆகும்.


...நான் எனது பஜாஜ் மோட்டார் சைக்கிளுக்கு அசல் பஜாஜ் உதிரிப்பாகங்களை மாத்திரமே பொருத்தியது, தரமான உற்பத்தியொன்றை, அதே தரத்துடன் பேணி, அதிக நாள்கள் நீடித்துழைக்க வேண்டும் என்பதற்கேயாகும்.

அசல் உற்பத்தியின் அசல் பெறுமதியை பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

உங்களின் பஜாஜ் மோட்டார் சைக்கிளுக்கு
பஜாஜ் அசல் உதிரிப்பாகங்களை
மாத்திரே பொருத்திக் கொள்ளுங்கள்

பஜாஜ் அசல் உதிரிப்பாகங்கள் பொறுப்புடனும் நம்பிக்கையுடனும்...

நாடு பூராகவும் உள்ள எமது அங்கீகரிக்கப்பட்ட உதிரிப்பாகங்கள் விற்பனை முகவர்களிடமிருந்தும் நிறுவனத்தின் விற்பனை மத்திய நிலையத்திலிருந்தும் பெற்றுக் கொள்ள முடியும்.

tradlanka

விலை: ரூபா 5/- இலிருந்து
மேற்குறிப்பிடப்பட்ட விலை முன்னறிவிப்பின்றி மாறுபடலாம்.

DPMC டேவிட் பீரிஸ் மோட்டர் கம்பனி லிமிட்டட்
நிறுவன பதிவு இலக்கம்: PB270
75, ஹைட் பார்க் கோர்னர், கொழும்பு 02. தொலைபேசி 011 4700600

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூட்டுவலிகளை குணப்படுத்தும் நொச்சி இலைகள்

வீதி ஓரங்களிலும் வேலிகளிலும் காணப்படும் நொச்சி புதர்செடியாகவும், சிறிய மரமாகவும் வளரும் இந்தத் தாவரத்தின் இலைகள் கூட்டிலை வகையால் ஆனது. இலைகள், வேர், பட்டை, மலர்கள், கனி, விதை மற்றும் முழுத்தாவரமும் பயன்படுபவை. கிராமப்புறங்களில் தானியங்களைச் சேமிக்கும் பொழுது நொச்சித்தழைகளை உடன் வைத்து விடுவர். இது பூச்சிகள் தோன்றுவதைத் தடுக்கும்.

### செயல்திறன் மிக்க வேதிப்பொருள்கள்

இத்தாவரத்தில் லைனோலியிக், ஒலியிக், பால்மிடிக் போன்ற கரிம அமிலங்கள், கரோட்டின், விற்றமின் சி மற்றும் பல

### காசநோய் புண்களை குணப்படுத்தும்

இலைகள் உடல் உறுப்புகளின் செயலியல் நிகழ்ச்சிகளைக் கட்டுப்படுத்தி சரி செய்ய வல்லது. பால்வினை நோய்களைக் குணப்படுத்துகிறது. நோய்க்கிருமிகளை ஒழிக்க வல்லது. மேல்பூச்சாகப் பெரிதும் பயன்படுகிறது. வீக்கம் மற்றும் மூட்டுவலி போக்க உதவும். மூட்டுவலி உள்ளவர்கள் நொச்சி இலைகள் போட்டு காய்ச்சிய நீரில் குளித்தால் பயன் அடைவர். காய்ந்த இலைகளின் புகை தலைவலி மற்றும் சளி அடைப்பை நீக்கும். நாள்பட்ட புண்களில் இருந்து ஒழுகும் துர்நாற்றமுள்ள சீழ் மற்றும் பூச்சிகளை ஒழிக்க இலையின் சாறு மேல் பூச்சாகப் பயன்படுத்தப்படுகிறது. இலைச்சாறு கொண்டு தயாரிக்கப்பட்ட தைலம் காசநோய் புண்களை ஆற்ற வல்லது.

### மூட்டுவலிக்கு மருந்து

முழுத் தாவரமும், சிறந்த மருத்துவ பயன் கொண்டது. வயிற்றுவலி, ஆஸ்துமா, மூச்சுக்குழல் அலற்சி, கண்நோய், வீக்கங்கள், வெண்குஷ்டம், கணைய வீக்கம் ஆகியவற்றிறைப் போக்கக் கூடியது. தலைமுடி வளர்தலை ஊக்குவிக்கும். மூட்டுவலிக்கு சிறந்த மருந்தாக கருதப்படுகிறது.

### குடல்பூச்சிகளுக்கு எதிரானது

வேர் சிறுநீர் போக்கு தூண்டுவி, சளி ஆகியவற்றை அகற்றும். கட்டிகள் மற்றும் குடல்வலி, பசியின்மை, பெருவியாதி ஆகியவற்றுக்கு மருந்தாக உதவுகிறது. குடல் பூச்சிகளுக்கு எதிரான செயற்திறன் கொண்டது. வேர்பட்டையில் இருந்து தயாரிக்கப்பட்ட மது தயாரிப்பு மூட்டுவலி மற்றும் சிறுநீர்ப்பை எரிச்சலை போக்க வல்லது.

### கல்லீரல் நோய்களுக்கு மருந்து

மலர்கள் குளிர்ச்சி தரும் தன்மை கொண்டது. கொலரா, வயிற்றுப்போக்கு, காய்ச்சல் மற்றும் கல்லீரல் நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுகின்றன. விதைகளும் குளிர்ச்சி தருபவை, தோல்வியாதி மற்றும் பெருவியாதிகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது.

கனிகள் நரம்புகளுக்கு வலுவேற்றியாக உதவுகின்றன. காய்ந்தவை கிருமி நாசினியாகச் செயற்படுகின்றன. நீர் கோர்வை போக்கக் கூடியவை.

# மகிழ்வுடன் பொருள்களைக் கொள்வனவு செய்வதால் மன உளைச்சல் குறையும்

மனம் மிகவும் குழப்பமாக இருக்கின்றதா? மன உளைச்சலால் பாதிப்பாக இருக்கின்றதா? மகிழ்வுடன் பொருள்களைக் கொள்வனவு செய்யக் கடைகளுக்குச் செல்லுங்கள். அப்போது உங்கள் மன உழைச்சல் எல்லாம் ஓடிப் போய் விடும் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

எதிர்பார்ப்பில் ஏமாற்றம், தொடர் பிரச்சினைகளால் மன உளைச்சல் ஏற்படுவது இயற்கை. இது தொடர்ந்தால் உடல் நலம் பாதிப்படையும். இதில் இருந்து விடுபட மாறுபட்ட சிந்தனை மற்றும் சூழ்நிலை தேவை என்கின்றன பல ஆய்வு முடிவுகள். மருத்துவ சிகிச்சையும், எளிய பயிற்சிகளும் அவசியம் என்றும் அவை வலியுறுத்துகின்றன.

தொடர்ந்து மன உளைச்சலில் இருக்கும் போது தனிமையில் இருப்பதைத் தவிர்க்க வேண்டும். இது எதிர்மறை சிந்தனைகளைத் தூண்டி செயற்பட வைத்து விடும். அதிக மன உளைச்சலால் பாதிப்புக்குள்ளானவர்கள் தற்கொலைக்கு முயலும் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்வதைப் பார்க்கலாம். தற்கொலை செய்து கொண்டவர்களின் மருத்துவ குறிப்புகளை ஆராய்ந்த போது இது உறுதியாகி உள்ளது.

மன உளைச்சல் பாதிப்புக்கு சிகிச்சை பெறுபவர்கள் பட்டியலிடப்பட்டு அவர்களிடம் கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது. மனக் குழப்பத்தில் இருந்து விடுபட அவர்கள் பல வழிமுறைகளைக் கையாள்வது தெரிய வந்துள்ளது.

இதில் சுமார் 62 சதவீதம் பேர் பொருள் கொள்வனவுக்குச் சென்றால் மன உளைச்சல் பாதிப்பில் இருந்து உடனடியாக விடுபடுவதாகத் தெரிவித்துள்ளனர். 28சதவீதமானோர் விழாக்கள் அல்லது நண்பர்களுடன் சேர்ந்து உல்லாசமாகப் பொழுதை கழிப்பதால் இந்தப் பாதிப்புக் குறையும் என்கின்றனர் மருத்துவ ஆராய்ச்சியாளர்கள். மனக் குழபத்தையும் மன உளைச்சலையும் குறைக்கத்தானோ என்னவோ ''மலிவு விற்பனை'' என்ற தூண்டிலைப் போட்டு மக்களை கடைகளில் குவிய வைத்து விடுகின்றனர் வியாபார நுணுக்கம் தெரிந்தவர்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

LANKA SSL

# Sri Kumaran Hardware

**Authorized Distributor for "TATA Wiron"**
**Galvanized Wires & Barbed Wires**




**Distributor**
**Sri Kumaran Hardware**
No. 83 Stanley Road, Jaffna.
Tel: 021-2228304, 021-5677500
Fax: 021-2222798

**Manufacturer**
**Lanka Special Steels Limited.**
(A subsidiary of TATA Steel Ltd.)
No. 53 A, Ward Place, Colombo 07
Tel: 011-4932416, 011-7715300
Fax: 011-2696148
E-mail: sales@lankassl.com

## நீங்கள் அறிவீர்களா?

உங்கள் வீரியக் குறைவு மற்றும் உத்வேகமின்மை, காரணமாக உங்கள் துணைவருக்கு வேதனையும் விரக்தி ஏற்படக்கூடும் என்பதை...

## கவலைப்படுகிறீர்களா?

வயதாகி விட்டதால் வீரியம் குறைந்து, விவாக வாழ்க்கையை இனிதே அனுபவிக்க முடியாமல் தவிக்கிறீர்களா?

## அடிமையாகிவிட்டீர்களா?

சரியான தகவல்களை அறியாமல் வெவ்வேறு மாத்திரைகளுக்கு அடிமையாகி, தீய விளைவுகளுக்கு ஆளானவர்களில் நீங்களும் ஒருவரா?

**எதற்கும் அடிமையாகாமல் எவ்வித பக்க விளைவுகளும் இல்லாமல் இல்லற வாழ்வை இன்பகரமாக அனுபவிக்க ட்ரைபுல் மாத்திரைகளைப் பாவியுங்கள்**




தினமும் இரு மாத்திரைகள் 3-4 வாரங்களுக்கு எடுங்கள்.
ஆண்-பெண் இருபாலாருக்கும் உகந்தது.

TRI BULL
TABLETS

MADE IN AUSTRALIA

**மேலதிக விபரங்களுக்கு 077 3943113**

www.alaris.lk

**உத்வேகமான தாம்பத்திய உறவுக்கு...**

# 5 தசாப்தங்களுக்கு மேலாக

நிலையானதும் ஸ்திரத் தன்மையும் கொண்ட சேவைக்கு

சென்ட்ரல் பினான்ஸ்

# யாழ் மண்ணில்

## நிதி வளம் பெருக, நாம் உங்களுடன்!





உங்கள் அனைத்து நிதித்தேவைகளுக்கான தீர்வுகள் எம்மிடம் உள்ளன.
பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத வாகனங்களுக்கான குத்தகை வசதிகள்.
மக்ஸிமோ ட்ரக்களுக்கான கவர்ச்சிகரமான குத்தகை வசதிகள்.
டிமோ பட்டா வாகனங்களுக்கு விசேட நிதி வழிமுறைகள்.
மக்ஸிமோ ட்ரக் மற்றும் டிமோ பட்டா வாகனங்களுக்கான இலவச காப்புறுதி சேவை.
நிலையான வைப்பு மற்றும் சேமிப்புக் கணக்குகளுக்கான அதி கூடிய வட்டி வீதம்.

**சென்ட்ரல் பினான்ஸ் பிஎல்சி**
364, பிரதான வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 1608, 021 222 1942

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி.........

## 26.06.2011 முதல் 02.07.2011 வரை

தருபவர் - வித்யா

### மேடம்

முக்கிய வேலைகளைத் திட்டமிட்டபடி முடித்துக் கொள்வீர்கள். ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். உறவினர்களால், நண்பர்களால் சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். நீண்ட நாள்களாகத் தள்ளி வைத்த சில காரியங்களை முடிப்பீர்கள். அரசாங்கம், அரசியல், மருத்துவம், அதிகாரிகளுக்கு அனுகூலம் உண்டு. அரசாங்க ரீதியாக வரவேண்டிய பணவரவுகள் வரலாம். தந்தை வழியில் ஏற்பட்ட மனக்குறைகள், ஆதங்கங்கள் விலகி, அவரால் ஆதாயம், உதவி பெறலாம். பெண்கள், பொழுது போக்கு விடயங்கள் போன்றவற்றால் ஆறுதலான அனுபவங்களைப் பெறலாம். செலவுகளைக் குறைத்து சேமிப்பை அதிகரிக்க வேண்டும். தேக ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். மாமன், மைத்துனர்கள் விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும். தேவையற்ற பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்ளும் சூழ்நிலை உருவாகும்.

### இடபம்

கலகலப்பான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். தம்பதியர் இடையே அன்னியோன்யம் அதிகரிக்கும். தொழில் ரீதியான பணவரவுகளைப் பெறலாம். சில வேலைகளுக்காக நீண்ட நேரம் காத்திருக்கலாம். எந்த விஷயத்திலும் வேகமாக இறங்குவதும், பின்னர் அதற்காக வருத்தப்படுவதும், சிறிய பிரச்சினைகளைக் கூட பெரிய அளவில் கற்பனை செய்து கோபதாபங்களுக்கு ஆள்படுவதும் தொடரும். புத்தி தடுமாற்றங்கள், குழப்பங்கள் அடிக்கடி ஆள்கொள்ளும். நம்பகம் இல்லாத நபர்களை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்க வேண்டாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம். வியாபாரிகளுக்கு பணப்புழக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் பிரச்சினைகள் வராமல் இருக்க வாக்குவாதங்களையும், எதற்கெடுத்தாலும் குறை கண்டு பிடித்து பேசுவதையும் தவிர்க்க வேண்டும். சிலர் நீண்ட நாள்களாகத் தள்ளி வைத்த நீண்ட தூரப் பயணங்களை மேற்கொள்ளலாம். ஆதாயகரமான பணவரவுகளை, பொருள் வரவுகளைப் பெறலாம். சுகமான அனுபவம் உண்டு.

### மிதுனம்

எந்த விடயத்திலும் தெளிவான முடிவு எடுக்க முடியாமல் தடுமாற்றங்களைச் சந்திக்கலாம். மனதில் சபலங்கள், சந்தேகங்கள் குடிகொள்ளும். எதிர்பாராத சந்திப்பு நிகழும். உங்களுக்கு வேண்டிய ஒருவருக்காக மற்றொருவரிடம் உதவி கேட்கலாம். வேலைகளில் சிரமங்கள், இடையூறுகள் தொடரும். எந்த வேலையையும் சுலபமாக முடிக்க முடியாமல் பிரச்சினைகளைச் சந்திக்கலாம். தொழில், உத்தியோகம், விவசாய பணிகள், சட்ட விவகாரங்கள், காவல் துறை தொடர்பான விடயங்கள் போன்றவற்றில் முன்னெச்சரிக்கையுடன் செயற்பட வேண்டியது அவசியம். சகோதரிகள், தாயார், மனைவி வழித் தேவைகளை நிறைவேற்றுவது போன்றவற்றில் செலவு ஏற்படலாம். தேக ஆரோக்கியம், தெம்பு உற்சாகம் தரும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப்பர். பணப்புழக்கத்திற்கு குறைவிருக்காது. பிள்ளைகளின் நீண்ட நாள் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். அடுக்கடுக்காகப் பல வேலைகளைத் திட்டமிட்டு செய்வீர்கள். கடன் மிகுதிகள், கட்டண மிகுதிகளைச் செலுத்துவீர்கள். நீண்ட நாள்களாக இழுபறியாக இருந்த காரியங்கள் முடிவுக்கு வரலாம்.

### கடகம்

மனதில் உத்வேகம், புத்துணர்ச்சி குடிகொள்ளும். எதிர்பார்த்த உதவிகள் கிடைத்து சந்தோஷம் அடைவீர்கள். மறதி, கவனக்குறைவைத் தவிர்க்க வேண்டும். எதிர்பார்ப்புகளில் ஏமாற்றங்களையும், தடை, தாமதங்களையும் சந்திக்கலாம். தந்தை, அதிகாரிகள், மருத்துவம், அரசியல்வாதிகள், அரசாங்கத்திற்கு கட்டணங்கள் செலுத்துவது போன்ற வழிகளில் செலவுகளையும், சிரமங்களையும் சந்திக்கலாம். குடும்பத்திற்குத் தேவையானவற்றை நிறைவேற்றவும் கணிசமான தொகையை செலவிடலாம். உத்தியோகஸ்தர்கள் அதிகாரிகளை அனுசரித்துச் செல்ல வேண்டும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள், கடிதத் தொடர்புகள், முகவர் தொழில் போன்ற வழிகளில் செலவுகள், பிரச்சினைகளைச் சந்திக்கலாம். சகோதரர்கள் உதவிகரமாக இருப்பர். கடன் பிரச்சினைகள் கட்டுக்குள் வரும். பொலிஸ் தொடர்பான விடயங்களில் அனுகூலம் உண்டு. பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்கள் போன்றவற்றாலும் சந்தோஷம் அடைவீர்கள். புதிய அனுபவங்களைப் பெறலாம். சில பிரச்சினைகளை நினைத்து அதிக மனக்குழப்பம் அடைவீர்கள்.

### சிங்கம்

எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். மற்றவர்கள் மூலம் உங்களுக்கு சில சலுகைகள் கிடைக்கலாம். விருந்து, விசேஷ நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளலாம். மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடிகொள்ளும். எந்த வேலையையும் தங்கு, தடையின்றி முடித்துக் கொள்வீர்கள். உடல் ரீதியான உபாதைகள் குறைந்து தெம்பு, உற்சாகம் பெறுவீர்கள். மருத்துவச் செலவுகள் குறையும். பெரிய மனிதர்கள் சிலரின் நட்பு கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு தொண்டர்கள் மத்தியிலும், கட்சித் தலைவர்கள் மத்தியிலும் செல்வாக்கு அதிகரிக்கும். கணிசமான வருமானம் பெற வாய்ப்பு உண்டு. தந்தையுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு விலகும். பிள்ளைகளின் கல்வி முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. பல நாள்களாக எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம். நண்பர்கள் உங்களைப் பாராட்டிப் பேசி காரியம் சாதிப்பர். உத்தியோக ரீதியாக எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கலாம். இளைய உடன் பிறப்புக்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். பொறுமை, நிதானம் அவசியம். எதிர்பாராத தண்டச் செலவுகளை எதிர்கொள்ளலாம்.

### கன்னி

முடிவுகள் எடுப்பதில் குழப்பங்களைச் சந்திக்கலாம். மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்க வேண்டாம். பணவரவுகளைப் பெறலாம். பொருள்கள் சேரும். சிலர் உங்களுக்காக செலவு செய்யலாம். தொழில் ரீதியான விடயங்களில் எதுவும் எதிர்பார்த்தது போல நடக்காமல் ஏட்டிக்குப் போட்டியாக நடக்கலாம். இருப்பினும், ஏதோ ஒரு வகையில் அவற்றை சமாளித்து வருவீர்கள். பெண்கள், பொழுது போக்கு விடயங்களால் ஆறுதல், கலகலப்பான அனுபவங்களைப் பெறலாம். அரசியல், மருத்துவம், அதிகாரிகள், தந்தை தொடர்பான விடயங்கள் சாதகமாக அமையும். உத்தியோகஸ்தர்கள் மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறலாம். தந்தையுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் விலகி பாசம் அதிகரிக்கும். அரசியல்வாதிகள் மூலம் காரியம் சாதிக்க மேற்கொண்ட முயற்சிகளிலும் முன்னேற்றம் உண்டு. மாற்று மதத்தினர் உதவிகரமாக இருப்பர். மாற்று மதத்தினரால் ஆதாயம் பெறலாம். க[illegible] எச்சரிக்கை அவசியம். சகோதரர்கள் வழியில் எதிர்பார்த்த உதவி[illegible] போகலாம். ஊக்கம், உற்சாகம் கூடும். சுலபமாக சில வேலைகளை முடிப்பீர்கள்.

### துலாம்

உறவினர்கள் தொடர்பான காரியங்களுக்காக அலைய நேரிடலாம். பயணங்களுக்காகவும் கணிசமான பணத்தை செலவு செய்யலாம். சிறிய பிரச்சினைகளை நினைத்து பெரிய அளவில் கவலைப்படுவீர்கள். பிள்ளைகள் தொடர்பான விடயங்களுக்காக அலைய நேரிடலாம். விரயச் சனியால் பணம் பல வழிகளிலும் கரைந்து கொண்டிருக்கும். எந்த விடயத்திலும் அவசரம் இல்லாமலும், பொறுமையாகச் செயற்பட வேண்டியது அவசியம். யாருக்காகவும் பிணை கொடுக்க வேண்டாம். சகோதரர்கள், பங்காளிகள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். உத்தியோக ரீதியாக சலுகைகள் கிடைப்பதும் தள்ளிப் போகலாம். வாகனங்களை, இயந்திரங்களை கையாளும் போது கவனம் அவசியம். மற்றவர்கள் பாராட்டும் வகையில் எந்தக் காரியத்தையும் செய்வீர்கள். சொந்தபந்தங்கள், நண்பர்கள், உறவினர்கள் மத்தியில் உங்களின் செல்வாக்கு அதிகரிக்கும்.

### விருச்சிகம்

எதிர்பார்த்த உதவிகள் மட்டுமின்றி, எதிர்பாராத உதவிகளும் கிடைக்கலாம். சில பொருள்களை சகாய விலையில் வாங்குவீர்கள். வேண்டாத செலவுகளைச் செய்யலாம். நீண்ட தூரப் பயணங்கள் செல்லலாம். வேலை நெருக்கடிகள் அதிகரிக்கும். உறவினர்கள் சிலரின் அன்புத் தொல்லைகளைச் சந்திக்கலாம். பெண்கள், சகோதரிகள், தாயார், இளைய சகோதரர்கள், பங்காளிகள், பயணங்கள், மின் உபகரணங்களை சீரமைப்பது போன்ற வழிகளில் செலவுகள், சிரமங்களைச் சந்திக்கலாம். சகோதரிகள் நீங்கள் சொல்லும் யோசனைகளை கேட்காமல் நிராகரிக்கலாம். உடன் பிறப்புக்கள் கேட்ட சில உதவிகளை மறுக்காமல் செய்யும் சூழ்நிலை உருவாகும். பெண்களுக்கு வேலைப்பளு கூடும். தந்தை வழியில் சிறு மனஸ்தாபம் ஏற்படலாம். அரசியல்வாதிகள் தொடர்பான விடயங்களும் அனுகூலமாக அமையாது. சிலர் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்ளலாம். தேக ஆரோக்கியத்தை சீர்படுத்திக் கொள்ள கணிசமான தொகையைச் செலவிடலாம். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள், உறவினர்கள் வழியில் உதவிகள் கிடைக்கலாம்.

### தனுசு

சோர்வு, சோம்பல் குடிகொள்ளும். விருந்து, விசேஷங்களால் கலகலப்பு உண்டு. மனக்குறைகளும், ஆதங்கங்களும் அதிகரிக்கும். பிள்ளைகள் வழியில் செலவுகள் ஏற்படலாம். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். மனதில் ஊக்கம், உற்சாகம் அதிகரிக்கும். பணவரவுகளைப் பெறலாம். நிலம், பூமி விவகாரங்கள், விவசாய பணிகள், சகோதரர்கள், பங்காளிகள் தொடர்பான விடயங்கள் சாதகமாக அமையும். பெண்கள் தொடர்பான விடயங்களிலும், மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும். தொழில், உத்தியோக ரீதியான செல்வாக்கு அதிகரிக்கும். சொத்துக்கள் வாங்கப் போட்ட திட்டங்களில் முன்னேற்றம் உண்டு. எந்தக் காரியங்களையும் தடை, தாமதங்கள் இல்லாமல் நிறைவேற்றிக் கொள்ளலாம். பெரிய மனிதர்களின் நட்பால் ஆதாயம் பெறலாம். சிறிய பிரச்சினைகளை நினைத்து பெரிய அளவில் பயம் கொள்வீர்கள். அரசு சம்பந்தமான காரியங்களில் பெரிய அளவில் அனுகூலம் கிடைக்காது. தந்தையாலும் பிரச்சினை உருவாகலாம்.

### மகரம்

ஊக்கம், உற்சாகம் அதிகரிக்கும். திட்டமிட்ட வேலைகளைச் சரியான நேரத்துக்கு முடித்துக் கொள்வீர்கள். பொழுது போக்கு விடயங்களால் சந்தோஷம் அடையலாம். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்ளலாம். மனைவி, குழந்தைகளின் சின்னச் சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். வேலை நெருக்கடிகள் அதிகரிக்கும். ஓய்வாக இருக்காமல் பரபரப்பாகச் செயற்படும் சூழ்நிலை உருவாகும். தாயார் உடல் நலன் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். சிலர் வீடு மாற்றம், இடமாற்றம் போன்றவற்றைச் சந்திக்கலாம். எதிர்ப்புகள், போட்டிகள் விலகும். ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர். தந்தையுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் தீர்வுக்கு வரும். அரசு காரியங்கள் அனுகூலமாக முடியும். எந்த விடயத்திலும் தயக்கம் இல்லாமல் துணிச்சலாக செயற்படுவீர்கள். அரசியல்வாதிகள் புதிய பொறுப்புகளை ஏற்கும் சூழ்நிலை உருவாகும். பெண்கள், பயணங்கள், பொழுதுபோக்கு விடயங்களால் சந்தோஷம் அடைவீர்கள். எதிர்பார்த்த நல்ல செய்திகள் வந்து சேரலாம். அடிக்கடி தடுமாற்றங்களுக்கு ஆள்படலாம். பிள்ளைகளாலும் தொல்லையுண்டு.

### கும்பம்

குழப்பங்கள், தடுமாற்றங்களை சந்திக்கலாம். சில விடயங்களுக்காக ஒன்றுக்கு இரண்டு மடங்காக செலவிடலாம். வெறுப்பு, விரக்தி விலகி உற்சாகம் குடிகொள்ளும். உறவினர்கள் சிலரின் வீடுகளுக்குச் செல்லலாம். மலையாக வேலைகள் குவிந்தாலும், அனைத்தையும் அசராமல் செய்து முடிப்பீர்கள். நீங்கள் செய்வதே சரி என, நினைத்து செய்து மற்றவர்களின் அதிருப்திக்கு ஆளாவீர்கள். வருமானத்தில் தட்டுப்பாடு உண்டாகலாம். சட்டம், நீதிமன்றம் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கையாகச் செயற்பட வேண்டும். மாமன், மைத்துனர்கள், நண்பர்கள் உறவினர்கள் வகையிலும், தந்தை, அரசியல்வாதிகள், அதிகாரிகள் வகையிலும் செலவு, சிரமங்கள் உண்டு. பொறுமையாக எந்த வேலையையும் செய்ய முடியாமல் அறக்கப் பறக்க செய்ய நேரிடலாம். தேக ஆரோக்கியத்தில் சிறு பிரச்சினைகள் உருவாகலாம். தாயார் உடல்நலக்குறைவால் பிரச்சினைகளை எதிர்கொள்ளலாம். முயற்சிகளில் அடிக்கடி முட்டுக் கட்டைகள் தொடரும். கடன் விவகாரங்களில் எச்சரிக்கை அவசியம். சுபகாரிய விடயங்களில் சுணக்கங்கள் ஏற்படும்.

### மீனம்

ஆதாயகரமான பணவரவுகளைப் பெறலாம். ஆடை, அலங்காரப் பொருள்கள் சேரலாம். விருந்து, விசேஷங்கள், கடன் மிகுதிகள் வசூலாவது, உறவினர்கள் சந்திப்பு போன்றவற்றால் மகிழ்ச்சி அடைவீர்கள். செலவு, அலைச்சல்களைச் சந்திக்கலாம். திடீர் வெளியூர் பயணம் செல்லலாம். ஆலய வழிபாடுகளில் நாட்டம் செல்லும். தொழில் ரீதியான விடயங்களில் பொறுமையாகச் செயற்பட வேண்டியது அவசியம். கூட்டுத் தொழில் புரிவோர் பங்காளிகளை அனுசரித்துச் செல்ல வேண்டும். விரும்பாத இடமாற்றங்களாலும் பிரச்சினைகளுக்கு ஆள்படலாம். சிலர் தங்களின் தவறுகள் வெளியே தெரியாது என நினைத்து செய்வர். ஆனால், அதை மற்றவர்கள் மறைமுகமாக அறிந்து கொள்வர். உத்தியோகஸ்தர்கள் நிர்வாகத்தினரிடம் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நிலம், பூமி விவகாரங்கள் சாதகமாக அமையும். [illegible] வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். அவர்கள் [illegible] ஆலோசனைகளைக் கேட்டு நடப்பர். அவசர வேலைகளாலும், தேவையற்ற அலைச்சல்களாலும் அவதிப்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக சலுகைகள் வழங்கும்
நிலையான வைப்பு
அதிக நம்பிக்கை
அதிக சலுகைகள்
அதிக பாதுகாப்பு
11% நிலையான வைப்பு
12% சிரேஷ்ட பிரஜை நிலையான வைப்பு
லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ்
(ஒரு LOLC குழுமக் கம்பனி)
லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் கம்பனி லிமிடட்
துரித அழைப்பு
0773815602

# தாய் புகைப்பிடிப்பதால் குழந்தைக்கு இதய நோய் அபாயம்

கர்ப்பமாக இருக்கும் பெண்களுக்கு புகைப் பிடிக்கும் பழக்கம் இருந்தால் கருவில் உள்ள குழந்தை பாதிக்கப்படும் என்கின்றனர் ஆய்வாளர்கள். சிகரெட் புகையில் உள்ள இரசாயனங்கள் கருவில் உள்ள குழந்தையின் வளர்ச்சியில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

குறிப்பாகக் கருவில் உள்ள குழந்தைக்கு நல்ல கொலஸ்ரோல்களை குறைத்து விடுகிறது. இந்த அளவு குறைவதால் பிறக்கும் குழந்தைகளுக்கு இதய நோய் ஏற்படுவது 10-15 சதவீதம் கூடுதலாக உள்ளது எனப் புதிய ஆய்வு கூறுகிறது. நமது உடலில் எச்.டி.எல் எனப்படும் உயர் அடர்த்தி லியோ புரோட்டின் உள்ளது. இந்த நல்ல கொலஸ்ரோல் இதயத்தில் இருந்து உடல் உறுப்புகளுக்கு இரத்தம் கொண்டு செல்லும் இரத்தக் குழாய்களில் சேதத்தைத் தடுக்கிறது. இதய நோய் ஏற்படுவதையும் தடுக்கிறது. உடலில் எல்.டி.எல். என்ற தீங்கு விளைவிக்கும் கொலஸ்ரோலும் உள்ளது. இது எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும். கர்ப்பமாக இருக்கும் போது பெண்கள் புகைப்பிடிப்பதால் இரத்த அளவில் எச்.டி.எல்.லை குறைத்து விடுகிறது. இந்த ஆய்வு ஆஸ்திரேலியா சிட்னி பல்கலைக்கழகப் பேராசிரியர் டேவிட் செலி மேஜர் தலைமையில் நடந்தது. எச்.டி.எல். கொலஸ்ரோல் 2-3 சதவீதம் குறைவதன் மூலம் இதய பகுதி இரத்த ஓட்ட பாதிப்பு ஏற்பட்டு காரனோரி இதய நோய் அபாயம் ஏற்படுகிறது. மேற்கத்தேய நாடுகளில் 15 சதவீதப் பெண்கள் கர்ப்பமாக இருக்கும் போது புகைப்பிடிப்பதால் ஏற்படும் பிரச்சினைகளைக்கண்டு கொள்வது இல்லை. அவர்கள் கர்ப்பமாக இருக்கும் போது தொடர்ந்து புகைபிடிக்கிறார்கள் என்று ஆய்வுகள் கூறுகின்றன.



SERVICE HOTLINE 24 hours
24 மணிநேர சேவை அழைப்பு
077 MAHARAJ
077 6242725
MAHARAJ PUMPS

Rodmurphy Security
HIGH SECURITY LOCK
The Pride of Every Door

• பித்தளை சிலிண்டர்
• 1 வருட உத்தரவாதம்
• வெவ்வேறு வடிவங்களில் பெற்றுக்கொள்ளலாம்
Rs. 2500/- இலிருந்து
மேலதிக விபரங்களுக்கு : 0772 991 995, 0115 565657/8
Product of: TRADESMANN


LG Life's Good
சௌபாக்கியமான வாழ்வை
ஆரோக்கியத்துடன் உங்களுக்கு கொண்டுவரும்
புதிய ப்ளாஸ்மா பில்டருடன் கூடிய LG லோ வொட் இன்வேட்டர் வளிச்சீராக்கியானது நோய்கிருமிகளை அழித்து ஆரோக்கியமான வளியை உங்களுக்கு தருவதோடு 60 சதவீதம் வரை மின்னை சேமிக்கக்கூடியது.
Green Health
லோ வெட் இன்வேட்டர் வளிச்சீராக்கி 670W
ரைஸ்குக்கர் 900W
டோஸ்டர் 850W
மின்னழுத்தி 1650W
இன்வேட்டர் தொழில்நுட்பத்தின் மூலம் வளிச்சீராக்கியின் கொம்ப்ரசரின் தொழிற்பாட்டைக் வெகு குறைவாக தொழிற்படச் செய்கின்றது. இதனால் கொம்ப்ரசர் குறைந்த வேகத்தில் தொழிற்படுகின்றது. இதன் மூலம் அறையின் குளிர்த்தன்மையை ஒரே சீராக வைத்துக்கொள்ளச் செய்கின்றது. இதன் மூலம் 60 சதவீதம் வரை மின்சாரத்தை சேமிக்க உதவுகின்றது.
60% மின்னை சேமிக்கவல்ல LG லோ வெட் இன்வேட்டர் வளிச்சீராக்கிகள்
• 9000btu • 12000btu • 18000btu • 24000btu ரூ.99,900 இலிருந்து
• 9000btu • 12000btu • 18000btu • 24000btu ரூ.94,900 இலிருந்து
ஸ்ப்லிட் வளிச்சீராக்கி
ஆர்ட் கூல் வளிச்சீராக்கி
• 9000btu • 12000btu • 18000btu • 24000btu • தன்னியங்கியாக ஜெட் கூல் தொழிநுட்பத்தில் செயற்படக்கூடியது ரூ.64,900 இலிருந்து
• 9000btu • 12000btu • 18000btu • 24000btu • நியோ ப்ளாஸ்மா பில்டர் • தன்னியங்கியாக செயற்படக்கூடியது ரூ.93,900 இலிருந்து
தெரிவு செய்யப்பட்ட கடனட்டையாளர்களுக்கு வட்டியின்றிய மீள் செலுத்தும் முறைகள்
அழையுங்கள் 0714020799
நாடெங்கிலும் 100 அபான்ஸ் விற்பனைக்கு பிந்திய சேவை நிலையங்கள்
அபான்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ரிஷேட்

## மூலம் கையடக்கத் தொலைபேசியை சார்ஜ் செய்யலாம்



கையடக்கத் தொலைபேசியின் பற்றரி சார்ஜ் குறைந்து விட்டால் அதை மீண்டும் சார்ஜ் செய்வதற்கான புது வகை ரி-ஷேட் ஒன்று அறிமுகம் செய்யப்படவுள்ளது.

இந்தப் புதிய கண்டு பிடிப்பு இவ்வார இறுதியில் அறிமுகம் செய்து வைக்கப்படவுள்ளது. தொலைத்தொடர்புத் துறை தேர்ச்சியுடையவர்களான ஒரேஞ்ஜ் நிறுவனமே இந்தப் புதிய கண்டுபிடிப்பை அறிமுகம் செய்யவுள்ளது. தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் தாங்கள் அணிந்திருக்கும் இந்த ரி-ஷேட்டில் கையடக்கத் தொலைபேசியை இணைத்து சார்ஜ் செய்து கொள்ளலாம்.

இவ்வார இறுதியில் இந்த ரி-ஷேர்ட் செய்முறை ரீதியாக அறிமுகப்படுத்தப் படும். ஓசை அலைகளை அடிப்படையாகக் கொண்டு மிக இலகுவான தொழில் நுட்பத்தில் இந்த ரி-ஷேட் உருவாக்கப்பட்டுள்ளது.

ஓசை அலைகளின் அழுத்தங்களை உள்வாங்கி அதை மின்சக்தியாக மாற்றி பற்றரிக்குள் செலுத்தி அதற்கு வலுவூட்டுவதுதான் இந்தத் தொழில் நுட்பம். இதன்படி அதிக சத்தத்தோடு இசையை உள்வாங்கி அதிலிருந்து கிடைக்கும் அழுத்தங்களைச் சக்தியாக மாற்ற முடியும்.

எனவே இந்த ரி-ஷேட்டை அணிந்து கொண்டு எவ்வளவு சத்தமாக இசையைக் கேட்கின்றோமோ, அவ்வளவு விரைவாக பற்றரியை சார்ஜ் செய்து கொள்ளலாம் என்றும் உற்பத்தியாளர்கள் விளக்கமளித்துள்ளனர்.

வார இறுதியில் ஒரேன்ஜ் நிறுவனம் பலருக்கு இந்த உற்பத்தியை அணிவித்து நேரடியாக அதன் செயற்பாட்டைப் பரீட்சிக்கவுள்ளது.




# உடல் ஆரோக்கியமாக இருப்பவர்கள் பருமனாக இருந்தாலும் கவலையில்லை

*ஆரோக்கியமாக இருக்கும் ஒருவர் தனது உடல் பருமன் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை என்கின்றனர் விஞ்ஞானிகள். அமெரிக்காவின் நியூஜெர்சி மாநில பொது மருத்துவ மற்றும் பல் மருத்துவப் பல்கலைக்கழகத்தில் உடல் பருமன் தொடர்பாக அண்மையில் ஆய்வு நடத்தப்பட்டது.*

*இந்தியாவைச் சேர்ந்த வைத்தியர் ஆதர்ஷ் குப்தா தலைமையில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது. இந்த ஆய்வின் போது மருத்துவ பல்கலைக்கழகத்தின் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற 454 பேரின் மருத்துவக் குறிப்புகள் எடுத்துக் கொள்ளப்பட்டு அவர்களிடம் பரிசோதனைகள் கருத்துக் கணிப்பு மேற்கொள்ளப்பட்டது.*

*ஆய்வு சொல்லும் தகவல்கள் வருமாறு: உடல் எடையை உயரத்தின் இரு மடங்கால் வகுத்து கிடைக்கும் தொகை பி.எம்.ஐ எனப்படுகிறது. இது 18.5 முதல் 25 வரை இருப்பது சாதாரணம் எனக் கருதப்படுகிறது. குறைந்தால் மெலிந்த தோற்றம் என்றும் அதிகரித்தால் பருமன் என்றும் வரையறுக்கப்பட்டுள்ளது.*

*25-30 கிலோ இருப்பது அதிக எடை என்றும், 30-35 கிலோ இருப்பது சுமார் பருமன், 35-40 என்பது அதிக பருமன், 40 கிலோவுக்கு மேல் இருந்தால் அதிகபட்ச பருமன் என்றும் கூறப்படுகிறது. ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 454 பேரில் 135 பேரின் பி.எம்.ஐ அதிகமாக இருந்தது. அவர்கள் பருமனாக இருந்தாலும் ஆரோக்கியமாகவே இருக்கின்றனர் என்றே கூறப்படுகின்றது..*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org